# ஈழத்தின் இன்னுமொரு மூலை



சம்மாந்துறை
வெளியீட்டுப்
பணியக வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI
21 JUL 1999
URBAN COUNCIL
KALMUNAI

REFERENCE

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. 14704

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

364.042
ஜாம்ஆ.
REFERENCE
PUBLIC LIBRARY
KALMUNAI

# ஈழத்தின் இன்னுமொரு மூலை

வெளியீட்டுப் பணியகம்
ஜும்ஆ மஸ்ஜித், சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
R. 14704

**Eeelathin Innumoru Moolai** ©

A
publication of
Sammanthurai Publication Bureau
Grand Mosque, Sammanthurai

ACCESSION NO: 14704
CLAS NO: 364.042

Pages : 192

First Edition : August 1992

All the jobs of this book are executed by
**Pathai Agencies**
91, 1-10, 2nd Cross Street
Colombo - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

## ஈழத்தின் இன்னுமொரு மூலை -

முஸ்லிம்கள் தமிழர்களால் அந்நியப்படுத்தப்பட்டு
அதேவேளை குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில்
பதில் கூறவேண்டிய பொறுப்பில்
சம்மாந்துறை முஸ்லிம்கள்
தம்நிலை விளக்கமாக -
முன்னோடியாக
முன்வைக்கும் நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களால்

அந்நியப்படுத்தப்பட்டதனால்

பலியான

வீர ஷுஹதாக்களுக்கு

இந்நூல்

அர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அத்திவாரம் | 5 |
| 2. | சம்மாந்துறை: சான்றுகள் சில | 11 |
| 3. | வீரமுனைக் கலவரம் | 15 |
| 4. | இயக்கங்களின் வளர்சிக் காலம் | 37 |
| 5. | இந்திய அமைதிக் படையின் அமைதி காக்கும் காலம் | 59 |
| 6. | சம்மாந்துறைக் கலவரம் | 75 |
| 7. | இந்திய இராணுவத்தின் வெளியேற்றமும் தமிழ் தேசிய இராணுவத்தின் நிலைகொள்ளலும் | 111 |
| 8. | முஸ்லிம் பொலீஸார் படுகொலை செய்யப் பட்டனர் | 115 |
| 9. | புலிகளின் பிரவேசம் | 137 |
| 10. | பள்ளிவாசலில் படுகொலை | 149 |
| 11. | இன்னுமொரு பள்ளிவாசலில் படுகொலை | 157 |
| 12. | ஆதங்கம் | 177 |
| 13. | சமீபகால சம்பவங்கள் | 183 |
| 14. | நன்றி | 192 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY,
KALMUNAI

# ஆதாரக் குறிப்புகள்
## படங்கள்

1. மனித உரிமைக்கான யாழ் பல்கலைக் கழக வெளியீடு 8-9

2. ஜனாப் எம். பி. முஹம்மட் அலி விதானையார் கடிதம் 29

3. பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட சம்மாந்துறை முஸ்லிம்கள் 46-54

4. பயங்கரவாதிகளால் படுகாயத்திற்குள்ளானோர் 55-58

5. சம்மாந்துறை சான்றுகள் சில - வரலாற்று ஆதாரம் 74

6. சம்மாந்துறைக் கலவரம்: பத்திரிகைச் செய்திகள் 78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சம்மாந்துறைக் கலவரம்: அகதிகள் செய்திகள் 88

8. சம்மாந்துறைக் கலவரம்: அகதி முகாம்கள் 89-91

9. சம்மாந்துறைக் கலவரம்: புலிகளின் அறிக்கை 95

10. சம்மாந்துறைக் கலவரம்: பாராளுமன்ற விவாதம் 101

11. சம்மாந்துறைக் கலவரம்: பிரசுரங்கள் 103

12. சம்மாந்துறைக் கலவரம்: கவிதை 104-105

13. சம்மாந்துறைக் கலவரம்: நஷ்டங்கள் 106-107

14. சம்மாந்துறைக் கலவரம்: இந்தியப் படை வெளியேற்றக் கோரிக்கை 108

15. சம்மாந்துறையில் முஸ்லிம்கள் கொலை - ஆக - 1991 110

16. நாட்டைக் காக்க முன்வந்து தம்மை அர்பணம் செய்த 39 தியாகிகள் நினைவாக:

* நம்பிக்கையாளர் சபையினரின் செய்தி 124-125
* 39 பொலிஸாரினதும் படங்கள் 126 - 131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பிரஜைகள் குழுத் தலைவரின் செய்தி 132
* மஜ்லிஸ் அஷ்ஷுரா அமீரின் செய்தி 133
* சுவர்க்கம் நோக்கிய ஷுஹதாக்களே - கவிதை 134-135

17. பள்ளிவாசல் மீது தாக்குதல் - ஜாரியா பள்ளி 156

18. இலங்கை முஸ்லிம்கள் மீதான தாக்குதல்: ஒரே பார்வையில் 178-179

19. சம்மாந்துறைப் படம் 180-181

20. திரு. திவ்வியநாதனின் அறிக்கை 186

21. சமீபகாலச் சம்பவங்கள்: பத்திரிகைச் செய்திகள் 187-190

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்திவாரம்

இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் சம்மாந்துறை ஒரு பிரசித்தம் வாய்ந்த கிராமமாகும். இந்நாட்டின் சமூக பொருளாதார அரசியற் பாங்குகளில் தனித்துவமான குணாம்சங்களை இவ்வூர் கொண்டுள்ளது. தொன்று தொட்டு இவ்வூரின் சனத்தொகையில் பெரும்பான்மை இடத்தை முஸ்லிம்களும், மிகச் சிறுபான்மையான இடத்தை தமிழ் மக்களும் கொண்டிருக்கின்றனர். தமிழர்களில் சீர்பாதக்காரர் என்ற சாதியினர் வீரமுனையிலும், சலவைத் தொழிலாளர் குலத்தைச் சேர்ந்தோர் 2ம், 3ம், குறிச்சிகளின் அலைவாய்க்கரை ஓரத்திலும், முக்குவர் இனத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்க் குறிச்சியின் வட திசையிலும், பொலிஸ் வீதியின் கிழக்குப் பக்கமாகச் சிலரும் வசித்து வந்தனர். இவர்கள் அனைவருமே சைவ சமயத்தைச் சேர்ந்தவர்களேயாவர். இவை தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வந்தனர்.

கல்லோயா நதி அதன் கைக்குழந்தையான பட்டிப்பளை ஆறு ஆகியவற்றின் வளங்கொழிக்கும் பான்மையினால் சூழவரப் பச்சை வயல் போர்வை கொண்டு சம்மாந்துறை அன்னை போர்த்தப் பட்டிருக்கின்றாள். அமைதி, சமாதானம், இன ஒற்றுமை என்பவற்றின் கேந்திரஸ்தானமாக மிக அண்மைக்காலம் வரை சம்மாந்துறையே கருதப்பட்டு வந்தது. இங்கு வாழ்ந்தவர்கள் பரஸ்பரம் கலாசாரம், பண்பாடு, பழக்கங்கள், வழக்கங்கள், நம்பிக்கைகள் முதலிய எல்லாத் துறையிலும் புரிந்து கொள்ளலும், விட்டுக் கொடுத்தலும் கொண்ட இரு இனக்குழுக்களாக வாழ்ந்து வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் சமகால அரசியலில் பேரினவாதம் ஏற்படுத்திய விளைவுகள் முழு இலங்கையிலும் வாழ்ந்த தமிழ் மக்களிடம் விடுதலை உணர்ச்சியைத் தோற்றுவித்தது. இது கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் பிரதிபலிக்கத் தவறவில்லை. மாலை நேர வகுப்புக்கள், டியூட்டரிகள், கருத்தரங்குகள், விளையாட்டுக் குழுக்கள் முதலிய பெயர்களிலெல்லாம் தமிழ் மக்களிடம் வேரூன்றிய தீவிரவாதப் போக்குகள் முஸ்லிம் இளைஞர்களின் போக்கிலும் பாதிப்பை ஏற்ப்படுத்தின.

ஆகவே, இந்த பாதிப்பானது சகோதர இன மக்களின் போராட்டத்திற்கு தங்களது பங்களிப்பைச் செய்தல் என்ற மனோநிலையை சம்மாந்துறை முஸ்லிம்களிடத்தும் தோற்றுவிக்கத் தவறவில்லை. முஸ்லிம் மக்களால் இரண்டு விதமான பங்களிப்புக்கள் தமிழ் போராட்டத்திற்குச் செய்யப்பட்டன.

1. போராளிகளுக்கு வேண்டிய பணம், உணவு, பாதுகாப்பு, (ஆயுதப்படையினரிடம் மாட்டிக் கொள்ளாமல் மறைந்திருக்கும் வசதி) முதலிய தார்மீக ஆதரவு.

2. முஸ்லிம் இளைஞர்கள் நேரடியாக இயக்க நடவடிக்கைகளில் இறங்கியமை.

இப்படி சகோதர உறவும், ஆதரவும், புரிந்து கொள்ளலும் கண்ணூறு பட்டது போல 1980களின் பிற்கூற்றில் எதிரிடையான வளர்ச்சிப் போக்கைத் தோற்றுவித்தது. வங்கிகள், அரச ஸ்தாபனங்கள், கூட்டுறவு நிலையங்கள், பொலிஸ், அதிரடிப்படை, இராணுவம் என்ற நிலையில் இருந்த தமிழ் இளைஞர்களின் துப்பாக்கிகளின் இலக்கு முஸ்லிம்களின் கடைகள், கல்வி நிலையங்கள், சமூக சேவையாளர்கள், முஸ்லிம் புத்தி ஜீவிகள், சமூகப் பொறுப்புள்ள தலைவர்கள், உயர் அதிகாரிகள், அப்பாவிப் பொது மக்கள், விவசாயிகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் என்று திசை திரும்பிற்று. இந்த "விடுதலைப் போராட்ட நடவடிக்கைகளுக்கு" முஸ்லிம்கள் ஒன்றும் செய்ய முடியாத கையாலாகாதவர்களாகவே இருந்தார்கள். இதற்கு பயங்கர-நவீன ஆயுதங்களை அவர்கள் கரங்களிற் கொண்டு திரிந்தமை அல்லது இந்திய அமைதிப்படையினர் ஒரு பக்க நியாயம் வழங்கியமை அல்லது பின்னர் வந்த எல்.ரி.ரி.ஈ.இனர் இப்பிரதேச தமிழ் மக்களிடம் செல்வாக்குப் பெறுவதன் பொருட்டு பாராமுகமாய் இருந்தமை என்பனவும் காரணங்களாய் அமைந்திருந்தன. அத்துடன் ஊர்ப்பெரியார்கள், சமயப்பெரியார்கள் முதலியவர்களின் உணர்வு பூர்வமான வழி காட்டல்களும் துணை புரிந்தன. எனினும் 1989 மே 17இலும் அதன் பின்னர் 1991 ஜுலை 23 இலும் முஸ்லிம் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு விட்டு அகதி முகாம்களை நோக்கி ஓட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை கவனமாகத் திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

நிலைமை இவ்வாறு இருக்க உள்ளூர்- வெளியூர் பிரச்சார வலைப் பின்னல்களும், சர்வதேசப் பயங்கரவாத ஏஜெண்டுகளும் அவர்களின் குரல் தரவல்ல அதிகாரிகளும் 'ஐரோப்பிய' மனித உரிமையாளர்களும் அறிக்கை என்ற பெயரில் புராணங்களை இலங்கை, இந்தியா, மேற்கு ஐரோப்பிய நாடுகள் முதலியவற்றில் வெளியிட்டுள்ளனர். இவை முஸ்லிம்களை கொடுமைக்காரர்களாகவும், காட்டிக் கொடுப்பவர்களாகவும், மத வெறியர்களாகவும், கொள்ளை யடிப்பவர்களாகவும் சித்தரித்தமையை அவதானிக்க முடிகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக யாழ்ப்பான பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் மனித உரிமைக் கழகம் வெளியிட்ட அம்பாரை மாவட்ட அறிக்கையானது முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட இடங்களில் எல்லாம் உண்மைக்குப் புறம்பாகவும், அகவயத்தன்மை கொண்டதாகவுமே காணப்படுகின்றது. மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போல தாக்குதலுக்கு இலக்கானவனே தாக்கியவனாகச் சித்தரிக்கப்படுகின்ற சர்வதேச ரீதியான பிரச்சாரத்தைக் கண்டு நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைக்கான யாழ் பல்கலைக்கழக
ஆசிரியரின் வெளியீட்டில்
முஸ்லிம்களின் மீது அபாண்டம்

invited the LTTE and [illegible] in more comfortable [illegible] LTTE gained many [illegible] Sammant[illegible] [illegible]so poured m[illegible] the motorcycle u[illegible] by [illegible]ader Kumar (Neethi) was said [illegible] been gifted by Muslim businessm[illegible] Muslim helpers pointed out former TNA members in Veeramunai who were taken for interrogation into Sammanthurai. These were released later.

Many elderly persons in Veeramunai see the present troubles as a continuation of what happened on Tamil New Year's day, 15th April 1954. Veeramuanai had then commanded a more extensive area. Two Tamils developed a serious quarrel arising out of festive drinking. The Muslim magistrate from Samanthurai, who came to settle the quarrel was himself stabbed in the argument that ensued. Muslim mobs from Samanthurai which had a much bigger population attacked Veeramunai and burnt nearly all Tamil houses causing Tamils to flee. Following this incident, about 75% of Tamil residential property was sold to Muslims at very low prices. Tamils thus displaced, founded new villages at Malwattai, Veeracholai, 4th and 19th Colonies etc. The area sold was absorbed into Samanthurai. Veeramunai was thus reduced to a Tamil enclave. There have always been Muslims waiting for a chance to repeat what happened in 1954 and make Veeramunai non-existent altogether. The present incident is seen in this light.

When the LTTE captured police stations in the East, on the 11th of June, and a decision was taken to kill the policemen who surrendered, there appears to have [illegible]iderable dissent amongst the local [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.2 The transformation of Economic power from the 40's:

To understand the context to these changes, in the 40's the important government positions in the East, such as doctors, engineers and civil servants, were held by Jaffna Tamils. They had their own tribal instincts and priorities like the Muslims. They used their influence in finding jobs for their folk in government service, and thought little about the land. The Jaffna Tamil elite saw their future and economic base in terms of education and government employment in all parts of the country. It was only when this perception was threatened that they gave thought to land, federalism and later separation. At the time of independence, these were far from

Before the 1940's, nearly all the fertile paddy land from Kalmunai to Panama, south of Pottuvil belonged to 20 Tamil families, who employed largely Muslim labour. Muslims had a reputation for being hard working and reliable. The Jaffna Tamil mudalali's who invested in the agricultural economy of the East employed mainly Muslim cohorts. There was hardly a Tamil mudalali of eastern origin. The Muslims thus had a position from which to establish themselves ... at boutique level. Their level

திகைப்படைகின்றோம். இந்தச் சர்வதேசமயமான பிரச்சாரகர்கள் யார்? அவர்களை எவ்வாறு தொடர்பு கொண்டு எங்களின் நிலைமையை விளக்கலாம் என்று ஏங்குகின்ற எங்களை யாரும் நாடி வந்து விசாரிப்பதாக இல்லை.

இதனால் இவ்வாறான ஓர் அறிக்கையை வெளியிடும் வரலாற்றுக் கடமையை நாங்கள் உணர்கின்றோம். இன்றைய நிலையில் இதனை வெளியிடுவதற்கான செலவைப் பங்கிட்டுக் கொள்ளக்கூடிய நிலைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாதவாறு சம்மாந்துறை முஸ்லிம்கள் வறுமைப்படுத்தப்பட்டுள்ளனர். இச்சிறு அறிக்கையில் தமிழ்- முஸ்லிம் முரண்பாட்டின் தோற்றம்- வளர்ச்சி- இன்றைய நிலை என்பன பற்றிய உண்மைப்பதிவு வெளியிடப்படுகின்றது. எவ்வித அகவயத்தன்மையான நோக்கிலுமின்றி திறந்த மனத்துடன் எதிர்கால ஒற்றுமையை நாடி உங்கள் முன் இவற்றைச் சமர்ப்பிக்கின்றோம். அனாவசிய உயிரிழப்புக்களுக்கும், பேரழிவிற்கும் உள்ளாக்கப்பட்ட ஒரு சமூகத்தின் சோக வரலாறு இதில் உருவம் பெற்றுள்ளது. இவையனைத்தும் நடந்த சம்பவங்களேயாகும்.

ஒரு வரலாற்றுப் பதிவின் நோக்கமாக மட்டும் கருதப் படாது புதிய உறவின் புனர்ஜென்மத்துக்கான ஆதங்க மாகவும், அதற்கான அடிப்படைப் பேச்சுவார்த்தையின் நிகழ்ச்சி நிரலைத் திட்டமிடுவதற்கான அத்திவாரமாகவும் இதனை நாம் கொள்ள முடியும்.

இந்த ஆக்கத்தினை வெளிக் கொணர்வதில் உதவிய அனைவர்க்குமே இங்கு மொத்தமாக நன்றி கூறுகின்றோம். அவர்கள் அனைவர்க்கும் வல்ல இறைவன் நல்லருள் பாலிப்பானாக.

இறுதியாக - இலங்கை நாட்டின் இனப் பிரச்சினையில் தமிழர்களால் அந்நியப் படுத்தப்பட்ட முஸ்லிம்களாகிய நாம் எம்மீது சாட்டப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க வேண்டியவர்களாய் உள்ளோம். இப்பாரிய பணியில் சம்மாந்துறை மக்கள் இதன் மூலம் தமது பொறுப்பினைச் சரிவர நிறைவேற்ற முயன்றுள்ளனர் என்பது எமது திடமான நம்பிக்கையாகும். ஏனைய முஸ்லிம் ஊர் மக்களும் தமது பதில்களை முன்வைக்க இதனை ஒரு முன்னோடியாகக் கொள்வார்கள் என்ற ஆதங்கம் எங்களுக்குண்டு.

அல்லாஹ் எம் முயற்சியை அங்கீகரிப்பானாக.

**நூல் வெளியீட்டுப் பணியகத்தார்.**
**சம்மாந்துறை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# சம்மாந்துறை: சான்றுகள் சில*

கிழக்கு மாகாணத்தின் நெற்களஞ்சியமான சம்மாந்துறை மட்டக்களப்பு வாவியின் முடிவிடமாக, அம்பாறை கல்முனை நகரங்களுக்குகிடையே அமைந்துள்ள ஒரு பட்டினமாகும். முஸ்லிம்கள் 90% வீதம் வாழும் இப்பட்டினம் இலங்கையின் பெரிய முஸ்லிம் பட்டினங்களில் ஒன்றாகும். இதன் வரலாறு நீண்ட நெடுங்காலப் பாரம்பரியப் பின்னணி கொண்டது.

சுற்றிவரவும் பச்சைப் பசேலெனக் காட்சி தரும் நெல் வயல்கள்-ஆங்காங்கே சிற்சில மலைக் குன்றுகள்- பட்டிப் பளை ஆற்றின் படுக்கைகள் கொண்ட இவ்வூர் மீன்பாடும் தேனாட்டின் ஒரு முத்தாய் ஜொலிக்கின்றது.

சம்மாந்துறை எனும் பெயரில் 'சம்மான்', 'துறை' எனும் இருபதங்கள் உள்ளன. 'சம்மான்' என்பது மலாயரின் தோணிகளையும், 'துறை' என்பது துறை முகத்தையும் குறிப்பதாக வரலாறு கூறுகின்றது.

'Sammanthurai is from Malay Samman (a boat) and 'Thurai' is a ferry or harbour. It is to have become the original Batticaloa boat-harbour the extreme south of the Lake."

> எஸ்.ஓ.கனகரத்னம் - பிரதம முதலியார் கிழக்கு மாகாணம். தனது Monograph of the Batticaloa District of the Eastern Province of Ceylon.1921 நூலில்.

இலங்கைக்கு வந்த மலாயர்கள் சம்மாந்துறை வாழ் மக்களுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தனர். இதே வேளை இலங்கையுடனான அராபியர் தொடர்பிற்கு 2500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI


ஆண்டு பாரம்பரியம் இருப்பதாக வரலாற்றாசிரியர்கள் கருத்தொருமிக்கின்றனர். நபி நாதர் (ஸல்) அவர்களின் பிறப்பிற்கு முன்னரும், பின்னரும் இங்கு பல நூறு யாத்திரீகர்கள், கடலோடிகள், வர்த்தகர்கள் வந்து எம்மவருடன் இரண்டறக் கலந்ததற்கும் வரலாறு உண்டு.

ஹிஜ்ரி 470ல் பிறந்த ஹஸ்ரத் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் எழுச்சியின் பின் உலகமடங்கிலும் அவரின் புகழ் மேலோங்கியது. அவர் காட்டிய வழியில் இஸ்லாத்தின் தூதைச் சுமந்தவர்களாக பலநூறு இறை நேசர்கள் எமது நாட்டிற்கும் வந்தனர். நாட்டின் நாலா திக்கிற்கும் சென்று அவர்கள் தீனின் ஒளியைப் பாய்ச்சினர். அந்த வரிசையில் கிழக்கிற்கு வந்த இறை நேசர்களின் ஜமாஅத் திருக்கோயிலில் தரையிறங்கி சம்மாந்துறைக்கு வந்ததாக சரித்திரம் சான்று பகர்கின்றது. அந்த ஜமாஅத்தில் ஒருவர் திருக்கோயிலில் அடங்கியுள்ளார்.

ஏனையோர் சம்மாந்துறைக்கு வந்து அப்பிர தேசத்தில் தீன் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டனர் சம்மாந்துறையூரின் பண்டைய கிராமங்களில் ஒன்றான மல்கம்பிட்டியில் கலந்தர் சிக்கந்தர் வலியுல்லாஹ்(ரஹ்) தரித்து பணியினை மேற் கொண்டார். அவர் அங்கேயே காலமாகி அடக்கப்பட்டுமுள்ளார். மேலும் சேனை வட்டையில் 'காட்டவுலியா'(ரஹ்), கொண்டவட்டு வானில் 'வீரையடியப்பா' வலியுல்லாஹ் (ரஹ்) கொடாவட்டையில் 'குருந்தையடியப்பா' வலியுல்லாஹ் (ரஹ்) ஆகியோர் அடங்கியுள்ளனர். இன்று வரை அவர்களின் அடக்கஸ்தலங்கள் எம்மால் பாதுகாக்க ப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இலங்கையை ஆக்கிரமித்த போர்த்துக் கீசர் சிலுவை யுத்தத்தினால் ஏற்பட்ட வெறுப்பினால் முஸ்லிம்களை வேட்டையாடத் தொடங்கினர். அபயம் தேடி சப்ரகமுவா மாகாண, தென்மாகாண மக்கள் கண்டி மன்னர் செனரத்திடம் சென்றனர். செனரத் மன்னர் அவர்களை ஆதரித்தான். பாரம்பரிய முஸ்லிம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசமான சம்மாந்துறைக்கு அவர்கள் 4000 பேரை அனுப்பிக் குடியேற்றினான்.

"When Governer Sa decided to carry out the orders given to him there were whole villages of Muslims in the Sabradgamuwa Dissawanies and in the Districts of Kalutara, and Alutgama and in Beruwela. These Muslims went over to the Sinhalese Kingdom of Kandy where King Senarat gave them Shelter and settled 4 thousand of them at Sammanture."

-எம்.ஓ.எம். ஹுஸைன் மாவட்ட நீதிபதி. தனது Some problems of Muslim law in Ceylon என்ற நூலில்.

"When the Portuguese expelled the Muslims from their territories they were receieved by Senarat who settled 4 thousand of them in Batticaloa."

-எம்.எம்.எம்.மஹ்ரூப். பீ.ஏ. அட்வகேட். தனது Marginal note to the History of Muslim law in Ceylon என்ற நூலில்.

சம்மாந்துறையே அப்போது மட்டக்களப்பு என்று அழைக்கப்பட்டது. போர்த்துக்கீசர் தமது கிழக்கு மாகாணக் கோட்டையை இங்குதான் அமைக்க உத்தேசித்தனர். பின்னர் அக்கோட்டை புளியந்தீவில் (தற்போதைய மட்டக்களப்பில்) அமைக்கப்பட்டது.

"சிங்கள அரசனான இராஜ சிங்கன் 16ம் நூற்றாண்டில் அழுத் நுவரையில் இருந்து சம்மாந் துறைக்குப் பிரயாணம் செய்தான். இக்காலத்தில் சம்மாந்துறை மட்டக்களப்பு என்று அழைக்கப்பட்டது.

-Seeing Ceylon என்ற நூலில் R.L. BROHIER.

சம்மாந்துறையில் வாழ்ந்த பாரம்பரிய முஸ்லிம் களும் செனரத் மன்னனால் குடியேற்றப்பட்ட முஹாஜிர் முஸ்லிம்களும் தமது இஸ்லாமிய சகோதரத்துவத்தைப் பேணிப் பாதுகாத்து வந்தனர். அதே வேளை தம்மை அண்டி வாழ்ந்த தமிழ்ச் சகோதரர்களுடனும் தொடர்ச்சியான நல்லுறவையும் பேணியே வாழ்ந்து வந்துள்ளனர்.

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறை முஸ்லிம்களிடம் ஒரு பாரம்பரிய சகோதரத்துவம் இன்றுவரை பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அவர்களிடையே எப்போதுமே குலகோத்திர முரண்பாடுகள், இயக்க முரண்பாடுகள் இருந்தது கிடையாது. எப்போதுமே அவர்கள் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் வாழ்வதில் பேர் பெற்றவர்கள். அத்துடன் சீரிய மார்க்கவாதிகளின் தலைமை அவர்களுடன் பின்னிப் பிணைந்த தொன்றாகும். கலந்தர் சிக்கந்தர் வலியுல்லாஹ் (ரஹ்), சுலைமாலெவ்வை ஆலிம் வரிசையில் இன்று பெரிய ஹஸ்ரத் எம்.பீ.அலியார் அவர்களின் தலைமை தொடர்கின்றது.

இது மட்டுமன்றி சம்மாந்துறையில் மஜ்லிஸ் அஷ்ஷுரா எனும் ஜமாஅத்களின் உயர் கவுன்ஸில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் பரிபாலனத்தில் கீழ் 30 பள்ளிவாசல்களும், சியாரங்களும் உள்ளன. இதுவே எமது சகோதர வாஞ்சைக்கும், விட்டுக் கொடுக்கும் தன்மைக்கும் பெரியதோர் எடுத்துக் காட்டாகும்.

இங்கே இன்று 25 அரசாங்கப் பாடசாலைகள் உள்ளன. அவற்றில் இரண்டு தமிழ்ப் பாடசாலைகளாகும். சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி இன ஐக்கியத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது. சம்மாந்துறை வாழ் தமிழ் மாணவர் மட்டுமன்றி காரைதீவு, கல்முனை, பாண்டிருப்புப் பிரதேசத் தமிழ் மாணவர்கள் பலநூறுபேரின் தாயகமாகவும் இது திகழ்ந்தது. தமிழர் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில் சீருடை ஒன்றும் தமிழ் மாணவிகளுக்காக இங்கு அறிமுகப்படுத்தப் பட்டமையும், கோயிலுக்குச் சென்று அங்கே காலை வணக்கத்தில் ஈடுபடுவதற்கான அனுமதி அவர்கட்கு வழங்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கன.

என்றும், எங்கும் தம்முள்ளும், தமிழினத்தாருடனும் சகோதர வாஞ்சையுடன் நூற்றாண்டு காலமாக வாழ்ந்த முஸ்லிம்கள் ஏன் அந்நியப்படுத்தப்பட்டனர்? எங்கே, எப்போது, எவ்வாறு தோன்றியது இந்த தமிழ் - முஸ்லிம் இன விரிசல்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# வீரமுனைக் கலவரம்

சம்மாந்துறை பல நூறு ஆண்டுகாலமாக தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்து வாழும் பிரதேசமாகும். இவர்களுடைய சமூக, சமய, கல்வி, கலாசார, அரசாட்சி அலுவல்கள் அனைத்திலும் இணைந்த உறவு பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. இதன் வழியில் இன்று இப்பிரதேசத்தில் நிலவுகின்ற இனமுரண்பாட்டை ஆராயும்போது முதன் முதலாக 1954 க்கு முன்னர் இங்கு எவ்வித முண்பாடும் நிலவவில்லை என்பதைக் கவனத்தில் கொண்டு அக்காலத்துக்கு பின்னருள்ள உறவுத்தன்மை பற்றி சிந்திக்க வேண்டும். ஆகவேதான் அத்தகைய முரண்பாடு நிகழ்வதற்கு அடிப்படைக் காரணம் அன்றய பட்டின சபைத் தேர்தலின் ஆரம்பத்திலேயே தொடங்கிய தமிழர்களுக்கிடையிலான கோஷ்டிச் சண்டை எனலாம். எனவே இத்தகைய பிறழ்வுகளை முற்று முழுக்க அலசுவதற்கு 1947ல் இருந்து சம்மாந்துறைப் பட்டினசபைத் தேர்தலின் வரலாற்றையும் அதன் பிரதிநிதித்துவ அம்சங்களையும் விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

## 1947 - சம்மாந்துறை பட்டின சபைத் தேர்தல்.

அன்று 1947 ஆம் ஆண்டு உள்ளூராட்சி அமைப்புக்கேற்ப சம்மாந்துறையில் பட்டினசபை ஆரம்பிக்கப்பட்டது. அது ஐந்து உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது. அவ்வுறுப்பினர் தொகையும் விகிதாசார ரீதியிலும் இன நலன்பேணல் சிந்தனையிலும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறை 05 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டது. அதில் 1 ஆம் வட்டர்ரம் 80% தமிழ்மக்களையும் 20% முஸ்லிம் மக்களையும் வாக்காளர்களாகக் கொண்டது. 2ம் வட்டாரம் முற்றாக முஸ்லிம்களைக் கொண்டது. 3ஆம், 4ஆம் வட்டாரங்களில் முறையே 3-4% தமிழ் மக்களையும் மிகுதிமுஸ்லிம் மக்களையும் வாக்காளராக கொண்டதாக காணப்பட்டது. ஐந்தாம் வட்டாரம் 20% தமிழ்மக்களையும் மிகுதி முஸ்லிம்களையும் கொண்டமைக்கப்பட்டிருந்தது.

இந்த அடிப்படையில், இங்கு வாழ்ந்த மக்கள் எந்தவித இன, பேதமுமின்றி மிகவும் சிறப்பாக- ஒற்றுமையாக ஓர் இனத்தை மறு இனம் புரிந்து கொண்டவர்களாக, பரஸ்பரம் கொண்டும், கொடுத்தும் வாழ்ந்து வந்தனர். பல நூறு வருடங்களாக இந்த ஊரில் எந்த வித இனக் குழப்பங்களோ கருத்து வேறுபாடுகளோ காணப்பட்டதாக எந்த விதச் சான்றுகளும் இல்லை.

முதலாவது பட்டின சபைத்தேர்தலில் மிகவும் ஒற்றுமையாக அதிகமான போட்டிகளின்றி கட்சி பேதங்கள் அற்ற முறையில் தனி மனிதர்களின் சொந்தச் செல்வாக்கின் அடிப்படையில் ஒவ்வொரு வட்டாரத் துக்கும் இருவர், மூவர் போட்டியிட்டு முதலாம் வட்டாரத்துக்கு ஒரு தமிழரும் (திரு.பொன்னுத்துரை) 2ம், 3ம், 4ஆம், 5ஆம் வட்டாரங்களுக்கு நான்கு முஸ்லீம்களும் முறையே ஜனாப்கள்: முகம்மதிஸ்மாயில் வட்டானை, சுலையுமாலெவ்வை, அப்துல் காதர், பக்கீர் முகையதீன் போடி ஆகியவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இதில் முதலாம் வட்டாரத்தில் இரு தமிழர்களே போட்டியிட்டு ஒருவர் வெற்றி பெற்றார். அங்குள்ள வாக்காளர் விகிதப்படி ஒரு முஸ்லீம் போட்டியிட்டிருந்தால் வெற்றி பெற்று தமிழருக்கு இச்சபையில் இடம் அளிக்காது விட்டிருக்கலாம். ஆனால், இரு இனத்தவர்களினதும் ஒற்றுமையின் நிமித்தம் சிறுபான்மையினரிலும் ஒருவர் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் அன்று அந்த வட்டாரம் தமிழருக்காகவே ஒதுக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது இங்கு குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய ஓர் அம்சமாகும். அன்று மட்டுமல்ல, என்றும் இருந்து வந்த- வருகின்ற ஒரு வழக்கமுமாகும். அப்படித் தெரிவு செய்யப்பட்ட பட்டின சபையில் எப்போதும் ஒரு தமிழரே உப தலைவராக இருந்தும் வந்துள்ளார் என்பதும் குறிப்பிட்டுக் காட்ட வேண்டியதாகும்.

அடுத்ததாக, 1941 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம். இதேபோல அதன் இயக்குனர் சபையில் ஒரு தமிழரை உறுப்பினராக சேர்த்துக் கொண்டு அவருக்கும் உப தலைவர் பதவி வழங்கப்பட்டது. இது இன்று வரை பின்பற்றபட்டு வருகின்றது. அதன்படி கடந்த 12 ஆண்டுகளாக திரு.இராஜேந்திரன் என்பவர் உப தலைவராக இருந்து வருகின்றார். அதேபோல பொது நோக்குச் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பலவற்றிலும் ஓரிருவரைச் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கு முக்கிய பதவிகளை வழங்கிக் கௌரவிப்பது இந்த ஊரின் சிறப்பம்சங்களில் ஒன்று. இந்த ஊரவர்கள் மற்றவர் நலனை மதிப்பதிலும், மற்றவரின் உரிமைகளை பேணுவதிலும் எவ்வளவு நேர்த்தியானவர்கள் என்பதை இந்த யதார்த்த வரலாற்றுண்மைகள் தெளிவாகக் காட்டும்.

தொழில் ரீதியாக எடுத்துக் கொண்டால் கூட முஸ்லீம்களின் விவசாய சேவைகளில் தமிழர்களும், தமிழரது வேலைகளில் முஸ்லீம்களும் கலந்து கொள்வது மிகச் சாதாரண ஒரு விடயம். மற்றும் மேசன் தொழில், சவர, சலவைத் தொழில் போன்றவற்றை முற்றாக தமிழ் மக்கள் செய்து வந்தாலும் அத்தொழில் செய்பவர்கள் முஸ்லீம் மக்களிடையே எந்தவித தாழ்வாகவும் மதிக்கப்படுவதில்லை. வேறுபாடும் காட்டப்படுவதில்லை. தமிழர்கள் இவர்களை அவர்களுக்குள் மதிப்பதனை விட கணிசமான மதிப்பினையும் கௌரவத்தினையும் முஸ்லீம் மக்கள் இவர்கள் மீது செலுத்தியே வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஒரு கண்ணகி கோயிலும், ஒரு பத்திரகாளி கோயிலும் உண்டு. இக்கோயில் திரு விழாக்களில் கூட ஏராளமான முஸ்லீம்கள் கலந்து கொள்வது மட்டுமன்றி பண உதவி, பொருள் உதவி, உழைப்புதவிகளையும் செய்து வந்தனர். அதேபோல முஸ்லீம் மக்களின் கந்தூரிகள், விழாக்கள் போன்றவைகளில் தமிழ் மக்களும் பங்கு பற்றி வந்தனர். இத்தகைய மிகச் சிறப்பான கல்வி, கலாச்சார சமூக பண்பாட்டு விடயங்களில் பிரிக்கப்படாது இறுக இணைக்கப்பட்ட இரு இனங்களுக்கும் இடையே ஏற்பட்ட பகையுணர்விற்கான காரணங்களை ஆராய்வோம்.

## 1952 பட்டினசபைத் தேர்தலில் 1ம் வட்டாரம்.

1952 ஆம் ஆண்டு நடைபெற்ற பட்டினசபைத் தேர்தலில், 1ஆம் வட்டாரத்தில் திரு.சீ.கே.பழனி யாண்டியும், திரு.மாணிக்கம் என்பவரும் போட்டி யிட்டனர். மிகப் பலமான போட்டியின் மத்தியில் திரு.மாணிக்கம் என்பவர் தெரிவு செய்யப்பட்டார். இந்த தேர்தல் காரணமாக வீரமுனைத் தமிழ் மக்கள் இரு பகுதியாகப் பிரிந்து கொண்டார்கள். பள்ளித் தெருவில் வசித்து வந்த திரு.பழனியாண்டியின் குழுவினர் ஒரு பகுதியாகவும் , கோயில் தெருவில் வசித்து வந்த திரு.மாணிக்கத்தின் குழுவினர் மறு பகுதியாகவும் பிரிந்து அடிக்கடி சண்டை யிட்டுக் கொண்டார்கள். என்றாலும், அவ்வட்டாரத்தின் உறுப்பினரான திரு.மாணிக்கம் பட்டின சபையின் உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர்களது (மாணிக்கம்-பழனியாண்டி) பகைமை வளர்ச்சியடைந்து வந்தது. 1953 ஆம் ஆண்டு சித்திரைப் புதுவருடத்தின் போது மாணிக்கத்தின் சொந்தக்காரரும், அன்றைய வீரமுனை மக்களின் ஒரு சாராரிடையே செல்வாக்கு மிக்க வராகத்திகழ்ந்தவருமான கூப்பங்கடைச்சாமி எனப்படும் சாமித்தம்பி என்பவர் பழனியாண்டி தரப்பினரால் கொலைசெய்யப்பட்டார். இந் நிகழ்ச்சி இவ்விரு பகுதினரிடையே தீராப் பகையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தி விட்டது. இந்த பகைப்புலத்தின் விளைவுதான் வீரமுனைக் கலவரம். ஓர் இனத்துக்குள் தோன்றிய அந்தப் பிரிவும் - துயரும் வரலாற்றில் கறைபடிந்த காவியம் ஒன்றை படைக்கத் துணையாயிற்று. வீரமுனைக் கலவரத்தின் வெட்டுமுகத்தைப் புரிந்து கொள்வதன் மூலம் இதைப் பற்றித் தெளிவர்க அறிந்து கொள்ளலாம்.

## வீரமுனையில் நடந்தது என்ன?

*1954* ஆம் ஆண்டு சித்திரை *16* ஆந் தேதி வெள்ளிக்கிழமை *11.45* மணியளவில், ஜும்ஆத் தொழுகைக்குச் செல்வதற்காக மக்கள் புறப்பட்டுக் கொண்டிருந்த நேரம். 3ஆம் குறிச்சி விதானை ஜனாப்: எம்.ஏ. முகம்மதலி (சீனி விதானை) அவர்கள் தனது வீட்டில் இருந்தார்கள். தம்பி ஐயா என்ற வீரமுனையைச் சேர்ந்தவர் வந்து அவசர அவசரமாக விதானையை அழைத்தார். "என்ன" என விதானையார் விசாரித்தபோது, வீரமுனையில் பெரிய சண்டை; மூவர் வெட்டப்பட்டு குற்றுயிராய்க் கிடக்கின்றனர். நீங்கள் உடனே வர வேண்டும்" என்றார் . "சரி, நீ போ நான் வருகின்றேன். போகும் போது 4ம் குறிச்சி விதானை அஹமது லெவ்வையும் கூட்டிக் கொண்டு போ" என்று கூறினார்.

## விதானையார் கடமைக்காக செல்லல்

அதே நேரம், பூபாலன் என்ற ஒருவர் வந்து விதானையைக் கூப்பிட்டு, "டீ.ஆர்.ஓ. உங்களை அழைக்கின்றார்", என்று கூறினான். விதானை புறப்பட்டு டீ.ஆர்.ஓ விடம் சென்றார். அங்கு, மூன்று பெண்கள் அழுத வண்ணம் இருந்தனர். டீ.ஆர்.ஓ.வும் பரபரப்படைந்த நிலையில் காணப்பட்டார். விதானையைக்கண்டதும், "விதானையார் வீரமுனையில் குழப்பமாம். உடன் சென்று பாருங்கள். என்னுடைய காரை வேண்டுமானாலும் கொண்டு செல்லுங்கள்" என அவசரமான கட்டளையை மிகப் பரிவாக இடுகின்றார். உடனே விதானை, சரி "நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கின்றேன்" என்ற போது "இப்பெண்களை என்ன செய்ய" என்று டீ.ஆர்.ஓ. கேட்கிறார். "நான் மோட்டார் சைக்கிளில் செல்கின்றேன். அவர்களை அங்கே அனுப்புங்கள்" என்று கூறிய விதானை குழப்பம் நடைபெற்ற வீரமுனைக்குச் செல்கின்றார். அங்கே, குழப்பம் நடைபெற்ற வளவுக்குள் வீட்டு முன் புறமாக ஒருவரும் வீட்டுத்திண்ணையில் ஒருவரும் பின்பக்கமாக ஒருவரும் வெட்டுக் காயங்களுடன் கிடந்தனர். இதை நன்கு விதானை உற்றுப் பார்த்தார்.

காயங்களுடன் கிடந்தவர்கள் எழுந்து பேசக் கூடியதாயிருந்தனர். எனினும் கடமை செய்யட்டும் என்பதற்காக படுத்துக்கிடந்தார்கள். இவர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டும் என்பதை அனுமானித்துக் கொண்டவராய், "நீங்கள் இப்படிப் படுத்தால் எந்தக் கடமையும் செய்ய முடியாது எழுந்து எனக்கு உங்கள் வாக்கு மூலத்தை அளிக்கவேண்டும்" என்று விதானையார் கட்டளையிட்டதும் காயப்பட்டவர்களும் அவர்களது சொந்தக்காரர்களுமாக வாக்கு மூலமளித்தனர். அதன்படி, "எங்களது வீட்டை வந்து வேலியைத் தாண்டி வாட்மெம்பர் மாணிக்கமும் அவரது அண்ணன் சிவனடியான், அவரது தம்பிகள் முருகேசு, கறுவல்தம்பி, சிந்தன் ஆகிய ஐவருடன் பறங்கிட போடிமகன், முத்துலிங்கக் கிளாக்கிட மகன் ஆகியோரும் மேலும் நால்வரும் சேர்ந்து 11 பேர் எங்கள் மூவரையும் வாள், கத்தி, பொல்லு என்பவற்றால் தாக்கிக் காயப்படுத்தினர். அவர்கள் எங்களைக் கொலை செய்யத்தான் வந்தார்கள். கடவுள் எங்களைக் காப்பாற்றி விட்டார்". என்று கூறினார்கள். இதற்கு அங்கு நின்ற பலர் சாட்சியும் சொன்னார்கள். பலவற்றையும் கேட்டுப் பதிந்துகொண்ட விதானை காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல ஒழுங்குகளைச் செய்துவிட்டு அகமதுலெவ்வை விதானையுடன் எதிரிகளைக் கைது செய்வதற்காக மாணிக்கம் வீட்டிற்குச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI



## கடமைக்காக சென்ற விதானையார் தாக்கப்படுகின்றார்

விதானையார் சென்றபோது மாணிக்கம் வீட்டின் கதவு நிலையைப் பிடித்தவாறு குழப்பிய தலையும் விகாரமான முகத் தோற்றத்துடனும் நின்று கொண்டிருந்தான். "மாணிக்கம் நான் உன்னை அரச கட்டளைப் படி கைது செய்கிறேன். உனது தம்பி முருகேசு, அண்ணன் சிவனடியான், கறுவல் தம்பி, சிந்தன் ஆகியோர் எங்கே?" என்று விதானை கேட்டார். வீட்டின் பின்புறமாக இருந்து வெளிப்பட்ட முருகேசு பெரிய ஒரு பொல்லினால் விதானையை நோக்கி அடித்தான். அப்போது மல்யுத்தத்தில் வல்லமை பெற்றிருந்த விதானையயார் அதனை தடுத்து அவனைத் தள்ளி விட்டார். முன்னர் எதிரிகளாகக் குறிப்பிட்ட அனைவரும் (பதினொருவரும்) அங்கு வீட்டின் பின் புறமும் வீட்டிற்குள்ளும் இருந்து வெளிப்பட்டு அவரைச் சூழ்ந்து கொண்டனர். பின்னர் விதானையார் முருகேசு கொண்டு வந்த பொல்லை எடுத்து சுழற்றினார். மாறி அவர்களும் அடித்தார்கள். மாறி மாறிச் சண்டையிட்டதில் விதானைக்கு ஒன்பது கத்திக் குத்துக் காயங்கள் ஏற்பட்டன. கறுவல் தம்பி என்பவனது கையில்தான் கிறிஸ் கத்தி இருந்ததும் சண்டை வலுவடைந்து விட்டது. விதானையுடன் சென்ற 4ஆம் குறிச்சி விதானையைக் காணவில்லை. இந்த வேளையில் விதானையாருக்கு மயக்கம் ஏற்பட்டது. வீட்டுத் திண்ணையில் அமர்ந்தார். அவரைப் பிடித்து வீட்டிற்குள் தள்ள முயற்சித்தார்கள். அவர் கதவைப் பற்றிப் பிடித்துக் கொண்டு நிலையில் கால்களைக் உதைத்த வண்ணம் நின்றார். யாவரும் அவரைச் சூழ்ந்து கொண்டனர். விதானையின் உடலில் இருந்து இரத்தம் பெருக்கெடுத்தோடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதானை வீரமுனையில் தாக்கப்படுவதை ஊர் மக்கள் அறிதல்.

விதானையுடன் சென்ற 4ஆம் குறிச்சி விதானை சண்டை வலுவடைந்து 3 ஆம் குறிச்சி விதானை அடிபட்டு வீழ்ந்ததையும், கத்திக் குத்துக்களையும் கண்டதும் மெதுவாக நழுவி ஊருக்குள்சென்று சீனி விதானையை "மாணிக்கம் பாட்டி கத்தியால் குத்துகின்றார்கள். அவரைக் காப்பாற்றுங்கள்" என்று கத்தியவண்ணம் ஓடி வந்தார். இதைக் கேட்ட பொதுமக்களும் விதானையின் சொந்தக் காரர்களும் பதறியடித்துக் கொண்டு வீரமுனைக்குள் ஓடிச் சென்றனர்.

இந்தச் செய்தியைக் கேட்டு சென்ற மக்களை, கண்ட ஒருவன், சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு ஓடிச் சென்று "மாணிக்கண்ணை, சனம் வாருங்கள்" என்று சத்தமிட்டுக் கூறினான். மாணிக்கம் வீட்டினுள் நின்ற முருகேசிடம் "துவக்கையும் தோட்டாவையும் தாடா" என்று கர்ச்சித்தான். உடனே, துப்பாக்கி, தோட்டா என்பன கைமாறுகின்றன. வாங்கி வைத்துக் கொண்ட மாணிக்கம் சிறிது நேரத்தில் சனக் கூட்டத்தைக் கண்டதும் பூமியை நோக்கித் தாழ்த்தி ஒரு வெடியைச் சுட்டபின் மெதுவாக நகர்ந்து வீட்டின் பின்புறமாக நழுவத் தொடங்கினான். மக்கள் முன்னேறி வந்தனர். மக்களை நோக்கிச் சுட்டான். அந்த இடத்திலேயே ஒருவர் (சுலைமாலெவ்வை முகம்மது காசிம்) வீழ்ந்து விட்டார்.

"என்னைச் (விதானையாரை) சூழ்ந்திருந்த அனை வரும் மெதுவாகத் தப்பியோடினர். இரத்தப் பெருக்கு காரணமாக களைப்படைந்திருந்த நான் எழும்ப முயற்சித்ததும் முடியவில்லை. சிறிது நேரத்தில் என்னை எனது சகோதரனும் வேறு சிலரும் தூக்கிச் சென்றனர். அந்நேரம் பல துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன. சில வீடுகள் எரிந்து கொண்டிருந்தன".

இவை ஜனாப்: எம்.ஏ.முகம்மதலி (விதானை) அவர்களின் வாக்கு மூலத்தில் இருந்து பெறப்பட்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரச்சினையும் சூழ் நிலையும்

இந்த சம்பவங்கள் நடைபெற்ற சந்தர்ப்ப சூழ்நிலைகள் பற்றிய ஆய்வு அவசியமாகும். சித்திரைத் திருநாளிலே குடித்துக் கும்மாளமிட்டுக் கொண்டிருந்த மாணிக்கம் பிரிவுக்கும், பழனியாண்டி பிரிவுக்கும் இடையில் திட்டமிடப்பட்ட சண்டை; 3ஆம் குறிச்சி விதானையார் கடமைக்காக டீ.ஆர்.ஓவினால் அனுப்பப்படுகின்றார்; அங்கு விதானையாரும் தாக்கப்படுகின்றார்; இந்த செய்தி சம்மாந்துறை மக்களுக்கு, 4ஆம் குறிச்சி விதானையால் ஜும்ஆத் தொழுதுவிட்டு கூட்டமாக வெளியேறிய வேளையில் கிடைக்கின்றது. இந்த 3 ஆம் குறிச்சி விதானை யார்? யார் தாக்குகின்றார்கள்? அதுவும் என்ன வேளையில்?

ஜும்ஆ தொழுது கூட்டமாக வெளியேறிய மக்கள் கூட்டத்தினர் செய்தி கேட்டு ஆத்திரம் கொண்டனர். ஆவேசமடைந்தனர். இந்த ஆத்திரம் எத்தகையது? ஏன் இந்த மக்கள் ஆத்திரமடைந்தார்கள் எனவும் சிறிது நோக்கப்படல் வேண்டும்.

3ஆம் குறிச்சி விதானையாயிருந்த எம்.ஏ.முகம்மதலி சம்மாந்துறையில் மிகப்பெரிய போடியார் குடும்பத்தில் பிறந்தவர். செயிலான் மரைக்கார் என்ற ஊர் மரைக்காயர் அல்லது பிரதம நம்பிக்கை யாளராயிருந்தவரும் மக்களால் நன்கு மதிக்கப்பட்டவருமான ஒருவரின் ஒரே மகளைத் திருமணம் செய்திருந்தார். இவர் 110 ஏக்கர் காணியைச் சொந்தமாகக் கொண்ட ஒரு நிலச்சுவாந்தருமாவார். இவர் சம்மாந்துறைப் பற்றுப் பகுதியில் காணப்பட்ட 13 விதானைமாரில் மிகச் செல்வாக்கானவரும், கடமையில் மிக நேர்மையானவரும், எந்தக் காரியத்திலும் முன்னின்று மக்களுக்காக சேவை செய்பவரும், குடும்பப் பிரச்சினைகள், சண்டைகள், போன்ற அனைத்து விடயங்களிலும் சரியாக நடுநிலையாக தீர்க்கக் கூடியவருமாவார். மக்களுக்கு உதவுவது மட்டுமின்றி தனது பெரும் சொத்தில் பெற்ற வருமானம் காரணமாக நல்ல கொடையாளியாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வந்தார். பொதுவாக எல்லோராலும் மிக நன்றாக மதிக்கப்பட்டவர். இப்படியான, பிரபல்யமும் சிறப்புமிக்க ஒரு மனிதனை வீரமுனையினர் அடித்துக் கொல்ல முயற்சித்திருக்கின்றனர். அதுவும் மதுவெறி கொண்ட 11 பேரினால் கடமைக்காகக் சென்ற போது அடித்துக் கொல்லப்படுகின்றார் என்ற செய்தி கூட்டமாயிருந்த மக்கள் மத்தியில் பெரும் திகிலையும் ஆத்திரத்தையும் கிளப்பியதில் ஆச்சரியமே இல்லை.

மற்றுமொருபுறம், ஓடிச் சென்ற மக்களை நோக்கி மாணிக்கம் துப்பாக்கியால் சுட்டதும் பலர் வெடிபட்டு வீழ்ந்ததும் மக்களை விதானையார் காணாதவாறு தடுத்து நிறுத்தியதும் மேலும் ஆத்திரமடையச் செய்தது. இவர்கள் தங்கள் தன்மான உணர்வுகளை மீற வேண்டிய மிக இக்கட்டான சூழ்நிலை. உடனே மக்கள் கும்பல் அந்த வீட்டி... மாணிக்கம் அவனது தம்பி அடுத்த வீட்டில் என்று தேடித் தேடி வீடுவடாக தீ வைத்தனர். வீடுகள் எரிந்தன, மக்கள் தமது கையில் பட்டதை சுருட்டத் தொடங்கினர். தமிழ் மக்கள் தமது வீடு வாசல்களை விட்டு மல்வத்தையை நோக்கி ஓடத் தொடங்கினர். தம்வினையே தன்னைச் சுடும் என்பதற்கொப்பவே இந்த உக்கிரமான, அங்கீகரிக்க முடியாத ஒரு விபத்து தற்செயலாக நடந்து விட்டது. ஆத்திரம் கொண்ட சனத் திரள்-மக்கள் எவரையுமே கொலை செய்யவில்லை என்பதை இங்கு நாம் முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டும். ஆனால், அவர்கள் இழைத்த அநீதியினால் முஸ்லீம்களில் ஒருவர் சுலைமாலெப்பை முகம்மது காசிம் உடனே மரணம். 13 பேர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அதில் அறுவர் (6) மரணமடைந்தனர். மற்றவர்கள் கை, கால்கள் ஊனமுற்றவர்களாக இன்றும் வாழ்கின்றார்கள். இப்படிப் பெருந்தொகையானவர்கள் வீழ்ந்து தூக்கிச் செல்லப்பட்டபோதும் இரத்தக் காயங்களுடன் அவர்களைப் பார்த்த போதும் கூட முஸ்லீம் மக்கள் மாணிக்கனைப் பிடிப்பதிலேயே குறியாயிருந்தனரே தவிர, அவர்கள் ஆத்திரம் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1H704



வேறு எந்தத் தமிழ் மக்களையும் கொலை செய்ய முயலவில்லை. ஆக துப்பாக்கியால் சுட்ட மாணிக்கனை பின் தொடர்ந்த மக்களை, அவரது துப்பாக்கி ரவைகள் முடியுமட்டும் வெடி தீர்த்த பின் அல்லை வழியாகத் தப்பி ஓடும் போது துரத்திப் பிடித்த மக்கள் அவரை கொன்று விட்டனர். இது தவிர அங்கு எந்தக் கொலையும் நடைபெற வில்லை. இத்தோடு அவர்களது ஆத்திரமும் அடங்கிக் கொண்டது.

மக்கள் ஆத்திரமடைந்து வீரமுனையை நோக்கி ஓடும்போது பெரிய பள்ளிச் சந்தியில் நின்ற அன்றைய மரைக்கார் சபைத் தலைவரும், மக்களால் நன்கு மதிக்கப்பட்ட வருமான டாக்டர் மீராலெவ்வை, ஹசன் மௌலவி போன்ற பெரியார்கள் மக்களைத் தடுத்து அவர்கள் கொண்டு வந்த துப்பாக்கிகளை பறித்துப் பள்ளி வாயிலுக்குள் வைத்திருந்தனர். இதனையும் மீறிய மக்களே வீரமுனைக்குள் இவ்வித அனர்த்தனங்களில் மாட்டிக் கொண்டனர். இங்கு ஆத்திரமடைந்த முஸ்லீம்கள் துப்பாக்கிகளோடு அங்கு சென்றிருந்தால் • யாது நடந்திருக்கும்? அது தடை செய்யப்பட்டமையை நாம் ஒவ்வொருவரும் கவனத்திற்கொள்ள வேண்டும். முஸ்லீம் தலைவர்கள் அவ்வளவு கரிசனையுடன் அமைதி காத்து ஆத்திரத்தை தணிக்க அயராது முயற்சித்தனர் என்பது இங்கு தெளிவாகின்றது.

சனக் கூட்டத்துக்கிடையே பல மக்கள் சுட்டு வீழ்த்தப்பட்டமையும் மக்களால் மிகவும் அன்பாக "சீனி விதானை" என்ற செல்லப் பெயரால் அழைக்கப்படுகின்ற எம்.ஏ. முகம்மதலி வெட்டிக் கொல்லப்படுகின்றார் என்ற செய்தி பரவியமையும் மக்களை ஆத்திரம் கொள்ளச் செய்து விட்டது. கலவரம் ஒரு மணி நேரத்துக்குள் நடந்து முடிந்து விட்டது.

நகமும் சதையுமாக ஒட்டி உறவாடி, அடுத்த வீட்டில், அண்டை வீட்டில் அந்நியோன்யமாக வாழ்ந்த மக்கள் திருமணம், மரணம் போன்ற சடங்குகளில் வேறுபாடின்றிக் கலந்து கொண்ட மக்கள் அந்நியராயினர். ஒருவரை ஒருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கமுடியாது வேறுபடுத்தப்பட்டனர். வேதனை யடைந்தனர்; வெறுப்புணர்வு வளர்ந்தது; வேதனை வளர்ந்தது; வேண்டியவர்கள் வேண்டாதவர்களாயினர். இப்படிப் பல அனர்த்தனங்கள் ஏற்பட்டன. இந்த மன வேறுபாட்டினை "ராஜபாரதி" தமது "தீயுண்ட வீரமுனை" என்ற கவிதை நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

## சீனி விதானை கடமைக்குச் சென்றது ஏன்?

இக்கலவரத்துக்கு ஏன் எம்.ஏ. முகம்மதலி -3ம் குறிச்சி விதானை கடமைக்காகச் சென்றார் என்பது தவறாக விளங்கப்படுத்தப்படுகின்றது. இது சம்பந்தமாக எம்.ஏ. முகம்மதலி விதானையிடம் கேட்டபோது—

"1954 ம் ஆண்டு சித்திரை மாதம் 12ம் திகதி செவ்வாய்கிழமை, சம்மாந்துறைப்பற்று காரியாதிகாரி (டீ.ஆர்.ஓ.) ஆக இருந்த திரு.பூரணலிங்கம் அவர்கள், என்னை அழைத்தார். நான் அங்கு சென்றபோது; 'விதானையார், வீரமுனை விதானை சிவசம்பு லீவில் செல்கின்றார். சித்திரை வருடப் பிறப்புக் காலம்; குடித்துக் கொண்டு பிரச்சினைப் படுவார்கள், சூது விளையாடுவார்கள், நீங்கள் போனால் அங்கு எந்தப் பிரச்சினையும் நடை பெறாது. மக்கள் உங்களை நன்கு மதிப்பார்கள். ஆகவே இன்றிலிருந்து வீரமுனைக் குறிச்சிக்கும் தாங்கள் பதில் கடமை புரியுங்கள். சம்மதம்தானே? என்று கேட்டார். "நானும் 'ஆம்' என்று கூறினேன். இதற்கு முன் இப்படியான பெரும் பிரச்சினைகள் அங்கு வந்ததுமில்லை; என்னைத் தமிழ்மக்களும் நன்கு மதித்தமையால் நான் பதில் கடமையை ஏற்க மறுக்கவுமில்லை. மற்றும் இந்தக் காரியாதிகாரி என்மீது மிகவும் நம்பிக்கை வைத்திருந்தார். அந்த நம்பிக்கையை நான் இழக்க விரும்பவுமில்லை. இத்துடன் இப்பிரிவில் காணப்பட்ட 13 விதானைகளில் எனக்கும், சிவசம்புவுக்கும், சபூர் விதானைக்குமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவருக்கும்தான் பொலிஸ் கடமை செய்கின்ற கட்டளை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (ஏ.எஸ்.பி.) மூலம் பூரணலிங்கம் அவர்களால் பெற்றுத்தரப்பட்டிருந்தது. இவைகளின் அடிப்படையில் நான் பதில் கடமையில் ஈடுபடச் சம்மதித்தேன். உடனே, எனக்கு கட்டளைக் கடிதம் பிரிவுக் காரியாதிகாரியால் தரப்பட்டது. நான் பெற்று பிரிவுக்காரியாதிகாரி முன்னிலையில் கடமை ஏற்றுக் கொண்டேன்.

"மறுநாள் *13*ஆம் திகதி, *14*ஆம் திகதியும் சித்திரைப் புதுவருடப் பிறப்புக் கொண்டாட்ட காலத்தில் பலர் குடிவெறியில் சத்தமிட்டுக் கதைப்பதும், அவரை வேறு சிலர் பகிடி பண்ணுவதும் அதனால், ஏற்படுகின்ற சிறு சிறு சம்பவங்கள் நான் சென்றதும் அல்லது எனது பீ.எஸ்.ஏ. மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டதும் கலைந்து விடும். இதுபோன்றே சூதாட்ட கிளப்புகள் நடைபெறும். நான் செல்கின்றேன் என்று கேள்விப்பட்டதும் ஓடி விடுவர். இப்படிப் பல நாள் சென்று விட்டது. இவைகள்யாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அப்படியான அமைதி காக்கும் ஒரு கடமைக்காகத்தான் *16*ஆந் திகதியும் நான் வீரமுனைக்குச் சென்றேன்.

"ஏன் வீரமுனை விதானை திரு.சிவசம்பு லீவு எடுத்தார் என்று பின்னர் ஆராய்ந்தபோதுதான் உண்மைகள் வெளிவந்தன. *1953*ஆம் ஆண்டு சித்திரை வருடத்தின்போது, கூப்பன் கடைச்சாமி என்ற மாணிக்கனின் சொந்தக்காரன் கொல்லப்பட்டமைக்குப் பழி வாங்கு முகமாக இந்தவருடச் சித்திரையில் *(1954)* சிவசம்பு விதானையை அல்லது பழனியாண்டியை கொலை செய்ய வேண்டும் என்ற திட்டம் மாணிக்கம் தரப்பினரிடையே இருந்திருக்கின்றது. இதனை அறிந்த பழனியாண்டி சிவசம்புவை லீவு எடுக்குமாறு பணித்தார். திரு.பூரணலிங்கம் அவர்களுக்குத் தெரியப்படுத்தப் பட்டது. அப்போது அனைவரும் சேர்ந்து சிவசம்பு லீவு எடுத்துக் கொண்டு அவர்கள் கண்ணில் படாதிருப்பது நல்லது என்பதாலும் அதேநேரம், எம்.ஏ. முகம்மதலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சீனித்தம்பி) விதானையை பதில் கடமைக்குப் போட்டால் மாணிக்கனும் அவரது சொல்லைக் கேட்பான் பிரச்சினை தானாகத் தீர்ந்து விடும் என்பதனாலும் இந்த எற்பாடு செய்யப்பட்டது.

"இதேவேளை இப்படியான பிரச்சினை வருவதைத் தடுக்க வேண்டும் என்பதில் மாணிக்கனின் தாய் கூட மிகவும் குறியாக இருந்துள்ளார். மாணிக்கனை "நேர்த்திக் கடன் தீர்ப்பதற்காக கதிர்காமம் கோவிலுக்குச் செல்லுமாறு அனுப்பி வைத்துள்ளார். அவர் செ று உடனேயே திரும்பி வந்துவிட்டார். வந்தபின் ஆட களைக் கூட்டி நன்றாக மரு அருந்தி விட்டு பழனியாண்டி தரப்பினருக்கு அடித்துக் காயப்படுத்தினால் சிவசம்பு கட்டாயம் தங்களைக் கைது செய்ய வருவார் அவரை அடித்துக் கொல்ல வேண்டும் என்பதே அவர்களின் திட்டம், ஆனால், நடைபெற்ற யாவும் சரியாக இருக்க, சென்ற விதானைதான் நானாகி விட்டேன். நிகழ்ச்சி மறுதலையாக அவர்களும் எதிர்பாராத வகையில் மோசமாக நடைபெற்று விட்டது. "என்று விதானையார் விளக்கிக் கூறுகிறார்.

இந்த மாணிக்கன் யார்? என்று மேலும் முஹம்மதலி விதானையைக் கேட்டபோது, "அவரும் நானும் முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை மிசன் பாடசாலையில் ஒன்றாகப் படித்தவர்கள். மிகவும் நல்ல நண்பர்கள். நாங்கள் சிலவேளை ஒன்றாகச் சேர்ந்து விருந்து உண்டும் இருக்கின்றோம். 'தம்பிவுடையான் படைக்கஞ்சான்' என்பது போல அவன் நல்ல சண்டியன். பொதுவாக நல்லவன். 16ஆம் திகதி சித்திரை 1954 மாணிக்கம், அன்றைய பட்டினசபை முதல்வரும் இன்றைய பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. அப்துல் மஜீதையும் எஸ்.ஆர் என அழைக்கப்படும் ஏ.ஆதம்லெவ்வையையும் என்னையும் பகற்போசன விருந்துபசாரத்துக்கு அழைத்திருந்தான். அப்படி அழைக்கக்கூடிய நல்ல பழக்கமுள்ளவர்கள்தான் நாங்கள். மதுமயக்கத்தில், தம்பிமாரின் தவறினால் அவனும் வெகுண்டெழுந்து மன்னிக்க முடியாத சம்மாந்துறை தமிழ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லீம் உறவு வரலாற்றில் மாறாத வடுவினை ஏற்படுத்தி விட்டான். அந்த ஜீரணிக்க முடியாத குற்றத்தால் முஸ்லீம்களும் ஆத்திரமடைந்தனர் என்பதும் உண்மையாகும். ஆனால் முஸ்லீம்கள் பழிவாங்கும் உயிர்ப்பலி அளவுக்கு எல்லை மீறவில்லை என்பதை மீண்டும் குறித்துக் காட்டல் பொருத்தமாகும்.

**ஜனாப் எம். பி. முஹம்மட் அலி விதானையார் கடிதம்**

எம். பி. மொஹம்மட் அலி,
(சீனி விதானை)
அம்பாறை றோட்,
சம்மாந்துறை.

ஜனாப்: எம். பி. மொஹம்மட் அலி (ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்) ஆகிய நான், எனது சேவைக் காலத்தின் போது 1954 இல் வீரமுனைப் பிரிவுக்குமான கிராம சேவை அதிகாரியாக சம்மாந்துறைப் பிரிவு உதவி அரசாங்க அதிபரால் நிரந்தரமாக நியமிக்கப்பட்டேன்.

இக்கால வேளையிலேயே வீரமுனைக் கலவரம் இடம் பெற்றது. எனவே அக்காலத்தில் கடமை ரீதியாக இதன் பொறுப்பானவன். அத்தோடு அவ்வேளை தாக்கப்பட்டவனும் கூட.

இதன்படி அச்சம்பவத்தை நேரிலே அநுபவித்தவன் ஆதலால் அது பற்றிய இப்புத்தகத்தில் உள்ள விபரங்கள் யாவும் என்னாலே, வரலாற்றுச் சான்றாக உண்மையாக எடுத்துரைக்கப்பட்டது என உறுதிப்படுத்துகின்றேன்.

இப்படிக்கு,
உண்மையுள்ள,
[signature]
30/12/1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் விசாரணை

யாவும் நடந்து முடிந்த பின் கல்முனையில் இருந்து பொலிஸ் வந்தது. அதன் பின் எந்த அசம்பாவிதமும் நடைபெறாது தடுக்கப்பட்டு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அப்போது பிரிவுக் காரியாதிகாரி திரு.பூரணலிங்கம் முன்னிலையில் பொலிசாருக்கு வாக்கு மூலம் விதானையார் அளித்தார். நடைபெற்ற உண்மைகள் பொலிசுக்குத் தெரிவிக்கப்பட்டன. அதேபோல் தமிழ் மக்கள் சார்பாகவும் பொலிசுக்கு வாக்கு மூலமளிக்கப் பட்டது. அவர்கள் தமது வாக்கு மூலத்தில், சம்மாந் துறையின் செல்வாக்கு மிக்க 21 பிரசைகளை எதிரியாகக் குறிப்பிட்டிருந்தனர். அவர்கள் ஒருவரும் அங்கு செல்லவில்லை என்பதே உண்மை. ஆத்திரம் கொண்ட முஸ்லீம் மக்களையும் போக வேண்டாம் என்று தடுத்த அகிம்சைவாதிகள் அவர்கள். குறிப்பாக டாக்டர் மீராலெவ்வை, போடியார் மகன் தம்பி எனப்படும் சுலையுமாலெவ்வை, செல்வம் காரணமாக மக்களால் செல்லமாக அழைக்கப்படும் "லோட்மன்" போன்றவர் களையெல்லாம் வீட்டுக்குத் தீவைத்ததாக பொலிசாருக்கு முறையிட்டிருந்தனர். இதன்படிகோட்டில் வழக்கு நடைபெற்று நிரபராதியான அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். "கிறிஸ்" பயன்படுத்தி விதானையைக் கொலை செய்ய முயற்சித்தமைக்காக கறுவல் தம்பி சட்டத்தின் பிடியில் அகப்பட்டு ஆறு மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

## எம்.பி.வருகையும் சமாதானமும்

அப்போது பாராளுமன்றப் பிரதிநிதியாக இருந்தவர் ஜனாப் ஏம்.ஏ.மேர்சா அவர்கள். இச்செய்தி கேட்டு புகையிரதம் மூலம் விரைந்து அடுத்த நாள் 17ஆந் திகதி வந்தடைந்தார். அவர் வந்ததும் மிகவும் கவலையடைந்து வீரமுனைக்குச் சென்றபோது அங்கிருந்த ஒருவரும் அவருடன் பேசாதிருந்தனர். அதையும் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்படுத்ாது அவர்களுக்கு வேண்டிய நலனோம்பும் நடவடிக்கைகளை ஜீ.ஏ. மூலமாக எடுத்து அவர்களை மீண்டும் குடியிருத்தி உறவினை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற் கொண்டார். அடுத்தநாள் அவருடன் சேர்ந்து ஜனாப் எம்.எம்.இஸ்மாயில் பொறியியலாளர் (இஸ்மாயில்துரை என எல்லா மக்களாலும் அழைக்கப்பட்டவர்) சென்றார். இவர் ஆற்றுப் பள்ளத் தாக்கு அபிவிருத்திச் சபையின் பொறியியலாளராக இருந்து பின்னர் அச்சபையின் முகாமையாளராகவும் கடமையாற்றியவர். இப்பகுதியின் புளக் ஜே எனப்படும் பல புதுக் குடியேற்றத் திட்டங்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்த பெரியார். இவரும் பல ஊர்ப்பிரமுகர்களும் தானாக முன் வந்து வீரமுனை மக்களைக் கூட்டி அரச மரத்தடியில் ஒரு சமாதானக் கூட்டம் போட்டு முஸ்லிம்கள் சார்பாக இப்பெரியார்கள் அழுது மன்னிப்பு கோரினார்கள். ஏன்? தாங்கள் செய்தது குற்றம் என்பதற்காக அல்ல. காலாகாலமாக நாங்கள் கட்டிக் காத்து வந்த உறவு மாய்ந்து விட்டதே என்ற மனக் கொதிப்பாலுமாகும். ஆத்திரத்தினால் வெகுண்டெழுந்த வர்களின் சில தீ வைப்புச் சம்பவங்களையும் ஏற்காது, அதேநேரம் மாணிக்கம் குழுவினர் செய்த ஆக்கிரமிப்பு, அடாவடித்தனம், கொலைச் செயல்கள் என்பவற்றினை பெருமனம் கொண்டு பொறுத்துக் கொண்டும் இஸ்லாமிய பண்பாட்டின் வழிவந்த அந்தத் தன்மைக்காக அவர்கள் மன்னிப்புக்கோரினார்கள். குறிப்பாக இந்த இஸ்மாயீல் துரை மிகவும் மனம் வருந்தி அழுததாக இன்றும் மக்கள் கூறுகின்றனர். அதே சமாதானக் கூட்டத்தில் இஸ்மாயீல் துரை "4 ஏக்கர் காணி நான் தருகிறேன்" என்று கூறினார். அவ்வாறே பல முஸ்லீம்கள் சொத்துக்களையும் பணம் போன்றஉதவிகளையும் செய்ய முன் வந்தார்கள். ஏன் செய்தார்கள்? மதுவெறியின் மயக்கத்தால் மதி கலங்கி மடத்தனமான மிருகத்தனமான செயல்களை அவர்கள் செய்த போது ஆத்திரம் கொண்ட மக்கள் அத்தகைய உயிர்ப்பலியில் இறங்காது ஈட்டக்கூடிய பொருள் நஷ்டத்தினை ஏற்படுத்தினார்கள். ஆனால், அதைக் கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீரணிக்க முடியாத முஸ்லீம் பெரியார்கள் இந்த சமூகத்தினரை என்றும்போல் சந்தோஷமாக வாழவைக்கவே இத்தகைய முயற்சியில் இறங்கினார்கள். எரிந்த வீடுகளை திரும்பக் கட்ட வசதி செய்து கொடுத்தார்கள். ஒற்றுமையாக இங்கு குடியிருக்கும்படி வேண்டினார்கள். இவைகளையெல்லாம் அன்றைய மக்கள் ஏற்கவுமில்லை. செவி சாய்க்கவுமில்லை. இந்தக் கூற்றுக்களில் இருந்து மக்களின் மன நிலைமை நாம் உணரக் கூடியதாக உள்ளது. உண்மை இவ்வாறுஇருக்க, யாழ் பல்கலைக் கழக மனித உரிமை ஸ்தாபனத்துக்கு இந்தச் சம்பவத்தை தமிழ் மக்களின் சொத்துக்களை அபகரித்துள்ளதாக முஸ்லீம்களால் திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளமை பெரும் வரலாற்றுச் துரோகமாகும். அவர்களுக்குள்ளே இருந்து, அவர்களே சூத்திரதாரியாக இருந்து எற்படுத்திய சண்டையில் உயிர் அழிவை எதிர்நோக்கிய இந்த முஸ்லீம்கள், பெரியார்கள், செல்வந்தர்கள் அதிகார முடையவர்கள் மனம் வருந்தியமை இந்த ஊர் மக்களின். இயல்பான மனப் பக்குவத்தையும் இவர்களதுசமய ஆத்மீக நம்பிக்கைப் பெறுமானத்தையும் இவர்களுக்கிருக்கின்ற இரக்க உணர்வையும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

## கலவரத்தின் பின் வீரமுனை

இவ்வனர்த்தனங்கள் நடைபெற்று விட்டன. வீரமுனை மக்கள்பலர் மல்வத்தையில் குடியேறியதால், மல்வத்தை, கணபதிபுரம், வீரச்சோலை போன்ற கிராமங்கள் தோன்றி வளர்ச்சியடைந்தன. பிற் காலத்தில் தானாகப் படிப்படியாக வீரமுனை மக்களும் இங்கு வந்து குடித்தனம் நடத்தினார்கள். இவ்வளவு நிகழ்ச்சிகளும் நடைபெற சூத்திரதாரியாக இருந்தவர்கள் யார் என்பதை மிகவும் ஆழமாக நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முக்கியமாக தமிழர்கள் சிறிதளவாக இங்கு இருந்தாலும் அவர்களுக்கிடையே ஏற்பட்ட கோஷ்டிச் சண்டை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் வண்ணக்கர் பிரச்சினை, பட்டினசபை உறுப்பினர் தெரிவுப் பிரச்சினை, குடும்பப்பகை என்றவாறு பழனியாண்டி, மாணிக்கம் ஆகிய இருவருக்குமிடையே பெரும் போட்டி ஏற்பட்டது. அதன் மூலம் வளர்ந்து கொலைகள் இடம் பெற்றமை, அவர்கள் தங்கள் மடமையினால் கடமையை மதிக்கத் தவறியமை என்பவற்றால் அவர்களாலேயே இரு இனங்களும் ஓரிரு மணி நேரத்தில் மோதிக் கொண்டன; வேறுபட்டுக் கொண்டன. முழுவதற்கும் காரணம் என்ன என்பதனை நடுநிலையான நல்ல சிந்தனையுள்ள எந்த மனிதனும் சிந்தித்துப் பார்க்க முடியும்.

உலக வரலாறுகளில் ஒரு பெண்ணினால் கூட யுத்தங்கள் நடைபெற்றுள்ளமையும் நாடுகள் கைப்பற்றப் பட்டமைகளும் இலக்கிய இதிகாசங்கள் மூலம் நாம் அறியக் கூடிய விடயங்களாகும். இவைகள் போன்றே தமிழர்களுக்கிடையிலான பிரச்சினை, அவர்களினாலேயே பெருப்பிக்கப்பட்டு இப்படியான ஒரு நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, இனக் குரோதங்களை ஏற்படுத்தி, ஏன்? வரலாற்றுப் பதிவுகளைக்கூட மாற்றியமைத்து இனப்பிளவுக்கே உயில் எழுதிச் சென்று விட்டது.

இதன் சூத்திரதாரியாகக் காணப்படும் திரு.ச.கே. பழனியாண்டி யார்? இவர், வீரமுனைக் கோயில்பிரதம வண்ணக்கராக இருந்துள்ளார். வீரமுனையில்தனது ஆதிக்கத்துக்கும் அந்தஸ்துக்கும் எவரும் எதிரியாகவோ, கேள்வி கேட்பவர்களாகவோ வரக்கூடாது என்று எண்ணுபவர். அப்படி யாராவது வந்து விட்டால், அவர்களை கொலை செய்ய திட்டம் தீட்டி தீர்த்துக் கட்டுவதில் கூட இவர் வல்லவர். இப்படிப் பல சம்பவங்களை இட்டு மக்கள் தமக்கிடையே பேசிக் கொள்வர். அவர் எப்போதும் மதி நுட்பம் வாய்ந்தவர். கோயில் சொத்துக்களை சட்டரீதியாக கோட் உத்தரவுப்படி தனியாருக்கு விற்று பணத்தைத் தனதாக்கிக் கொண்டவர். இப்படி விற்பதில், எந்த ஊர் மக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடந்தையாயிருந்ததும் இல்லை. விரும்பியதும் இல்லை, என்றாலும் தட்டிக் கேட்கவும் முடியாது. கேட்கும் தைரியம் அன்றைய நிலையில் யாருக்கும் இருந்ததும் இல்லை. அவ்வாறு கேட்டால் கூட, அவர், இவரை விட்டுவைக்கமாட்டார். அவரது மதி நுட்பம் அவரது கட்சிக்காரர்களையும் சொந்தக் காரர்களையும் காப்பாற்றி வந்தது. இந்த அனைத்து வேலைகளும், இவ்வாறு மக்களை, சொத்துக்களை, இன உறவினை, ஐக்கியத்தினை இந்தளவு பாதிப்புக்குள்ளாக்கும் என்பதை யாரும் நினைத்துக் கூட இருக்கமாட்டார்கள். தமிழர் முஸ்லீம்களின் உறவு, பண்பாடு என்பன ஒன்றுக்குள் ஒன்று பின்னிப் பிணைந்து காணப்பட்டது. மிகவும் குறைந்தவர்களாக இருந்து கொண்டு வரலாற்றிலே முஸ்லீம்களையும் தமிழர்களையும் பிரித்து வைத்து, மூஸ்லீம்கள் மீது கறை பூசி, வரலாற்றிலே தமிழர்களை முஸ்லிம்களுக்கெதிராக தூண்டி விட்ட இந்தக் கலவரம் உடனடியாக முஸ்லீம்களையும் தமிழர்களையும் வேறாக்கி ஒருவரை ஒருவர் பார்க்க முடியாததாக்கி விட்டது. அப்போது பிரிவுக் காரியாதிகாரியாக இருந்த திரு.பூரணலிங்கம் அவர்கள் இன்றும் உயிருடன் இருப்பதாக அறிகிறோம். அவரிடம் கூட நல்லசெய்திகளை அல்லது நடைபெற்ற உண்மைகளை அல்லது இன்றுவரை வியாபித்துள்ள பிரச்சினையின் அடிப்படை உண்மைகளைக் கேட்டறிந்து கொள்ள முடியும்.

## கலவரம் பற்றிய விஷமத்தனமாக பிரச்சாரமும் இன ஒதுக்கலும்.

இந்த நிகழ்வுகள், உண்மைகள், சமபவங்கள் யாவும் இப்படி யிருக்க பிற்காலத்தில் மக்களை இனவெறி கொண்டு பழிவாங்கும் நோக்கம் கொண்ட சிலர், பொய்யான கட்டுக்கதைகளை கூறி விஷமத்தனமான சிந்தனைகளை விஷங்களாக இளைஞர்களின் நெஞ்சுக்குள் செலுத்தி மூஸ்லீம் மக்கள் மீது ஆத்திரம் கொள்ளச் செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது, விதானை வேண்டுமென்றுதான் எமது பிரச்சினையில் தலையிட்டார். அதனால்தான், வீரமுனை மக்கள் அவரை அடித்தார்கள். ஏற்கனவே திட்டமிட்டு வீரமுனையை ஒழிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தான் வீடுகளைத் தீயிட்டு சொத்துக்களை சூறையாடினார்கள் என்றெல்லாம் கதை பரப்பி, காலமாக பேணி வந்த உறவுக்கு பகை சொல்லி, மிகவும் மோசமான இன வெறியைத் தூண்டி குழப்பிவிட்டார்கள் இந்த தமிழ் இனவாதிகள். அதன் மூலம் மக்கள் உறவு முன்பு போல் நெருக்கமானதாகக் காணப்பட அல்லது ஏற்பட இவர்கள் இடமளிக்கவில்லை. மேலும் மேலும் பகைமை வளர்ப்பதில் அல்லது வளர்வதில் இத்திய எண்ணம் கொண்டவர் மிகவும் கண்ணும் கருத்துமாயிருந்துள்ளனர். அத்தகைய பண்பும், இந்த வரலாற்றுப் பின்னணியுமே பின் வந்த காலங்களின் அத்தனை நிகழ்வுகளுக்கும் காரணமாய் அமைந்துவிட்டது. முஸ்லீம் மக்கள் எல்லாவற்றுக்கும் மேலாக தமது இறை நம்பிக்கைச் செயற்பாட்டின் வழியே செல்பவர் களாதாலால் அவர்கள் மிகுந்த உள்ளப் பக்குவத்தோடு செயற்பட்டு வந்ததாக மேல் நிகழ்வுகள் எடுத்துச் சொல்லியிருக்கும்.

எப்படி இருந்தாலும் மிக நீண்ட காலமாக இச்செயலின் எதிரொலிகள் கேட்டுக் கொண்டே இருந்தன. நீண்டகாலத்தில் சிறிது சிறிதாக மாறி வந்த இப்பகை ஏறத்தாள 1970 ஆம் ஆண்டிற்கு பின்புதான் ஓரளவு குறைந்து காணப்பட்டது என பல பிரமுகர்கள் பேசிக் கொள்கின்றனர்.

என்றாலும் இக்காலத்திற்குப் பின்வந்த கோயில் வண்ணக்கர் குழுக்கள் முஸ்லீம் மக்களுக்கு தமிழர்கள் எந்தச் சொத்தையும் விற்கக் கூடாது; குறிப்பாக விவசாயக் காணி, வீடு, வளவு, போன்றவை. மற்றும் வீரமுனை சிந்தாத்துரைப் பிள்ளையார் கோயிலுக்குச் சொந்தமாக இருந்த பல நூறு ஏக்கர் விவசாயக்காணியை குத்தகைக்காக எடுத்து சம்மாந்துறை முஸ்லீம்கள் செய்துவருவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம். அவ்வாறுகோயில் பூமி முஸ்லீம்களுக்குக் குத்தகைக்கும் கொடுக்கக் கூடாது என்ற ஒரு வரையறையும் இந்த வண்ணக்கர் சபைகள் தீர்மானமாகக் கொண்டு செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இதனால் மிகக் கூடுதலாக இருந்து வந்த குத்தகையும் அதனால் பெற்ற கோயில் வருமானமும் குறைவடைந்தது என்றாலும் கூட அவர்கள் இவ்வாறான இன ஒதுக்கலைக் கைவிடவில்லை. இது அவர்களது தனிமைப்படல் கொள்கையை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. அவர்களோடு இணைந்து உறவு பூண்டு வாழ எண்ணிய முஸ்லிம் சமூகம் அவர்களாலேயே ஒதுக்கி வைக்கப்பட்டது. இந்த ஆதரவு தேடும் அல்லது அன்பு கொண்டு வாழும் மனப்பக்குவம் முஸ்லீம்களுக்கு இயல்பானது. ஆனால், தொடர்ந் தேர்ச்சியாக அற்ப நிகழ்வுகளை வைத்துக் கொண்டு இன விரிசலை வளர்ப்பதை மிகப் புனித கைங்கரியமாக-விஷமத்தனமாகவும், தீய வழிகளிலும் தமிழ் சமூகத்தின் சிலர் மேற்கொண்டு வந்ததை இதற்குப் பின்பைய வரலாறுகளில் இருந்தும் தெளிவாக அறிந்து கொள்ளலாம். ஆனால், இந்தத் தன்மை வீரமுனை மக்களது மொத்தமான கருத்தாக இருக்கவில்லை. ஒரு சிலர் மேற்குறிப் பிட்டதுபோன்று தமது இனவெறிக் குணத்தால் மக்கள் மனதை இன அடிப்படையாக புதிய இளம் தலைமுறையினரிடம் வளர்த்து வந்தனர். பலர் விரும்பாதிருந்த போதும் இந்த இன ஒதுக்கல் தன்மைக்கு அனைவரும் கட்டுப்படலாயினர். இவைகள் மேலும் இனவிரிசலை துரிதமாகவும், சிறப்பாகவும் வளர்ப்பதற்கு பணி செய்ததே தவிர ஒற்றுமையை ஏற்படுத்தவில்லை. அதே நேரம் இவை வளர்ந்து வரும் ஒற்றுமைக்கு வேட்டுக்களாகவும் அமைந்துவிட்டன.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# இயக்கங்களின் வளர்ச்சிக் காலம்

சம்மாந்துறையின் தமிழ்-முஸ்லிம் உறவினைப் பற்றி ஆய்வதற்கான அடுத்த ஓர் அம்சம் இயக்கங்களின் வளர்ச்சிக்காலமாகும்.

இலங்கை பல்லின மக்கள் வாழுகின்ற ஒரு நாடு. இந்நாட்டில், தமிழ் மொழி பேசும் சமூகம் மிக நீண்ட காலமாக பேரின வாதிகளால் நசுக்கப்பட்டு வந்துள்ளது என்பது வரலாற்றுண்மை. இந்தத் தன்மை இவற்றுக் கெதிரான ஒரு போராட்ட முறைமைக்கு இந்த சமூகத்தை அழைத்துச் சென்றிருக்கின்றது.

பல்கலைக்கழகப் பிரவேசத்தில் தரப்படுத்தல், தமிழ் முஸ்லீம் மக்கள் வாழ்ந்துவரும் பிரதேசங்களில் சிங்களக்குடியேற்றம், தமிழ்-முஸ்லீம் மக்களின் நிலங்கள் பல்வேறு காரணங்களுக்காக சுவீகரிக்கப்பட்டமை, உயர் பதவிகளில், நிருவாக உத்தியோகங்களில் வேண்டுமென்றே செய்யப்பட்ட ஓரினவாதக் கொள்கை, தமிழ் மொழியின் புறக்கணிப்பு, சிங்கள மொழி ஆட்சி மொழி ஆக்கப்பட்டமை, ஏதுமறியா தமிழ் மொழி பேசும் மக்களுடன் அரசு மேற்கொள்ளும் எல்லாவிதத் தொடர்புகளும் சிங்கள மொழியிலேயே காணப்பட்டமை, தேசிய அபிவிருத்திக் கொள்கையில் வடக்கு, கிழக்கு புறக்கணிக்கப்பட்டமை, கல்வியின் நவீன மாற்றங்கள் பேரினத்தவரிலும் மிகப் பிந்தியே தமிழ் முஸ்லீம் மக்களை வந்தடையுமாறு செய்து கொண்டமை, பல்கலைக் கழகங்கள் தொழில் நுட்பக் கல்லூரிகள் போன்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்டமை போன்ற பல்வேறு காரணங்களால் தமிழ் பேசும் மக்கள் புறக்கணிக்கப்பட்டு வந்தனர். இக்காரணங்களினால் மிதவாத சத்தியாக்கிரகங்கள் ஏற்பட்டபோதும் அதனைத் தொடர்ந்து இளைஞர் இயக்கங்கள் வளர்ச்சியடைந்தபோதும் முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களுடன் தோளோடு தோள் நின்று உழைத்தனர். இலங்கையின் பல பகுதிகளிலும் இருந்து பல முஸ்லீம் இளைஞர்கள் போராட்டப் பயிற்சிபெற சித்தமாகி தமிழ் இளைஞர்களுடன் இணைந்து போராட்டங்களில் ஈடுபட்டார்கள். இந்த இனஒதுக்கல் அல்லது பேரினவாதக் கெடுபிடிகளை நாம் சம்மாந்துறையுடன் தொடர்புபடுத்திப் பார்த்தால் மிக மோசமான நிலைமைகளை நாம் உணர்ந்து கொள்ளலாம். திகவாப்பி குடியேற்றம், புனிதப் பிரதேசத் திட்டம் போன்றவை மூலம் பல நூறு வருடங்களாக முஸ்லீம் மக்கள் ஆட்சி செய்து வந்த நிலம் பறிக்கப்பட்டது. மேலும் பல விவசாயிகள் அவர்கள் விவசாயம் செய்த நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர். "கரும்புச் செய்கை என்ற பெயரில் முஸ்லீம்கள் வசமிருந்த வடசேரியா, கள்ளியம்பத்தை மேல்கண்டம், வைரத்துடி உம்மாரி, நெட்டுறாம்புல், நாட்டியா, `கொண்டு வட்டுவானின் சில பகுதிகள் போன்ற பிரதேசங்கள் எந்தவித நட்டஈடும் வழங்கப்படாமல் கையேற்கப்பட்டன. அந்த நிலங்களில் அதன் சொந்தக்காரர்களான முஸ்லீம்களை கரும்புச் செய்கையில் ஈடுபடுத்துமாறு கோரிய கோரிக்கைகள் கூட செவி சாய்க்கப்படவில்லை. மறுபுறம் "புத்தங்கல" பிரதேசத்தில் தமிழர், முஸ்லீம்களுக்குச் சொந்தமாக இருந்த தொட்டாச் சுருங்கிப் புதுக்காடு, வளத்தாப்பிட்டி வில்லு வட்டை, போன்றவை பறிக்கப்பட்டன. சில இடங்களில் முஸ்லீம் மக்கள் வரக்கூடாது என்றும் சிங்கள மக்களால் தடை செய்யப் பட்டனர். இவைகள் தவிர கல்வி, வேலைவாய்ப்பு, உயர் பதவிகள், போன்ற பல்வேறு அம்சங்களிலும் சம்மாந்துறை நேரடியாகத் தாக்கப்பட்டது. இது ஒரு தமிழ் மொழி பேசும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபான்மை மக்களது பிரச்சினை என்று பொதுவாக உணரப்பட்டது. இதே போன்று பொத்துவில், அக்கரைப்பற்று, கல்முனை போன்ற பல்வேறு பகுதி முஸ்லீம்களுக்கும் இத்தகைய பிரச்சினைகள் ஏற்பட்டதை யாவரும் உணர்வர்.

இந்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட அல்லது இவற்றினை உணர்ந்து கொண்ட முஸ்லீம்கள் எப்படியும் இனிமேல் போராட்டங்கள் மூலம் தான் அரசுக்கு உணர்த்த வேண்டும்; அதன் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று உணர்ந்த சம்மாந்துறையைச் சேர்ந்த பல இளைஞர்களும் இயக்கங்களில் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர்; பயிற்சி பெற்றனர்; சிறந்த போராட்ட வீரர்களாக காணப்பட்டனர். இக்கால கட்டத்தில் இயக்கத்துக்கிடையே அதன் தலைவர்கள் பலரது நடவடிக்கைகள் காரணமாக பிரிவினை ஏற்படத் தொடங்கியது . அதற்கேற்ப அவர்களது பழக்கம், கொள்கைகளின் அடிப்படையில் இணைந்த சில முஸ்லீம் இளைஞர்களும் பல இயக்கங்களிலும் பிரிந்து செயற்படத் தொடங்கினர். இது தமிழ் இளைஞர்களிடையேயும் காணப்பட்டமை கண்கூடு. இதேவேளை இயக்கங்களுக்கிடையேயும் மோதல்கள் ஏற்பட்டன. அதனால், தத்தமது இனங்களுக்கிடையே பல இளைஞர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டனர்; கடத்தப்பட்டனர்; காணமற் போயினர்; வழக்கமாக நடைபெறுவதுபோன்று மனித இயல்புகளால் சில சில செயல்கள் அங்குமிங்குமாக - இனப்பிரச்சினையாக இக்காலகட்டத்தில் ஏற்படத் தொடங்கின.

இதற்கிடையில் 1984 ஆம் ஆண்டைத் தொடர்ந்து இலங்கை இராணுவம் மூர்க்கத்தனமாக இயக்கங்கள், போராட்டக்காரர்கள் எவ்வாறாயினும் காணப்பட்டால் அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது. அக்கால கட்டத்தில் தமிழ், முஸ்லீம் இளைஞர்கள் தம்வசமிருந்த ஆயுதங்களுடன் ஓடி ஒழிக்கத் தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பல எட்டப்பர்கள் காட்டிக் கொடுக்கவும் செய்தனர். இவர்கள் தமிழரிலும் இருந்தனர். முஸ்லீம்களிலும் ஒரு சிலர் இருக்கவே செய்தனர். இந்த நிகழ்ச்சி எல்லா ஊர்களிலும் காணப்பட்டது.

இக்காலப் பகுதி மிக முக்கியமானது. இந்த இயக்க இளைஞர்கள் தலை மறைவாக வாழும் காலங்களில் சம்மாந்துறையில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் ஒழித்து வைத்துப் பாதுகாப்பளிக்கப்பட்டனர். உணவு, உடை, உறைவிடம் யாவும் முஸ்லீம்களால் கொடுக்கப்பட்டு அவர்கள் போசிக்கப்பட்டனர். வீட்டின் முகடுகளில், நெல்லுப் பட்டறைகளில் ஒழித்து வைத்துப் பாதுகாக்கப்பட்டனர். இவைகளுக்குக் காரணமென்ன? இந்தப் போராட்டம் நியாயமானது. இளைஞர்கள் எமக்கு வேண்டியவர்கள் என்பதும் மற்றொரு புறம், முஸ்லீம்களிடம் உள்ள மனிதாபிமானமும், தார்மீக உணர்ச்சியுமே. இவைகளையெல்லாம் பிற்காலத்தில் தமிழ் இளைஞர்கள் மறந்து விட்டனர். எண்ணிப்பார்க்கத் தவறிவிட்டனர். மட்டுமல்ல துரோகம் இழைத்தும் விட்டனர். இவர்கள் எங்கு எங்கு ஒழித்திருந்தனரோ, உணவுண்டனரோ அந்த வீடுகளையே சந்தர்ப்பம் கிடைத்த போது கொள்ளையடிக்க, அழித்துவிட அவர்கள் தயங்கவில்லை. இராணுவம் சுற்றி வளைத்தபோதெல்லாம் பல இளைஞர்கள் இரவோடிரவாக ஒழித்து வந்து முஸ்லீம்களிடம் பாதுகாப்புத் தேடியபோதெல்லாம் பல இளைஞர்களுக்கு சம்மாந்துறையில் பாதுகாப்புளிக்கப் பட்டது. அதுமட்டுமல்ல இவ்வூர் பாராளுமன்ற உறுப்பினரும் இந்த சந்தர்ப்பங்களில் இளைஞர்களின் தேடுதல் வேட்டையின்போது மிக பாதகமற்ற இலகுவான போக்குடன் தமிழ் இளைஞர்களை காப்பாற்றியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. அப்படியான நேரங்களில் முஸ்லீம்கள் காட்டிக்கொடுக்க எண்ணியிருந்தால் பல்லாயிரக் கணக்கான தமிழ்ப் போராளிகளை இராணுவத்தினரிடம் காட்டிக் கொடுத்து எந்தவிதப் பிரச்சினையுமின்றியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்தொழித்திருக்க முடியும் என்பதை தமிழ் சமூகம் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படியான இளைஞர்கள் ஒழித்தோடும் போது முஸ்லீம்கள் இயக்கங்களினால் மூஸ்லீம் இளைஞர்கள் எந்தவிதப் பொறுப்பான பதவி களிலுமிருந்து புறக்கணிக்கப்பட்டனர். இவைகளால், மூஸ்லீம் இளைஞர்கள் தலைமறவாகத் தொடங்கினர். இப்படியான சந்தர்ப்பங்களில் இயக்க வளர்ச்சிக்காக பல முஸ்லீம்கள் பணம் கொடுத்தும் உதவத் தயங்கவில்லை. உதவிகள் போதாதபோது இயக்கத்தினர் பலாத்காரமாக பறித்தெடுக்கவும் செய்தனர். இதற்கிடையில் சம்மாந்துறையில் இயக்க இளைஞர்கள் மிக மோசமான கொள்ளை ஒன்றினை மேற்கொண்டு சமூக ரீதியாக முஸ்லீம்களை இம்சித்தனர். அதாவது சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லாரியை இரண்டு துடவைகள் அடுத்தடுத்து கொள்ளையடித்து ரூபா 25 இலட்சத்துக்கும் மேல் நட்டத்தினை ஏற்படுத்தினர். குறிப்பாக இதில் நோக்கப்படவேண்டியது: தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள எந்தப் பாடசாலைகளிலோ அல்லது நிறுவனங்களிலோ இருந்து இத்தநகைய கொள்ளைகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே முஸ்லீம்களுக்கு பெரிதும் பயன் பட்டுவந்த இக்கல்லூரி கொள்ளையடிக்கப் பட்டு முஸ்லீம்கள் கல்வி ரீதியாக பாதிக்கப்பட்டனர். இது சம்மாந்துறை மக்களிடையே இயக்கங்கள் பற்றிய மிகுந்த காழ்ப்புணர்ச்சியை ஏற்படுத்திற்று. இவ்வாறே படிப்படியாக முஸ்லீம்கள் இயக்கங்களில் இருந்து வேறுபடத் தொடங்கினர். முஸ்லீம்களின் பல வாகனங்கள் கடத்திச் செல்லப்பட்டு அவை திருப்பித் தரப்பட ரூபா ஐம்பதாயிரம் (50,000) அல்லது அதற்கு மேல் பணம் கொடுக்க வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டனர். பெரும்பாலும் இவ்வாறு பறிக்கப்பட்ட வாகனங்கள் திருப்பித் தரப்படவில்லை. பல ஆயிரக் கணக்கான துவிச்சக்கரவண்டிகள் பறிக்கப்பட்டன. மண்வெட்டிகள், எண்ணெய்தெளிகருவிகள் போன்ற விவசாய உப கரணங்கள் கூட இயக்க இளைஞர்கள் என்ற போர்வையில் தமிழர்களால், முஸ்லீம்களிடமிருந்து சம்மாந்துறையைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ உள்ள வயல் வெளிகளில் வைத்து பறிக்கப்பட்டன. இந்த இடத்தில் சம்மாந்துறை முஸ்லீம்களின் விவசாய நிலங்கள் பெரும்பாலானவை தமிழர்களின் ஊர்களைக் கடந்து சென்று அடையும் தூர இடங்களில் அமைந்துள்ளன. என்பதனால் இது முஸ்லீம்களை எதேச்சதிகரமான முறையில் அநியாயப் படுத்த தமிழர்களுக்கு மிகவும் வாய்ப்பாகி விட்டது என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில் அவர்களுக்குள் பல்வேறு பட்ட இயக்கங்கள் காணப்பட்டன. அதேவேளை பறிக்கப்பட்ட வாகனங்கள் பொருட்கள் அனைத்தும் முஸ்லீம்களுடையனவேயன்றி எந்தவொரு தமிழரது உடைமையும் பறிக்கப்படவில்லை என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும். ஓர்இயக்கத்தினரிடம் சென்று "இன்ன வாகனத்தை, இந்த இடத்தில் பறித்துக் கொண்டார்கள், அதனை மீட்டுத் தாருங்கள்" என்று கூறினால், "அது எங்களுடைய இயக்கமல்ல, அது வேறு இயக்கம், அவர்களிடம் கேளுங்கள்" என்பார்கள். ஊர்ப் பெரியவர்கள் எனக் கூறிக் கொள்ளும் சில தமிழ் குடிமக்களிடம் இது பற்றி முறையிட்டால் அவர்களும் நொண்டிச் சாட்டுக்கள் சொல்லி நாட்களைக் கடத்திவிடுவார்கள். இப்படியே பகைமை படிப்படியாக வளர்க்கப்பட்டு வந்தததை உணர முடிந்தது. இந்த சந்தர்ப்பங்களில் இயக்கங்களிலுள்ள முஸ்லீம் இளைஞர்கள் நியாயம் கோரினால், மறுத்துப் பேசினால் அவர்கள், தண்டிக்கப்பட்டார்கள் அல்லது சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இப்பிரதேசத்தில் பல இனமோதல்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்பட்டுள்ளன. அப்படியான வேளைகள் யாவற்றிலும் சம்மாந்துறை மூஸ்லீம் மக்கள் போதியளவு தமிழ் மக்களுக்கே உதவியும் ஒத்தாசையும் செய்தும் வந்துள்ளனர். குறிப்பாக 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் காரைதீவு–மாளிகைக்காடு ஊர்களுக் கிடையே இனக்கலவரம் எற்பட்டு காரைதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கப்பட்டபோது, சம்மாந்துறை மக்கள், காரைதீவு மக்களுக்கு பெருமளவு உதவிகளை மனிதாபிமானரீதியில் செய்தனர் என்பதை எவரும் கூறுவர்.

குறிப்பாக, காரைதீவு சண்டை நிகழ்ந்தபோது வேற்றுக் கிராமத்தவர் சிலரால் நூற்றுக்கணக்கான மாடுகள் பட்டிபட்டியாக சாய்த்துக்கொண்டு சம்மாந் துறையின் ஊடாகச் சென்றபோது, மர்ஹூம் எம்.ஏ. முஸ்ராக் அலி, அவர்களை விரட்டி விட்டு மாடுகளைச் சாய்த்துக் கொண்டு போய் வீரமுனை கோயிலில் ஒப்படைத்தார். இப்படிப் பட்டவரைத்தான் 1989 இல் இதே இயக்கத்தினர் அவரின் பிஞ்சுக் குழந்தைகளும் இளம் மனைவியும் கதறக் கதற நடுத்தெருவில் வைத்து சுட்டுத் தள்ளினர். எனவே மனு நீதி, தரும நெறியுடன் சண்டை நடைபெற்ற அன்றிரவே காரைதீவுக்கு உணவுப் பொருட்களுடன். முதலில் சென்றது சம்மாந்துறை லொறிதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்னும் நிவாரண உதவிகளை சம்மாந்துறை எம்.பி.சி.எஸ். உழவு இயந்திரமும் மேற்கொண்டது. பின் அதே உழவு இயந்திரம் ஓரிரு வாரங்களின் பின் இயக்கங்களினால் பறிக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கது.

சம்மாந்துறையில், எந்த இயக்கத்தினரும் சரி எப்படியான தமிழராயினும் சரி பயமின்றி நடமாடவும் ஒழித்திருக்கவும் சந்தர்ப்பம் இருந்தது. ஆனால், அவர்கள் அனைவரும் முஸ்லீம்களை சந்தேகத்துடனும் அச்சத் துடனும் தான் நோக்கி வந்தனர் என்பது அவர்களின் நடவடிக்கைகளில் இருந்து தெளிவு படத் தொடங்கியது. இயக்கங்கள், என்ற போர்வையில் இவர்களிடம் காணப்பட்ட துப்பாக்கிகள் மக்களைப் பெரிதும் அச்சம் கொள்ளச் செய்தது. இவர்களது கொலை வெறி மக்களால் உணரப்பட்டது; ஒரு புறம். மறுபுறம் முஸ்லீம்கள், தமிழர்கள் யாவரும் இவர்களுக்கு அஞ்சி, அடங்கி ஒடுங்கி, வாழ்ந்து வந்தனர். இந்த காலவேளையில் வீரமுனையூடாக பி.ப.6.00 மணிக்குப் பிறகு எந்த முஸ்லீமும் பிரயாணம் செய்ய முடியாது. அப்படிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றாலும் கடுமையான விசாரணையும் அச்சுறுத்தல் களையும் சந்திக்க வேண்டியிருக்கும். மாறாக முஸ்லீம் ஊரான சம்மாந்துறையில் இரவு, பகல் எந்நேரமும் எந்த மூலைமுடுக்குகளுக்கும் ஆயுதபாணிகளுடனும் நிராயுத பாணிகளாகவும் சென்று வர தமிழர்கள் அனுமதிக்கப் பட்டிருந்தனர். அதற்கு எத்தகைய தடையுமில்லை. விசாரணையுமில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இப்படிப் பட்ட காலத்திலே சம்மாந்துறையில் நடைபெற ஆரம்பமான கொலைகளையும், கொள்ளை களையும் ஆக்கிரமிப்பையும் அடாவடித்தனங்களையும் சிந்தனைக்குள் செலுத்துவோம்.

1984.04.02 ஆம் திகதி ஏ.ஆதம்பாவா, ஏ.எம்.நிஸார் ஆகிய இருவரும் கிழக்கு மாகாணத்தில் அப்போது நடைபெற்ற இனக்கலவரகாலத்தில் உன்னிச்சைப்பகுதியில் உள்ள கறுவாச்சோலை என்ற இடத்தில் மாடு கட்டிக்காலம் நடத்தியவர்கள்- இவர்கள் காரணமறியாது கொலையுண்டு கிடந்தனர். இவர்களின் வீடு வீரமுனைக்குள் தான் இருந்தது. தமிழர்களது வீடுகளை அடுத்த வீடாக - சுற்றத்தவர்களாக கொண்டவர்கள். பல தமிழ் மக்களும் இவர்களது மரண ஊர்வலத்தில் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இது சம்மாந்துறை மக்களை முதன்முதல் சந்தேகத் துக்குள்ளாகிய சம்பவம் எனலாம். இயக்க இளைஞர்களை தங்களது பிள்ளைகளாகக் கருதி தினசரி உணவளித்துவந்த சம்மாந்துறை முஸ்லீம்கள் அதிருப்தியடைந்தனர். இவர்கள் எதற்காக கொல்லப்படவேண்டும் என்ற வினாவுக்கு இன்னும் விடையே தெரியவில்லை. காரணமெதுவுமின்றி காரியம் நடந்து முடிந்து விட்டது. இந்நிலை தமிழ்பேசும்இனம் என்ற கோட்பாட்டில் வைத்திருந்த நம்பிக்கையில் முஸ்லீம்களிடம் தொய்வை ஏற்படுத்திற்று. சிறுபான்மையை நசுக்க வந்த மற்றொரு சிறுபான்மைப் பேரினவாதிகளோ என்றெல்லாம் சிந்தனா வயப்பட்டனர். இந்த நிகழ்வு எதற்கு ஆரம்பம்? ஏன் இது?.....சிந்தித்தனர் முஸ்லீம்கள்.

1984.10.07 ஆம் திகதி ஏ.எல்.முஹம்மது இஸ்மாயீல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வியாபாரி வியாபாரத்துக்குச் சென்றபோது போராளிகளால் அடித்துக் கொல்லப்பட்டார். *1984.11.10* இல் ஏ.அலியார் என்பவர் சம்மாந்துறையின் மையமான ஹிஜ்ரா சந்தியில் இரவு *7.40* மணிக்கு மிகவும் சன நெருக்கமான இடத்தில் இயக்க உறுப்பினர்கள் இருவரினால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தவேளையில் மக்கள் மிகுந்த ஆத்திரம் கொண்டார்கள். என்றாலும், பெரியார்கள் மக்களைபொறுமைக்குள்ளாக்கச் செய்தார்கள். இக்கொலையை நியாயப்படுத்தி ஒரு துண்டுப்பிரசுரத்தை கொலைஞர்கள் வெளியிட்டனர். ஆனால், அப்போதும் கூட ஊரறிந்த - நாடறிந்த கேடிகள் (காரைதீவு, மாளிகைக்காடு கலவரம் உருவாவதற்கு ஆண்டாண்டு காலமாக கொள்ளையிட்டு வந்த கொள்ளையர்கள்) காரைதீவுச் சந்தியில் இரவு நேரங்களில் பாதசாரிகளை (தமிழ் மக்கள் உட்பட) கொள்ளையிட்டுக் கொண்டே வந்தனர். ஆனால், அவர்களுக்கு எந்தவித இடையூறும் இயக்கங்கள் மேற்கொள்ளவில்லை. இதுவும் இவர்களைப் பற்றிய இன வாதத் தன்மையை வெளிக் காட்டிற்று.

மேலும், *1986.01.02* இல் ஐ.கோசுமாலெவ்வை, எம்.அப்துல்அஸீஸ் ஆகிய இருவரும் "திராஓடை" என்ற வட்டைக்கு விவசாயத்தொழில் செய்யச் சென்றவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். *1986.8.16* இல் ஏ.அச்சிமுஹம்மது என்ற ஓர் அரசாங்க ஊழியர் சுட்டுக்கொல்லப்பட்டார். *1988.01.15* இல் மு.கா. வல்கீஸ் உம்மா என்ற பெண் கடத்தப்பட்டு சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இந்திய இராணுவம் குடி கொண்டிருந்த காலப்பகுதி இது. இந்த பல்கீஸ் உம்மா, "கணபதி புரப்" பகுதியில் தேநீர்க்கடை வைத்திருந்தவர். இலங்கை இராணுவம் வந்து இயக்கக்காரர்கள் இந்தப் பக்கம் வருகின்றார்களா? என்று அதட்டியபோது ஏதோ கூறினாராம் என்பதற்காக அன்று இரவே கடத்தப்பட்டு மோசமாக கொலை செய்யப் பட்டார். இந்திய ராணுவம் இப்பிரதேசத்தில் இருக்கும் போது முஸ்லிம் மக்கள் அடைந்த இன்னல்களுக்கு அளவே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட சம்மாந்துறை முஸ்லிம்கள்

| இல | பெயர் | வயது | விலாசம் | சம்பவம் | தங்கியிருப்போர் தோகை |
|---|---|---|---|---|---|
| 1. | ஏ. ஆதம்பாவா | 49 | கயர்பள்ளி வீதி சம்மாந்துறை | 20.04.84 | 08 |
| 2. | ஏ. முகம்மது நிஸார் | 19 | கயர் பள்ளி வீதி சம்மாந்துறை | 20.04.84 | 08 |
| 3. | ஏ. முகம்மது இஸ்மாயில் | 45 | மாவடிப்பள்ளி | 17.10.84 | 03 |
| 4. | ஏ. சின்னராசா | 29 | 2ம் குறிச்சி. சம்மாந்துறை | 10.11.84 | 03 |
| 5. | ஐ. கோசுமாலெப்பை | 60 | மல்/ 10ம் வீதி சம்மாந்துறை | 02.01.86 | 04 |
| 6. | எம்.எல் அப்துல் அஸீஸ் | 30 | டீ.சி.றோட் சம்மாந்துறை | 02.01.86 | 04 |
| 7 | ஏ. அச்சி முஹம்மத் | 54 | மல்/15ம் வீதி சம்மாந்துறை | 16.08.86 | 07 |
| 8. | ஏ. ஆதம்பாவா | 26 | அம்/ 14ம் ஒழுங்கை | 20.10.87 | 04 |
| 9. | வல்கீஸ் உம்மாவி | 40 | 178/A.மஜீத்புரம் சம்மாந்துறை | 15.01.88 | 05 |
| 10. | ஏ. பதுார்தீன் | 40 | பண்ட் நோட் செந்நெல் கிராமம் சம்மாந்துறை | 06.03.88 | 08 |
| 11. | கே.ஹுசைன் | 28 | அய்சார் ஒழுங்கை, சம்மாந்துறை | 12.03.88 | 03 |
| 12. | எம்.சி.செய்யது இப்றாஹீம் | 30 | புளக் ஜே மேற்கு, சம்மாந்துறை | 13.03.88 | 04 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | எம்.ஆதம்பாவா (மஜீத்) | 29 | அலிவன்னிய 1ம் வீதி. சம்மாந்துறை | 29.03.88 | 03 |
| 14. | ஐ.அப்துல் ரஹ்மான் | 28 | கயர்பள்ளி வீதி. சம்மாந்துறை | 30.03.88 | 08 |
| 15. | எம்.குழந்தை உம்மா | 33 | 122. மஜீத்புரம் சம்மாந்துறை | 15.06.88 | 08 |
| 16. | ஏ.எல். நஜிமுதீன் | 19 | மாவடிப்பள்ளி | 22.08.88 | 08 |
| 17. | எஸ்.முஹம்மது சுபைர் | 17 | கல்லரிச்சல் வீதி | 04.10.88 | 08 |
| 18. | எம்.ஐ.அமீர் அலி (இஸ்ஸதீன்) | 20 | மாவடிப்பள்ளி | 31.10.88 | 07 |
| 19. | எம்.எல்.முஹம்மது ஹனிபா | 30 | சாலி வீதி. சம்மாந்துறை | 22.01.89 | 04 |
| 20. | வை.எல்.சுலைமாலெப்பை | 30 | புளக் ஜே மேற்கு சம்மாந்துறை | 12.03.89 | 06 |
| 21. | எம்.ரீ.முஹம்மது யாசீன் | 36 | 384 /A 1ம் குறுக்குத் தெரு சம்மாந்துறை | 25.03.89 | 06 |
| 22. | எம்.ஏ.முஸ்டாக் அலி | 40 | அலிவன்னியா வீதி சம்மாந்துறை | 25.03.89 | 04 |
| 23. | ஏ.எல்.ஜலால்தீன் | 18 | பசார் 3ம் வீதி. சம்மாந்துறை | 03.04.89 | 07 |
| 24. | எம்.எம்.பாயிஸ் | 18 | ஹிதாயா மன்ஸில் சம்மாந்துறை | 01.05.89 | 03 |
| 25. | ஏ.முஹம்மத் நஜீப் | 18 | ஹிஜ்ரா சந்தி சம்மாந்துறை | 04.05.89 | 05 |
| 26. | ஏ.ஏல்.ஜஃபர் | 35 | புளக் ஜே கிழக்கு சம்மாந்துறை | 01.05.89 | 06 |
| 27. | பீ.எல்.முஹம்மத் சலீம் | 26 | 267 /2 பு.ஜே.மேற்கு சம்மாந்துறை | 14.05.89 | 04 |
| 28. | எம்.ஏ.ஆதம்பாவா | 28 | 404. பு.ஜே.மேற்கு சம்மாந்துறை | 14.05.89 | 12 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29. | ஐ.எல்.ஹயாத் முஹம்மத் | 23 | 236. கயர்பள்ளி வீதி சம்மாந்துறை | 17.05.89 | 06 |
| 30. | ஏ. ஆதம்பாவா | 36 | சதக்கர் ஒழுங்கை, சம்மாந்துறை | 17.05.89 | 06 |
| 31. | ஏ.எல்.அப்துல் மஜீத் | 30 | மாவடிப்பள்ளி | 22.05.89 | 03 |
| 32. | வை.காதர் முகைதீன் | 28 | மாவடிப்பள்ளி | 22.05.89 | 02 |
| 33. | எஸ்.முஹம்மத் பரீத் | 26 | மாவடிப்பள்ளி | 22.05.89 | 12 |
| 34. | எஸ்.எல்.ஆதம்பாவா | 22 | மூங்கிலடி வீதி சம்மாந்துறை | 25.05.89 | 08 |
| 35. | ஆர்.இல்யாஸ் | 21 | ஹிஜ்ரா சந்தி சம்மாந்துறை | 27.05.89 | 06 |
| 36. | எஸ்.எல்.அஹமது லெவ்வை | 60 | 19 /2 விளினையடி வீதி சம்மாந்துறை | 30.05.89 | 06 |
| 37. | ஏ.முஹம்மது முஸ்தபா | 41 | பசார் 10ம் ஒழுங்கை சம்மாந்துறை | 31.05.89 | 09 |
| 38. | எம்.ஐ.முஹம்மது முஸ்தபா | 19 | கல்முனைக்குடி | 10.06.89 | 05 |
| 39. | எஸ்.எல்.அலியார் | 37 | 50 /5 கல்லரிச்சல் வீதி சம்மாந்துறை | 05.07.89 | 04 |
| 40. | வை.முஹம்மத் கலீல். | 23 | மாவடிப்பள்ளி | 10.07.89 | 08 |
| 41. | கே.எல்.அலியார் | 24 | 10 /A மஜீத்புரம் | 06.08.89 | 03 |
| 42. | எம்.எம்.ஸரூக் | 22 | ஆர்.பீ.சீ.11968- நற்பிட்டி முனை | 13.11.89 | 05 |
| 43. | எம்.பீ.நௌஷாத் | 21 | ஆர்.பீ.சீ.11962 -பசார் வீதி | 17.11.89 | 10 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 44. | ஏ.கலந்தர் லெவ்வை | 22 | ஆர்.பி.சி.11950 சாலி வீதி | 17.11.89 | 04 |
| 45. | ரி.ஆதம்பாவா | 22 | ஆர்.பி.சி.20[illegible]7 516, 3ம் குறுக்குத் தெரு | 17.11.89 | 06 |
| 46. | எம்.எல்.ரபீக் | 24 | ஆர்.பி.சி.20309 தைக்காப் பள்ளி வீதி | 17.11.89 | 04 |
| 47. | எம்.பீ.அப்துல் நஸார் | 18 | ஆர்.பி.சி.20330 வக்கடி ஒழுங்கை | 17.11.89 | 06 |
| 48. | ஏ.எம்.காலிதீன் | 20 | ஆர்.பி.சி.20316 2.மஜீட் புரம் | 17.11.89 | 06 |
| 49. | வை.அபூபக்கர் | 23 | ஆர்.பி.சி.20317 312. தைக்காப்பள்ளி வீதி | 17.11.89 | 12 |
| 50. | எம்.எம்.சல்பியார் | 24 | ஆர்.பி.சி.20318 தைக்காப்பள்ளி வீதி | 17.11.89 | 06 |
| 51. | ஏ.முஹம்மத் ரஸீன் | 18 | ஆர்.பி.சி.20325 384 /4 7ம் ஒழுங்கை | 17.11.89 | 03 |
| 52. | வை.அப்துல் ரசூல் | 24 | ஆர்.பி.சி.20325 384 /4 . 7ம் ஒழுங்கை | 17.11.89 | 05 |
| 53. | எம்.பீ.அப்துல் ரசூல் | 22 | ஆர்.பி.சி.20326 31, நெந்நெல் கிராமம் | 17.11.89 | 07 |
| 54. | ஹுஸைன் பாறூக் | 21 | ஆர்.பி.சி. 20347 55. உடங்கா | 17.11.89 | 06 |
| 55. | ஏ.எல்.நியாஸ்தீன் | 21 | ஆர்.பி.சி. 20343 நூர் பள்ளி வீதி | 17.11.89 | 02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 56. | எம்.ஏ.ஆதம்பாவா | 26 | ஆர்.பீ.சீ. 20344 கருவாட்டுக்கல் | 17.11.89 | 07 |
| 57. | எம்.புஹாரி | 26 | ஆர்.பீ.சீ.20350 238. புஜே.வார்ட்இல-2 | 17.11.89 | 08 |
| 58. | ஐ.எல்.அலியார் | 25 | ஆர்.பீ.சீ.20355 40 பு.ஜே.கிழக்கு | 17.11.89 | 07 |
| 59. | எம்.ஏ.சீ.முஹம்மது நவாஸ் | 19 | ஆர்.பீ.சீ.20357 8. ஹிஜ்ரா சந்தி | 17.11.89 | 08 |
| 60. | ஐ.எல்.முனாஸ் | 19 | ஆர்.பீ.சீ.20360 ஆஸ்பத்திரி வீதி | 17.11.89 | 06 |
| 61. | ஐ.எல்.இப்றா லெப்பை | 25 | ஆர்.பீ.சீ.20663 கல் / 3வது வீதி | 17.11.89 | 04 |
| 62. | எம்.எல்.மதார் சாஹிப் | 21 | ஆர்.பீ.சீ.13306 ஆஸ்பத்திரி வீதி | 17.11.89 | 06 |
| 63. | ஏ.எம்.முஹம்மத் மன்ஸூர் | 20 | ஆர்.பீ.சீ.20359 பிலாவடி ஒழுங்கை | 17.11.89 | 06 |
| 64. | எச்.எம்.முஸம்மில் | 21 | ஆர்.பீ.சீ.20286 அம் / 3வது வீதி | 17.11.89 | 08 |
| 65. | ஏ.சம்சுதீன் | 24 | ஆர்.பீ.சீ.20306 வைத்தியர் ஒழுங்கை | 17.11.89 | 05 |
| 66. | ஏ.எல்.மீரா முகைதீன் | 24 | ஆர்.பீ.சீ.13680 செந்நெல் கிராமம் | 17.11.89 | 07 |
| 67. | ஏ.எம்.முஹம்மத் முர்சலீன் | 20 | ஆர்.பீ.சீ.20312 51.செந்நெல் கிராமம் | 17.11.89 | 06 |
| 68. | ஏ. சலீம் | 20 | ஆர்.பீ.சீ.20310 நூர்தீன் ஒழுங்கை | 17.11.89 | 03 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 69. | ஏ.எல்.அப்துல் ரஷீட் | 22 | ஆர்.பீ.சீ.13137 குளலியர் ஒழுங்கை | 17.11.89 | 01 |
| 70. | கே.எல்.முஹம்மத் லாஹிர் | 21 | ஆர்.பீ.சீ.20313 கீச்சார் ஒழுங்கை | 17.11.89 | 05 |
| 71. | எம்.ஐ.அச்சி முஹம்மத் | 23 | ஆர்.பீ.சீ.20284 228 மல்கம்பிட்டி வீதி | 17.11.89 | 07 |
| 72. | எஸ்.எம்.அமீர் அலி | 24 | ஆர்.பீ.சீ.20369 41 /2 பொலிஸ் பீதி | 17.11.89 | 09 |
| 73. | ஐ.எல்.அப்துல் ரகீம் | 17 | 46 /1 ஹிஜ்ரா வீதி | 16.12.89 | 04 |
| 74. | எஸ்.எம்.அப்துல் கரீம் | 19 | 204, பு.ஜே.கிழக்கு | 17.12.89 | 08 |
| 75. | ஏ.ரம்ளான் | 28 | 204, பு.ஜே.கிழக்கு | 17.12.89 | 03 |
| 76. | ஏ.அமீர் அலி | 20 | 103, பு.ஜே.கிழக்கு | 14.01.90 | 02 |
| 77. | ஏ.எல்.மீரா லெப்பை | 62 | 211 /1 தைக்காப்பள்ளி வீதி | 18.01.90 | 02 |
| 78. | எம்.வை.எம்.மன்சூர் (எம்.பீ.சீ) | 35 | ஹாஜியார் ஒழுங்கை | 30.01.90 | 08 |
| 79. | எம்.வை.முஹம்மது ரஸீன் | 23 | 76 / 12 பண்ட ரோட் | 11.06.90 | 08 |
| 80. | எஸ்.எம்.அப்துல் ஜப்பார் | 20 | 198 /2 மல் /8ம் ஒழுங்கை | 11.06.90 | 03 |
| 81. | எம்.ரீ.முஹம்மத் ஹனிபா | 24 | 283, பு.ஜே.கிழக்கு | 11.06.90 | 09 |
| 82. | யூ.சலீம் | 20 | 277. பு.ஜே.கிழக்கு | 11.06.90 | 06 |
| 83. | ஏ.எம்.அமீர் அலி | 24 | 121. பு.ஜே.கிழக்கு | 11.06.90 | 05 |
| 84. | ஏ.ப.துர்தீன் | 31 | மாவடிப்பள்ளி | 11.06.90 | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 85. | ஏ.ஆர்.எம்.ராபி | 20 | அம்பாறை வீதி | 20.06.90 | 05 |
| 86. | கே.எல்.ஷஹாப்தீன் | 30 | பசார் 8ம் வீதி | 26.06.90 | 04 |
| 87. | எஸ்.எல்.முஹம்மத் ஜிப்ரி | 24 | 412. பு.ஜே.கிழக்கு | 29.06.90 | 03 |
| 88. | அல்ஹாஜ்.ஏ.எஸ்.முஹம்மத் | 57 | 14 ஹிஜ்ரா வீதி | 20.07.90 | 08 |
| 89. | அல்ஹாஜ்.ஏ.ஏஸ். மீராராஹிப் | 50 | 4ம் குறிச்சி | 20.07.90 | 02 |
| 90. | ஏ.எல்.சுலைமாலெப்பை | 46 | பசார் 10ம் ஒழுங்கை | 21.07.90 | 02 |
| 91. | யூ.எல்.ஹபீப் முஹம்மத் | 53 | 46பீ.அமீரலி வட தெரு | 21.07.90 | 09 |
| 92. | ஏ.எல்.முஹம்மத் முபாரக் | 19 | பெரிய பள்ளி வீதி | 21.07.90 | 04 |
| 93. | எம்.ஏ.அப்துல் ரஹீம் | 20 | 269 ஏ. மல் /6ம் வீதி | 21.07.90 | 03 |
| 94. | ஐ.எல்.சுலை மாலெப்பை | 43 | சின்னப் பிள்ளை போடி ஒழுங்கை | 21.07.90 | 02 |
| 95. | அல்ஹாஜ்.ஏ.எல்.முஹம்மத் இப்றாஹிம் | 67 | லேக் றோட் | 23.07.90 | 02 |
| 96. | எம்.ஆர்.அலியார் | 25 | லேக் றோட் | 23.07.90 | 02 |
| 97. | எம்.ரீ.முஹம்மத் அலியார் | 26 | 117 /4 ஏ.மல்கம்பிட்டி வீதி | 25.07.90 | 02 |
| 98. | ஏ.எல்.மீராசாஹிப் | 45 | தென்னை மாதிரிக் கிராமம் | 25.07.90 | 06 |
| 99. | ஏ.எல்.இஸ்மாலெப்பை | 54 | 4ம் குறிச்சி | 25.07.90 | 04 |
| 100 | யூ.எல்.அப்துல் மஜீத் | 20 | ஈ.242. பு.ஜே.மேற்கு | 29.07.90 | 02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 101 | ஏ.முஹம்மத் தம்பி | 18 | மலையடிக் கிராமம் | 29.07.90 | 06 |
| 102 | என். ஆதம்பாவா | 19 | தென்னை மாதிரிக் கிராமம் | 29.07.90 | 05 |
| 103 | ஏ.எம்.முகம்மத் அலி | 34 | 287 /2 கல்லரிச்சல் வீதி | 29.07.90 | 05 |
| 104 | ஏ.எல்.சலீம் | 24 | ஈ.251 பு.ஜே.கிழக்கு | 29.07.90 | 08 |
| 105 | ஏ.அப்துல் சலாம் | 21 | மாவடிப்பள்ளி | 01.08.90 | 04 |
| 106 | ஏ.இப்றா லெப்பை | 45 | 50. மஜீத்புரம் | 02.08.90 | 08 |
| 107 | ஐ.வெள்ளத்தம்பி | 21 | மஜீத்புரம் | 02.08.90 | 08 |
| 108 | எஸ்.ஆதம்பாவா | 30 | பு.ஜே.கிழக்கு | 03.08.90 | 06 |
| 109 | ஏ.எம்.ஹனிபா | 20 | அம் /14ம் வீதி | 08.08.90 | 04 |
| 110 | ஏ.ஆர்.ஸக்கரியா | 34 | 19. உடங்கா | 12.08.90 | 07 |
| 111 | எம்.எம்.முஹம்மத் அலியார் | 37 | ஈ6.விளினையடி | 12.08.90 | 03 |
| 112 | ஏ.எல்.சுலைமா லெப்பை | 34 | 19 /2. விளினையடி வீதி | 12.08.90 | 05 |
| 113 | கே.எம்.கலந்தர் லெப்பை | 33 | செம்மண் வட்டை | 12.08.90 | 06 |
| 114 | ஏ.எம்.முஹம்மத் பாயிஸ் | 08 | மார்கட் வீதி | 03.09.90 | 04 |
| 115 | எம்.அப்துல் ரஹ்மான் | 17 | மலையார் வீதி | 26.09.90 | 03 |
| 116 | எம்.சம்சுதீன் | 23 | 13 /1பீ.அம் /14ம் ஒழுங்கை | 15.02.91 | 04 |
| 117 | எம்.ரீ.நஸார் | 19 | அரபா வித்தியாலய வீதி | 09.03.91 | 01 |
| 118 | எம்.ரீ.முஹம்மத் நளீம் | 13 | அலவாக்கரை வீதி | 20.05.91 | 04 |
| 119 | எம்.ரீ.ஷஹாப்தீன் | 22 | அலவாக்கரை வீதி | 20.05.91 | 06 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 120 | எம்.ரி.ஆதம்பாவா | 40 | கிராண்ட் ஈஸ்டன் ஒழுங்கை | 20.05.91 | 04 |
| 121 | எம்.முஹம்மது ஹனிபா | 21 | அரபா வித்தியாலய வீதி | 20.05.91 | 01 |
| 122 | ஏ.எல்.முஹம்மத் சலீம் | 31 | அரபா வித்தியாலய வீதி | 20.05.91 | 04 |
| 123 | ஏ.கோஸ் முஹம்மத் | 39 | 6 அமீர் அலி வீதி | 20.05.91 | 08 |
| 124 | ஏ.முஹம்மது சாலிஹ் | 24 | 46 லேக் வீதி | 20.05.91 | 06 |
| 125 | எம்.ஐ.முபாரக் | 26 | 10 பசார் வீதி | 20.05.91 | 05 |
| 126 | ஐ.முஹம்மத் தமீம் | 20 | 53 C செனெல் வட்டை | 20.05.91 | 01 |
| 127 | யூ.எல்.முஹம்மத் இப்ராஹீம் | 58 | 12 A. மஸ்தார் வீதி | 08.08.91 | 05 |
| 128 | ஏ.மன்சூர் | 22 | 30 /1. கருவாட்டுக்கல் | 08.08.91 | 06 |
| 129 | எஸ்.எம்.அலியார் | 31 | கீச்சார் ஒழுங்கை. | 08.08.91 | 04 |
| 130 | எம்.எம்.அப்துல் மஜீத் | 40 | அம் /8வது ஒழுங்கை | 08.08.91 | 05 |
| 131 | யூ.எல்.இப்றாலெப்பை | 31 | 420 /2 தைக்காப்பள்ளி வீதி | 08.08.91 | 05 |
| 132 | யூ.எல்.முஹம்மது ஹனிபா | 24 | 420 /2 தைக்காப்பள்ளி வீதி | 08.08.91 | 05 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதிகளால் படுகாயத்திற்குள்ளானோர்

| இல. | பெயர் | விலாசம் | சம்பவம் | காயத்தின் காரணம் |
|---|---|---|---|---|
| 1. | கே.அலியார் | பொலீஸ் வீதி | 01.10.84 | பெற்றோல் குண்டு |
| 2. | எம்.வை.எம்.அமீன் | ஈ /303.மல்கம்பிட்டி வீதி | 22.02.86 | துப்பாக்கிச் சூடு |
| 3. | எஸ்.எல்.அச்சி முகம்மது | 125 /2ஏ விளினையடி வீதி | 30.11.87 | துப்பாக்கி அடி |
| 4. | எம்.யாசீன் | விளினையடி வீதி | 05.01.88 | துப்பாக்கி அடி |
| 5. | ஏ.எல்.முஹம்மத் இஸ்மாயில் | 10. ஏத்தாளைக் குளம் | 22.01.88 | துப்பாக்கி சூடு |
| 6. | ஐ.எல்.சீனி முஹம்மத் | அலிவன்னியா வீதி | 29.01.88 | துப்பாக்கி சூடு |
| 7. | எம்.ஐ.பாத்தும்மா | ஏத்தாளைக்குளம் | 20.07.88 | பலவந்தம் |
| 8. | ஔ.முஹம்மத் முஸ்தபா | பு.ஜே.மேற்கு | 20.08.88 | வாள் வெட்டு |
| 9. | எம்.எம்.அப்துல் ரஷீட் | பு.ஜே.மேற்கு | 20.08.88 | வாள் வெட்டு |
| 10. | ஏ.முகைதீன் பாவா | அல்-அர்ஷாத் வீதி | 13.01.89 | கடத்தல்-தாக்குதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | எம்.எம்.ஆதம்லெப்பை | அல்-அர்ஷாத் வீதி | 13.01..89 | கடத்தல்- தாக்குதல் |
| 12. | எம்.ஐ.தஸ்தகீர் | ஈ 60 - தோட்டம் பு.ஜே.மே. | 15.02.89 | கடத்தல்-தாக்குதல் |
| 13. | சீ.எம். அஹ்மத் பளீல் | 4ம் குறிச்சி | 25.03.89 | துப்பாக்கிச் சூடு |
| 14. | எம்.ஏ.எம்.முஹம்மத் அமீன் | கருவாட்டுக்கல் | 03.05.89 | துப்பாக்கிச் சூடு |
| 15. | ஏ.ஜாபிர் | பசார் 10ம் ஒழுங்கை | 17.05.89 | துப்பாக்கிச் சூடு |
| 16. | எம்.ரீ.பாறூக் | சாலி றோட் | 17.05.89 | துப்பாக்கிச் சூடு |
| 17. | எம்.யஸ்தின் | அமீரலி வடக்கு வீதி | 17.05.89 | துப்பாக்கிச் சூடு |
| 18. | எம்.ஐ.முகைதீன் பாவா | 4ம் குறிச்சி | 17.05.89 | துப்பாக்கிச் சூடு |
| 19. | எம்.ரீ.அப்துல் கபூர் | 87.ஏ.உசனார் ஒழுங்கை | 17.05.89 | துப்பாக்கிச் சூடு |
| 20. | எம்.எல்.இளையதம்பி | எம்.பி.றோட் | 20.05.89 | வாள்வெட்டு |
| 21. | ஐ.சுலைமா லெப்பை | 117 /2 செந்நெல் கிராமம் | 20.05.89 | தாக்குதல் |
| 22. | ஏ.அப்துல் சலீம் | மாவடிப்பள்ளி | 22.05.89 | துப்பாக்கிச் சூடு |
| 23. | ஐ.அபூதாஹிர் | மாவடிப்பள்ளி | 22.05.89 | துப்பாக்கிச் சூடு |
| 24. | எஸ்.எல்.முஹம்மத் ஹனிபா | 59.செந்நெல் கிராமம் | 01.06.89 | அடி காயம் |
| 25. | ஏ.சம்சூன் | 58 /1 செந்நெல் கிராமம் | 01.06.89 | அடி காயம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 26. | எஸ்.சித்திக் | 60. செந்நெல் கிராமம் | 01.06.89 | அடி காயம் |
| 27. | ஏ.அப்துல் ஹமீட் | 37.செந்நெல் கிராமம் | 01.06.89 | அடி காயம் |
| 28. | யூ.எல்.அமீர் அலி | 26 செந்நெல் கிராமம் | 01.06.89 | அடி காயம் |
| 29. | எம்.எல்.முஹம்மத் இப்றாஹிம் | 58. செந்நெல் கிராமம் | 01.06.89 | அடி காயம் |
| 30. | கே.எல்.அப்துல் ரஹீம் | பு.ஜே.கிழக்கு | 14.06.89 | கைக்குண்டு |
| 31. | ஏ.எல்.நஸீர் | ஈ 21 /1 விளினையடி | 16.06.89 | அடிகாயம் |
| 32. | எம்.உசனார் | அம் /14ம் வீதி. உடங்கா | 20.06.89 | அடிகாயம் |
| 33. | வீ.முஹம்மத் இஸ்மாயில் | சுட்டார் ஒழுங்கை | 20.06.89 | கத்திக்குத்து |
| 34. | எஸ்.எல்.முஹம்மதுத் தம்பி | 1ம் குறிச்சி | 20.06.89 | அடிகாயம் |
| 35. | ஏ.எல்.சுலைமாலெப்பை | 6. செந்நெல் கிராமம் | 19.10.89 | அடிகாயம் |
| 36. | ஏ.எல்.சுலைமாலெப்பை | அல்-முனீர் வீதி | 06.12.89 | வாள்வெட்டு |
| 37. | ஏ.எல்.அக்பர் | அம் /14ம் வீதி | 02.01.90 | துப்பாக்கி சூடு |
| 38. | ஐ.எல்.அவ்வா உம்மா | லேக் வீதி | 23.07.90 | துப்பாக்கி சூடு |
| 39. | ஏ.தஸ்லீமா | லேக் வீதி | 23.07.90 | துப்பாக்கி சூடு |
| 40. | மௌலவி. ஏ.எம்.அடுல் ஹஸைன் | பசார் 10ம் ஒழுங்கை | 23.07.90 | துப்பாக்கி சூடு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 41. | ஏ.எல்.முஹம்மத் சாதிக் | நைஸ் ஒழுங்கை | 23.07.90 | துப்பாக்கி சூடு |
| 42. | எம்.எம்.முஹம்மத் ஹனிபா | ஜமாலியா சந்தி | 12.08.90 | வாள்வெட்டு |
| 43. | ஏ.அலியார் | படார் வீதி | 12.08.90 | வாள்வெட்டு |
| 44. | ஏ.அசனார் | படார் வீதி | 12.08.90 | வாள்வெட்டு |
| 45. | எம்.பி.முஹம்மத் தம்பி | அம்.4ம் வீதி | 12.08.90 | வாள்வெட்டு |
| 46. | எம்.பி. கலந்தர் லெப்பை | பசார் 10ம் ஒழுங்கை | 12.08.90 | வாள்வெட்டு |
| 47. | எஸ்.எல்.வெள்ளத் தம்பி | பசார் 10ம் ஒழுங்கை | 12.08.90 | வாள்வெட்டு |
| 48. | ஏ.ஆதம்பாவா | பசார் 10ம் ஒழுங்கை | 12.08.90 | வாள்வெட்டு |
| 49. | அல்ஹாஜ்.ஏ.அப்துல் ரஹீம் | அம்பாறை வீதி | 20.11.90 | பட்டா நிலக்கண்ணி |
| 50. | என் பாரூக் | 117 /3 மலையடி கிராமம் | 20.11.90 | பட்டா நிலக்கண்ணி |
| 51. | எம்.ஐ.எம்.சஹீத் | 38. விளினையடி | 03.12.90 | பட்டா நிலக்கண்ணி |
| 52. | பீ.ரீ.முஹம்மத் தம்பி | 410, ஹாஜியார் ஒழுங்கை | 23.03.91 | பட்டா நிலக்கண்ணி |
| 53. | எம்.தம்பி லெப்பை | அம்பாறை வீதி | 20.05.91 | துப்பாக்கி சூடு |
| 54. | எம்.ஆதம் லெப்பை | 318 /1 ,1ம் குறுக்குத் தெரு | 22.05.91 | பட்டா நிலக் கண்ணி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# இந்திய அமைதிப்படையின் 'அமைதி காக்கும்' காலம்

29.07.1987ல் ஜனாதிபதி திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்களுக்கும் இந்தியப்பிரதமர் திரு.ராஜீவ் காந்தி அவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக இந்தியப்படையினர் அமைதி காக்க முஸ்லீம் பகுதிகளிலும் நிலை கொள்ளத் தொடங்கினர். இக்காலகட்டத்தில் முன்னர் மறைவாக கொலை கொள்ளைகளில் ஈடுபட்டவர்கள் தோளில் ஆயுதங்களோடு மேற்படி நடவடிக்கைகளில் 'சட்டரீதியாக' ஈடுபடத் தொடங்கினர். சம்மாந்துறை முஸ்லிம்களின் வாழ்க்கையில் கண்ணீரும் இரத்தமும் ஆறாக ஓடிய காலக்கட்டம் இதுவே எனலாம்.

1988ம் ஆண்டு காலப்பகுதியில் 'புளொட்' இயக்கம் எனக்கூறிக்கொண்டு டக்ளஸ் என்ற ஒரு வவுனியா வாசியும் அவரது குழுவினரும் மல்வத்தையில் முகாமிட்டுக் கொண்டு சம்மாந்துறை விவசாயிகளிடம் நெல் பறித்தனர். ஒவ்வொரு டிரக்டர் பெட்டிக்கும் ஐந்து மூடை நெல் நிர்ப்பந்தமாகப் பறித்தனர். அதுமட்டுமல்ல உழவு இயந்திரங்கள், துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் பறிக்கப்பட்டன. இப்படியான வேளைகளில் இதனை முறையிட இந்திய இராணுவத்திடம் சென்றால் அவர்கள் ஏதோ காரணங்கள் சொல்லி காலத்தைக் கடத்தி விட்டனர். 'அவர்களை நாங்கள் கைது செய்ய முடியாது. உங்கள் பொலிஸார்தான் கைது செய்ய வேண்டும்" என்றனர்கள். இப்பிரதேசங்களில் எமது பொலிஸாருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவித அதிகாரங்களும் இல்லை என ஸ்ரீ லங்கா பொலிஸார் கூறினர். இப்படியான ஓர் இக்கட்டான - நெருக்கடியான நிலையில் முஸ்லீம் மக்கள் - குறிப்பாக சம்மாந்துறை மக்கள் சொல்லொணாத் துன்ப துயரத்திற்குள்ளானர்கள். இக்காலதில் அரசங்கத்தினால் பிரஜைகள் குழு அமைக்கப்பட்டிருந்தது. அவர்களது வேலை, இந்திய இராணுவத்தையும் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொண்ட சிலரையும் வால் பிடிப்பதைத்தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. இயக்கதினரின் அட்டகாசம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே சென்றது. அதற்கு அளவேயில்லை. பல மோட்டார் சைக்கிள்கயள் பறிக்கப்பட்டு இயக்கக்காரர்களால் சொந்தக்காரர்களுக்கு முன்னிலையிலேயே ஓட்டப்பட்டன. இவைகள் யாவற்றையும் விட மக்கள் எப்படியான கௌரவமான வர்களாக, அறிவாளிகளாக, மார்க்க அறிஞர்களாக, விருத்தாப்பியர்களாக, உத்தியோகத் தர்களாக, மாதர் மணிகளாக இருந்தாலும் அவர்கள் யாவரும் அசிங்கமான, அகௌரவமான "அடா பொடா" என்ற அதிகாரத் தோரணையில், அம்மணவார்த்தைகளால் அழைக்கப் பட்டமை அந்நேரம் முஸ்லிம்களிடத்தில் மிகவும் வேதனை யாகவும், எரிச்சலாகவும் கோபத்தையும் வெறுப் புணர் வினையும் தூண்டுபனவாகவும் அமைந்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

*1988.03.06*ல் ஏ. பதுறுதீன் என்பவர் கண்ணி வெடியில் சிக்கி அகால மரணமானார். *1988.03.12*ல் சீ. உசைன் என்ற இளைஞரும் *1988.03.13*ல் எம். சீ. செய்யது இப்றாம் என்ற இளைஞரும் வீதியில் சுட்டுக்கொல்லப் பட்டனர். படுபாதகப் போராளிகளால் இவர்கள் சம்மாந்துறையில் தைரியமிக்க இளைஞர்கள் என்பதனாலேயே - கொல்லப் பட்டர்கள் என்று கூறப் பட்டது. ஆளுமையுடன் சம்மாந்துறை முஸ்லீம் இளைஞர்கள் வாழ்வதை விரும்பாத மிலேச்சத்தனமான கொலை வெறியர்களாக இளக்கப் போராளிபள மாறினர். இதே காலப்பகுதியில் *1988.03.20*ல் எம். ஆதம் பாவா என்பவர் பட்டப்பகலில் கடத்தப்பட்டு கொலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டார். இவர் சம்மாந்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.அப்துல் மஜீத் அவர்களின் மெய்ப்பாது காவலராக அவரது வீட்டில் காவலில் இருக்கும் போதே வீரமுனையைச் சேர்ந்த பல தமிழ் இளைஞர்களால் பகலில் கடத்திச் செல்லப்பட்டார். இதில் குறிப்பிட்டத்தக்க ஒரு விடயம் இதற்கு முன்னைய நிகழ்ச்சிகளில் சந்தேகிக்கப்பட்ட இவர்கள் பகலில் ஈடுபட்டமையிலால் நேரடியாக இவர்கள்தான் இவை அத்தனையும் செய்கின்றனர் என நிரூபித்துச் சென்றனர். அதாவது வீரமுனையைச் சேர்ந்த சம்மாந்துறை முஸ்லீம்களுடன் பழகித் திரிந்த அசோகன், ஜீவா, பத்மராஜா, வண்டிக்கார ரவி, சுந்தரம் என்ற இளைஞர்கள்தான் இத்தனையும் செய்கின்றனர் என்பதை நேரிற் கண்ட மக்கள் எத்துணை ஆத்திரமடைவார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்.

இத்தனைக்கும் மத்தியில் விடுதலைப் போராளிகளில் இனத்துவேசத் துப்பாக்கிகள் ஒரு புறம் - மறுபுறம் இந்திய இராணுவம், இன்னொரு புறம்,- இப்பிரதேசங்களில் அதிகாரமற்ற பொலிசார் முஸ்லிம் மக்கள் தங்களது இன உறவு பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக ஆத்திரமடைந்த சம்மாந்துறை மக்களை அடங்கச் செய்து வீரமுனையைச் சேர்ந்த, இராஜேந்திரன் அதிபர், சபாநாயகம் ஆசிரியர், முருகேசு, இராம நாதன் போன்ற பெரியார்களுடன் முஸ்லிம் பெரியார்களான தப்லீகுல் இஸ்லாம்அரபிக் கலாசாலை அதிபர் மௌலவி எம் பி.அலியார் ஹஸரத், சட்டத்தரணி யூ.எல்.எம்.முகியீன் , ஏ.ஆர்.முகம்மத் அலி, ஐ.உதுமாலெவ்வை ஜே.பீ., அல்ஹாஜ் வை.ஏ.மஜீட் பொறியியலாளர், ஐ.ஏ.ஜப்பார் ஏ.டீ போன்றோர் "இவற்றை தங்கள் இளைஞர்களை கட்டுப்படுத்தச் சொல்லுங்கள், அநியாயமும் அராஜகமும் அப்பாவி சம்மாந்துறை முஸ்லிம் மக்களுக்குச் செய்கிறீர்களே" என்று சமாதானங்களையும், கெஞ்சுதல்களையும், இரங்கல்களையும் செய்தபோது எதுவும் பயனளிக்கவில்லை. இதனை எண்ணும் போது ஏளனமமானதும், துன்பமானதுமான செயலாக மட்டுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதே தவிர உள்ளத்தளவுள்ளதாகக் காணப்படவில்லை. எம்.ஏ.அப்துல் மஜீத் M.P. அவர்கள் கூட, தமது மெய்ப்பாதுகாவலரை மீட்டுக்கொள்ள எடுத்த எந்த முயற்சியும் பயனளிக்கவில்லையென்பதை இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது. இந்த எம்பியும் இந்த சம்மாந்துறை முஸ்லிம் மக்களும் போராட்ட இளைஞர்களால் மறக்க முடியாதவர்களாக இருக்க வேண்டியவர்கள். இவர்கள் மண்டியிட்டும் இந்த இளைஞர்கள் இரங்காத கடுமையான வெறித்தனமான போக்கினையே கொண்டிருந்தனர். *1988.03.30ல்* ஐ.அப்துல் றகுமான் கடத்தப் பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

*1988.07.25ம்* திகதி இன்னும் ஒரு முக்கியமான சம்பவம் நிகழ்கின்றது. அன்று முஸ்லிம்களின் தியாகத் திருநாள் ஹஜ்ஜுப் பெருநாள் அன்று பெருநாள் தொழுகைக்காக சம்மாந்துறை முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்று கூடிக்கொண்டிருந்தனர். வீரமுனை ஆண்டிட சந்திக்கு அப்பாலிருந்து பிரதான வீதி வழியாக தொழுகைக்காக வந்த சம்மாந்துறையின் பிரபலமான முக்கிய நபர்களில் ஒருவரும், பிரஜைகள் குழு உறுப்பினருமானவை. அப்துல் மஜீத் என்ற பொறியியலாளரின் கார் வழி மறிக்கப்பட்டு அவர் போகக் கூடாதென்று தடை விதிக்கப்பட்டார். ஏனென்று கேட்டால் இன்று "ஹர்த்தால் நாள்" யாரும் வெளிச் செல்லக் கூடாதெனக் கூறினர். சிந்தியுங்கள்! இன்று முஸ்லிம்களின் பெருநாள் தினத்தில் ஹர்த்தால் என்று பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழும் ஒரு ஊரில் கூறி வழி மறித்து ஆக்கிரமிப்பும் மேற்கொள்வது எந்தளவு நியாயமானது என்பதை உணர்ந்து பாருங்கள். ஓரினத்தின் சுயத்தினை மதிக்கத் தெரியாத இவர்களா "இன" விடுதலைப்போராளிகள்? இவர்களின் இன ஆதிக்கம் எவ்வளவு ஆழமானது, இவர்களின் இன ஒதுக்கல் எவ்வளவு வேகமானது இன்னும் அன்று "ஜீவா" என்பவரது தலைமையில் வீரமுனை இளைஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து அந்த பொறியியலாளரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் ஆற்றில் குளித்துவிட்டு வந்த பல பெண்களையும் மறித்ததோடு ஒரு பெண்ணினது கையை இழுத்துத் தூக்கவும் முற்பட்டனர். தொடர்ந்து பெண்களும், பொறியியலாளரும் தாக்கப்பட்டனர். இது வேண்டு மென்றே இந்த இயக்க இளைஞர்களால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட வேலையாகும். இது ஊர்க்கலவரம் ஒன்றினை ஏற்படுத்த அவர்கள் மேற்கொண்ட அடாவடித்தனமும் ஆக்கிரமிப்புமாகும். பெருநாள் தொழுகை முடிந்த பின் முஸ்லிம் மக்கள் மிகவும் கிளர்ந்தெழுந்தார்கள். அப்படியிருந்தும் பல முஸ்லிம் தலைவர்கள் அதனை மிகவும் பொறுமைப் பக்குவத்தோடு தணித்துவிட்டார்கள். பெருநாள் தொழுகைக்கென் திரண்டமக்கள் கூட்டம் இவர்கள் வழி சென்று வீரமுனை இளைஞர்களுடன் மோத எண்ணியிருந்தால், அது எவ்வளவு பயங்கரமானதாக இருந்திருக்கலாம். இவற்றை எல்லாம் எண்ணாது, சிந்தியாது இந்த இளைஞர்கள் இனவெறித் தீயை படிப்படியாக மூட்டிக்கொண்டே வந்தனர். கொலைகள் தொடர்ந்தன.

1988.08.22ல் ஏ.எல்.நஜிமுத்தீன் என்ற சகோதரர் மாவடிப்பள்ளியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். 1988.10.31ல் எம்.ஐ.அமீர் அலி என்பவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். இவர்கள் இயக்கங்களில் இருந்து நீங்கிக் கொண்டவர்கள். இயக்கப் போராளிகளின் இனவெறி, கொலை வெறி, இயக்க வெறி என்பவற்றை கண்டதும் தமது கொள்கைளைக் களைந்து விட்டு சமூக உணர்வுடன் வெளியேறியவர்கள். இவர்களுக்கெல்லாம் அவர்களால் வழங்கப்பட்ட தண்டனை கொலை. ஒற்றுமையுடன், விசுவாசத்துடன் சிந்தித்த முஸ்லீம் சமூகம் இவற்றை எல்லாம் எந்தளவு ஏற்றுக்கொள்ளும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இன்னும் 1989.01.11ம் திகதி சம்மாந்துறையிலிருந்து பொதுத் தேர்தல் சேவைக்காக வேன் ஒன்றில் 12ம் கொலனிக்குச் சென்று கொண்டிருந்த முஸ்லிம் இளைஞர்கள் மீது தமிழ் இளைஞர்கள் கோஷ்டி ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஆறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூஸ்லீம்கள் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர். வாகனம் முற்றாகச் சேதமாக்கப்பட்டது. அந்த வானிலிருந்து பொருட்கள் கூட சூறையாடப்பட்டன. இந்த தமிழ்ப் பேரினவாதிகள், வேண்டுமென்றே முஸ்லீம் சிறுபான்மையிரை அடக்கியாண்டு அராஜகம் செய்கின்றனர் என்பது நிரூபணமாவதோடு, சம்மாந்துறை முஸ்லீம் துடிப்புள்ள இளைஞர்களையும் கொன்று தொலைக் கங்கணம் கட்டி விட்டனர் என்ற சந்தேகங்களும் ஆழமாக எழத்தொடங்கின.

1989-02-22ல் எம்.எம்.ஹனிபா என்ற இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது வீடு வீரமுனையை அண்மிய பகுதியில் உள்ளது. தனது அண்டை அயலவர்களாக தமிழ் மக்களையே கொண்டிருந்தவர் இவர். தனது சொந்த வீட்டின் முன்னாலேயே ஜீவா, அசோகன் என்ற இரு வீரமுனை இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனால்இவர்கள் தமது அண்டை வீட்டினரையே சுட்டுக் கொல்லும் நன்றிகெட்ட வராயினார்கள். இவரது கொலைக்கு காரணம் எதுவும் மக்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் எங்கோ ஒரு மூலையில் ஒருவரால் பின்வரும் காரணம் கூறப்பட்டதாம். 1980ம் ஆண்டில் சுந்தரம் என்ற ஒரு துஷ்டன் கொலையுண்டான். (இக்கொலையை அன்று எல்லோரும் அங்கீகரித்தார்கள் என்றே கூறவேண்டும்) அவன் களவு கொள்ளை போன்றவற்றில் ஈடுபட்டு வந்தவன். இவருடன் ஹனிபா சில சந்தர்ப்பங்களில் சண்டை இட்டுள்ளார். இதற்காக சுந்தரனின் தம்பிகள் இயக்கத்திலிருந்து தூண்டியதனால் சுடப்பட்டார் என்று அக்காலத்தில் கூறப்பட்டது.

இப்படி சிறிய சிறிய பழைய காரணங்களுக்காக முஸ்லீம் இளைஞர்களை காரணமறியாது துப்பாக்கி அராஜகத்தில் மூலம் சுட்டுக் கொன்று வந்தமை மக்களினால் பெரிதும் வெறுக்கப்பட்டது. இதனாலும் வீரமுனை மக்கள் மீது நாளுக்கு நாள் வெறுப்புணர்வு வளர்ச்சியடையத் தொடங்கியது. ஆனால், முஸ்லீம்கள் இத்தனை சம்பவங்கள் இடம் பெற்றும் எந்த இயக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI



இளைஞரையோ அல்லது வீரமுனைத் தமிழர்களையோ கிஞ்சித்தும் குறைந்தது, கைகலப்பில் கூட சம்பந்தப் படாமல் தமது பொறுமையைப்பேணி வந்தனர் என்பதனை, எந்த வீரமுனைத் தமிழ் மகனும் யதார்த்தபூர்வ மனநிலை கொண்டவனாயின் ஏற்றுக்கொள்வான். ஆனால், மாறாக அவர்கள் இவைகள் தமது வீரச் செயல்கள், கடந்த கால கோஷ்டிப் பிளவுகளின் பழிவாங்கல்கள் என்றெல்லாம் பெருமைப்பட்டுக் கொண்டனர். அதுமட்டுமல்ல, சந்தர்ப்பம் கிடைத்தால் வீரமுனை 1954இல் எரிந்தது போன்று சம்மாந்துறையும் ஒரு தரம் எரிக்கப்படல் வேண்டுமென்று வெளிப் படையாகவே கூறத் தொடங்கினர். 35வருடங்களுக்கு முன்னர் நட்ட பனங்கொட்டையில் இப்போதுதான் பழந்தின்னப்போகிறோம் என்று கூட வாயார நக்கல் அடித்தனர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக வர்க்க வேறுபாட்டில் நம்பிக்கை கொண்டிருந்த இயக்கங்கள் இந்தப் பொருளாதார அரசியல் தத்துவத்தை இனவாத ரஸம்பூசி மக்களுக்கு பருகக் கொடுத்தமை இனப்பூகம்பம் எழுவதற்கான அடிப்படைக் காரணியாகும். அதாவது, அம்பாறை மாவட்டத்திலுள்ள விவசாய நிலங்கள் பெரும்பாலும் சம்மாந்துறையின் முஸ்லீம் மக்களுக்கு சொந்தமானவையாகும். குடியேற்றச் கிராமங்களில் வாழும் தமிழர்கள் ஆண்களும் பெண்களுமாக புல்பிடுங்குதல், வேளாண்மை செய்தல், அறுவடை செய்தல், கட்டுதல், சூடு அடித்தல் முதலிய வேலைகளில் கூலித்தொழிலாளிகளாகக் கடமையாற்றினர். இவர்கள் 1984இல் தமிழ்-முஸ்லிம் முரண்பாடு தோன்றுவதற்கு முன்னரேயே காணிகளை சுவீகரித்து எடுத்தல் சம்பந்தமான கதைகளைப் பரப்பினர். புல் பிடுங்க வருகின்ற பெண்கள் கூட (இந்தப் போகம் மட்டும் செய்ங்க, வாறபோகம் எங்களுக்கு (தமிழர்களுக்கு) பொடியன்கள் ஓர் ஆளுக்கு இரண்டு ஏக்கராக பகிர்ந்து தருவாங்கள்) என்று பகடி பகடியாகச் சொல்வர். இந்த பாட்டாளி வர்க்கக் குணாம்சம் இனவாத இரஸத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகு தீவிரமாக வேலை செய்யத்தொடங்கியமை அம்பாறை மாவட்டத்தில் தமிழ் இயக்கங்கள் தமிழ் மக்களிடையே வெகுசன இயக்கங்களாக எழக் காரண மாயிற்று. இந்த வர்க்கவெறி இனவெறியுடன் கலக்கப்பட்டு மக்கள் மத்தியில் பிரச்சாரப்படுத்தப்பட்டபோது கூலித் தொழிலாளிகள் நிலச் சுவாந்தர்களாக தங்களைக் காணக் கனாக் கண்டனர். இதனால்தான் ஐ.பி.கே.எப். நிலைகொண்ட போது அவர்களுடன் கூடித்திரிந்தோர் வயல்நிலங்களையெல்லாம் காட்டி, இது தமிழர்களுடைய நிலங்கள், முஸ்லீம்கள் அநியாயமாகப் பயமுறுத்தி எடுத்துக் கொண்டனர் என்று கூறி அவர்களை நம்பச் செய்தனர். இது தமிழ் முஸ்லிம் இனக் கலவரத்தின் ஆணிவேர் எனலாம்.

இத்தன்மைகளையெல்லாம் முஸ்லீம்கள் வெகுவான அச்சத்துடன் வெறுத்தார்கள். மற்றும் சம்மாந்துறையில் இன்னும் பல முஸ்லீம் இளைஞர்களைச் சுட்டுத் தள்ளி பழிவாங்குவதாகவும் அடிக்கடி கதைகள் கட்டி விடப்பட்டன. இவ்வாறெல்லாம் ஆயுத அராஜகத்தால் சம்மாந்துறை முஸ்லிம்களை அடக்கியாள அவர்கள் எத்தனங்கள் செய்தார்கள். மேலும் 1989.03.12 ஆம் திகதி பு.சுலைமாலெவ்வை என்ற இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் அவரது மோட்டார் சைக்கிளையும் பறித்தெடுத்துச் சென்றனர். இதுவும் கைகாட்டிப் பகுதியில் உள்ள வீதியில், ஊர் மக்கள் நடமாடும் பகுதியிலேயே மிகவும் துணிச்சலாக மேற்கொள்ளப்பட்டது. இப்படி செய்து விட்டு, செல்கிறார்கள் இவர்களைச் சும்மா விடக்கூடாது என்று பலர் பேசிக் கொள்வதும் ஆத்திரமடைவதும், ஊர்பெரியவர்களும் பிரசைகள் குழுவினரும் அமைதிப் படுத்தியுமே வந்தனர்.

1989.03.25 இல் சம்மாந்துறையில் மிகப் பயங்கரமான நினைத்தும் பார்க்க முடியாத மற்றுமோர் சம்பவம் நிகழ்கின்றது. சம்மாந்துறை அலிவன்னியார் பிரதான வீதியில் ஊரின் மத்திய இடத்திலே நின்று கொண்டிருந்த எம்.ஏ. முஸ்ராக் அலி என்பவரும் அவரோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிக் கொண்டு நின்ற எம்.ஏ.எம்.யாசீன் பி.ஏ. சீ.எம்.எம்.பழில் ஆகியோரும் சுடப்பட்டனர். இதில் சம்மாந்துறை எம்.பி.ஜனாப். எம்.ஏ.அப்துல் மஜீன் இளைய சகோதரர் எம்.ஏ.முஸ்ராக் அலி என்பவரும் பட்டதாரி இளைஞர் யாசீனும் ஸ்தலத்திலேயே இறந்தனர். ஆனால் பழீல் மிகவுமே காயத்துக்குள்ளாகி இன்னும் நடைப்பிணமாகி வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இதனையும் அதே ஜீவா, அசோகன் என்பவர்களே மேற்கொண்டனர். இவர்கள் இருவரும் எறத்தாழ ஒரு மைல் தூரம் முஸ்லீம்கள் வாழும் பகுதிக்குள்ளாலே தமது ஆயுதத்துடன் ஓடிச் சென்றதும் குறிப்பிடத்தக்கது.

இந்த முஸ்ராக் அலி அம்பாறை இலங்கை வங்கிக் கிளையில் மிக நீண்டகாலமாக வேலை செய்தவர். மிகச் சிறந்த விளையாட்டு வீரர். இலங்கையில் புகழ்பெற்ற பல பாடசாலைகளில் கல்வி கற்றவர். பல்வேறு விதமான வர்களுடனும் சமயத்தலைவர்களுடனும் நண்பராக இருந்தவர். இந்த வகையில் அம்பாறையில் இருந்த இராணுவத் தளபதி ஒருவர் இவரது நல்ல நண்பர். அந்த நட்பின்காரணமாக இவர் அங்கு சென்று வருவது வழக்கம். அவர், இவரது வீட்டுக்கும் வந்து செல்வார். இது போன்ற பல நூற்றுக்கணக்கானவர்கள் இவரது வீட்டுக்கு வந்து செல்வது வழக்கம். இவரது குடும்பமான நீர்ப்பாய்ச்சு வன்னியார் குடும்பம், சம்மாந்துறையில் பல வழிகளிலும் பிரபல்யமான குடும்பம்என்பது பலருக்கும் தெரியும். அப்படிப்பட்ட குடும்பத்தில் உள்ளவர் ஓர் இராணுவ அதிகாரியை நண்பராகக் கொண்டிருந்தமையால் இந்த வீரமுனை தமிழ் இயக்கத்தினரால் சந்தேகிக்கப்பட்டார். அவர் காட்டிக் கொடுக்கின்றவர், தண்டிக்கப்பட வேண்டியவர் என்றெல்லாம் பேசிக் கொண்டனர். அவர் அப்படிப்பட்டவர் அல்ல என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்; விளக்கப்பட்டதும் கூட.

வீரமுனை மக்களுக்கு எவ்வளவோ உதவி செய்தவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.அப்துல் மஜீத், சம்மாந்துறைப் பட்டினசபையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவரும், கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைவருமான எம்.ஏ.அமீரலி, சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் அதிபராகவும், கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைவருமான எம்.ஏ.முகம்மதலி ஆகியோரின் சகோதரரான எம்.ஏ.முஸ்ராக் அலியைக் கூட இவர்கள் விட்டுவைச்ச வில்லையே. இனி சாதாரண பொதுமகன் என்ன? என்றெல்லாம் மக்கள் ஆத்திரம் கொண்டிருந்தனர். இந்த நிலையில் அவர்களது குடும்பத்தினர், எங்களது குடும்பத்தவர் இறந்தாலும் பரவாயில்லை எங்களால் இந்த ஊர் மக்கள் இரண்டுபட வேண்டாம் நீங்கள்சமாதானமாயிருங்கள் என்று கூறி பல்லாயிரக் கணக்கான இளைஞர்களையும் அவர்களது உணர்ச்சி, உத்வேகத்தையும் ஒற்றுமைக்காகப் பொறுத்துக் கொள்ளப்பட்டவையே. இவருடன் சுடப்பட்டஎம்.ஏ.எம். யாசீன் ஒரு பல்கலைக்கழகப் பட்டதாரி. கிராம சேவையாளரும் ஆவார். இளைஞர்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குள்ள ஒருவர். அவரது குடும்பமும் மிகக் கூடிய சனத்தையும் சகோதரர்கள் பலரையும் கொண்டது. அவர்களது ஆத்திரமும் தணிக்கப்பட்டது. இக்காலத்தில் குடியிருந்த ஐ.பி.கே.எப்.யினர் இச்சம்பவங்களில் முழுக்க முழுக்க தமிழர்களுக்கு சாதகமாகவே நடந்து கொண்டார்கள். அது முஸ்லிம் மக்களுக்கு அச்சத்தையும் தமிழ் மக்களுக்கு மேலும், மேலும் தைரியத்தையும் வழங்கியது. இந்த நிலைமை வேறு ஒருபுறம் இன ஒற்றுமையில் பெரிய இடைவெளியை ஏற்படுத்தி வந்தமையை யாவரும் உணர வேண்டும்.

இதேகாலப் பகுதியில் நடைமுறைக்கு வந்த மற்றொரு தன்மையையும் சுட்டிக் காட்ட வேண்டும் அதாவது ஆண்டாண்டு காலமாக தமிழ் - முஸ்லீம் மக்களிடையே பரஸ்பரம் புரிந்து கொள்ளல், விட்டுக் கொடுத்தல், முதலியவை நன்கு நிலைப்பட்டு வந்துள்ளன. ஆனால், இந்த துப்பாக்கி மனிதர்கள் தலை தூக்கிய பின்னர் முஸ்லிம்களை இழிவாக வெளிப்படையாகவே "காக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்" என அழைப்பதும், முஸ்லீம் பெண்களிடம் வீதியில் சேட்டை செய்வதும் ஆரம்பத்தில் ஏற்பட்டது. பின்னர், குறிப்பாக ஐ.பி.கே.எப்.வந்த பிறகு மத விடயங்களில் தலையீடுகள் இடம் பெற்றன. அதில் முக்கியமானது கோயில் திருவிழாக் காலங்களில் ஒலி பெருக்கியால் பாடல்களை ஒலி பரப்புகையில் கையாளப்பட்ட இடுவம்பத்தனமாகும். வழமையாக பள்ளிவாசல் பாங்கொலிக்கும் நேரத்தில் பாடல்கள் ஒலி பரப்பப்படுவதில்லை. ஆனால், துப்பாக்கி மனிதர்கள் வந்த பின் குறிப்பாக சம்மாந்துறை பத்திரகாளியம்மாள் ஆலயத்தில் இது மீறப்பட்டது. மாத்திரமல்லாமல் அதி உச்சஸ்தாயியிலே மட்டரகமான சினிமாப் பாடல்களெல்லாம் ஒலிபரப்பப்பட்டன. அதனால் அண்மையில் உள்ள பள்ளிவாசல்களில் தொழுபவர்களின் மத உணர்வில் இச்சம்பவம் ஆழமான காயத்தை ஏற்படுத்தியது. இதனை அவதானித்த சம்மாந்துறை பட்டினசபையில் வேலை செய்த பாக்கியராஜா முதலியோர் முயற்சித்தும் பலன் கிடைக்கவில்லை. இச்சம்பவமும், முஸ்லிம்களிடையே இன ஒதுக்கல் ஊடுருவலை ஏற்படுத்திற்று.

*1989.04.03* ஆம் திகதி ஏ.எல்.ஜலால்தீன் கடத்திச் செல்லப்பட்டு வீரமுனைக்கு அண்மையில் உள்ள நெல்லுக்காடு என்ற வட்டையில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்தார். பல நாட்களுக்கு பின்பு அது கண்டுபிடிக்கப்பட்டு அவரது எலும்புகள் வைத்தியசாலையில் வைக்கப்பட்டன. இவர், பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவன். ஏன் கடத்தப் பட்டார் என்று விசாரித்தபோது ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கினாராம், அதுவும் இயக்கக்காரர்களிடம் வாங்கினாராம், அதன் பணக் கொடுப்பனவு முடியவில்லையாம், அதனால் கடத்தப்பட்டாராம் இவ்வாறு கூறப்பட்டால் எப்படியான மக்களுக்கும் ஆத்திரமும் அவசரமும் ஏற்படத்தானே செய்யும். இது மட்டுமல்ல இந்த மாணவன் ஏதோ ஓர் இயக்கத்துடன் தொடர்பாயிருந்து விட்டு விட்டான்என்றும் கூறப்பட்டது. இத்தனைக்கும் அவன் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்தவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான தொடர்ச்சியான கொலை நிகழ்வுகளுக்கு மத்தியிலே இரவு நேரங்களிலே இயக்க இளைஞர்கள் பலர் துப்பாக்கியுடன் சென்று வீடுகளைத் தட்டி, அரட்டி பல்வேறு கொடுமைகளும் செய்து நகைகள், பணம் போன்றவற்றைச் கொள்ளையிட்டுச் சென்றனர். பல வீடுகளில் 30-40 பவுன்கள் நகையும் பணமும் உடு புடவைகளும் கொள்ளையிடப்பட்டன. இவைகளை விரிவஞ்சி நாம் இங்கு குறிப்பிடவில்லை. பின் இணைப்பில் கொள்ளையிடப்பட்ட பட்டியல்களில் கண்டு தெளியலாம். இந்தச் செயல்கள் ஒவ்வொரு நிமிடமும் முஸ்லிம் மக்களது ஆத்திரத்தை அதிகரிக்கச் செய்தது. திட்டமிடப்பட்ட முறையில் முஸ்லிம்களது சமூக அமைப்புத் தொகையையும் பொருளாதார இழப்பையும் தமது இயக்க ஆயுதங்களைக் கொண்டு இந்தக் துப்பாக்கி மனிதர்கள் அராஜகம் செய்தனர்.

இந்தக் கொள்ளைகளையிட்டு இந்திய இராணுவத்திடம் முறையிட்டால் அது புலிப்படையினர் வேலை, அவர்களைப் பிடித்துத்தாருங்கள் என்று கூறுவார்கள். அவர்களது ஆயுத பலம் என்ன? அடாவடித்தனம் என்ன? முஸ்லிம் மக்கள் எவ்வாறு பிடிப்பது, என்று சில வேளை கேட்டால், பிடிக்கத்தானே வேண்டும் என்று முஸ்லிம்களை கட்டாயப்படுத்தினார்கள். என்ன? இவர்கள் தான் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுகின்றவர்கள். இவற்றைத் தடுப்பதற்கு யாது செய்தார்கள்? மாறாக முஸ்லிம்களை பகடைககாய்களாக எண்ணி இயக்க இளைஞர்களும், இந்தியப்படையினரும் காய் நகர்த்திச் செல்கின்றார்கள். போதாக் குறைக்கு நடந்த சான்று விபரங்களையெல்லாம் முற்றாக மறைத்து விட்டு வெறுமனே, யாழ் பல்கலைக்கழக மனித உரிமை ஆணைக்குழு என்று அறிக்கை வெளியிட்டு, தமிழர்களுக்கு மட்டும் தான் மனித உரிமை. என்று காட்ட முன்வந்தது போல் தெரிகிறது எத்துணை சுதந்திரமாமக - யதார்த்தமாக- ஆழமாக ஆய்வு செய்யப்பட வேண்டிய விடயங்களை வெறுமனே நாவல்களின் கதை மாந்தர்போல் சாட்சியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றைக் கற்பனைபண்ணிக் கொண்டோ என்னவோ பூசி மெழுகிய ஒரு பக்க அறிக்கை வெளியிடும் இத்தகைய ஆணைக்குழுக்களும் மனித நியாய உரிமைகளுக்கு அப்பால் செயற்பட்டு விட்டதே என்று இன்று முஸ்லிம்கள் மிகவும் துயர் கொண்டுள்ளார்கள்.

மேலும் கொள்ளையிடப்பட்ட வீட்டார்கள் தமது வீட்டுக்கு கொள்ளையிட வந்தவர்கள் தமக்கு அண்மையில் வாழும் கிராமத்து இளைஞர்கள் தான் என்று கூறினார்கள். இதனால், மக்கள் மனம் வெதும்பிய நிலையில் காணப்பட்டனர். இப்படியான பெரும் கஷ்டங்கள் வரும் வேளைகளில் பள்ளிவாயல்களில் ஒன்று கூடி இறைவனிடம் அழுது பிராத்த்திப்பார்கள். முஸ்லிம்களின் சமய நம்பிக்கை மிகவும் ஆழமும் தூாய்மையும் வாய்ந்தது. அது வரலாற்று ரீதியாக முஸ்லிம்களை வாழ வைத்திருக்கின்றது. அவர்கள் ஆண்டவனின்றி அணுவும் அசையாது என்பதில்அசையாத உறுதி பூண்டவர்கள். ஆகவே, இந்த துப்பாக்கி அராஜகம் ஆட்சி செய்து அச்சமடைந்த உள்ளங்கள் எல்லாம் தமது வெறுமைக் கரங்களை ஏந்தி எல்லோருக்கும் பாதுகாபபளிக்கும் இறைவனின் ஆதரவைத் தேடுவதன்றி முஸ்மிலம்களுக்கு வேறு எதுவுமே செய்ய முடியாதிருந்தது.

*1989.05.04* இல் மற்றோர் அதிசயமான யாருமே எதிர்பார்த்திராத வளச்சியையும் இளைய பரம் பரையையும் கொல்ல எண்ணும் மனித மிருகங்களினால் இன்னுமோர் சம்பவம் நிகழ்கின்றது. எ.எம்.நஜீப். எம்.எம்.பாயிஸ் என்ற இரு பாடசாலை மாணவர்களும் ஏ.எல்.ஜௌபர் என்னும் வான் சாரதியும் சம்மாந்துறையின் ஆண்டிட சந்திக்கு அப்பால் வைத்து பிரதான வீதியில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அப்போது நோன்பு காலம். பாடசாலை வீவு வழங்கப்படுவது வழக்கம். அவ்வாண்டு மார்ச் மாதம் க.பொ.த. (சாதாரணதர)ப் பரீட்சைப் பெறுபேறுகள் வந்து அதில் சித்தியடைந்த மாணவர்கள் - இவர்கள் அணைவரும் கலை ஆர்வம் கொண்டவர்கள். ஒன்றிணைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் ஒரு வீடியோ நாடகம் தயாரிக்க திட்டமிட்டனர். இந்நாடகத்தை தயாரித்து நோன்புப் பெருநாளைக்கு வெளியிட எண்ணியிருந்தனர். இது, இன ஒற்றுமையை பிரதிபலலக்கும் ஒரு சமூக நாடகமும் கூட. இதற்கென, அண்மையில் உள்ள வயல்வெளிகள் மலைப்பகுதிகள்,வீதிகள் போன்ற இடங்களில் படம் பிடிக்கத் திட்டமிட்டனர். அதன் படி படப்பிடிப்பும் இந்தப் பாடசாலை லீவு காலத்தில் இடம் பெற்றது. இத்தனைக்கும் படப்பிடிப்பாளர் காரைதீவைச் சேர்ந்த தமிழ் சகோதரர் ஒருவர். அத்தனை சுதந்திரமான யதார்த்தபூர்வமான உறவு எங்களுக்குள் இன்னும் இருந்து வருகின்றது என்பதை இது தெளிவுபடுத்துகின்றது.

குறிப்பிட்ட தினம் *(4.5.89)* இவர்கள் அனைவரும் ஒரு வேன், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் போன்றவற்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, அண்மையில் உள்ள வெட்டுக் காட்டு மலைப் பகுதியில் தமது நாடகத்தின் இறுதிக் கட்டத்தினை படம் பிடிக்கச் சென்றனர். படம் பிடித்து விட்டுத் திரும்புபோது நேரம் பி.ப.6.30 மணி. இவர்களை பல துப்பாக்கிக்காரர்கள் திடீரென வழி மறித்தார்கள். படப்பிடிப்பாளர் (தமிழர்) தவிர ஏனையோர் சுட்டும் வெட்டியும் அடித்தும் அநியாயம் செய்யப்பட்டனர். அப்போது உங்களுக்கும் இயக்கமா? 'பயிற்சியா?' என்று கேட்டுக் கேட்டு இந்தக் கலைஞர்களை வதை செய்தனர். அவ்வேளை அவர்களில் பலர் குடிவெறியில் இருந்ததாகவும் அன்று உயிர் தப்பிய சில மாணவர்கள் பின்னர் கூறினர். என்னவென பார்த்தால் இந்த மாணவர்கள் படம் பிடித்த செயல் அவர்கள் இயக்கப் பயிற்சி பெறுவதாகவும் அவர்கள் நாளை ஒரு நாள் நம்மைத்தான் எதிர்ப்பார்கள் என்றும் கற்பனை செய்யப்பட்டு அவர்கள் கொலைசெய்யப்படவேண்டும் என்று மதுவருந்திய இயக்க இளைஞர்களால் வழி மறிக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டனர். இந்த நிகழ்ச்சிக்கு இன்னும் சாட்சியாக அதன் தன்மையை கண்ணால் கண்ட படப்பிடிப்பாளர் காரைதீவு பிரியாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடியோ உரிமையாளர் கோபால் என்னும் தமிழ் மகன் சாட்சியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

இந்த அநியாயமான- திட்டமிட்டு முஸ்லீம் இளம் சந்ததியினரை கொன்றொழிக்கும் படுபாதகச் செயலைக் கண்டு பல்லாயிரக்கணக்கான மாணவர்களும் இளைஞர்களும் வீராவேசத்துடன் கொதித்தெழுந்தார்கள். இனிமேலும் பொறுக்க முடியாது; இவர்களின் அடாவடித்தனங்கள் நிறுத்தப்படவேண்டும்; அதற்கு நாம் பதிலடி கொடுத்தாகவேண்டும் என்றெல்லாம் வீதிகளிலும் பள்ளிகளிலும் ஒன்று கூடிக் கொந்தளித்தபோது, சம்மாந்துறை சமாதானசபை, ஹசரத் முதலியோர் பொறுமை கொள்ளுமாறு பல போதனைகள் செய்ததை இன்றும் சம்மாந்துறை முஸ்லீம் மக்களின் நெஞ்சங்களை விட்டும் அகலவில்லை. இவ்வாறு ஊர்க்கட்டுப்பாடு, பொறுமை, போதனைகளுக்கு கட்டுப்படுவது எல்லாம் சம்மாந்துறை மக்களின் இயல்பான பண்பு என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

சிலரது கொலைகளுக்கு கொலைஞர்கள், மிகச் சிறு காரணங்களையாவது காட்டுகின்றார்கள். ஆனால், இந்த இளம் மாணவர்களின் கொலைக்கு என்ன காரணம் சொல்லப் போகின்றார்கள்? முஸ்லிம்களின் எழுச்சியை அல்லது முஸ்லிம்களின்மீதான வெறியினை தீர்த்துத் தள்ளுவதற்காக கொல்லுகின்றோம் என்பது தவிர்ந்த எந்த நியாயமான காரணத்தை அவர்களால் காட்ட முடியும்? மனித உரிமை ஆணைக்குழு என்ற பெயரில் ஆய்வு செய்யும் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு நியாயமான மனித அடிப்படை உரிமைகள் பற்றிய தத்துவ மீறல் எத்தகைய நியாயமின்றி இழக்கப்பட்டது என்பது புரிய வில்லை; புரியாது; புரிவதற்கு முயற்சிக்கவும் இல்லை. இவை இல்லாமலே ஒருதலைபட்சமாக நின்று அத்தகைய ஆய்வொன்றை செய்து உலகத்துக்கு படுபயங்கரமான பார்வையொன்றை அபாண்டமாக காட்டி விட்டு நிற்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறப்பட்ட மாணவர் படுகொலையானது முஸ்லிம்களை முற்றாக அழித்தொழிக்கும் செயல் என்றெல்லாம் பேசப்பட்டது. மக்ளை மக்கள் அமைதிப் படுத்தினார்கள். பெண்கள் பலர் இனிமேல் நாம் இந்த ஊரில் குடியிருக்க முடியாது என்று ஒப்பாரிசெய்தார்கள். அழுபவர்களும், ஆத்திரப்படுபவர்களும், அமைதியாகத் தமது ஆத்திரத்தை அடக்கிக் கொள்பவர்களுமாக சம்மாந்துறை மக்கள் மரண ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இவர்களது செயல்கள் யாவும் அங்கொன்றும், இங்கொன்றுமாக சம்மாந்துறையின் அதி உயர் குடும்பம் முதல், அடிமட்ட குடும்பம் வரை நடைபெற்று வந்தது. எப்படியாவது, எந்தவகையிலாவது ஒவ்வொரு குடும்பமும் இந்த இயக்கம் என்ற போர்வையில் தாக்கப்பட்டிருந்தமை பிற்கால நிகழ்வுகளுக்கு ஒரு முக்கிய காரணமாகும். கூட்டு மொத்தமாகச் சொன்னால், சம்மாந்துறை முஸ்லிம்களில் மிகக் கூடியளவான குடும்பங்களில் ஒருவராது இத்தகைய தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளனர் என்பதை மனங் கொள்ள வேண்டும்.

* * *

---

# சம்மாந்துறை: சான்றுகள் சில.*

**வரலாற்று ஆதாரம்:**

* 'சம்மாந்துறை'
  - ஏ.எல் ஏம். யாசீன் - ஆசிரியர் "வெண்முத்து" அல்மர் ஜான் வித்தியாலய வெள்ளி விழா மலர்.

* **சம்மாந்துறையின் புராதனச் சரித்திரச் சான்றுகள் சில ...**
  - ஏ. ஆர். முஹம்மதலி. தலைவர் கி.பி.போ. சபை.
  - யூ. எல். எம். முகைதீன் ஜே.பி.யு.எம். சட்டத்தரணி.

**'அமீரலி பொது நூலகத் திறப்பு விழா மலர்'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# சம்மாந்துறைக் கலவரம்

முன்னர் குறிப்பிட்ட சம்பவம் நடைபெற்று சரியாக பத்து நாட்களின்பின், மிகவும் முக்கியமானதும் சம்மாந்துறையை முற்றாக அழிக்க திட்டமிட்டதுமான கொடூரமான சம்பவங்களில் தொடக்க நாளாகும். 1989.05.14 ஆந் திகதி நெய்னாகாட்டு வயல் வெளியில், உழவு வேலை செய்து கொண்டிருந்த ஓர் உழவு இயந்திரம், மிகவும் சன நடமாட்டம் மிகுந்த பகுதியில் வைத்து நான்கு துப்பாக்கி நபர்களால் பறிக்கப்பட்டது. பறித்த இயந்திரத்தை இருவர் எடுத்துச் கொண்டு சந்தன்வெளி, மல்கம்பிட்டி, அல்லிமுல்லை வீதி வழியாக காரைதீவுக்குக் கொண்டு சென்றனர். இதில், கார்த்திகேசு என்பவரும், பெரியதம்பி என்பவரும் மக்களுக்கு நன்கு பரிமச்சயமானவர்கள். இவர்களை வயல் வேலையில் நின்ற அதிகமான மக்கள் கண்டுள்ளனர். மற்ற இரு துப்பாக்கி இளைஞர்களும் அந்த உழவு இயந்திரச் சாரதியான பி.எம்.சலீம் என்பவரையும், வயற்காரரான எம்.ஏ.ஆதம்பாவா என்பவரையும் அழைத்துச் சென்று ஒரு வயல் வாடியில் இருந்தார்கள். இதைக் கண்ணுற்ற மக்கள், அவர்கள் உழவு இயந்திரம் ஓர் அளவு தூரம் செல்லும் வரை இவர்களைத் தடுத்து வைத்திருக்கின்றனர் என்று நம்பினர். சில வேளைகளில் இவர்கள் முதலாளியிடம் அல்லது பொலிஸிடம் அல்லது இந்திய இராணுவத்திடம் அடையாளம் காட்டிவிடுவார்கள் போலும் என்றே வைத்திருக்கின்றார்கள்; மாலையானதும் விட்டு விடுவார்கள் என்றும் நம்பினர் சலீம் என்பவரின் தகப்பன் கூட அடுத்த வயலில் உள்ள ஒரு தென்னங்காலைக்குள் நின்று கொண்டு பார்த்திருந்தார். இதற்கு முன்பும் பல உழவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திரங்கள் பறிக்கப்பட்டுள்ளன. அவற்றின் சாரதிகள் மறிக்கப்பட்டு பல மணித்தியாலங்களின் பின் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதே போன்றே இவர்களும் விடப்படுவார்கள் என்றே எல்லோரும் எண்ணினர்.

ஆனால், இவை யாவற்றுக்கும் மாறாக வயல்வாடிகளில் மக்கள் பார்த்திருக்கும் ஏன், பெற்ற தந்தை கூட தன்மகனை கண் இமைக்காது பார்த்துக் கொண்டிருக்கும் அந்தக் கொடிய வேளை மாலை 6.00 மணியளவில் தடுத்துவைக்கப்பட்ட இருவரும் மற்ற இரு தமிழ் ஆயுத பாணிகளினாலும் சுட்டுக் கொல்லப் பட்டனர். பின் இருவரும் நடந்தே தப்பிச் சென்றனர். சற்று துாரம் சென்ற பின் வழியில் வந்த வேறு ஓர் உழவு இயந்திரத்தை மறித்து ஏறிச் சென்றனர். இத்தனைக்கும் அவர்களிடமிருந்தது இரு.எஸ்.எல்.ஆர். துப்பாக்கிகளே. இவை மக்கள் அனைவரையும் மௌனியாக்கிவிட்டன. பொலிஸ் வந்து விளக்கம் வைத்தபின்தான் மையத்துக்கள் எடுக்கப்பட வேண்டும் என்று காத்திருந்தனர். அடுத்தநாள் 15ஆந் திகதி பொலிஸ் பகுதியில் மையத்து இருந்ததால் அவர்கள் வந்து அம்பாறை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அங்கு வைத்திய அறிக்கை பெறப்பட்டபின் மீண்டும் மாலையாகிவிட்டது. எவ்வளவு சோகமான மாலைப் பொழுது; மனித உரிமை, மனித நாகரீகம், என்பற்றுக்கு அப்பாற்பட்ட கொடிய பொழுதுகள். மாலை 6.00மணிக்குப் பின் பிரயாணம் செய்ய முடியாது. மறுநாள் (16ந் திகதி) காலை துப்பாக்கி ரவைகளால் மண்டையோடுகள் துளைக்கப்பட்ட மையத்துக்கள் ஊருக்கு கொண்டு வரப்பட்டன. மக்கள் நின்று பார்க்க முடியாத - சகிக்க முடியாத சந்தர்ப்பம்; கூடி நின்ற மக்களை ஆத்திரம் ஆக்கிரமித்தது. ஆளுக்கொன்றைக் கதைத்தனர். முஸ்லீம்கள், ஒருவர் மரணமானதும் உடனடியாக அடக்கம் செய்யவே விரும்புவர். இஸ்லாம் மார்க்கமும் அவ்வாறே கூறுகின்றது. அப்படியாவது எமது பிள்ளைகளை அடக்க முடியவில்லையே என்று பெற்றோர்கள் ஆதங்கப்பட்டனர். பெண்கள் புலம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யழுதார்கள். இப்படி மரண அடக்க நிகழ்வு நடைபெற்று முடிந்தது.

யாரிடமும் கூறாது, எந்தவித ஆர்ப்பாட்டமுமின்றி பலரும் சேர்ந்த ஆத்திரத்தால் வயல்வெளிகளில் எங்காவது தமிழர்கள் நிற்கின்றார்களா என்று தேடினார்கள். ஏன் இவர்கள் அப்பாவி முஸ்லிம்களை நாயைப்போல் சுட்டுத்தள்ள வேண்டும்? சொத்துக்களைத்தான் பறிமுதல் செய்கின்றார்கள். உயிர்களையும் கூட ஒன்றும் இரண்டுமாக பறித்துக் கொள்கின்றனரே? இவர்களுக்கு பாடம் படிப்பிக்க வேண்டும். எதுவரை பொறுப்பது? இவ்வாறு தேடுகின்றபோதுதான், கந்தன் வெளி வட்டையில் இருவர் வேலை செய்து கொண்டிருந்தனர். அதில் ஒருவர் அந்த வட்டையின் வட்டவிதானை. அன்று காலையிலேயே மேற் சொள்ளப்பட்ட அனர்த்தங்களால் ஊர் அல்லோல கல்லோலப்பட்டபோது பல தமிழ் மக்கள் தத்தம் வீடுகளுக்குத் திரும்பிச் சென்று விட்டனர். ஆனால், இவர்கள் இருவரும் திரும்பிச் செல்லவில்லை. உடன்பிறப்புக்களை இழந்து ஆத்திரத்துடன் சென்ற இளைஞர்கள் இவர்களைக் கண்டதும் அடித்துக் கொன்று விட்டனர். எப்போதும் இழப்பதற்கு எதுவுமில்லாதவன் போரிடத் தயங்குவதில்லை. அந்தப் படுபாதங்களால் கொல்லப்பட்ட இரு இளைஞர்களும் ஏழைக் கூலித் தொழிலாளர்கள் அவர்களது குடும்பம், நண்பர்கள் யாவரும் இவ்வாறானவர்களே. அவர்கள் தமது உழைப் பையே நம்பி வாழ்ந்தவர்கள். இவ்விரு இளம் உழைப் பாளிகளையும் இழந்தமை அவர்களால் தாங்க முடியாத வேதனை என்பதை நாம் உணர வேண்டும். இவையாவும் 16ந் திகதி நடைபெற்றது. அன்றிரவு முழுவதும் ஊர் மிகவும் பரபரப்பாக இருந்தது ஆத்திரப்படுபவர்களும் அவர்களை, அமைதிப்படுத்து வர்களும் அச்சம் கொள்பவர்களும் அவர்களை, தேற்றுபவர்களும் ஆறுதல் கூறுபவர்களும் அதிகமதிக மாகக் காணப்பட்டனர். துயரச் சுமைகளை சுமந்த இரவுகளாய் அந்த இரவு விடிய மறுக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்மாந்துறையில் மோதல்
50 வீடுகள் தரைமட்டம்

4000க்கு மேற்பட்டோர் அகதிகளாகினர்

சம்மாந்துறைப் பகுதியில்
2 கிராமங்கள்
தாக்கப்பட்டன

இருவர் கொலை; ஒருவர் படுகாயம்

2 கிராமங்கள்...

சம்மாந்துறையில்
மூவர் சுட்டுக்

...துறையில்
... பீதி, பதற்றம்

...துறைப் பகுதியில்
...ந்துக்குள் நிலைமையைக்
...ட்டின் கீழ் கொண்டு வருக

...வழக்கையும் பழைய சோனக ...

திருமலை ஜெட்டியில்
குண்டு; ஒருவர் கைது

பொலிஸ் ஜீப் மீது

சம்மாந்துறை மீதான தாக்குதல்களின் போது வெளியான தேசியப் பத்திரிகைச் செய்திகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் 17ஆம் திகதி வைகாசித் திங்கள் பகல் 2.00 மணி ஒரு ஜீப்பில் (இதுமாகாணசபை உறுப் பினர்களுக்கு வழங்கப்பட்ட "பஜரோ ஜீப்") இதில் இப்பகுதியில் நன்கு அறிமுகமான ஜனா என்று அழைக்கப்பட்ட ரெலோ இயக்கப் பிரமுகரும் வந்திருந் தார். சம்மாந்துறைக் கலவரத்துக்கு இவர் ஒரு பிரதானமான காரணகர்த்தா இவருடன் 13 இளைஞர்கள். அத்தனை பேரும் நவீனரக துப்பாக்கிகளை சுமந்திருந்தனர். அவர்கள் உடலைச் சுற்றிவர துப்பாக்கி ரவைகள், கிரனைட்டுக்கள். சம்மாந்துறை புளக் ஜே மேற்குப் பிரதேசத்தில் நுழைந்து ஓரிடத்தில் ஜீப்பை நிறுத்திவிட்டு அண்மையில் உள்ள வீட்டு மக்கள் அனைவரையும் மிரட்டினார்கள்; அடித் தார்கள்; உதைத்தார்கள். பெண்கள் எல்லாம் கதறிக் கதறி அழுதனர். வட்ட விதானை எங்கே? என்று கேட்டு அதட்டினர். இவர்கள் ஏதுமறியா அப்பாவிகள். அழுவதைத் தவிர இவர்களால் எதனையும் செய்யமுடிய வில்லை. சற்று நேரத்தில் துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்பட்டன. வெடிச் சத்தம் கேட்டதும் அண்டை வீட்டு மக்கள் மறுபுறம் நோக்கி ஓடத் தொடங்கினர். பள்ளிவாயல்களில் அபாய பாங்கு ஒலி எழுப்பட்டது. பத்துப் பன்னிரண்டுபேர் ஆண்களும் பெண்களுமாக சுடப்பட்டுவிட்டனர் என்ற செய்தி ஊர் முழுவதும் பரவியது. மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். சம்மாமந்துறை அல்லோல கல்லோலப் பட்டது. பிரதான வீதிகளில் மக்கள்

சற்று நிதானமாக சிந்திப்போம். ஆக, மிகப் பெரும் பான்மையாக முஸ்லிம்கள் வாழும் இவ்வூரிலே இவ்வளவு காலமும் நூற்றுக் கணக்கான உயிர்கள், கோடிக் கணக்கான உடமைகள் இழக்கப்பட்டிருந்தும் அமைதித் தவமிருந்த மக்கள்ஆத்திரத்தில் இரண்டு தமிழர்களை கொன்றதனால் எற்பட்ட அநியாயம், அக்கிரமம், அராஜகம் சொல்லும் தரமன்று. பல்கலைக்கழக மனித உரிமைக் குழுவினருக்கு இந்தச் சம்பவங்கள் எட்டவில்லை போலும். இது எத்தகைய மனித உரிமை மீறல்? எத்தகைய இன ஒதுக்கல்? எத்தகைய தமிழ் வெறிப் பேரினவாதம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ மக்கள், இளைஞர் கூட்டம் காரணமின்றி கேள்வியுமின்றி அடித்தும், வெட்டியும், சுட்டும், கடத்தியும் கொல்லப்பட்டு அழுகிய, அலங்கோலமான சடலங்களாக, இல்லை... எலும்புக் கூடுகளாக இல்லை.... சாம்பலாக தரிசிக்கப்பட்டனர். அப்போதெல்லாம் இந்த ஊர் மக்கள் பேசாமடந்தையாய் பொறுமைத் ததவம் பூண்டு அமைதி காத்தனர். எங்கோ, யாராலோ? நடைபெற்ற - ஆத்திரமிகுதியால் தற்செயலாக நிகழ்ந்த ஒரு நிகழ்வுக்கு நடு ஊருக்குள் புகுந்து அராஜக முறையில் பத்துப் பதினைந்து பேர் சுட்டுக் கொல்லப்பட வேண்மென்றால், நாம் ஏன் இருக்க வேண்டும் என்று பலர் சனக் கூட்டத்தினிடையே கூறி உணர்ச்சியைத் தூண்டினர். எப்போதோ, எங்கோ, எப்படியாவது ஒரு கொலையிலோ கொள்ளையிலோ அல்லது வழிப்பறியிலோ ஏதாவது ஒரு சம்பவத்தில் மாட்டிக் கொண்டவர்களின் உணர்வு இந்தத் துப்பாக்கி தமிழ்இனவெறி பேரினவாதிகளுக்கு எதிராக வெறுப்புணர்வை தூண்டியது. இதனால், இளைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டதுடன் அவர்கள் காட்டுமிராண்டித் தனமாக புகுந்து சம்மாந்துறையைக் குழப்பிவிட்ட இந்த சந்தர்ப்பத்தை பயன் படுத்த உணர்வு கொண்டனர். கத்தி, கோடாரி, பொல்லு போன்றவற்றுடன் தமிழ் மக்கள் வாழும் வீரமுனை, தமிழ்க்குறிச்சி போன்ற பிரதேசங்களை நோக்கி பெரும் சத்தமிட்டவாறு ஓடினர். இதே சமயம் மக்களின் உணர்ச்சியும், ஆர்ப்பாட்டமும், பாங்கொலியும் கேட்டது. அந்த இயக்க இளைஞர்கள் தமது துப்பாக்கிகளைச் சுருட்டிக் கொண்டு மக்களின் உணர்ச்சி வெள்ளத்துக்குத் தாக்குப் பிடிக்காது - ஆக்கிரமிப்பு வாதிகள் போல நின்றவர்கள் ஓட்டமெடுத்தனர். இந்த ஓட்டம் பிடித்தவர்களில் சம்மாந்துறை ரெலோ பிரமுகர்களான அசோகன், ஜீவா, பத்மன் முதலியோரும் அடங்குவர். சதி செய்து சண்டையைக் குழப்பி விட்டு இந்தச் சண்டாளர்கள் ஓடி ஒழிந்தார்கள்.

மறுபுறம், ஆத்திரமடைந்த மக்கள் ஓடிச் செல்கின்றபோது நிதானமான பின் விளைவுகளை உணரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய பெரியார்கள், இந்த மக்களை அப்போதும் தடுத்து நிறுத்தினார்கள் என்பது ஆண்டவன் அறிந்த உண்மை. சமாதானம் சொன்னார்கள்; சரித்திரம் சொன்னார்கள்; இளைஞர்கள் இவை யாவற்றையும் பொருட்படுத்தாது தம்மிடமிருந்து பலி கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கான உயிர்களையும் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுடைய உடைமைகளையும், அநியாயத்தையும் அராஜகத்தையும் உள்ளுணர்வுகளில் கொண்டவர்களாக ஒரு கூட்டத்தினர், வீரமுனைக்குச் சென்றனர். அப்போது தமிழ் மக்கள் கோயில்களில், பாடசாலைகளில் எனவே தஞ்சம் புகுந்திருந்தனர். சென்ற கூட்டத்தினர் ஒருவீடு, ஒருமாட்டுத் தொழுவம் ஒரு வைக்கோற் போர் என்பவற்றை மட்டுமே தீயிட்டு விட்டு ஆத்திர வெறி தீர்த்வர்களாக திரும்பினர். இந்த வேளையில் ஒருவரையாவது அவர்கள் அடிக்கவோ வெட்டவோ இல்லை எனபதை மனங்கொள்ள வேண்டும். மறுபக்கமாகச் சென்ற ஒரு கூட்டத்தினர் தமிழ் குறிச்சியில் வசித்துவந்த 19 குடும்பங்களின் 19 வீடுகளில் 4 வீடுகளை எரித்து விட்டனர். இதற்கிடையில் இந்நிகழ்வுகளுக்கு இன்னொரு வகையான ஆத்திரம் அடிப்படையாக அமைந்தது எனலாம். ஏனெனில், சம்மாந்துறையில் நடைபெற்ற பல்வேறு கொள்ளைகளின் பொருட்கள் தமிழ்க் குறிச்சியில் முகாமிடப்பட்டிருந்த "புளொட்" இயக்க தமிழ் குறிச்சியினரின் வீடுகளில் வைக்கப் பட்டிருந்ததாக முஸ்லிம்கள் நம்பினர். எனவேதான் அவ்வீடுகள் தாக்கப்பட்டதில் இந்தக் காரணமும் தாக்கம் செலுத்துகின்றது. அவ்வாறு தாக்கப்பட்டபோது அருகில் இருந்த சில குடிமக்களின் வீடுகளும் பாதிக்கப்பட்டன. அந்த பத்தொன்பது குடும்பத்து தமிழ் சகோதரர்களும் சல்மான் ரீ.ஏ அல்லிலெவ்வை மனேஜர், சுல்தார் போன்றவர்களின் அனுசரணையில் கலகக் காரர்களின் கண்ணில் படாதவாறு மறைத்து வைத்துப் பாதுகாக்கப்பட்டனர். சற்று ஆழமாக சிந்தித்தால் இந்த இன உறவு மிகத் தெளிவாகத் தெரியும். ஆத்திரம் வரலாறு கண்ட இரத்தத்தால் நனைந்த முஸ்லிம் இளைஞர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல்கள் பாடமாக இருந்தும் தமிழ்சகோதரர்களை இந்த சம்மாந்துறையினர் மிகக் காத்திரமாக காப் பாற்றியுள்ளனர். இதற்கு அந்த தமிழ் சகோதர்களே சாட்சி. அவர்கள் இதனை என்றும் நன்றி பாராட்டுவார்கள். இந்த சூழ்நிலையை - மனநிலையை புரிந்து ஆய்வுகள் மேற்கொள்ளாது அநியாயப் பழி சுமத்தும் யாழ் பல்கலைக்ழக மனித உரிமை ஆணைக்குழு எத்தகைய ஓர் இனவாத தூண்டிலுக்குள் மாட்டப்பட்டதுவோ யாமறியோம். இது பேரறிவு கொண்ட பல்கலைக்கழக புத்திஜீவிகளின் பார்வைக்கு பொருத்தமானதல்ல. அதுமட்டுமல்ல சுதந்திரமாக ஜீரணிக்க முடியாததும் கூட.

அன்றைய தினம் மக்கள் உணர்ச்சி வெள்ளம் கரை புரண்டோடியது. எத்தனையோ பெரியார்கள் தடுத்தனர். முடியவில்லை. மிகவும் அதிகாரம் குறைந்த நிலையில் காணப்பட்ட இலங்கை பொலிஸ் படையினர் வெகுண்டு வெளியேறினர். ஆனால், சனக் கூட்டத்தையும் அவர்கள் உணர்ச்சிப் பிரவாகத்தையும் கண்டதும் திகைத்து நின்றனர். இந்திய இராணுவத்தினரும் கூட ஏனோ தமது நிலையங்களிலேயே இருந்துவிட்டனர். இத்தனைக்கும் மேலாக நாளாந்தம் துப்பாக்கிகளுடன் நடமாடிய வீரமுனை இயக்கக்காரர்கள் அல்லது முன்பு இங்கு பலமுறை பெயர் குறிப்பிட்டப்பட்டவர்களும் கூட ஓட்டம் பிடித்து விட்டனர். இவையாவும் ஒரு சில நிமிடங்கள்என்று தான் கூறவேண்டும்.

பின் மாலை 5.00 மணியளவில் மக்கள் அமைதியடைந்தனர். ஆக, இதற்கிடையில் எந்தவித கொலைகளும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டியது. அதன் பின்புதான் இந்திய இராணுவத்துருப்புக்கள் அதிகமாகவும் கவச வாகனங்களும் பீரங்கி வண்டிகளும் சம்மாந்துறையை நோக்கி நகர்த்தப்பட்டன. மீண்டும் மக்கள் அச்சத்தில் பீடிக்கப்பட்டனர். பெண்களும், யாதுமறியாக் குழந்தைகளும் அழுதனர். ஊரின் சுற்றுப்புறங்களில் உள்ள மக்கள் அனைவரும் உள் ஊர் வீடுகளுக்குப் பாதுகாப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறங்கச் சென்றனர். பள்ளிவாயல்கள், பாடசாலைகளில் தஞ்சம் புகுந்தனர். சம்மாந்துறையின் வரலாற்றில் எழுதப்படும் புதிய அத்தியாயங்கள் இவை. கொலைகளையும் கொள்ளையும் அனுபவித்த மக்கள் இன்று அகதிகளாகின்றனர்.

இந்திய இராணுவம், இலங்கைப் பொலிஸ் படையினரை அவர்களது நிலையத்தை விட்டு வெளியேற விடாது தடுத்தனர். மாலையாகி விட்டது. சொறிக்கல்முனை, சவளக்கடை, நாவிதன்வெளி,மண்டூர் பாதையில் நூற்றுக்கணக்கான வாகனங்கள் வீரமுனையை நோக்கி கொண்டு வரப்பட்டன. இந்திய இராணுவம் மற்ற எப்பகுதியிலும் மக்களை வெளியேற விடாது தடுத்து வந்தனர். யுத்த வாகனங்கள் வீதிகளில் காவல் புரிந்தன. இரு நாடுகளுக்கிடையிலான எல்லைப் போர்களில் நிறுத்தப்படுவது போன்று இங்கும் அந்த வாகனங்கள் மக்களின் பீதிக்கு காலாய் நின்று வீதிகளில் பேரிரைச்சலுடன் வலம் வந்து கொண்டிருந்தன. இத்தனைக்கும் மத்தியில் வீரமுனையில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் துப்பாக்கிகளுடன் வந்து இறங்குகின்றார்கள் என்ற . செய்தியும் பரவுகின்றது. முஸ்லிம் மக்கள் பதறித் துடிக்கின்றார்கள். செய்வதறியாது திகைத்து நின்றனர். இந்திய இராணுவம் எல்லா இடங்களிலும் நிறுத்தப்பட்டிருந்தது.

மீண்டும் ஒரு செய்தி. இரவு 8.00 மணியளவில் வந்தது. அது - 5ஆம், 4ஆம் குறிச்சி வீரமுனைப் பகுதிகளில் முஸ்லிம்களின் வீடுகள் உடைக்கப்பட்டு, பொருட்கள் வாகனங்களில் எற்றப்பட்டு சொறிக் கல்முனை வீதியால் கொண்டு செல்லப்பட்டன. அப்போது அப்பகுதி மக்கள் பாடசாலை, பள்ளி வாசல்களில் தஞ்சமாகி இருந்தனர். அவர்களின் காதுகளுக்கு இச்செய்தி எட்ட அவர்கள் ஒலமிட்டழுதனர். எங்கள் வீடுகள், எங்கள் பொருட்கள் என்ற எண்ணத்தில் அழுதனர். அப்படியானபோதும் சில ஆண்கள் அப்பிரதேசத்துக்குச் செல்லத் துடித்தனர். அவர்களை வேறு மக்கள் தடுத்து நிறுத்தினர். எப்படியோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு கழிந்திட வேண்டும் இறைவா என்று மக்கள் எண்ணிக் கொண்டிருக்கும்போது, வீரமுனை கோயில் ஒலிபெருக்கி ஓர் அறிவித்தல் கொடுத்தது. "தொண்டர்கள் அனைவரும் தத்தம் துவிச்சக்கர" வண்டிகளுடன் கண்ணகியம்மன் கோயிலுக்கு வரவும்" இதைக் கேட்டதும் மக்கள் ஆறுதல்அடைந்தனர். எல்லோரையும் அழைக்கின்றார்கள் இனிமேல் கொள்ளையும நிறுத்தப்பட்டு விடும் என்று எண்ணினர். மீண்டும் ஓர் அறிவித்தல் "மக்கள் எல்லோரும் கோயிலுக்குள் வரவும்" என்று அறிவிக்கப்பட்டது. மீண்டும் அமைதி நிலவியது.

நேரம் இரவு *12.20* மணி துப்பாக்கி வேட்டுக்கள தீர்த்துக் கொட்டப்பட்டன. மோட்டார்க் குண்டுகள், கிரணைட்டுக்கள், வெடிக்க வைக்கப்பட்டன. எல்.எம்.ஜி. எஸ்.எல்.ஆர்., எஸ்.எம்.ஜி. சொட்கண், போன்ற துப்பாக்கி வெடிகள் மிகப் பலமமாக கேட்டன. இரவின் அமைதியைக் கிழிக்கும் சத்தங்கள் மிக அழமாக கேட்டன. ஓரளவு அமைதியடைந்திருந்த அகதிமுகாம்களுக்கும் மீண்டும் அல்லோல கல்லோலம். இன்னும் உள்ளூர் சனங்களும் சத்தத்திற்கு எதிர்த்திசையில் மேலும் முன்னேறி பாடசாலைகளில். பள்ளிவாசல்களில் தஞ்சம் அடைந்தனர். தலைகளுக்கு மேலால் குண்டுகள் ஒளிக் கீற்றுக்களாய் பாய்ந்து சென்றன. இறைவனே கதி என்று மக்கள் ஓடி ஓடி ஒழிகின்றனர். சம்மாந்துறையே அகதியானது.

. உறங்கிய சிறுவர்களும் விழித்து அழுதனர். ஒரே சத்தம். ஓயாத சத்தம். அப்போது ஒரு செய்தி வந்தது. சம்மாந்துறை 6ஆம் குறுக்குத் தெருவில் ஒரு கோஷ்டியும், 5ம் குறுக்குத் தெருவில் ஒரு கோஷ்டியும், பள்ளித் தெருவில் ஒரு கோஷ்டியும், மற்றொரு கோஷ்டியுமாக சுட்டுக் கொண்டு வருகின்றார்கள். வீட்டுக் கதவுகள் துப்பாக்கிகளால் உடைக்கப்படுகின்றன. பொருட்களை உழவு இயந்திரம், லொறி போன்றவற்றில் முக்கியமான பொருட்களைத் தூக்கிப் போடுகின்றார்கள். அதன் பின் பெற்றோல் ஊற்றி தீ வைக்கின்றார்கள். இதில் பலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீருடையற்ற இந்தியப் படையினர் என்று கூட செய்து உலவியது. கொள்ளையிடப்பட்ட பொருட்களில் கணிசமான பங்கு அவர்களுக்கும் கொடுக்கப்பட்டதாக பின்னர் கேள்விப்பட்டோம். தீப்பிழம்புகள் மேலே தெரிய, அகதி முகாம்களில் இருந்து பார்க்கின்றபோது சம்மாந்துறை முழுவதும் பற்றிக் கொண்டதுபோல் தெரிந்தது. பெண்களும் பிள்ளைகளும் இறைவா எங்களைக் காப்பாற்று என்று சத்தமிட்டு அழுதனர். பெரியார்கள் தொழுகையில் ஈடுபட்டனர். வயோதிபர்கள் அழுது பிரார்த்தித்தனர். இப்படியான இந்த வேளையில் இயற்கையின் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. வானில் எந்தவித இருட்டும் இல்லாதிருந்த வேளை இரண்டு மின்னல் கீற்றுக்கள் வானில் பளிச்சிட்டன. இடி இடித்தது. சோவென மழை பொழிந்தது. மக்கள் முகாம்களில் இருந்து வெளியேறி மழையில் ஓடி நனைந்தனர் ஆண்டவன் காப்பான் என்று ஆனந்த மிகுதியால் கூச்சலிட்டனர். சோகமாக காணப்பட்ட முகாம்களில் சந்தோஷ ரேகைகள் படரத் தொடங்கின.

நேரம் *1.20* மீண்டும் கோயில் ஒலி பெருக்கி - "தொண்டவர்கள் அனைவரும் தங்கள் துவிச்சக் கரவண்டியுடன் கோயிலுக்கு வரவும்" என்று கட்டளையிட்டது. வெடிச் சத்தங்கள் நிறுத்தப்பட்டன. மக்கள் மனங்களும் சாந்தியடைந்தது. இந்த நிகழ்வுகளை சற்று திரும்பிப் பாருங்கள். இந்தச் சம்பவங்கள் அனைத்தும் வீரமுனையின் சகல மக்களாலும் வெகு கச்சிதமாக திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டன என்பது நிரூபணமாகியது. மத ஆசாரர்கள், சமாதான விரும்பிகள். ஊர்த் தலைவர்கள் தலையிட்டிருந்தால் இத்தகைய ஒலிபெருக்கி அறிவித்தல்கள் விடப்படுமா? ஊர்மக்கள் ஒத்து நின்றிருப்பார்களா? ஆகவே, இந்த சம்பவம் அத்தனைக்கும் வீரமுனை எல்லா மக்களுமே முழுப் பொறுப்பாளிகள் ஆவர். இதில் இருந்து யாரும் தப்பித்துக் கொள்ளவே முடியாது. சம்மாந்துறையின் பெரியார்கள் பல உயிர்களை இழந்தும் சமாதானம் பேசினார்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமை செய்தார்கள்; தங்கள் இல்லங்களில் வைத்து தமிழ் சகோதரர்களைப் பாதுகாத்தார்கள். இவை அனைத்தையும் மறந்து வேண்டுமென்றே திட்டமிட்டு சதி செய்து சம்மாந்துறையை எரிக்க வேண்டும்; பொருட்களைக் கொள்ளையிட வேண்டும் என்ற கனவினை வீரமுனை மக்கள் இந்திய படையினரின் துணையோடு வெகு கச்சிதமாக திட்டமிட்டு, ஒத்து நின்று செயற்பட்டு, சாதனை படைத்த வரலாறு மறக்க முடியாதுள்ளது; நெஞ்சுக்குள் நீங்காத வேதனை தருகின்றது. தமிழர்களின் நன்றியுணர்வுப் பண்பாட்டை இனவாதத் தீ பொசுக்கி விட்டது. துப்பாக்கிக் கோல் தூக்கியெறிந்து விட்டது. மக்கள் உறவுகளை மறந்து ஆயுதங்களை நண்பர்களாக்கிக் கொண்டனர். இந்தத் திட்டமிடப்பட்டு வெகு கச்சிதமாக நடந்த நிகழ்வுகளையெல்லாம் மூடி மறைத்து வெறும் சாதகப் பெறுமானங்களை மட்டும் தந்து வரலாற்றை எழுத முனைந்த யாழ் பல்கலைக்கழக மனித உரிமை ஆணைக்குழுவின் பொறுப்பற்ற அறிக்கையை எண்ணி வருந்துகின்றோம்.

இந்த நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது சம்மாந்துறையின் பல வீடுகள் பலவாறாகச் செயற்பட்டன. இந்த இக்கட்டான சூழ்நிலையில் தனது வீட்டுக்குள் இருந்து கொண்டே சட்டத்தரணி யூ.எல்.எம்.முகையதீன் தனது தொலைபேசியை இந்தியப் படைத்தலைவர், பிரிகேடியர் மாரிஸ் என்பவர்களுக்கு எடுத்து இதோ சம்மாந்துறையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியை காதால் கேளுங்கள் என்று தனது ரிசீவரை யன்னலுக்கு வெளியே பிடித்தார். அந்த அதிகாரி, "தனக்கு விளங்குகின்றது. நான் உடனே எனது படையினருக்கு கட்டளையிடுகின்றேன்" என்றார். அதேபோல வேறுபல இந்தியப்படை அதிகாரிகளுக்கும் அறிவித்தார். மீண்டும் இலங்கைப் படைத்தளபதிகளான அம்பாறை இராணுவத் தளபதி திரு.தலுவத்தை, பொலிஸ் அத்தியட்சகர் போன்றோருக்கும் தொலைபேசியை எடுத்து சத்தத்தையும் காட்டி விடயத்தையும் கூறினார். அவர்கள், "எங்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI



ஒன்றுமே செய்ய முடியாது இந்தியப்படையுடனே தொடர்பு கொள்ளுங்கள். என்று கூறி விடுகின்றனர். இதேபோல அரசியல் அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களுக்கும் முடியுமானவாறு தொலைபேசி மூலம் கூறினார். சம்மாந்துறைப் பொலிஸ் நிலைய அதிகாரி, அவரது நேரடித் தலைமை அலுவலர்களான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் மா அதிபர் என்பவர்களுக்கும் அவரது தொலைத் தொடர்புச் சாதனம் மூலம் அறிவித்தார். இதேபோன்று எ.ஆர். முகம்மது அலியும், ஐ.உதுமாலெவ்வை ஜே.பியும் ஐ.எ.ஜப்பாமர் எ.டீ.யும் தொழிற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவர்களுடன் மஜ்லிஸ் அஷ்ஷூரா அமீர் மௌலவி எம். பீ. அலியார் ஹஸ்ரத் அவர்களும், ஏனைய உறுப்பினர்களும் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் யூ.எல். அப்துல் கபூரும், ஏனைய நம்பிக்கையாளர்களும் மற்றும் ஊர்ப் பிரமுகர்கள், தொண்டர் ஸ்தாபன உறுப்பினர்கள் யாவரும் மக்களின் தேவைகளைக் கவனித்து அவர்களுக்கு உதவிகள் செய்து ஆறுதலும் கூறினர்.

அந்த நீண்ட இரவு விடிந்தது. எல்லாம் முடிந்தது, என எண்ணி மக்கள் தத்தமது வீடுகளை நோக்கி ஓடினர். ஆனால், சம்மாந்துறையின் 4ஆம் 5ஆம் குறிச்சிகளுக்குள்ளும் செம்மண்வட்டை, வீரமுனைப் பிரதேசத்துக்குள்ளும் எவரும் செல்ல முடியாது இந்திய இராணுவம் காவல் புரிந்தது. எந்த முஸ்லிம் பிரசையும் அங்கு உட்பட முடியாது எனத் தடை செய்தனர். மறுபுறம், தமிழ் மக்கள் இந்த வீடுகளில் கிடக்கும் மிகச சொச்சங்களை எடுத்துச் சென்றனர். இன்னும் பல தமிழ் நெஞ்சங்கள் இதனை விரும்பாது வேதனைப்படுவதைப் பலர் அறிவர். வீடுகளில் இருந்த வானொலிப் பெட்டிகள், மின் விசிறிகள் டி.விக்கள் வீடியோ ரெக்கோடர்கள், மின்சார உபகரணங்கள், குளிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28—5—1989

சம்மாந்துறை

# அகதிகளுக்கு நிவாரணம் வழங்கவேண்டும்

## முஸ்லிம் விவகார இராஜாங்க அமைச்சர் ஜாபிர் எ. காதர் பேச்சு

(கேசரி நிருபர்)

சம்மாந்துறை சம்பவத்தில் பாதிக்கப்பட்டு அகதிகளாக இருப்பவர்களுக்கு அகதி முகாம்களில் நிவாரணம் வேண்டும். என்று ... அமைச்சர் ... எ. காதர் ... பேசுகையி... சம்ம... தொ...

## வை.எம்.எம்.ஏ. [illegible] வேண்டுகோள்

மூதூர், சம்மாந்துறை

## சம்பவங்கள் பற்றி இந்திய தூதரகம் அறிக்கை

கொழும்பு, மே 22

இந்திய தூதரகம் மூதூர், சம்மாந்துறை பகுதிகளில் கடந்த சில தினங்களில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக பத்திரிகை அறிக்கை ஒன்றை நேற்று இரவு வெளியிட்டது.

மேற்படி சம்பவங்கள் குறித்து இலங்கை பத்திரிகைகள் வெளியிட்ட பல்வேறு செய்திகளை அடுத்தே இந்த அறிக்கையை விடுப்பதாக இந்திய தூதரகம் தெரிவித்தது.

மூதூர், சம்மாந்துறை சம்பவங்கள் தொடர்பாக இந்தியப் படைகள் தந்த தகவல்களை வைத்தே மேற்படி அறிக்கை விடுக்கப்பட்டதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. (ந-ம)

...னர்களது ...லிருந்து ஒன்று ...முந்து வருகிறார்கள்.

...ரும் கிழக்கில் ஏன் இந்த ...திமர் நிலைமை என்பது புரிய வில்லை. எனவே எல்லா அங்கத்தவர்களும் அங்கு சென்று நிலைமையை ஆராய வேண்டும்.

இந்திய அமைதிப் படையை பொறுத்தவரையில், பல்வேறு விதமான தகவல்கள் வெளியாகின்றன. சிலர் அவர்களைக் கண்டிக்கிறார்கள். வேறு சிலர் பாராட்டுகிறார்கள். எமது அனுபவமானது பாதிப்புற்றவர்கள் மீதேயாகும்.


12 மேல்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி முகாம்கள்



சம்மாந்துறை முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடந்ததும் அவர்கள் அபயம் தேடி ஊரின் மத்தியிலுள்ள மஸ்ஜிதுகள், பாட சாலைகளை நோக்கி ஓடினர்.




அல்-மர்ஜான் மகா வித்தியாலயம்




மஸ்ஜிதுல் மனார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஸ்ஜிதுல் சலாம்




மஸ்ஜிதுல் தக்கியா




தாருஸ்-ஸலாம் வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாக்குதலுக்குள்ளான ஒரு வீடு (இன்றைய தோற்றம்)



கொள்ளையடிக்கப்பட்ட கடைகள் (இன்றைய தோற்றம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனப் பெட்டிகள், அலுமாரிகள், உழவு இயந்திரங்கள், மோட்டார் சைக்கிள்கள், மாடுகள், ஆடுகள், ஆயிரக்கணக்கான நெல் மூடைகள் போன்றவை அனைத்தும் அன்றிரவே எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன. பகல் வேளைகளில் கூட பெண்களும் பிள்ளைகளுமாமக இவற்றை எடுத்துச் சென்றனர். எஞ்சியவை தீயில் எரிந்து புகைந்து கொண்டிருந்தன.

மறுபுறம் அன்றிரவு தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுக்களுக்கு இலக்காகி ஐ.ஹயாத்து முஹம்மது, எ.ஆதம்பாவா என்ற இருவரும் உயிர் நீத்து அவர்களின் கிரியைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பலர் காயங்களுக்குள்ளாகியதும் குறிப்பிடத்தக்கது. தமிழ் இளைஞர்களால் வைக்கப்பட்ட தீ இறைவனால் சற்று நேரத்திலேயே அணைக்கப்பட்டு விட்டது. ஆனால், மக்கள் மனங்களில் மூட்டப்பட்ட தீ அணைந்தபாடில்லை. 17ஆம் திகதி மாலை நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பல சம்பவங்கள் குறிப்பிட்டுக் கூறக் கூடியவை. அவற்றில், எல்லாவற்றையும் இங்கு கூற முடியாவிட்டாலும் ஒரே ஒரு சம்பவத்தையாவது கூறியாக வேண்டும். எடுத்துக் காட்டாக எழுதுகிறோம். எஞ்சியவை விரிவஞ்சி விடப்படுகின்றன.

வீரமுனையின் பள்ளித் தெருவில் நீண்ட காலமாகக் குடியிருக்கும் ஒரு முஸ்லிம் குடும்பம். அவர்களது பிள்ளைகளில் ஓர் ஆசிரியை; அவரது கணவனும் ஆசிரியர். இவர்கள் இருவரும் தமது உழைப்புப் போதாது கணவன் பல வருடங்கள் வெளிநாடு சென்றும் உழைத்துச் சேர்த்த பணத்தில் ஒரு வளவை வாங்கி மிகவும் நவீனமாக - ஒரு வீட்டைக் கட்டி எல்லா வீட்டுப் பொருட்களும், மின் உபகரணங்களும் பொருத்தி வசதியானமுறையில் வாழ்ந்து வந்தனர். மாலையானதும் சூழலில் உள்ள மக்கள், தமிழ் மக்களும் சேர்ந்து தொலைக்காட்சி பார்ப்பது, வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பது போன்ற பொழுது போக்குகளில் ஈடுபடுவதும் வழக்கம். இங்கு பல தமிழ்ப் பெண்களும், ஆண்களும் வந்து மிகவும் அந்நியோன்னியமாகப் பழகுவார்கள். இத்தகைய இன உறவில் திளைத்துக்கிடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் 17ஆம் திகதி பிரச்சினையன்று மாலையானதும் வீட்டுக்காரர் தமது பொருட்களை ஏற்றிக் கொண்டு செல்ல முனைந்த போது நண்பர்களான பல தமிழர்கள் தடுத்துவிட்டனர். நாங்கள் பாதுகாப்போம்; நீங்கள் பயப்பட வேண்டாம் என்று கூறினர். இவர்களும் இழந்த தைரியத்தை மீண்டும் பெற்று மிகத் தைரியப்பட்டு இருந்தனர். வானொலிப் பெட்டி போன்ற சிறிய தூக்கக் கூடிய பொருட்களையாவது தூக்குவோம் என முனைந்தமையைக் கூட அந்நண்பர்கள் தடுத்து விட்டனர். இரவு 7.30 மணி இரண்டு, மூன்று பேர் இவர்கள்வீட்டுக்கு வந்து, "ரீச்சர், நீங்கள் போங்கள் வெளியூர் பொடியன்கள் பலர் வந்திருக்கிறார்கள் என்ன நடக்குமோ தெரியாது. நாங்கள் வீட்டைப் பாதுகாக்கிறோம்." என்று கூறினர். உடனே உயிரையாவது காப்பாற்றுவோம் என எண்ணி தப்பியோடி அகதி முகாமுக்குச் சென்று விட்டனர். அன்றிரவு அந்த வீட்டின் அனைத்துப் பொருட்களும் சூறையாடப்பட்டு வீடும் தீவைக்கப்பட்டது, அவ்வீடு எரியாமையால் மீண்டும் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. இது, வீரமுனையில் பிரஜைகள் குழுத்தலைவரான ராஜேந்திரன் ஆசிரியரின் வீட்டுக்கு அடுத்துள்ள வீடு என்றால் இந்த வீட்டைக் கொள்ளையிடுவதில் எந்தளவு சதி நாசகாரத் திட்டங்களுடன் அவர்கள் இருந்துள்ளனர் என்பதை எண்ணிப்பாருங்கள் - எனப் பல மக்கள்இன்னும் பேசிக்கொள்கின்றனர். இப்படியாக சேதமாக்கப்பட்ட 627 வீடுகளிலும் பல்வேறு சம்பவப் பின்னணிகள் உள்ளன.

என்றோ எப்போதோ எதற்காகவோ நடந்த ஒரு விபத்துக்காகப் பல வருடங்கள் திட்டமிட்டு இவ்வாறான ஒரு படு மோசமான மிகவுமே கோடிக்கணக்கான நஷ்டங்கள் கொண்ட பல துன்ப துயரம் கொண்ட பிரிவுச் சுமை பொதிந்த செயலை தமிழ் மக்கள் ஆற்றிவிட்டதால் முஸ்லிம்கள் சொல்லொணா வேதனைத் துயரத் துக்குள்ளானார்கள். இந்திய அமைதிப்படை எம்மை அமைதி காக்க வரவில்லை. அழித்தொழிக்கவே வந்துள்ளார்கள். அவர்களும் சேர்ந்து திட்டமிட்டே இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையைச் செய்கின்றனர் என்பதை மக்கள் நன்கு அறிந்தனர். அந்த அர்த்த ராத்திரியில் வீரமுனையின் எல்லைப் புறங்களிலே யுத்த வாகனங்களுடன் காவல் செய்த இவர்களுக்கு என் இந்த ஆயுத அராஜக விளையாட்டை தடுத்து நிறுத்த முடியாமல் போய்விட்டது. அவர்களும் சேர்ந்து திட்டமிட்டே இந்தக் கைங்கரியத்தில் இறங்கினர். வேலியே பயிரை மேய்ந்த கதையாயிற்று. சிறீனிவாஸ்ராவ், சர்மா என்ற இரு மேஜர்களுக்குக்கீழ் உள்ள படைப் பிரிவினரே இப்படியான அநாகரிகச் செயலை செய்து முடித்தனர். இப்படியான செயல்கள் யாவற்றுக்கும் மறுநாள் இந்திய உளவுப் படையான றோவினால் வேறு அர்த்தங்கள் புகட்டப்பட்டன. அன்று பொதுமக்களால் பொறுக்கி எடுத்த துப்பாக்கிரவை, ஷெல் துண்டுகள் என்பனவற்றை இந்திய அமைதிப்படை உயர் அதிகாரிகளிடம் தடயப் பொருட்களாகக் காட்டியபோது அவர்கள் சொல்வதறியாது திகைத்து நின்றனர். இதற்கிடையில், இச்சம்பவம்பற்றி மிகவும் காரசாரமான இத்தமிழ் இளைஞர்களின் அநியாயங்களை குறிப்பிட்டு எல்.ரி.ரி. அறிக்கை ஒன்றினை சம்மாந்துறை முஸ்லிம்களுக்காக சர்வதேச தொடர்புச் சாதனங்களுக்காக விடுத்திருந்தது. அவர்களின் முதலைக் கண்ணீர் வியாபாரத்தையும், இன குரோதத்தையும் பின்னர் விளக்குவதற்காமக இந்த அனுதாப அறிக்கையையும் ாபகப்படுத்துகின்றோம்.

இப்படியான கொடூரமான ஈனச் செயல்கள் நடந்து முடிந்ததும் சம்மாந்துறையில் 17 அகதி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டன. இவ் அகதிகளை பராமரிக்க அகதிகள் நிவாரணக்குழு ஒன்று எற்படுத்தப் பட்டது. அதன் மூலம் அகதிகளுக்கு சமைத்தஉணவு, உடுபுடவை என்பன உடனடியாக ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டன. அரசாங்க உதவியும் உடனே கிடைத்தது. அந்த வேளை, சமூக சேவைத் திணைக்களத்தின் உதவி ஆணையாளராயிருந்த ஜனாப் எம்.எச் அக்பர் ஹசன் அவர்களால் ஊரில் உள்ள அரிசி ஆலைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுமையான விசாரணை நடத்த புலிகள் கோரிக்கை

## சமாதான பேச்சின்போது

கொழும்பு, மே 23
-ில் ஏற்பட்ட
-மை

கோரள் விடுத்தனர். இப்படி
நேற்று ஜனாதிபதி செயலகம்
பேச்சுவார்த்தை பற்றி வெளி
-ட்ட அறிக்கையில் குறிப்பிடப்
-கு.

-ச்சதை
ர்
ம்
ர்றி
திச்
நான
ர்
ரில்
சிங்க
ங்க)

சம்ம
இனத்
யாக
கிர
வே
வ
க

# சம்மாந்துறை பற்றி புலிகள் கவலை

Dinakaran 24/6/87

-எல். ரி. ரி. ஈ. யினர் அர
சாங்கத்துடன் நேற்று
பேசிய போது சம்மாந்
துறைப் பகுதி நிகழ்ச்சி
கள் குறித்து தம் கவலை
யைத் தெரிவித்தனர். இக்
கலவரத்துக்கான காரணங்
களை அறிய பூரணமாக
விசாரணை நடத்த வேண்
டும் என்று கேட்டுக்
கொண்டனர்.

கிழக்கு மாகாண
யேற்றம் பற்றி -ி குடி
பேசி-.

யேற்றம் நடைபெற்றது,
இதனால் இன விகிதாசாரம்
மாற்றம் பெற்றது. பேச்சு
வார்த்தைக்குப் பின்னர்
இந்தியப் படை நடவடிக்
கைகளை தீவிரப்படுத்திய
தால் மக்கள் கஷ்டப்படுகின்
றனர் என்றும் கூறினர் அர
சாங்க தரப்பில் அமைச்சர்
கள் ஹமீத், ரணில் விக்
கிரமசிங்க. சிறிசேன
குரே கலந்து-

சொந்தக்காரர்கள் மூலம் உதவி அரசாங்க அதிபரின் துணையுடன் அரிசி. பருப்பு போன்ற பொருட்கள் அகதி முகாம்களுக்கு வழங்கப்பட்டன. மறுநாள் காலை 18.05.89 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர்களான ஜனாப்கள் எம்.ஏ.அப்துல் மஜீத், அமைச்சர் ஏ.ஆர்.மன்சூர், எம்.எச்.எம்.அஷ்ரப் போன்றவர்களும் அரச அதிகாரிகளும் வந்து பார்வையிட்டுச் சென்றனர். அவர்கள் 'கண்ணீர் விட்டு அழுதனர். ஏன்? திரு.ஜே.திவ்வியநாதன் எம்.பி.யும் கூட வந்து பார்த்து வேதனைப்பட்டுச் சென்றார். ஜனாப் அஷ்ரப் அவர்கள் ஊரில் நின்று உடனடித் தேவைகளைக் கவனிக்க ஜனாப். அப்துல் மஜீத் ஜனாப் மன்சூர் ஆகியோர் மற்ற மேல் நடவடிக்கைகளில் ஈடுபட கொழும்பு சென்றனர்.

17ம் திகதியன்றினுடைய துப்பாக்கி ஷெல் குண்டுச் சத்தம் என்பவற்றின் அலறலுக்குப் பயந்த அண்மைக் கிராமங்களான எத்தாளைக் குளம் முஸ்லீம் பிரிவு, ஹிஜ்ரா புரம், மல்கம்பிட்டி, நெய்நாகாடு ஹயாத்து நபி குடி, வங்களாவடி, உடங்கா போன்ற கிராமத்து மக்கள் இரவோடிரவாக வயல் வெளிகளால் ஓடிச் சென்று 6ஆம் குளனி, நிந்தவூர், சாய்ந்தமருது, சம்மாந்துறை ஆகிய கிராமங்களில் தஞ்சமடைந்தனர். அடுத்தடுத்த நாட்களில் இப்பகுதிகளுக்கு யாரும் செல்ல முடியாதிருந்த போது பகல் வேளைகளிலேயே இக் கிராமங்கள் கொள்ளையிடப் பட்டன. தீ வைக்கப்பட்டன..அவர்கள் அழிவு வேலைகள் இன்னும் தொடர்ந்தன. வீடுகளை இடித்து கதவுகள், நிலைகள், யன்னல்கள் கூரைகள் என்பன ஏற்றிச் செல்லப்பட்டன. இக்கிராமங்களின் அழிநிலை இன்னும் பார்வையிடக் கூடியதாக உள்ளது. இக்கிராமங்களின் பாடசாலைகள், பள்ளிவாயல்கள் கூட சூறையாடப்பட்டன. இன்னும் இந்தக் கிராமங்களில் மக்கள் குடியேற முடியாத நிலையில் உள்ளனர் என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். அப்படியானால் எத்தகைய அழிவு, அட்டூழியம் இடம் பெற்றிருக்கும். இக்கிராமங்களில் இருந்து பசு மரங்கள் அன்று அழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கப்பட்டன வென்றால் அந்தக் கொடுமைகள் சொல்லுந் தரமன்று.

பல இளைஞர்களை எந்தவித காரணமும் இன்றி கொன்றொழித்தார்கள். அதுமட்டுமல்ல கொள்ளை, கடத்தல் அராஜகம் என்பவற்றோடிராது இன்று இந்நிகழ்ச்சியின் மூலம் பல வீடுகள், கிராமங்கள் அழித்தொழிக்கப்பட்டன. இக்கிராமங்களைச் சென்று பார்க்கக் கூட முடியவில்லை. அவ்வாறு யாராவது சென்றால் அவர்களது சடலமே கிடைக்கும். சில வேளை அவை கூட கிடைக்காமல்போய் விடும். அப்படி மோசமான கொலைகாரர்களாக இந்த இனவெறி இளைஞர்கள் மாறிவிட்டனர். இப்படிப் பயங்கரமான சூழ்நிலை இன்றும் தொடர்வதால் மக்கள் இன்றும் அங்கு செல்லமுடியாது. கிராமங்கள் அழிந்து, வெறிச்சோடி மிருகங்கள் வாழ்நிலம் போல் காட்சியளிக்கின்றன. இந்த அநியாயங்கள், அட்டூழியங்கள் எதுவும் செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கோ, மனித உரிமைகள் சபையினருக்கோ, யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கோ தெரியவில்லை. அவர்கள் கண்விழித்துப் பார்த்ததில்லை. அல்லது அவர்களுக்கு இந்த நெஞ்சைத் தொடும் சம்பவங்கள் தெரிந்தாலும் அது முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டமைதானே... அதனால் பார்க்கமாட்டார்கள். இன்றுவரை பார்க்கவுமில்லை. ஏனெனில் முஸ்லிம்களுக்கு மனித உரிமைகள், நியாயங்கள், சுதந்திரங்கள், சட்டத்தின் சம்பிரதாயங்கள் இல்லையோ....? இது எத்தகைய பேரினவாதம்....? இனவெறி.....? எத்தகைய அடக்குமுறை....? எங்கு இதனை முறையிடலாம்.....? எங்கள் முறையீட்டை ஏற்பதற்கும் யாரும் உண்டோ....? யார் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இறைவனே போதுமானவன் என்ற இறுதி நம்பிக்கை முஸ்லிம்களுக்குண்டு.

அன்று சம்மாந்துறை 5ஆம் குறிச்சி, 1ஆம் குறிச்சி, செம்மண் வட்டை, மல்கம்பிட்டி, நெய்நாகாடு, ஹயாத்து நபி குடி, ஹிஜ்ராபுரம், ஏத்தாளக்குளம் ஆகிய எட்டுக் கிராமங்கள்முற்றாகத் தமிழ் மக்களாலே அழிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு எவரும் அதற்குப் பொறுப்பல்ல; பொறுப்புக் கூறவும் முடியாது. இவர்களாலே அனைத்தும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன. அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு, பாண்டிருப்பு, துறைநீலாவணை, சொறிக்கல் முனை முதல் மண்டூர் வரை பல கிராமங்களைச்சேர்ந்த தமிழர்களே இந்தக் கொள்ளை கொலை தீவைப்பு சம்பவங்களில் ஈடுபட்டனர். மாடுகள் பட்டிபட்டியாக சாய்த்துச் செல்லப்பட்டன. அவற்றில் ஒரு சில மாடுகளை இந்தியப் படையினர் மண்டூரிலிருந்து மீட்டெடுத்துத் தந்தனர். முழுக்க முழுக்க தமிழ் மக்களால் இழைக்கப்பட்ட அத்தனை அநீதிகளையும் கண்ணுறாத இந்த யாழ். பல்கலைக்கழக மனித உரிமைகள் குழு யாராலோ எப்படி எப்படி எல்லாமோ அழிவுற்ற அல்லது அவர்கள் தாமாகவே விட்டுச் சென்ற கிராமங்களைப் பற்றி கொக்கரிக்கின்றார்கள். அவற்றை சம்மாந்துறை முஸ்லிம்களின் தலையில் சுமத்திவிட காரணம் கற்பிக்கின்றார்கள். மனித உரிமைகள் என்ற பெயருக்கே இழுக்கு ஏற்படும் கேவலமான பணியினை மேற்கொள்கின்றார்கள். என்ன? மனித உரிமை என்பது தமிழ் மக்களுக்கு மட்டுமே சொந்தமானது என்று கருதுகின்றார்களா? அத்தகைய உரிமை வேறு எந்த இனத்தவர்களுக்கும் இல்லை என எண்ணுகின்றார்களா?

இத்தோடு நின்று விடவில்லை; அவர்களது ஆத்திரம் அடங்கவில்லை, இனவெறி தீரவில்லை, இரத்தவெறி அவர்களை விட்டுவிடவில்லை. தனக்கென ஒரு நாடு பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மண்ணாசையுடன் வந்து தமிழ் மக்களது உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும், அடக்குமுறையை அகற்ற வேண்டும் என்று உயரிய கோட்பாட்டுடன் வந்த இயக்கங்கள், சேகரிக்கப்பட்ட ஆயுதங்கள், வழங்கப்பட்ட பயிற்சிகள், அனைத்யையும் முஸ்லிம்களுக்கெதிராக திசை திருப்பினர். முஸ்லிம்களை இரத்தவெறி கொண்டு சுட்டுக் கொன்றனர். இப்படி இந்த ஊர்கள் எல்லாம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போதே *1989.05.22*ஆம்திகதி எஸ்.எச்.எம். பரீட் (யாழ்வளாகம்) எஸ். ஆதம்பாவா, வை.சீ.முகையதீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய மூவரும் மாவடிப்பள்ளியில் அச்சத்தால் மக்கள் தூங்க முடியாது விழித்துக் கொண்டிக்கும்போது சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதற்கென பாவிக்கப்பட்ட ஆயுதம் அனைத்தும் எஸ்.எல்.ஆர். ரக துப்பாக்கிகள். அன்று இந்தத் துப்பாக்கிகள் வேறு யாரிடமும் இருக்கவில்லை தமிழ் தீவிவாதிகளைத்தவிர . இத்தனைக்கும் வட கிழக்கு மாகாணம் திரு.வரததாஜப் பெருமாள் தலைமையில் ஆட்சி செய்யப்படுகிறது. மக்கள் ஆத்திரப்பட்டார்கள். ஆனால் எதுவுமே செய்ய முடியாது. எத்தனை முஸ்லிம்களை அடுத்த அடிவைக்க விடமாட்டாது தமிழர்கள் இந்திய இராணுவம் பாதுகாத்தது. தமிழர்கள் வேண்டியதைச் செய்தார்கள். அவர்கள் மனித மாமிசமுண்ணி களாக மாற எத்தனித்தார்கள் போல் இருந்தது.

ஆம், 1989.05.25 இல் மீண்டும் எஸ்.ஆதம்பாவா, ஆர். இல்யாஸ் ஆகிய இருவரும் கடத்தப்பட்டு படு கொலை செய்யப்படார்கள். இன்னும் 1989.05.30 இல் எஸ். அகமதுலெவ்வை என்ற அறுபது வயது நிரம்பிய வயோதிபர் ஊருக்கு மிக அண்மையில் உள்ள வயலுக்குச் சென்றபோது கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டார். என்ன இவர்கள் நோக்கம்? வயோதிபனை விட்டுவைக்கிறார்களில்லை, என்ன? மனித மாமிசம்தான் உண்கின்றார்களா இயக்க இளைஞர்கள்? 1989.05.31ஆம் திகதி எ.எம் முஸ்தபா என்பவர் தனது வயற்காரனான ஒரு தமிழரிடம் வயல் சம்பந்தமான விடயங்களைப் பேசிக் கொள்வதற்காக ஊரின் எல்லைப் புறமான சொறிக்கல்முனை பகுதிக்குச் சென்றபோது கடத்தப்பட்டார். இவரைப் பலர், போக வேண்டாம், என தடுத்தபோது தனது வயற்காரனே தமிழன்; தனக்கு எதுவும் நடக்காது எனத் துணிந்து சென்றார். அதாவது இவர் தமிழ் மக்களுடன் கொண்டிருக்கும் தொடர்பின் மீது நம்பிக்கை வைத்துச் சென்றார், இதுதான் அவர்களது ஐக்கியம், உறவு, நம்பிக்கை. எவ்வாறு அவர்களை நம்புவது? இவ்வாறு நம்ப முடியாதவாறு நடக்க முற்பட்டனர்; நடந்தனர்; நடந்து காட்டி விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த" 89 இன் மே (வைகாசி) இரவுகளை எண்ணிப் பாருங்கள். முன்னையவற்றை விட்டு விடுங்கள். மாதத்தின் 31 நாட்களில் 14 கொடுரக் கொலைகள் செய்யப்பட்டன. எட்டுக் கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. பல்லாயிரக்கணக்கான ஆடு, மாடுகள் அனைத்தும் அழிக்கப்பட்டன. இத்தனைக்கும் முஸ்லிம்கள் எதுவுமே செய்யவில்லை. ஏன் இப்படிச் செய்கின்றார்கள் என்று ஏது மறியாது அவர்கள் ஏங்கித் தவித்தார்கள். யாவற்றையும் விட முஸ்லிம்கள் விதைத்திருந்த ஏறத்தாழ 12,000 ஏக்கர் வேளாண்மையைச் சென்று பார்க்க, நீர்விட, களைநாசினி, கிருமிநாசினி தெளிக்கக் கூட முடியவில்லை. நெற்காணிகள் அனைத்தும் நாசமாக்கப்பட்டன. வயல்களில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டன. மிகப் பாரிய பொருளாதார இழப்பொன்றை அவ்வருடம் எதிர்நோக்க வேண்டியிருந்தது. இதுமட்டுமல்ல; விதைப்புக்காகப் பண்படுத்திய நிலங்களில் சென்று விதைக்கக் கூட முடியாதநிலை. பல நூறு வீடுகளில் விதைப்புக்காக நனைந்த நெல் கிடந்து நாசமாகின. பல வயல் வெளிகள் வரம்புகளை வெட்டி நீர் இன்றி காய்ந்து பயனற்ற நிலைக்கு மாற்றப்பட்டன. இவையாவும் மல்லிகைத்தீவு மல்வத்தை வளத்தாப்பிட்டி, பெரிய வீரச்சோலை போன்ற கிராமங்களை அண்மித்த வயல் வெளிகளாகும். அந்த மே மாதத்தின் இழப்பினைச் சொல்லியடங்காது; இன்றும் என்ன இன்னும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் இத்தகைய பொருளாதார இழப்பு ஈடு செய்ய முடியாததே.

இந்த அட்டூழியங்களை புரிந்து கொள்ளாத யாழ். பல்கலைக் கழக மனித உரிமைகள் குழு, மனித உரிமைகள் மீறல் பற்றி கூற வந்துவிட்டனர். ஆனால், இத்தகைய அட்டூழியத்தால் உலக ரீதியாகப் பிரபல்யப்படுத்தப்பட்டு இந்தியப் படையே வெளியேறு என்ற கோசம் சாதாரண குடிமகன் முதல் ஜனாதிபதிவரை எழுப்பப்பட்டது. இதே வேளை, 17.05.1089 இல் சம்மாந்துறை தாக்கப்பட்டபோது ... ... ... ... ...க்கிர்கூரிய

14704

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி அவர் கூறினார்—
(நூறு)

## அமைச்சரவையில் சம்மாந்துறை மன்னார் சம்பவங்கள்

கொழும்பு, மே 24
சம்மாந்துறை சம்பவம் தொடர்பாகவும், மற்றும் பகுதிகள் புளொட் இயக்கத்தவர் முகாமைப் புலிகள் தாக்கிய சம்பவம் தொடர்பாகவும் அமைச்சரவை ஆராய்ந்தது.
வெளிநாட்டு அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன நேற்றைய அமைச்சரவையின் பின் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.
அவர் மேலும் கூறியதாவது—
கிழக்கு மாகாண சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி வைப்பதா, இல்லையா என்பது தொடர்பாக இன்னமும் எவ்வித முடிவும் இல்லை.
இதனைத் தீர்மானிக்க மேலும் 3 வாரங்கள் இருக்கின்றன.
இப்படி அவர் கூறினார்.

## சம்மாந்துறை சம்பவங்கள் பற்றிய விவாதம்

### தமிழர்கள் முழுப் பொறுப்பாளிகள் என்பதை முற்றாக ஏற்றுக்கொள்ள முடியாது — ரஞ்சன் விஜேரத்ன

சம்மாந்துறையில் இடம்பெற்ற படுகொலைகளுக்கும், சம்மாந்துறைச் சம்பவங்களுக்கும் தமிழர்கள்தான் முழுப் பொறுப்பாளிகள் என்பதை முற்றாக என்னால் ஏற்க முடியாது. ஆயுதம் ... தரப்பினரும் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடலாம்.
பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன இவ்வாறு நாடாளுமன்றத்தில் ... கூறினார்.
அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன மேலும் குறிப்பிட்டதாவது—
இப்பிரதேசத்தில் பல்வேறு குழுக்களிடம் ஆயுதங்களை ...
(8 ஆம் பக்கம் பார்க்க)

### தனியான முஸ்லிம் மாகாணம் தேவை
### பிரச்சினையை தீர்க்க இதுதான் ஒரே வழி என்கிறார் அஷ்ரப்

கொழும்பு மே 25
வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களின் அபிலாஷைகளையும் ... களையும் பாதுகாக்க வேண்டுமானால் தனியான முஸ்லிம் மாகாணம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். இன்று ஏற்பட்டுள்ள சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண பதற்கு இதுவே ஒரே வழியாகும்.
இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ... கூறினார்.
(8 ஆம் பக்கம் பார்க்க)

### இயக்கங்களிடமிருந்து ஆயுதங்களை களையுமாறு இந்தியப் படையினரிடம் கூறியும் நிறைவேறவில்லை — மன்சூர்

கொழும்பு மே 25
ஜனநாயக வழிக்குத் திரும்பிய இயக்கங்களிடம் இருந்த ஆயுதங்களைக் களைய வேண்டும் என நாம் பல முறை இந்தியப் படையினரைக் கேட்ட போதிலும் அவர்கள் அதனை நிறைவேற்றவில்லை.
வர்த்தக கப்பல்துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் நேற்று நாடாளுமன்றத்தில் இப்படிக் கூறினார்.
அவர் மேலும் கூறியதாவது—
முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் இங்கு கூறிய பல விடயங்களை ...
(8 ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்கில் இரு இனங்களின் மோதல்களுக்கான சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க வேண்டும் — ஜாயிர் காதர்

நாடெங்கிலும் உள்ள தமிழர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக இணைந்து வாழும் போது கிழக்கு மாகாணத்தில் மட்டும் இரு இனங்களும் மோதிக் கொள்வது ஏன்? ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்வது ஏன்? இச் சம்பவங்களின் சூத்திரதாரிகளைக் கண்டறிய வேண்டும்.
இவ்வாறு முஸ்லிம் விவகார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஜாயிர் ஏ. காதர் நேற்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை ஒன்றை விடுத்தார்.
அவர் மேலும் கூறியதாவது: தமிழர்களும், முஸ்லிம்களும் பல ... நூற்றாண்டு காலமாக சகோதரர்கள் போல் வாழ்ந்து வருகின்றனர். எனினும் கிழக்கு மாகாணத்தில் மட்டும் சில கசப்பான சம்பவங்கள் இடம் பெற்றே வருகின்றன.
சம்மாந்துறை சம்பவம் தொடர்பாக நான் பெரிதும் வேதனை ...
(8 ஆம் பக்கம் பார்க்க)

### நூற்றாண்டு காலமாக இருந்துவந்த தமிழர்–முஸ்லிம் ஐக்கியத்தை ஆயுதம் தரித்த சில இளைஞர்கள் சீர்குலைக்கின்றனர் — அமீர்

நூற்றாண்டு காலமாக இருந்து வந்த தமிழ் முஸ்லிம் மக்களின் ஐக்கியத்தை இரு சமூகங்களிலும் ஆயுதம் தரித்த சில இளைஞர்கள் சீர்குலைத்து வருகின்றனர்.
தமிழர் விடுதலைக் கூட்டணியின் எம். பி. திரு அ. அமிர்தலிங்கம் நேற்று நாடாளுமன்றத்தில் இப்படிக் கூறினார்.
நேற்று சபை ஒத்திவைக்கப்படும்முன், அண்மையில் சம்மாந்துறையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் கூறியதாவது—
கொந்தளித்த வார்த்தைகளை ...
(8 ஆம் பக்கம் பார்க்க)

8 DINAPA...

வார இதழ் "தி...

சம்மாந்துறை சம்ப...

பாதிக்கப்பட்ட முஸ்...
மருந்து, உணவுப் ...

கொழும்பு மே 25
சம்மாந்துறையில் பாதிக்கப்பட்டிருக்கும் முஸ்லிம்களுக்கு உடனடியாக உணவுப் பொருட்களை ... அனுப்பி வைக்க வேண்டும் ...

[illegible]

... தமிழர்களும் வாழ்கின்றனர். ... 28 ... தெரிவித்தார். ...
இப்பொழுது நிலைமை ...
இப்படி ஜனாப் ... கூறினார்.

(நூறு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் எம்.பி.க்களும் எதிர்கட்சி உறுப்பினர்களும் இதில் அதிகம் அக்கறை காட்டியதை மறக்க முடியாது. சம்மாந்துறையில் நடந்த அட்டூழியம் இந்தத் தேசத்தின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பிற்று. இவ்விடயம் வடகிழக்கு மாகாண சபையிலும் விவாதிக்கப்பட்டு மாகாண சபைப் பதிவேட்டிலும் பதிவு செய்யப்பட்டது.

இந்தியப்படை கால் வைத்த அன்று முதல் ஒவ்வோர் முஸ்லிம் கிராமமும் தனித்தனியாக திட்டமிட்ட தாக்குதலுக்கு உள்ளாயிற்று. இதன் முழு மொத்தமாக சம்மாந்துறை தாக்கப்பட்டபோது இந்த முழு நாட்டினதும் தேசிய உணர்ச்சி குறிப்பாக, ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அவர்கள் 29.05.89 அன்று நடைபெற்ற விகாரை ஒன்றின் வைபவத்தின் போது, 29.07.89 க்கு முதல் இந்தியப்படை வெளியேற வேண்டும் என்ற சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த வேண்டுகோளை பகிரங்கமாக விடுத்தார். இந்த மனோநிலையை எற்படுத்தியது சம்மாந்துறைக் கலவரமே. அன்று எடுத்த நடவடிக்கை அவர்கள் ஜூலை 29ல் வெளியேற வாய்ப்பளித்தது என்பது குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டிய அம்சமாகும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


17.05.1989-ல்
சாம்பலாக்கப்பட்ட
சம்மாந்துறை
முஸ்லிம் இளைஞர் முன்னணி,
சம்மாந்துறை.
பிளம்பு
மூவர் சுட்டுக் கொலை
பகுதியில் அடுத்த 24 மணி நேரத்துக்குள்
பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு
சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு
ஆசிரியர் - M.M. நௌபாத்
உதவி - M.T. ஹுஸைன்
தமிழ்—முஸ்லிம் மோதல்கள்!
சம்மாந்துறையில் 25,000
அகதி முகாம்களில்
காட்டுப்பள்ளியில்
சம்மாந்துறை பயங்கரவாத தினைவிதழ்
சம்மாந்துறை சென்ற விசேட குழு
கண்டதி
விலை 10/-

# ஈனச்செயல்கள் இனி வேண்டாம்!

— ஏ. இப்றாகீம்

ஆட்கடத்தல் கொள்ளையடித்தல் வாகனக் கடத்தல்
ஆட்கொல்லி ஆயுதங்கள் அத்தனையும் - மலிந்ததினால்
ஒரு தாயின் சேய்களென ஒற்றுமையாய் வாழ்ந்து வந்த
இரு சமூகம் பிரிந்ததும் வேதனையே!-

.................................

மொழியால் ஒன்றானோம் சுகதுக்கம் மற்றுமுள
அனைத்திலுமே
விழியும் இமையுமென இணைந்தோம் வீரத்தை
திணித்தே
அழிந்து வரும் அத்தனை உயிர்க்கும் அமைதியையே
ஈந்தோம்
அமைதிக்கு அளிக்கின்ற அன்பளிப்போ கொலைகளும்
மற்றவையும்

.................................

முஸ்லிம்கள் வாழுகின்ற மற்றநெல்லா ஊர்களிலும்
கஷ்டங்கள் விளைத்துள்ள நம் தமிழ்க் குழுவினர்
கஷ்டங்கள் தரவில்லை. காத்திடுவர் என்றருந்தோம்
இஷ்டப்படி இட்ட தீயும் கொள்ளையும் அவசியமோ?

.................................

துப்பாக்கி வெடியோசை துளைத்தன காதுகளை
தப்பாமல் தொழுகைக்கு தம்பியவன் செல்கையிலே
எல்.எம்.ஜிக்கு இரையான வேதனைகள் மறக்க வில்லை
இனியும் வேண்டாம் இவ்வீனச் செயல்கள்.

.................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டு வீழ்த்துவதும் செங்குருதி செங்குருதி சிந்துவதும்
சுட்டெரிக்கும் செந்தீயில் சட்டெனவே வீசுவதும்
திட்டமாய் மானிடரின் தரமிக்க செயலில்லை.
சட்டெனவே விலகிடுவோம் சண்டாளச் செயல்களினை

.............................

சுட்டிய ஆடையோடு கதறியழுதே எம்மவர்கள்
குட்டி குழந்தையோடு கூச்சலிட்டோடி வந்து
முட்டிமோதியும் விழுந்த வேதனை தூசாக
பட்டியாய்பள்ளிகளில் அகதியாய் ஆயினரே!

.............................

வீடுடைத்துக் கொள்ளையடித்தும் வேகமாய்த்
தீயிட்டும்
கேடுகெட்ட செயல்புரிந்தோர் கொடுமையினை
அடக்காது
விடுவானோ படைத்தவனும்? வல்லவனின் அருள்
மழையை
இரவெல்லாம் பெய்வித்தான் ஊரெரியாது காத்தனனே!

.............................

வாளெடுத்துத் தோள்நிமிர்ந்து வஞ்சித்தும்
தோள்தொடுத்துத் துப்பாக்கிதனை யேந்திப்பாய்ந்தும்
வீழ்ந்து சமர் தனிலே வீணாயுயிரை மாய்த்தும்
பால்பட்டுப் போகாமல் பாரினிலே வாழ்தல் உயர்வே

.............................

இறையில்லம் கஃபாவை இடித்துடைக்க வந்த
கறைபடிந்த அப்ரஹா யானைப்படையுமே சிதறிட
இறையிட்ட ஆணைக்கு சின்னக்குருவிகள் அலகால்
சிறுகற்கள் போட்டழிந்த சரிதைகொண்டவர் நாமே!

.............................

தமிழர் - முஸ்லிம் ஒற்றுமையை யாசித்து எழுதப்பட்ட ஓர் ஆக்கம். 1989 மே இல் வெளியான 'பிளம்பு' ஞாபகார்த்த விரசுரத்தில் வெளியானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17.05.1989 அன்றய தாக்குதலால் ஏற்பட்ட நஷ்டங்கள்.

| | விபரம் | அளவு | கூறு | தொகை ரூ |
|---|---|---|---|---|
| 01 | சேதமான வீடுகள் | 627 | எண்ணிக்கை | 33,642,700.00 |
| 02 | நெல் | 41701 | மூடை | 14,655,725.00 |
| | விதைநெல் | 7520 | மூடை | 14,655,725.00 |
| 03 | மாடு | 7028 | எண்ணிக்கை | 15,683,901.00 |
| | ஆடு | 1605 | எண்ணிக்கை | 15,683,901.00 |
| 04 | தங்க நகை | 2008 | பவுண் | 6,958,236.00 |
| 05 | பாவனானப் பொருட்கள் | - | | 15,514,034.00 |
| 06 | மரத்தள பாடம் | - | | 8,394,175.00 |
| 07 | பணம் | - | | 3,112,287.00 |
| 08 | சைக்கிள் | 643 | பவுண் | 1,350,725.00 |
| 09 | மோட்டார் சைக்கிள் | 5 | எண்ணிக்கை | 93,000.00 |
| 10 | ரேடியோ | 511 | எண்ணிக்கை | 1,041,821.00 |
| 11 | தையல் இயந்திரம் | 176 | எண்ணிக்கை | 866,940.00 |
| 12 | மின் விசிறி | 73 | எண்ணிக்கை | 141,500.00 |
| 13 | படங்கு செட் | 75 | எண்ணிக்கை | 411,600,00 |
| 14 | டிராக்டர் | 2 | எண்ணிக்கை | 381,326.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | டி.வி | 50 | எண்ணிக்கை | 473,600.00 |
| 16 | வண்டில் | 26 | எண்ணிக்கை | 298,330,00 |
| 17 | கடைகள் | 54 | எண்ணிக்கை | 1,337,626.00 |
| 18 | தோட்டம் | 47 | எண்ணிக்கை | 536,815.00 |
| 19 | கோழிகள் | 9602 | எண்ணிக்கை | 473,184,00 |
| 20 | குளிர்சாதனப் பெட்டி | 8 | எண்ணிக்கை | 123,200.00 |
| 21 | டீ.வி.டெக் | 4 | எண்ணிக்கை | 89,000.00 |
| 22 | வேன் | 1 | எண்ணிக்கை | 435,000.00 |
| 23 | வெல்டிங் பிளான்ட் | 2 | எண்ணிக்கை | 20,000.00 |
| 24 | நெற்குத்தும் ஆலை | 6 | எண்ணிக்கை | 311,000.00 |
| 25 | நீர்ப் பம்பி | 7 | எண்ணிக்கை | 103,400.00 |
| 26 | குடில்கள் | 19 | எண்ணிக்கை | 85,200.00 |
| 27 | பயிர் நட்டம் | - | - | 4,086,970.00 |
| | பயிர் வருமானம் தடை | - | குவியல் | 102,000,000.00 |
| 28 | வைக்கோல் | 1 | எண்ணிக்கை | 800.00 |
| 29 | தட்டச்சு | 12 | கூடிள. | 118,500.00 |
| 30 | ஏனையவை | - | - | 27,241,157.00 |
| | | | மொத்தம் | 249,526,752.00 |

250 மில்லியன் ரூபாய்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்த ஒரு இராணுவத்தினாலும் முழுமையாக சட்டம் ஒழுங்கை பாதுகாக்க முடியாது — அப்துல் மஜீத்

எந்த ஒரு இராணுவத்தினாலும் முழுமையாக சட்டம் ஒழுங்கை பாதுகாக்க முடியாது ... வெளிநாட்டு படையொன்றைப் பற்றி கூறவா வேண்டும்.

இந்தச் சம்பவத்தில் ... ஒரு சமூகத்தை சேர்ந்த ... தாக்கப்பட்ட ... அதற்குப் பதிலாக மற்ற சமூக ... தாக்கப்பட்டது. இப்படித் ...

... சொல்ல வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

(ந)

## கிழக்கிலிருந்து இந். படையை வெளியேற்ற ஹலீம் இஸாக் கோரிக்கை

கொழும்பு மே 19

கிழக்கு மாகாணத்தில் இந்தியப் படையினர் இருப்பதை ... இலங்கையின் அமைச்சு ... எந்த ஒரு ... போராத்துக் ... முடியாது.

... தாசகத்து ... எம். பி. எழுதி இருக்கும் கடிதத்தில் இப்படி ... கோரிக்கை விடுத்திருக்கிறார்.

... சம்மாந்துறை ... இந்தியப் படையி ... ஒத்துழைப்புகளை ... இந்த ... அப்பாவி மக்களைத் தாக்கியும் ... அழித்தும் ...

## ‘லொட்டோ’

கொழும்பு மே 26

நேற்று கொழும்பில் இழுக்கப்பட்ட 31 ஆவது லொட்டோ சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு-

வெற்றி பெறும் எண்கள்

**16 25 30 33**

**34 37**

I. ஆம் பங்குப் பரிசு

ரூ. 12 லட்சம்

(6 எண்களைச் சரியாக இருப்

## இந்திய படைக்கு எதிராக கொழும்பில்

# முஸ்லிம்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு மே 26

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அண்மையில் தாக்கப்பட்டதை எதிர்த்தும் இந்தியப் படைகளை வெளியேற்றக் கோரியும் நேற்று கொழும்பில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கொழும்பு மருதானை பள்ளிவாசலில் நடைபெற்ற ஜும்ஆத் தொழுகையின் பின் நடைபெற்ற

(2 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அண்மையில் தாக்கப்பட்டதை எதிர்த்தும் இந்தியப் படைகளை வெளியேற்றக் கோரியும் நேற்று கொழும்பு மருதானை ஜும்ஆப் பள்ளிவாசலில் இருந்த முஸ்லிம்களின் ஊர்வலம் புறப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

(ண-ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பணிப்பாளர் திரு. சி. நடராசா, பிரதம கல்வி அதிகாரி ஜனாப். எம். எச். எம். கரீம், கிண்ணியாக் கோட்டக்கல்வி அதிகாரி கே. மூகம்மது வஸீர் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இந்நிலையத்துக்குப் பொறுப்பாளராக கிண்ணியா அல்-அக்ஸா மகா வித்தியாலய பிரதி அதிபர் ஜனாப். யூ. மூகைதீன் பாவா B. A (Hons), Dip. in Ed. நியமிக்கப்பட்டுள்ளார்.

# சம்மாந்துறையில் முஸ்லிம்கள் சுட்டுக் கொலை

கடந்தவாரம் சம்மாந்துறையைச் சேர்ந்த ஏழை முஸ்லிம் விவசாயிகள் ஆறு பேரை புலிப் பயங்கரவாதிகள் வெட்டியும், சுட்டும் கொன்றுள்ளனர்.

ஏற்கனவே சம்மாந்துறைப் பகுதி விவசாயிகளின் 15,000 க்கும் அதிகமான ஏக்கர் நெல்வயல்கள் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலால் தரிசாகக் கிடக்கின்றன. செய்கை பண்ணப்படும் காணிகளையும் இவ்வாறு பயமுறுத்தல்கள் மூலம் தரிசாக்கி முஸ்லிம்களை நடுத்தெருவில் நிற்க வைக்கவே பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

முஸ்லிம் விவசாயிகளுக்கும், முஸ்லிம் கிராமங்களுக்கும் பாதுகாப்பளிப்பது அரசின் தலையாய கடமையாகும் என இவ்வூர் வாசிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# இந்திய இராணுவத்தின் வெளியேற்றமும் தமிழ் தேசிய இராணுவத்தின் நிலை கொள்ளலும்

*29.07.1989 இல் வெளியேறிய இந்திய இராணுவம் சும்மாமவா சென்றார்கள்? முன்பு முஸ்லீம் மக்களை அட்டுழியப்படுத்தி, அநியாயங்கள் செய்த அதே துப்பாக்கி மனிதர்களைச் சட்டரீதியான தமிழ்த்தேசிய இராணுவம் (ரி.என்.எ.) என்ற பெயரில் அமர்த்திவிட்டுதான் சென்றார்கள். அவர்கள்சொல் லொணாத் துன்பங்களை விளைவித்தனர். சந்து பொந்துகளிலெல்லாம் துப்பாக்கிகளுடன் நின்றனர். முஸ்லீம்கள் யாரோ காரில் ஏறிச் சென்றால் இறங்கடா என்பார்கள். இறங்கிச் சென்றால் ஏறடா என்றார்கள்; நடந்து சென்றால் ஓடடா என்பர்; ஓடிச் சென்றால் நடடா என்பர்; இப்படியாக மக்களின் சமூக அந்தஸ்து, மனிதாபிமானம், விருத்தாப்பியம், கௌரவம் என்ற எந்த அடிப் படையுமின்றி எல்லோரும் இம்சிக்கப்பட்டனர். துப்பாக்கியின் துர்ப்பாக்கியம் இந்த மக்களை விட்டுவைக்கவில்லை. இந்த ரீ.என்.எ. இராணுவத்தினர் தமது வயல்களை விட்டு வழியில் வரும் முஸ்லிம்களின் உழவு இயந்திரங்களை இடைமறித்து பறித்தெடுத்துச் சென்று தங்கள் இனத்தவர் வயல்களை எந்தவித பணமுமின்றி உழுதனர். விதைப்புக்காக நெல் எடுத்துச் செல்லப்படும்; பத்துப் பதினைந்து பேருக்கு சோறு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI



சமைக்கப்பட்டு விதைப்பிறக்காகப் பண்படுத்திய நிலத்தின் நீர் எடுக்கப்பட்டிருக்கும். ஆனால், இங்கே உழவு இயந்திரம் கடத்தப்படும். இது எவ்வளவு பெரிய கொடுமையான துன்பம் என்பதை விவசாயிகள் மட்டுமே உணர முடியும். இதே போன்று தான் பிள்ளைப் பேறுக்காகக் காத்திருக்கும் பிரசவ வேதனை உள்ள பெண்ணை ஏற்றி வந்த கார் இவர்களுடைய தேவைக்காகத் திருப்பப்பட்டு எடுத்துச் செல்லப்படும். இப்படியான மனிதாபிமானத்துக்கு அப்பாற்பட்ட எண்ணிலடங்காத் துன்பங்கள். சரி அவர்கள் வந்த பின்பு தானும் கொலைகள் தடுத்து நிறுத்தப்பட்டதா? இல்லை.

*1989.06.10* ம் திகதி எம்.ஐ.எம்.முஸ்முதபா என்பவர் தமது வயலில் கிருமிநாசினி தெளித்துக் கொண்டிருக்கும் போது சுட்டுக் கொல்லப்பட்டார். என்ன என்று கேட்டதற்கு நாங்கள் புலிகளுடன் போரிட்ட போது இடை நடுவில் மாட்டிக் கொண்டார் என்றார்கள். அங்கு புலிகளும் வரவில்லை. பூனைகளும் வரவில்லை. எலிக்கு மரணம் பூனைக்கு வளையாட்டு என்பார்களே அதுபோல்தான் இவையெல்லாம். இந்த ரீ.என்.எ. இராணுவம் அம்பாரை மாவட்டத்தில் அதுவும் முஸ்லிம்கள், தமிழர்கள் வாழும் பிரதேசத்தில் மட்டுமே எற்படுத்தப்பட்டது ஆகவே, அந்த இராணுவத்தின் கெடுபிடிகளை இலங்கையில் வேறு யாரும் அனுபவிக்க முடியாத துர்ப்பாக்கியத்தை விஷேடமாச் சம்மாந்துறை மக்கள் பெற்றுக் கொண்டனர். இவர்களும் தங்கள் செலவுகளுக்காக நெல் அறவீடு செய்தனர். அப்போது வாகனங்களையும் கடத்திச் சென்றனர். கேட்கச் சென்றால், அது நாங்களில்லை எல்.ரி.ரி.ஈ என்றனர். பொது மக்களின் கருத்துப்படி ஒரே தமிழ் மக்களின் இளைஞர்களே அவ்வச் சந்தர்ப்பங்களுக்கேற்ப அந்த அந்த இயக்கங்களில் சேர்ந்து தமது துப்பாக்கியைக் கீழே வைக்காது பாதுகாத்துக் கொண்டனரே தவிர, வேறு ஒன்றுமில்லை. அத்தோடு முஸ்லிம்களின் உடைமைகளையும், உயிர்களையும் சூறையாடுவதில் இந்த இளைஞர்கள் மிக முனைப்பாய் இருந்தனர் என்பதையும் குறிப்பிட்டுக் காட்டவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக; கந்தன் என்ற சலவைத் தொழிலாளியின் மகன் சின்னத்தம்பி முன்பு 'ரெலோ' என்ற இயக்கம் எனக் கூறிக்கொண்டான். பின்பு தேசிய இராணுவம் (ரி.என்.ஏ) வந்தபின் அதே துப்பாக்கியுடன் இராணுவ வீரனாக வீதிவலம் வந்தான். அதன் பின் எல்.ரி.ரி.ஈ. வந்த போது அதன் ஒரு போராளியாக நின்றான். அப்படியாயின் இவர் போன்றவர்களை எப்படி இயக்கம் என்று கூறுவது என ஒரு பெரியார் குறிப்பிட்டுக் காட்டினார். இதே போன்று பல நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள் இருந்தனர். எனவேதான், முஸ்லிம்களுக்கு எதிரான தமிழ்த் தீவிரவாதிகளாக இவர்களை முஸ்லீம்கள் கண்டார்களே தவிர, ரெலோ அல்லது புளட்டாகவோ, புலியாகவோ அல்லது ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகவோ வேறுபாடுகள் உள்ள தமிழ் இயக்கங்களாக காண முடியவில்லை. இவர்கள் முஸ்லிம்களைக் கொலை செய்வதிலும், கொள்ளயிடுவதிலும் ஒரே நோக்கமுடையவர்கள் என்பதில் எதுவிதச் சந்தேகமும் மில்லை.

## மீண்டும் கொலைக்களம்

*1989.06.15*இல் எம்.குழந்தையும்மா என்ற *33* வயதுப்பெண்மணி கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டார். இவர் யாரோ ஒரு தமிழர் தன்னிடம் வந்து தஞ்சம் கோரிய போது ஓர் இரவு அவருக்கு உணவளித்து, ஓரிடத்தில் படுக்கச் செய்து மறுநாள் அனுப்பியதற்காக கொலை செய்யப் பட்டார். எல்.ரி.ரி.ஈ க்கு உதவினார் என்பது குற்றம். எவர்? என்ன இயக்கம் என்று யாருக்குத் தெரியும். அப்பாவிப் பெண்ணை அநியாயமாகக் கொன்றொழித்தார்கள் கொடும்பாவிகள்.

*1989.07.10*இல் வை.முகம்மது கலீல் என்பவர் இனம் தெரியாதோரால் அடித்தும் வெட்டியும் கொல்லப் பட்டிருந்தார். இவர் ஒரு புடைவை வியாபாரி. சைக்கிளில் புடைவைகளைக் கட்டிக் கொண்டு வீதி வழியாக விற்பவர். அவ்வாறு வியாபாரத்துக்குச் சென்ற போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப்பட்டு மறைவிடம் ஒன்றில் புதைக்கப்பட்டிருந்தார். அவரது வியாபாரப் பொருட்கள், பணம், சைக்கிள் என்பன இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

*1989.08.06* ஆம் தேதி கே.எல்.அலியார் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். எந்தவிதக் காரணமின்றி வயலுக்குச் சென்றவர் சுட்டுக் கொல்லப்பட்டார். சன நடமாட்டம் குறைந்து விட்டால் தனியொருவர் இப்போராளிகளின் கண்ணில் பட்டால் அவர் தப்பவே முடியாது. படுகொலை செய்யப்படுவது வழக்கமாகி விட்டது. அந்தளவுக்கு படுகொலை மலிந்து விட்டது.

*1989.11.13* இல் எம்.எம்.சறூக் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் கடமை முடிந்து வீடு நோக்கி தனிமையில் வரும் போது சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் காலம் இந்திய இராணுவம் ஜூலை மாதத்தில் வெளியேறி ரீ.என்.ஏ. படையினரின் ஆட்சிக் காலம். ஒரு மாகாணப் பொலிஸ் இவ்வாறு பக்க சார்பாக தமது சொந்தக் குரோதங்களைத் தீர்த்துக் கொள்ள அல்லது இனப்படுகொலையைச் சட்ட ரீதியாக மேற்கொள்ள முடியுமென்றால், மாகாண சபைச் சட்டம் பூரணமாக அமுல் படுத்தப்பட்டால் எப்படி துன்பப்படுத்துவார்கள் என மக்கள் தமக்கிடையே பேசிக் கொண்டார்கள்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# முஸ்லிம் பொலீஸார் படுகொலை செய்யப்பட்டனர்.

*1989.11.17* ஆம் திகதிதான் இலங்கையின் வரலாற்றில் ஒரு முக்கிய சம்பவம் இப்பிரதேசத்தில் மக்கள் மனங்களை விட்டகலாத கொடிய சம்பவம் இடம்பெற்ற நாள். அம்பாரை மாவட்டத்தில் உள்ள அதுவும் முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில் பொலிஸ் நிலையங்களும் காரைதீவு, சவளக்கடை ஆகிய உப- பொலிஸ் நிலையங்களும் ஒரே இரவில் இந்திய இராணுவத்தின் பூரண ஒத்துழைப்புடன் தாக்கப்பட்டன. அம்பாரை மாவட்டத்தினை விட்டு வெளியேறி ஐ.பி.கே.எப். அம்பாரை- மட்டக்களப்பு மாவட்டப் பிரிவெல்லையான நீலாவணைத் தமிழ் கிராமத்தில் நிலை கொண்டிருந்தது. அம்பாரை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களை தாக்கப் பக்க பலமாக ஐ.பி.கே.எப். உதவி செய்தனர்.

அன்றைய இரவு எல்லாப் பொலிஸாரும் எதிர்த்துப் போராடினர். சம்மாந்துறையைப் பொறுத்தவரை உள்ள தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பொலிஸ் நிலையத்தைத் தாக்கினர். பொலிஸ் நிலையங்கள் கைப்பற்றப்பட்டால் எங்களுடைய ஆட்சி; அதுவும் தமிழர்களுடைய ஆட்சி நடைபெறும் எனக் கருதினர். வெளிப்படையாகவே சொன்னார்கள். சம்மாந்துறையில் முஸ்லிம்கள் வாழும் பகுதிகள் முழுவதும் அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாட்டம் இருந்தது. முஸ்லிம்கள் தமிழர்களை வெறுத்திருந்தால் அல்லது அவர்களைப் பழி வாங்க வேண்டும் என எண்ணியிருந்தால் அன்று நூற்றுக்கணக்கான துப்பாக்கித் தமிழ் இளைஞர்களை எதுவித சிரமமின்றிக் கொன்றிருக்க முடியும். அப்படி எதுவும் அவர்கள் செய்யவில்லை. அதிகாலையில் விமான ஹெலிகொப்டார்கள் மூலம் ரி.என்.ஏ.இனர் தூக்கப்பட்ட போது பலர் முஸ்லிம் வீடுகளில் தஞ்சம் புகுந்தனர். முஸ்லிம் பிரதேசங்களின் சந்து பொந்துகளில் எல்லாம் படையினர் என்று சொல்வதை விட தமிழ் மக்கள் ஒழிந்திருந்தனர் என்லாம். அவர்கள் எவருக்காவது முஸ்லிம்கள் அநியாயம் செய்யவில்லை. முன் கூறியவாறு பல ஊர்கள், பல உயிர்கள் அழிக்கப்பட்ட நிலையிலும் கூட முஸ்லிம்கள் எதுவும் செய்யாது பொறுமையையே கடைப்பிடித்தனர். அபயமளித்தனர். அதே வேளை அஸ்பத்திரிச் சந்தியில் உள்ள முஸ்லிம் ஒருவரின் தேனீர் கடையையும் கொள்ளையிட்டு, நாசப்படுத்தினர் இந்த நாகரிகம் கெட்ட, மனிதாபிமானமற்ற ரி.என்.ஏ. இனர். அன்றிரவு போராட, அவர்களுக்கு வெடி பொருட்களைத் தூக்கிச் செல்லத் தமிழ்ப் பெண்களும், வயோதிபர்களும் பயன் பட்டனர். மோட்டார் குண்டுகள், அவற்றை இயக்குவதற்கு வேண்டிய பெரிய பெரிய பற்றரிகள் என்பன மற்றையோரால் தூக்கிச் செல்லப்பட்டன. விடிந்ததும் பகலில் பார்த்த போது எத்தனையோ தமிழர்கள் இயக்கத்தில் இல்லை என நம்பப்பட்டவர்கள் அன்றைய தாக்குதலில் சம்மந்தப் பட்டமை மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. எப்படியும் இந்நடவடிக்கைகள் அனைத்துக்கும் தமிழ் மக்கள் அனைவரும் உடந்தையானவர்கள் என்ற எண்ணம் முஸ்லிம்கள் மத்தியில் வளர்ந்து விட இந்தச் சம்பவமும் காரணமாகியது. 1989 மே கலவரத்துக்கு நினைத்திருந்தால் பலமான பழியை அன்று இரவு முஸ்லிம்கள் வாங்கியிருக்க முடியும். அத்தனை நாடகத்தையும் பார்த்துக்கொண்டு முஸ்லிம்கள் அமைதி காத்தனர். அன்றைய இரவும் இந்தத் தமிழர்கள் இவ்வாறே ஒத்து நின்று செயற்பட்டிருப்பார்கள் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI



விடிந்தது பொழுது; சம்மாந்துறைக்குப் பக்கத்தில் உள்ள காரைதீவு உப-பொலிஸ் நிலையத்தில் எந்தவித சப்தமுமில்லை என மக்களும், அதிகாரிகளும் பேசிக் கொண்டனர். பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டதால், எத்தனையோ வேலையற்ற இளைஞர்கள் பொலிஸின் சேர்ந்து தமக்காகவும், தாய் நாட்டுக்காகவும் தொண்டு செய்யப் புறப்பட்ட தத்தம் மைந்தர்களை அந்தப் பெற்றோர்கள் தேடினர். நேரமும் பகலாகிறது. கதைகளும் ஒன்றும் இரண்டுமாகப் பரவுகின்றன. பின் அந்த நிலையத்தின் பொறுப்பதிகாரி "நிந்தவூரில் தஞ்சமடைந்து விட்டார்; அங்குள்ள ஏனையவர்களைக் காணவில்லை" என்ற போது பெரிய பொலிஸ் பந்தோபஸ்த்துடன், விமானப்படையின் உதவியுடன் சென்று பார்த்த போது நாற்பத்தி நான்கு *(44)* சடலங்கள் வீங்கி வெடித்த நிலையில் நாற்றமெடுத்துக் காணப்பட்டன. இங்கிருந்தவர்கள் எல்லாமாக 60 பேர். இரு பொறுப்பதிகாரிகள் உட்பட 62 பேர் இருந்தனர். இவர்கள் அனைவரும் தமிழ் பேசும் முஸ்லிம்களும், தமிழர்களுமே. அவர்கள் ஊர் மக்களுடனும், போராளிகளுடனும் கூட நட்புடையவர் களாகவே இருந்தனர். மிகக் கூடிய நம்பிக்கையுடன் அந்த இடத்தில் அவர்கள் இருந்தார்கள். இப்பகுதியில் இது போன்ற உப-பொலிஸ் நிலையங்கள் மல்வத்தை, ஒலுவில் போன்ற இடங்களிலும் இருந்தன. அவை, *17.11.1989*க்கு முன்னரே போதிய பாதுகாப்பு இல்லையென மூடப்பட்டன. ஆனால், இந்த காரைத்தீவு நிலையம் மூடுவதற்கு ஆலோசிக்கப்பட்ட போது அங்கிருந்தவர்கள் எங்களுக்கு இருக்க முடியும் எனக்கூறினர். ஏனெனில், நாங்கள் மக்களுடனும், ஏனையோருடனும் மட்டுமன்றி ரீ.என்.ஏ.இராணுவத்துடனும் நல்லுறவுடன் இருக்கிறோம் என்று கூறி விட்டனர். பொலிஸ் அதிகாரிகளும் அதனை நம்பி அந்நிலையத்தை இயங்க விட்டு விட்டனர்.

இன்னுமொரு முக்கிய அம்சம், அங்கிருந்த அனைவரும் மிக அண்மையில் பொலிஸ் படைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டு சம்மாந்துறைக் பொலிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள். இவர்களுடன் இவ்வாறு நண்பர்களாக இருந்த ரி.என்.ஏ. இனர் 17.11.1989 அன்று இரவு அந்த நிலையத்துக்குச் சென்று இங்கு புலிகள் இருக்கிறார்கள்' என எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது. நாங்கள் இவர்கள் அனைவரையும் பரிசோதிக்க வேண்டுமெனப் பொறுப்பதிகாரியிடம் கேட்ட போது, தூங்கிக் கொண்டிருந்தவர்களையும் விழிக்கச் செய்து அனைவரையும் துப்பாக்கிகளை வைத்துவிட்டு வரிசையில் நிற்கச் செய்து தமிழர்களை வேறாகவும், முஸ்லிம்களை வேறாகவும் பிரித்தெடுத்து நாங்கள் இந்தத் தமிழர்களைப் பரிசோதிக்க வேண்டும் என்று கூறி மற்றவர்கள் அனைவரையும் குப்புறப் படுக்கச் செய்தனர். அதன்படி முஸ்லிம் பொலிஸார் அனைவரும் குப்புறப்படுக்க அவர்களைச் 'சுடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. உடனே அவர்கள் அனைவரும் வந்த ரி.என்.ஏ.இனரால் சுடப்பட்டனர். அப்போது சிலர் தப்பியோடிய போதும் ஓடஓடச் சுடப்பட்டனர். அதில் பொறுப்பதிகாரியான சம்சுதீன் என்பவரும், இன்னும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரையும் தவிர அனைத்து முஸ்லிம்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர்; தமிழர்கள் அனைவரும் எவ்வித நிபந்தனையுமின்றி விடுவிக்கப்பட்டனர்.

அத்தனை பொலிஸாரும் சரணடைந்து ஆயுதங்களைக் கையளித்த பின் அவர்களில் முஸ்லிம் பொலிஸார் மட்டும் சுட்டுக் கொல்லப்பட்டது எந்த யுத்த தர்மத்தைச் சார்ந்தது? எந்த நீதிக்கு உட்பட்டது? எங்கே இவர்களின் சமயக் கோட்பாடுகள்? ஆயுதங்களைக் களைந்து நிராயுதபாணியாக்கி படுக்க வைத்துவிட்டு சுட்டுக் கொன்ற கோழைத்தனத்தை என்னவென்பது? இது யாரை ஆத்திரமடையச் செய்யாமலிருக்கும்? சற்று சிந்தனைக் குட்படுத்தினால், அன்றிரவு முழுவதும் யுத்தம் புரிந்தும் எந்தப் பொலிஸ் நிலையத்தையும் ரி.என்.ஏ. இனரால் கைப்பற்ற முடியவில்லை. அப்படியிருக்க இந்த பொலிஸாரும் போராடியிருந்தால் தப்பித்திருக்க முடியாதா? ஆனால், நம்பிக்கையின் நல்லுறவின்பேரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணடைந்தமையால் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதுவும் அனைவரும் முஸ்லிம்கள் என்ற காரணத்தினால். முஸ்லிம் சமூகத்தின் ஆத்திரத்தை எண்ணிப்பாருங்கள். அதுவும் கொல்லப்பட்டவர்களில் 30 பேர் சம்மாந்துறையைச் சேர்ந்தவர்கள் என்றால் சம்மாந்துறை மக்களின் மனநிலை எவ்வாறிருக்கும் என்பதை 'உள்ளம்' உள்ள யாவரும் உணர்ந்து கொள்ள முடியும். இத்தகைய செயல் அன்றிரவு சம்மாந்துறை மக்களுக்குத் தெரிந்திருந்தால் சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தைத் தாக்கிய யாரும் தப்பிச் சென்றிருக்க முடியாது என்று மக்கள் பேசிக் கொண்டார்கள். உடனுக்குடன் முஸ்லிம்களின் பொறுமைக்கும், நன்றிக்கும் பழிவாங்கலும், பரீட்சிப்பும் செய்தனர் புரிந்து கொள்ள முடியாத தமிழ் இனவெறி இளைஞர்கள்.

அன்று காரைதீவில் இருந்து அத்தனை பிரேதங்களும் நாற்றமெடுத்த பிரேதங்களாக, அலங்கோலமாக்கப்பட்ட சின்னாபின்னமாக்கப்பட்ட பிணங்களாகவே கொண்டு வரப்பட்டன. போத்தல், போத்தலாக 'அத்தர்' ஐ ஊற்றி தனது சொந்தம், இனம், ஊர் என்ற உணர்வுகளுடன் அடக்கம் செய்து முடிந்ததும் ஊர் மக்கள் திரண்டிருந்த மரண அடக்க நிகழ்ச்சியின் இரங்கலுரையில் பல பெரியார்கள், "பொறுமையைக் கடைப்பிடியுங்கள்; இறைவன் உங்களை பாதுகாப்பான்; இறைவனிடம் பிராத்தனை செய்யுங்கள்" என்று உபந்நியாசம் செய்ய மக்கள் அதனை ஏற்று தம் ஆத்திரங்களையெல்லாம் விழுங்கிக் கொண்டனர். இது எங்கள் இஸ்லாமிய வரலாறு கற்றுத் தந்த பாடம். சம்மாந்துறையும் ஏனைய எட்டுக் கிராமங்களும் எரிக்கப்பட்டு, சூறையாடப்பட்டு சரியாக ஆறு மாதங்களில் இந்தப் படுகொலை நிகழ்ச்சி இடம்பெற்றது. மக்களின் தாங்கொணாத் துயரத்தையும், ஆத்திரத்தையும் அடக்கிக் கொண்டு தமது தலைவர்களின் போதனைகளை ஏற்று அடங்கியிருந்து விட்டனர். என்றாலும் சம்மாந்துறை மக்களுக்கு துன்பத்துக்கு மேல் துன்பம்; கொலைக்கு மேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை மேலும் மேலும் தொடர்ந்து நடைபெற்றன. கிராமங்கள் அழிக்கப்பட்டன. அதுவும் சொந்தக்காரர்கள் பார்த்திருக்கும் போதே வீடுகள் சுழற்றிச் செல்லப்பட்டன. இந்திய இராணுவத்தின் அனுசரணையுடன் கொலைகள் செய்யப்பட்டன; கொள்ளைகள் இடம் பெற்றன. இவையெல்லாம் மனித உரிமை மீறல்கள் இல்லையா? மிகப்பெரிய அநியாயமான ஆதிக்க அராஜக வெறியல்லவா? இது மனித உரிமைகள் குழு பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு புலப்படவில்லை. இவற்றுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா? கேவலம், மனித உரிமை மீறல்களை இவர்கள் இனரீதியாகவே பகுத்துப் பார்க்க முற்படுகிறார்கள். பக்கச்சார்பாக எல்லாவற்றையும் நடத்திக் கொண்டு செல்லப் பார்க்கிறார்கள். இந்தப் 'பக்கம் சாரல்' மனித உரிமை பற்றிப் பேசுகின்ற குழுவுக்கோ அல்லது செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கோ இருக்கவே கூடாது அல்லவா? இவை இன்னும் நிறுத்தப்படவில்லையே.

தமது உரிமைகளுக்காகப் போராடும் ஒரு சிறுபான்மை இனம் மற்றொரு சிறுபான்மை இனத்தை நசுக்குவது அல்லது அவர்களை இல்லாதொழிக்க நினைப்பது எவ்வளவு அறிவீனம்? அல்லது அவ்வாறு அடக்கி ஒடுக்க எண்ணுவது நியாயமா? அப்படியாயின் தமிழர் இயக்கங்கள் ஏன்? ஏன் இவர்கள் கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைக்கிறார்கள்? எவ்வாறு ஒரு பெரும்பான்மையினரால் நசுக்கப்படக்கூடாது என்று எண்ணுகின்ற இவர்கள், அதற்காகப் போராடுகின்ற இவர்கள் அதே வேளையில் இன்னொரு சிறு பான்மையினரை அழித்தொழிக்கவே முற்படுகின்றார்கள் என்றால் அது எத்தகைய ஆத்திரத்தை உண்டு பண்ணும். இதுதான் நடக்கின்றது. ஒரு பெரும்பான்மையினால் அடக்கப்பட்டு- அதற்கு எதிராகப் போராடிக் கொண்டு 'தமிழ்ப்பேரினவாதம்' பேசுகின்ற பேதைமையை எண்ணி என்ன சொல்வது? முஸ்லிம்கள் என்பதற்காக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறையில் பிறந்தவர்கள் என்பதற்காகப் பலர் தினமும் கொல்லப்பட்டனர். கண்ட இடத்தில் சந்தர்ப்பமெனின் சாவடித்தனர். இதற்கிடையே பலர் அடித்து- துன்புறுத்தப்பட்டனர். கொள்ளை செய்யப்பட்டு நலிவடையச் செய்யப்பட்டனர். மனோநிலை மாறும் அளவுக்குக் கொடுமை செய்தனர். தொழில் செய் இடங்களில் (வயல்களில்) மிதி வெடிகளினால் ஊனமாகி கால், கையை இழந்தனர். தொழில் செய்ய முடியாதவர்காளயினர். இணைக்கப் பட்டுள்ள ஊனமுற்றோர் பட்டியலில் இதனை அவதானிக்கலாம். இந்த வசனங்கள் வெறும் வசனங்களல்ல. பல்வேறு பின்னணிகளைக் கொண்ட ஆழமான வசனங்கள். அந்தச் சம்பவங்கள் அனைத்தையும் விரிவஞ்சிக் கூறா விட்டாலும் அவை அனைத்தும் மக்கள் மனத்துயரங்களில் இருந்து மறக்க முடியாதன. மாற்ற முடியாதன.

அத்தோடு, இலங்கை- இந்திய ஒப்பந்தமும் இந்தியப்படையின் ஊடுருவல் காரணமாக இத்தனை கொடுமைகளுக்குக் கூட, இலங்கை அரசாங்கம் எதுவும் செய்ய முடியாத நிலை முஸ்லிம்களின் அபாக்கிய நிலையையே எடுத்துக் காட்டுகின்றது. இவைகளுக்கு மத்தியில் எந்தளவு துன்பங்களை சகித்துக் கொண்டிருந்தனர் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இத்தனை துன்பமும் இந்தத் தமிழ் கிராமங்களில் வாழ்பவர்களால் செய்யப்படுவதாகக் கருதப்பட்டாலும் "அவர்கள் நாங்களில்லை; அது அந்த இயக்கக்காற வேறு ஊர்ப் பொடியன்கள்; வட மாகாணத்தவர்கள்; எங்கள் சொல்லை அவர்கள் கேட்பதில்லை" என்றெல்லாம் கூறி வந்தனர். முஸ்லிம்களும் நேரடியாகக் காண முடியாத நிலை இருந்து வந்தது. ஒரு சம்பவத்தை நேரில் காணும் அனைவரும் கொல்லப்பட்டு விடுவர். அதன் பின் செய்தவர்கள் பற்றியோ, செயல் பற்றியோ சொல்வதற்கு சாட்சிகள் இருப்பதில்லை. படுகொலை செய்யப்பட்ட சடலங்கள்தான் மிச்சம். கொள்ளைகள் நடத்தும் போதும் வெளியூர்க்காரர்களைக் கொண்டே நடத்தி வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்வும் அந்நியோன்னியமாகப் பழகும் தமிழ் மக்கள் கூட முஸ்லிம்களிடம் 'எதையும் சொல்ல மாட்டார்கள். யாவற்றையும் மறைத்து வைத்துக் கொள்வார்கள். ஒரு காரியம் நடைபெற்ற பின், உனக்கு அது தெரியுமாமே; நீ ஏன் சொல்லவில்லை' என்று நட்பின் நிமிர்த்தம் கேட்டால் "அது இயக்கக்காரர்கள் என்னைக் கொலை செய்து விடுவார்கள்; அதனால்தான் கூறவில்லை" என்பார்கள்.

உதாரணமாக, ஜனாப். எம்.ஏ. அப்துல் மஜீது எம்.பி. அவர்களின் மெய்க்காப்பாளரினதும், மற்றொருவரினதும் கடத்தலின் போது நடைபெற்ற சம்பவத்தைக் குறிப்பிடலாம். இது நடைபெற்ற தினமும், மறு தினமும் சம்மாந்துறை மக்கள் மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பள்ளிவாயலில் திரண்டிருந்தனர். அப்போது இந்தப் பிரச்சினை இந்தியப் படையினரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அவர்கள், இந்தக் கடத்தலை யார் செய்தனர்? என வினவிய போது; "சுந்தரம்,......" என்றும், அவரின் விலாசமும் கூறப்பட்டது. தமிழ்- முஸ்லிம் சமாதானக் கூட்டத்தின் போது வீரமுனைக் கிராம சேவகர் திரு.பொன்னம்பலம் என்பவரிடம் விசாரிக்கப்பட்ட போது; 'அவர்களைத் தனக்குத் தெரியாது' என்று சொல்லி விட்டார். இவரும் மற்றும் ஒரு பாடசாலை அதிபரும் தான் இந்த நாடகங்களின் சூத்திரதாரிகள். குறிப்பாக வீரமுனையை ஆட்டிப்படைத்த ரெலோ இயக்கத்தினர் இவர்களின் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்தனர் என்பது பரம இரகசியமாகும். இவ்வாறு எல்லாத் தமிழர்களும், எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு தெரியாமல் நடந்து கொண்டனர். இவர்கள் அனைவருமே இத்தனைக்கும் பொறுப்பாளிகளாவர்.

## தொடரும் இனவெறித் தாக்குதல்

தமிழ்த் தீவிரவாதிகளின் பேரினவாதத் தன்மையின் கொலைச் சப்தம் மீண்டும் கேட்கின்றது. 1989.12.20.இல் ஐ.ஏ.றஹீம், ஏ.றமழான், எஸ்.எல்.கரீம் என்ற மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்கள் தமது வயல்களுக்கு 'கள்ளியம்பத்தை' என்ற வட்டைக்குச் சென்ற போது சுட்டுக் கொல்லப்பட்டு புற்புதர்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்தனர். இதுவும் இரு நாட்களின் பின் ஊர்ச் சனங்கள் முழுவதும் திரண்டு சென்று வட்டை முழுவதையும் தேடிய போதுதான் கண்டுபிடிக்கப்பட்டது. எந்தக் காரணமுமின்றி இக்கொலை நாடகம் நடந்தேறியது. முன்பொரு தடவை முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதப்பயிற்சி பெறுகிறார்களா? என்ற சந்தேகத்தைக் கூட தாங்க முடியாது கூட்டத்தோடு சுட்டுக் கொன்றார்கள் என்றால் இந்த அப்பாவிகள் அநியாயமாகக் கொல்லப்பட்டதற்கு யாது காரணம்? இவர்கள் என்ன செய்தார்கள்? முஸ்லிம்களைப் பொறுத்த வரை உயிர் பிரிந்து உடலில் வெப்பம் அடங்கியதும் அடக்கம் செய்ய வேண்டும் - என்ற கொள்கையயுண்டு. அப்படியே இஸ்லாம் மதம் கூறுகின்றது. எப்படியாயினும் அவர்கள் ஜனாஸாக்களை முடியுமானவரை விரைவாகவே அடக்கம் செய்வார்கள். அப்படியானவர்கள் மேலும், மேலும் நாற்றமெடுத்த சடலங்களை அடக்கம் செய்வது அவர்கள் மனங்களையும், மார்க்க முறைமையினையும் மீறிய நிகழ்வாகவே அமைந்திருந்தது. மேற்கூறிய மூன்று மையித்துக்களும் கொண்டுவர முடியாதளவு பழுதடைந்து விட்டன. எனவே, அவை அங்கேயே அடக்கம் செய்யப்பட்டன என்றால் இந்த மையித்தின் உற்றார், உறவினர், ஊரவர்களின் சமூக உணர்வு என்பவற்றை எண்ணிப் பாருங்கள். எந்தளவு ஆத்திரம் இந்தத் தமிழர்கள் மீது ஏற்படும். இவற்றையெல்லாம் ஏன் மனித உரிமை ஆணைக்குழு கவனத்தில் எடுக்கவில்லை. ஏன் இது மனித உரிமை மீறல் இல்லையா? முஸ்லிம்கள் யார்? புரிய முடியாது பேதம் காட்டும் பாங்கில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் மனித உரிமைக் குழுவுமா துரோகம் செய்கின்றது?

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைக் காக்க முன்வந்து தம்மை அர்ப்பனஞ் செய்த 39 தியாகிகளின் நினைவாக..

மூவின மக்களும் இரண்டறக் கலந்து வாழும் ஒரு மாவட்டமே அம்பாறையாகும். இங்கிருந்து இந்திய அமைதி காக்கும் படையினர் வெளியேறியதும் மக்களின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட தற்காலிக பொலீஸ் நிலையங்களுள் ஒன்றே காரைதீவு உப பொலீஸ் நிலையம்.

ஓர் இக்கட்டான கால கட்டத்தில் தம் உயிரை அற்பம் என மதித்த நாட்டைக் காக்கும் பணிக்காக முன்வந்தார்கள் சம்மாந்துறை, சாய்ந்தமருது, நிந்தவூர், மாளிகைக்காடு போன்ற இடங்களை சேர்ந்த 40 முஸ்லிம் இளைஞர்கள். இவர்கள் ரிசேர்வ் பொலீஸ் படையிலும் சீ வி எப் லும் அங்கம் வகித்தவர்கள். காரைதீவு உப பொலீஸ் நிலையத்தில் மொத்தம் 92 பேர் கடமையில் ஈடுபட்டிருந்தனர். (இதில் 52 பேர் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள்).

**இவர்களுக்கு நேர்ந்தது என்ன? அன்று (17-11-89) தான் தமது கடைசிநாள் என்பதை அவர்கள் கனவில்தானும் நினைத்திருப்பார்களா? கடமையில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த இவர்களை அன்று அதிகாலை நவீன ஆயுதங்களுடன் வந்த ஒரு தீவிரவாதக் குழு அங்கிருந்த மொத்தம் 40 முஸ்லிம்களை மாத்திரம் புறம்பாகப் பிரித்த நிலத்தில் படுக்க வைத்து சுட்டுப் படுகொலை செய்தது. [இக்கொலை வெறியாட்டத்தில் ரிசேர்வ் சப் இன்ஸ்பெக்டர் ஜனாப் எம் சம்சுதீ ன் (சாய்ந்த மருது) தெய்வாதீனமாகத் தப்பி தற்போது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்] பின்னர் இக்குழுவினர் அசிட் பூசப்பட்ட கத்தியால் அடையாளமே கண்டுபிடிக்க முடியாதளவு வெட்டி அசிங்கப்படுத்தினர். இதற்குக் காரணம் என்ன? இதனை ஏன் அவர்கள் செய்ய வேண்டும்? இந்த மிலேச்சத்தனமான, காட்டுமிராண்டித் தனமான ஈனச் செயலுக்கு அக்கோஷ்டியினர் தரும் விளக்கம் தான் என்ன?

நாட்டைக் காக்கும் ஒரு தூய்மையான பணிக்கு தம்மை அர்ப்பணஞ் செய்த அவர்களுக்கு கிடைத்த சன்மானமா இது? உலக சரித்திரத்திலேயே என்றுமே எங்கேயாவது நடைபெற்றிராத ஒரு மூர்க்கத்தனமான செயல் இதுவாகும்.

இது போன்ற ஒரு சம்பவம் ஒரு போதுமே நிகழக் கூடாது. நாட்டுக்காக தம்மை அர்ப்பணஞ் செய்த இந்த வீர புருஷர்களை ஆண்டவா உனது நல்லடியாரின் பட்டியலில் சேர்த்து விடுவாயாக. யா அல்லாஹ்! இந்த தியாகச் செம்மல்களுக்கு "ஜென்னதுல் பிர்தௌஸி"யை வழங்குவாயாக. ஆமீன் ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

**— நம்பிக்கையாளர் சபை**
**சம்மாந்துறை**

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI





எம் நவ்லூத்
வயது 23
சம்மாந்துறை



ஏ எம் காலிதீன்
வயது 19
சம்மாந்துறை



ஏ சலீம்
வயது 22
சம்மாந்துறை

எம். ஏ. புகாரி
வயது 22
சம்மாந்துறை



யூ பாறூக்
வயது 22
சம்மாந்துறை



ஏ எம் முஸம்மில்
வயது 22
சம்மாந்துறை



ஐ எல் நூர்தீன்
வயது 23
நிந்தவூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வை அபூபக்கர்
வயது 23
சம்மாந்துறை



ஏ சீ எம் நவாஸ்
வயது 20
சம்மாந்துறை

ஐ. முனாஸ்
வயது 19
சம்மாந்துறை



ஐ எல் நூர்முகம்மட்
வயது 25
நிந்தவூர்



ஏ சம்சுதீன்
வயது 24
சம்மாந்துறை



கே எம் லாஹிர்
வயது 22
சம்மாந்துறை



ஏ எல் றசீட்
வயது 23
சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐ இப்றாலெவ்வை
வயது 22
சம்மாந்துறை



ஐ சம்சுதீன்
வயது 22
நிந்தவூர்

PUBLIC LIBRARY
KALMUNAI



எம் எல் ஜனூபர்
வயது 23
சாய்ந்தமருது. கல்முனை



எம் ஏ றசூல்
வயது 22
சம்மாந்துறை



எம்.மதனா சாஹிப்
வயது 20
சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRA
KALMUNA



எஸ் எல் நாளீர்
வயது 25
சாய்ந்தமருது, கல்முனை



எம் அமீர் அலி
வயது 23
சம்மாந்துறை



ஐ அலியார்
வயது 23
சம்மாந்துறை



எம் ஏ ஆதம்பாவா
வயது 25
சம்மாந்துறை



எம் றபீக்
வயது 23
சம்மாந்துறை



எம் சல்பியார்
வயது 23
சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI



ஐ எல் ஏ றஹீம்
வயது 23
நிந்தவூர்



எம்/நாசர்
வயது 18
சம்மாந்துறை

கலை. ஏ. றசூல்
வயது 23
சாய்ந்த மருது



ஏ கலந்தர்லெவ்பை
வயது 20
சம்மாந்துறை



யூ எல் ஆதம்லெவ்வை
வயது 24
நிந்தவூர்



ஏ எல் நியாஸ்தீன்
வயது 22
சம்மாந்துறை



ஏ எம் முர்சலீன்
வயது 21
சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரி. ஆதம்பாவா
வயது 23
சம்மாந்துறை



எச் முஸ்தபா
வயது 23
நிந்தவூர்

ஏ.ஏ. மனாப்
வயது 23
மாளிகைக்காடு
கல்முனை



எம். ஐ. அச்சிமுகம்மது
வயது 23
சம்மாந்துறை



எம் ஏ மன்சூர்
வயது 20
சம்மாந்துறை



ஏ றசீன்
வயது 18
சம்மாந்துறை



ஏ எல் மீராமுகைதீன்
வயது 20
சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரஜைகள் குழுத் தலைவரின் செய்தி

சென்ற *1989-11-17* ஆம் திகதி காரைதீவு உப பொலீஸ் நிலையத்தில் கொடூரமாக முஸ்லிம் பொலீஸார் படுகொலை செய்யப்பட்ட செயல் இருண்ட ஆபிரிக்காவில் காணப்படும் மனிதரையே உண்ணும் கேவல வாழ்க்கை முறையையும், ஹிட்லர் யுகத்திலிருந்த பாஸிஸவாதிகளையுமே நினைவூட்டுகிறது. இந்தக் கொடூர கொலைச் செயல் வட கிழக்கில் எவ்வளவுக்கு நாகரீகமும் ஒழுங்கான வாழ்க்கை முறையும் கீழே இறங்கிச் சென்றுள்ளன என்பதையே உணர்த்துகிறது.

தொடரும் இவ்வாறான இனப் படுகொலைகள் நீண்ட கால இன விரிசலுக்கு தளமாக அமையும் என்பதையும் சம்மந்தப்பட்ட சக்திகள் மறந்து விடக் கூடாது. படுகொலை செய்யப்பட்ட இவ் வாலிபர்கள் வாழ்வின் வசந்தத்தை அறியாத இளம் வண்ணப் பூக்களாகும். இவர்களின் மறைவினால் வேதனையடையும் நெஞ்சங்களுடன் பிரஜைகள் குழுவும் பங்கேற்பதுடன் இவர்களின் மறுமை வாழ்வின் ஈடேற்றத்திற்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

**சட்டத்தரணி**

**. யூ எல் எம் முகைதீன், ஜே பி யூ எம்,**

*பிரஜைகள் குழுத் தலைவர்,*

*சம்மாந்துறை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

## "மஜ்லிஸ் அஷ்ரஷுறா" அமீரின் செய்தி

காரைதீவு உப பொலீஸ் நிலையத்தில் சென்ற *17-11-89* இல் நடைபெற்ற திகிலூட்டும் சம்பவம் உண்மையிலேயே யாரும், எப்போதும் மறக்க முடியாத ஒரு சோக நிகழ்வாகும்.

மனித உயிர்களை ஈவிரக்கமின்றி மிருகத்தனமாகக் கொலை செய்வதற்கும் மனிதர்கள் இருக்கின்றார்களா என்பதை நினைக்கும் போது நாம் மிகவும் ஆச்சரியப்பட வேண்டியுள்ளது.

மக்களைக் காக்க, அவர்களின் பாதுகாப்பை ஸ்திரப்படுத்த முன் வந்த இத் தியாகிகளுக்கு யா அல்லாஹ், நல்ல பாக்கியத்தையும் அருளையும் கொடு! மேலான கிருபையாளனே சுவனபதியில் அவர்களுக்கு "ஜென்னத்துல் பிர்தௌஸி" யை இல்லமாக்கிக் கொடு!

**மௌலவி அல்ஹாஜ் எம் பி அலியார் (ஹஸரத்)**
அமீர். மஜ்லிஸ் அஷ்ஷுறா
அதிபர், தப்லீகுல் இஸ்லாம் அறபுக் கல்லூரி,
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர்க்கம் நோக்கிய ஷுஹதாக்களே!

மன்சூர் - ஏ - காதிர்

---

பிணம் தூக்கமட்டுமே தெரிந்துள்ள
ஒரு சமுதாயத்தவர்களின்
முள்ளந்தண்டுகளில் முளைவிட்ட
பால் மணம் மாறா விடலைப் பிஞ்சுகளே!
சமுதாயத்தின் சவக்களையைப் போக்க
அக்னி ஜுவாலையெனப் புறப்பட்ட
விடிவெள்ளிகளே!
பூதப் பிசாசுகள் அகதி முகாமிலே
குண்டு போட்டமை போல
வெள்ளிகள் பூக்காத
ஒரு வெள்ளிக் கிழமையின் கரிய இரவிலே
“சரணடைந்தோம் அபயம்” என
நிராயுத பாணியாய் நீங்கள்
கரங்களை உயர்த்தியும் கதறியும்
உங்களைக் குப்புறப் படுக்கவைத்து
குறிபார்த்துக் குதறின
அந்தத் துப்பாக்கி மிருகங்கள்.
சரணடைந்தோரில்
முஸ்லிம் பொலீஸாரை மட்டும்தானாமே
அந்தத் துப்பாக்கிகளுக்குச் சுடத்தெரியுமாம்!
சத்திர சிகிச்சை செய்யும் கத்தி
கொலைகாரனின் கையிற் கிடைப்பின்
அதுவும் கொலையைத்தான் செய்யும்.
அதுபோல,
போராளியின் கரங்களை
அலங்கரிக்கின்ற துப்பாக்கி
இனவெறியனின் கையிற் கிடைத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மனச்சாட்சியின் ஆணையைப் பெற்றா
வெடிக்கப் போகிறது?

மய்யித்தாய்க் கிடந்த நம் சமுதாயத்திற்கு
ஜீவனாக வந்த உங்களை
மய்யித்தாக காணும் விதிதானா
இந்தச் சமுதாயத்திற்கு?

ஆடையெனப் புறப்பட்ட உங்களுக்கு
பதிலாக
கபன் அணிவிக்க மட்டுமே
இச்சமுகத்துக்கு இன்று முடிந்துள்ளது.

வீரவாழ்த்துக்கள் சொரியவேண்டிய நாம்
தல்கீன் வரிகளைத்தானே
உங்களுக்குத் தாரை வார்த்தோம்.

சுவர்க்கம் நோக்கிப் பயணம் செய்த
உசாமாக்களே,
இனவாத மண் வெட்டியால்
அவர்களின் சவக்குழியை
அவர்களே வெட்டிக் கொண்டார்கள்.

சென்றுவருக எம் இளைய புதல்வீர்,
சொர்க்கத்து ஹூர்லின்கள் உங்களுக்குப்
பூச்சொரியட்டும்.
சுகமான கபுறறைகள் உங்களுக்குப்
பூங்காவாய் ஆகட்டும்.
அல்லாஹ்வின் நல்லருள் உங்கள்
ஆத்மாவிற்குக் கிடைக்கட்டும்.

நாளை நிட்சயம் நமக்காய் விடியும்
அந்த விடியலிலே உங்கள்
சந்ததிகள்.....
சந்ததிகள்.....
சந்ததிகள்.....!

**வெளியீடு:** ஜம்இயதுல் உலமா சம்மாந்துறை

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

(*g*) Yes.

(*h*) Does not arise

## සම්මන්තුරේ තත්ත්වය : විදේශ කටයුතු අමාත්‍යතුමා සහ රාජ්‍ය ආරක්ෂාව සඳහා රාජ්‍ය අමාත්‍යතුමාගේ ප්‍රකාශය

## சம்மாந்துறை நிலைமை : வெளிநாட்டலுவல்கள் அமைச்சரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமானவரது கூற்று

## SITUATION IN SAMMANTURAI: STATEMENT BY MINISTER OF FOREIGN AFFAIRS AND MINISTER OF STATE FOR DEFENCE

ගරු රන්ජන් විජේරත්න මහතා
(கௌரவ ரஞ்சன் விஜேரத்ன)
(The Hon. Ranjan Wijeratne)

Mr. Speaker, I wish to thank you for the opportur given to me to make a statement regarding the p situation in Sammanturai.

Consequent to the eruption of Sammanturai His Excellency the Pre conference at the request of M

Government Group and dir ng Army Commander Gene nghe, Inspector-General of era and Military Liaison dian High Commission Colo . and report to him on the exe nturai.

Havin th the Indian Military Comr zens Committee, the team vis as to assess the damage to ment of people from their homes. ents are:

(1) th May 1989 at Veeramuni junction three Muslim youths were killed by Tamil militants.

(2) On 14th May 1989 one Ahamed Lebbe complained to the police that the body of his missing son, who was abducted 1 1/2 months ago, was found in a paddy field in Veeramuni.

(3) On 14th May 1989 the driver and the cleaner of a tractor hijacked by two Tamil militants were killed and their bodies were ered the following day.

(4) On 17th May 1989 a 'J' Block arrived at t ported that armed T ting and killing M requested securit scene and was infor of four Muslim p arrived on receiving a ever, having searched the that no abduction had taken

found that 15 Tamil houses had been

er that evening five Muslim persons were ously injured as a result of shooting by unidentified persons. Two of the injured succumbed to their injuries.

At about 5.30 p.m. the same day some Muslim houses had been set on fire.

A curfew was imposed and the situation was brought under control.

(5) On 18th May 1989 firing had been reported at around 01.00 a.m. in the Veeramuni area and some houses were set on fire. The situation was brought under control in one hour.

(6) On 19th May 1989 a house was set on fire and the police sent a water bowser to the scene. Police heard firing, and on visiting the scene

சம்மாந்துறை மீதான தாக்குதல் சம்பந்தமாக நடைபெற்ற
பாராளுமன்ற விசேட விவாதத்தின் பதிவேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# புலிகளின் பிரவேசம்

இந்தியப்படையின் வெளியேற்றத்தில் இருந்து தினசரி புலிகளின் செல்வாக்கு அதிகரித்து வந்தது. ஆரம்ப காலத்தில் இந்நிகழ்ச்சி பொதுவாக முஸ்லிம்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது. இக்காலம் ரி.என்.ஏ. மறைந்து புலிகள் தலை தூக்கிய காலம். வடக்குகிழக்கு மாகாண ஆட்சியாளர்கள் தனிநாடு பிரகடனம் செய்து புலிகளும்- அரசும் இணைந்து அவர்களை விரட்டியடித்து, புலிகள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள் என்பதனால் வெளிப்படையாகவே முஸ்லிம்- தமிழ்ப் பிரதேசங்களில் தமது காரியாலங்களைத் திறந்து கொண்டு காரியத்தில் இறங்கினர். காரியாலங்களில் மக்கள் பிரச்சனைகளை நாங்களே தீர்ப்போம் என்று நீதிமன்றங்களாய், நகர் காவலர்களாய் மாற முற்பட்டனர். இதனால், பகிரங்கமாய் ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு நடமாடினர். "நீதி மட்டும் நடை பெறும், ஊழல் எதுவும் நடைபெற விடமாட்டோம் அனாவசியக் கொலைகள்- இன மோதல்கள்- அராஜகம் எதுவும் நடைபெறக் கூடாது; நடைபெற விடவும் மாட்டோம்" என்று கோசம் செய்தனர். அது கண்டு மக்கள் மகிழ்ந்தனர். புலிகள் எப்போதும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இயங்குபவர்கள்; அவர்கள் எந்தத் தவறும் செய்ய மாட்டார்கள் என்று பரவலாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE



பேசப்பட்டது. மக்கள் அவர்களது பிரச்சினைகளை புலிகள் காரியாலங்களில் முறையிட்டு அங்கு விளக்கி உடனடித் தீர்ப்பும் வழங்கப்பட்டன. இந்நடவடிக்கைகளினால் பலர் தண்டிக்கப்பட்டனர். 'எஸ்லோன்'னைப், பனைமட்டை, சலாகை போன்றவற்றால் முதுகில் இரத்தம் பீறிட்டுப்பாயும் வரை அடித்துத் துன்புறுத்தப்பட்டனர். காய்ந்த மிளகாய்ப் புகையூட்டப்பட்டும் கொடுமைப்படுத்தப்பட்டனர். இப்படியான நீதி வழுவா, நெறி பிறழா இயக்கத்தினர்தான் பின் பல கொலைகளைச் செய்தனர். இன்று கொலைகாரர்காளாகவே மாறி விட்டனர். 1989 மே 17 சம்மாந்துறைக் கலவரத்தின் போதும் காரைதீவில் முஸ்லிம் பொலிஸார் கொல்லப்பட்ட போதும் வானொலியிலும், பத்திரிகையிலும் அறிக்கைக்கு மேல் அறிக்கை விட்டு சம்மாந்துறை முஸ்லிம்களிடம் தனியிடம் பிடிக்க முற்பட்ட தந்திரவாதிகள். அந்நாட்களில் கொலைகள் நடந்தவுடன் இவர்கள் (புலிகள்) காரியாலயத்திற்குச் சென்று முறையிட்டால், "அது நாங்களில்லை; இந்த தேசிய இராணுவத்திலிருந்த சிலர் மறைந்திருந்து கொண்டு இவ்வாறு செய்கின்றனர்" எனப் பதிலளித்தனர்.

உண்மையில் இவை யாவற்றையும் உற்று நோக்கினால் எல்லா நிகழ்வுகளும் முஸ்லிம்களுக்கு எதிரானவையே என்பது புரியும். அவை எல்லாமே முஸ்லிம்களை அழித்தொழிக்கும் நாசகாரத் திட்டங்களே. ஆனால் முன்னணியில் வெளிப்படையாக இருப்பவர்கள் மட்டும் காலத்துக்குக் காலம் மாறி மாறிக் கொண்டிருக்கின்றனர். இந்திய இராணுவம் வந்தாலும், ஈ.பி.ஆர்.எல்.எப். வந்தாலும். ரீ.என்.ஏ. வந்தாலும், எல்.ரி.ரி.ஈ. வந்தாலும் செயல் ஒன்று தான்.

முஸ்லிம்கள் நிலை மோசம்தான்; பரிதாபமேதான். குறிப்பாக சம்மாந்துறையில் கொலைகளும், கொள்ளைகளும் குறைந்த பாடில்லை. அவை தொடர்ந்து கொண்டேயிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990.01.14ஆம் திகதி வயலுக்கு நீர் பாய்ச்ச மாலையில் சென்ற யூ.அமீர் அலி என்ற 20 வயது இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்டு வீதியோரத்தில் வீசப்பட்டிருந்தான்.

1990.01.18இல் ஏ.எல்.மீராலெவ்வை என்பவர் வயலுக்குச் சென்ற போது சுட்டுக் கொல்லப்பட்டார். காரியாலம் அமைத்துக் காவல் புரிகின்ற எல்.ரி.ரி.ஈ. இனர் எந்நடவடிக்கையும் எடுத்த பாடில்லை. மாறாக, முஸ்லிம்களிடமும் ஆயுதம் உண்டு என்று முஸ்லிம் இளைஞர்களைக் கைது செய்து கொண்டு போய் தமது காரியாலய அறைகளில் பூட்டி வைத்து சித்திரவதை செய்தனர். இலங்கைப் பொலிஸார் கூட அவர்களிடம் எதுவும் வினவ முடியாது; அந்தளவுக்கு இலங்கை அரசு அவர்களுக்கு சலுகை அளித்திருந்தது. இதே காலத்தில், வடக்கு-கிழக்கு மாகாண சபையில் சட்டப்படி தெரிவு செய்யப்பட்டவர்களையும், அவர்களுக்கு மெய்க்காப் பாளர்களாக இருந்தவர்களையும் தேடத் தொடங்கினர். இதனால், இவர்களுடன் தொடர்புடைய பலர் மறைந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் சம்மாந்துறையில் இன்னுமோர் சம்பவம் நடைபெற்றது. 30.01.1990ஆம் நாள் நண்பகல் 12.30 மணி. வடக்கு-கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜனாப். எம்.வை.எம்.மன்சூர் அவர்களது வீடு புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டது. அவர் வீட்டுக்கு வெளியே வந்தார். அவரை பெற்ற மனங்கள் நோக்க, நோக புலிகளால் இடுப்புக்குக் கீழே சுடப்பட்டார். குற்றுயிராய் மன்சூர் துடித்தார். அவர்களே தமது வாகனத்தில் எடுத்துச் சென்று கல்முனை வைத்திய சாலையில் அனுமதித்தும் பின் எந்தவித வைத்தியமும் செய்யவிடாது கடத்திச் சென்றனர். பின் எந்தத் தகவலும் இன்னுமில்லை; அவரது ஜனாசா இன்னுமில்லை; மற்றொரு மாகாண சபை உறுப்பினரான எம்.இஸட்.முனாஸ் காரியப்பரின் வீடும் சுற்றிவளைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. தெய்வாதீனமாக அவர் தப்பி விட்டார். அன்றே நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஊரை விட்டு விட்டு ஓடி விட்டனர். அவர்கள் அனைவரும் வெளியூர்களுக்குச் சென்று உண்ண, உடுக்க வழியின்றி அகதிகள் போன்று மிகவும் கஷ்டமான சூழ்நிலைகளில் வாழ நேர்ந்தது. அதுமட்டுமல்ல; பல அரசியல் பிரமுகர்கள், ஊர் விடயங்களில் முன்னணியில் நிற்பவர்கள் பலர் கொழும்பு, கண்டி போன்ற தூர இடங்களுக்குச் சென்று தமது தொழில், கௌரவம், உறவினர் அனைத்தையும் விட்டு- இழந்து வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது; வருந்தத்தக்கது. குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு தன்னாலான உதவிகளையெல்லாம் செய்தவரும், 30 வருடங்களுக்கு மேலாக பாராளுமன்றப் பிரதிநிதியாக இருந்த இருக்கின்ற ஜனாப். எம்.ஏ.அப்துல் மஜீட் எம்.பி, அம்பாறை மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினரான ஜனாப். எம்.எச்.எம்.அஷ்ரப் ஆகியோர் தமது மாவட்ட மக்களை, உற்றார், உறவினர்களை, மக்களின் சிரமங்களைக் கூட கண்ணால் கூட பார்க்க முடியாத நிலை- அவர்களால் சம்மாந்துறைக்கு வரவே முடியாத நிலை. அதே போன்று தமிழ்- முஸ்லிம் சமாதானத்துக்காக அயராதுழைத்த சட்டத்தரணி ஜனாப். யூ.எல்.எம் முகைதீன், அவரோடு செயற்பட்ட எஸ்.எல்.எப்.பி.அமைப்பாளர் ஜனாப். ஐ.உதுமாலெவ்வை போன்றவர்கள் கூட தலை மறைவாகினர். அவர்கள் பிரஜைகள் குழு உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சூழ்நிலையில் இந்த ஊர் மக்களின் நெஞ்சங்களை நாடி பிடித்துப் பார்த்தால் தெரியும். இந்தத் தலைவர்களுக்கே இந்தக் கதி என்றால், சாதாரண பொது மக்கள் நிலை பற்றி எண்ணிப்பாருங்கள்.

பட்டப்பகலில் வேட்டு வைக்கப்பட்ட ஜனாப் .எம்.எவ.எம்.மன்சூர் எம்.பீ.சி.முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினராக இருந்ததைத் தவிர, அதனால் மாகாண சபை ஆட்சி பீடத்துக்குச் சென்றதைத் தவிர மற்றும்படி அவர் ஒரு சாதாரண அப்பாவி இளைஞர். சமயப் பற்றுள்ளவர்; சாந்தமுள்ளவர். அவ்வாறு இருந்தும் கூட நண்பகல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில் ஊரின் நடுவண் அமைந்துள்ள இவரது இல்லத்தில் வைத்துச் சுட்டு கொல்லப்பட்டு உடன் ஏற்றிச் செல்லப்பட்டு இன்னுமே ஜனாசாக் கூட கிடைக்க வில்லையென்றால், அதற்கு என்ன காரணம் என்றறியாத மக்கள் ஏங்கித் தவித்தனர். முடியுமான இடங்களிலெல்லாம் முறையிட்டனர். ஜனா சாவையாவது கேட்டனர். எதுவும் ஆகவில்லை. பொலிஸார் கூட தமது நிலையங்களிலிருந்து வெளியேற முடியாதவாறு தடுக்கப்பட்டனர். ஆயுதங்கள் ஊருக்குள் ராஜாங்கம் நடத்தின. சக்தி வாய்ந்த ஏகே 47, எஸ்.எல்.ஆர், 84எஸ் போன்ற துப்பாக்கிகளையும், எந்த உயிரையும், எத்தனை உயிரையும் எப்போதும் பறிக்கத் தயாராயிருந்த இளைஞர்களையும், அவர்களுக்கு நூறு வீதமும் ஒத்தாசை புரியக் காத்திருந்த தமிழ் மக்களையும் கண்டு முஸ்லிம்கள் பயந்து நடு நடுங்கினார்கள்; ஆத்திரம் அனைத்தையும் அடக்கி கொண்டிருந்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னுமொரு முக்கியமான சம்பவத்தையும் குறிப்பிட வேண்டும். தமிழ் மக்களில் பலர் கேலியாகப் பேசும் போது முஸ்லிம்களிடம் “நீங்கள் இனிமேல் அறபு நாடுகளுக்குத்தான் செல்ல வேண்டும்” என்பார்கள். ஒரு நாள் ஒருவர் தனது வயல் அறுவடை சம்பந்தமான வாய்த்தர்க்கத்தின் போது “உங்களை அறபு நாட்டுக்கு அனுப்பாவிட்டால் நாங்கள் இருக்க மாட்டோம்” என்று கூறினாராம். இன்னுமொரு அன்பர் தனது குடிவெறியில் “முஸ்லிம்கள் இனிமேல் இந்தப் பக்கம் இருக்க முடியாது; எங்கள் ஆட்சி வந்து விட்டது; இனிப் பொலிஸாரும் ஒன்றும் செய்ய முடியாது” எனச் சத்தமிட்டார். இப்படி நடந்த சம்பவங்கள் பலவற்றால் முஸ்லிம்கள் மனம் வெதும்பினார்கள்.

அத்தோடு பல முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிலம் பலவந்தமாகத் தமிழ் மக்களால் செய்கை பண்ணப்படத் தொடங்கியது. அவைகளைப் பற்றி எங்குமே முறையிட முடியாதிருந்தது. புலிகளின் ஆயுதங்களுக்கு எல்லாமே அடிமையாகி விட்டன. இவையெல்லாம் அண்மைக்காலச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

சம்பவங்களைப் பார்க்கும் போது மிக நீண்ட காலமாகத் திட்டமிட்ட செயல் என்றே சொல்ல வேண்டும். வட மாகாணத்தில். மன்னார், யாழ்ப்பானத்தில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதும் அந்தப் பின்னணியே எனலாம். இப்படியாக குறிப்பிடக்கூடிய சம்பவங்களைத் தவிர அங்காங்கே நடை பெறும் எத்தனையோ சம்பங்கள் மக்கள் மனதை மிகவும் இறுகச் செய்தது என்பதில் சந்தேகமில்லை. இவர்களது காலத்தில் அடித்து, துன்புறுத்தப்பட்ட முஸ்லிம்களும், தண்டனைக்குள்ளாக்கப் பட்ட முஸ்லிம்களும், கப்பம் செலுத்திய முஸ்லிம்களும், வியாபாரிகளும், உழவு இயந்திர உரிமையாளர்களும் எண்ணிலடங்காதவர்கள். முன்பு ஒரு காலத்தில் தமிழர்களுக்குச் சொந்தமாக இருந்து முஸ்லிம்களால் பணம் கொடுத்து வாங்கப்பட்ட நிலங்களின் உறுதிகள் கூட அவர்களுக்கு திருப்பி எழுதிக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், அந்த நிலங்களுக்குள் இனிமேல், நீங்கள் (முஸ்லிம்கள்) போக் கூடாது' என்றும் பலர் உத்தரவிடப் பட்டனர். இப்படியாக மிகவும் ஒடுக்கப்பட்ட மக்களாக முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள். தென்னாபிரிக்காவில் கறுப்பர்கள் ஒடுக்கப்பட்டமையையும், சாதிப்பாகுபாடு காட்டி சைவ மக்கள் தாழ்த்த பட்ட சாதியினரை அடக்கி ஒடுக்கியமையையும் விட கூடுதலான அடக்கு முறை இங்கு காணப்பட்டது. இவைகள் மனித உரிமைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட மிகவும் மிருகத்தனமான கொடுமையான செயலாகுமென்பதை யாரும் ஏற்றுக் கொள்வர். இவர்களது காலத்தில் பகலிலும், இரவிலும் பல வீடுகள் சுற்றி வளைக்கப்பட்டு 'இங்கு துப்பாக்கி உண்டு உடன் தரவும்' எனக்கூறப்பட்டது. இல்லையென்றால் அடி, உதை, இருட்டறையில் அடைப்பு, சிறைத்தண்டனை என்பன நடைபெறும். இல்லாததொன்றை எவ்வாறு கொடுக்க முடியும்? மனைவி, மக்கள், தாய், தந்தை யாவரும் அவர்கள் முன் அழுது மண்டியிட்டு தனது பிள்ளையை, கணவனை தந்தையை சகோதரனை விடுவிக்கப் படாத பாடுபடுவர். இப்படியான அப்பாவி மனங்கள் எந்தளவு இவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுத்திருக்கும் என்பதை இதனைப் படிக்கும் ஒவ்வொருவரும் உணரலாம்.

இந்த சம்பவங்கள் எல்லாம் இயக்க வேறுபாடின்றி எல்லாத் தமிழ் இளைஞர்களும் முஸ்லிம்களிடம் காட்டிய அடக்கியாளும் மூர்க்கத்தனத்தின் கோபத் தன்மைகளாகத் தோன்றியதே தவிர, இவர்கள் நல்லவர்கள், அவர்கள் தான் கொடியவர்கள் என்று எண்ணக்கூடிய எந்தப் பாகுபாட்டையும் ஏற்படுத்தவில்லை.

17.05.1989ல் நடைபெற்ற இன வன்முறையின் போது சுய பாதுகாப்பில் ஈடுபட்டவர்களும், இவை பற்றிய விமர்சனங்களில் ஈடுபட்டவர்களும் எல்.ரி.ரி.ஈ.ஆட்சித் தலைவர்களால் மிக மோசமாகப் பழி வாங்கப்பட்டனர். சம்மாந்துறை எல்.ரி.ரி.ஈ. தலைவனாகிய சலவைத் தொழிலாளர் இனத்தைச் சேர்ந்த குமார் என்பவரும், அவரது குழுவினரும் இளைஞர்களைப் பழி வாங்குவதில் மிக மும்முரமாக ஈடுபட்டனர். அவர்களது அலுவலகம் என்னும் சித்திரவதைக் கூடத்தில் சூடாக்கப்பட்ட 'அயன்' பெட்டிகள் எமது இளைஞர்களின் முதுகைப் பதம் பார்த்த சம்பவங்கள் ஏராளம். 17.05.1989. இனக்கலவரத்தைக் கண்டித்து யோகியும், அன்ரன் பாலசிங்கமும் அன்று அறிக்கையிட்ட அதேவேளை, இன்று அந்த இயக்கத்தினர் ஆட்சிக்கு வந்ததும் இந்த சம்பவத்தில் மக்களுக்கு உதவியவர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பழி வாங்கப்பட்டமை மக்களுக்கு எல்லோரும் தமிழர்களே என்ற இனப் பகை உணர்வையே மேலும் வளர்க்க உதவியது - வளர்த்தது. இவை எல்லாம் பத்திரிகைகள் கூட காட்டிய உண்மைகள். ஆனால் வேண்டுமென்றே திட்டமிட்டு எம்மூரவர் மீது பழி சுமத்த எண்ணிச் செயற்பட்டால் அதற்கு என்ன செய்ய முடியும்? உண்மையின் அர்த்தங்கள் இவைதான். மனித உரிமை மீறல் என்ன? மிருகத்தினை விட மோசமான கொடுமைகளை சம்மாந்துறை முஸ்லிம்கள் அனுபவித்தனர். ஆனால், பொறுமையோடிருந்தோம்; நன்றி செய்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனோடல்லாது புலிகளின் பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல் நாடகமும் அரங்கேறியது. எல்லாம் ஒரே நாகப் பட்டறையின் பயிற்சியாளர்களே.

*11.06.1990*இல் புலிகள் பல பொலிஸ் நிலையங்களைக் கைப்பற்றத் தொடங்கினர். அரசாங்கத்துடன் பேசிக் கொண்டிருக்கும் போதே அரசாங்கத்தின் படைகளையும், அவர்களது நிலையங்களையும் கைப்பற்றத் தொடங்கி இருந்தனர். அவ்வாறு கைப்பற்றும் போது பல பொலிஸ் நிலையங்கள் சரணடைந்தன. அவ்வாறு சரணடைந்த பொலிஸாரில் தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டு சிங்களவர்களும், முஸ்லிம்களும் மிருகத் தனமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இது என்ன செயல்? என்ன யுத்த தருமம்? பொலிஸாரை விடுதலை செய்ய வேண்டுமென்றால் அனைவரையும் விடுதலை செய்வதுதானே. இது தானே மனித நேயம் மாறாக- தமிழர்கள் மாத்திரம் விடுதலை செய்யப்பட்டால் இவர்களை எப்படி மக்கள் நேசிப்பார்கள்? எப்படி இவர்கள் சமூகங்களில் ஒற்றுமையை, கலாசாரத்தை, நீதியை, உரிமைகளைப் பேண முடியும். இவர்கள் ஆட்சி செய்பவர்களா அல்லது இன வெளியர்களா? எப்படி நோக்குவது? 'தமிழ் பேசும் இனம்' என்று கூறப்படுவது வெறும் பூச்சாண்டி என்பது இதில் நன்கு தெளிவாயிற்று.

முன்பு ஒரு முறை *17.11.1980* இல் ரி.என்.ஏ.இன் காரைதீவில் இதே விதமாக தமிழரை நீக்கி முஸ்லிம்களை மாத்திரம் கொன்று குவித்தார்கள். அதே போல் இப்போது எல்.ரி.ரி.ஈ. இனரும் செய்திருந்தனர். யாரை நம்புவது? எந்த இயக்கத்தை ஆதரிப்பது? இந்த இயக்கங்களை எந்த அடிப்படையில் பகுத்து நோக்குவது? எல்லோரும் கொலை செய்கிறார்கள்; கொள்ளையிடுகிறார்கள். முஸ்லிம்களை அடக்கி ஒடுக்குகிறார்கள். தமிழ்ப் பேரினவாத அடக்குமுறை காட்டுகிறார்கள். எனவே எல்லா இயக்கத்தினரும் முஸ்லிம்களை அடக்கி ஒடுக்க கங்கணம் கட்டிச் செயல் படுகின்றனர். 'எல்லாம் ஒரே குட்டையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறிய மட்டைகள்' எனலாம். இந்தப் பொலிஸார் கொலைச் சம்பவத்திலும் சம்மாந்துறையைச் சேர்ந்த (11.06.1990) ஏ.எம்.அமீர் அலி, எம்.எம்.உஹனீபா, யூ.சலீம்,ஏ.அப்துல் ஜப்பார், எம்.வை. எ.ம்.ஹசீன் ஆகிய ஐந்து இளைஞர்களும் சுட்டுக் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களது உயிரற்ற உடல்களைக் கூட கண்டெடுக்க முடியவில்லை. இதிலிருந்து இருவர் தப்பி வந்திருந்தனர். இவர்கள் கூட நடைப்பிணமாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

14.06.1990இல் இலங்கை இராணுவத்தினர் இப்பிரதேச இராணுவ அதிகாரத்தைப் பொறுப்பேற்று புலித் தீவிரவாதிகளைத் துரத்திவிட்டு இங்கு வந்து சேர்ந்து விட்டனர். அதற்கிடைப்பட்ட மூன்று நாட்களிலும் அவர்கள் (எல்.ரி.ரி.ஈ) அரிசி ஆலைகள், முஸ்லிம் கடைக்காரர்கள், செல்வந்தர்கள், பள்ளிவாயல் பரிபாலகர்கள் முதலியோரை ஆட்டிப்படைத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இங்கு இராணுவம் வந்ததன் பின் முஸ்லிம்கள் நினைத்திருந்தால் பல தமிழ் இளைஞர்களைக் காட்டிக் கொடுத்திருக்க முடியும்; பழி வாங்கியிருக்க முடியும். ஆனால் பல தமிழ்த் தாய்மார்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க முஸ்லிம்களது ஜீவகாருண்யத்தையும், மனிதாபிமானத்தையும் எண்ணிப் பாருங்கள். எத்தனை அட்டூழியங்களை ஒன்றுக்கு மேல் ஒன்றாகத் தொடர்ச்சியாகச் செய்து வந்தவர்களை, முஸ்லிம் உயிர்களை கூட்டம் கூட்டமாக கொன்றொழித்தவர்களைக் கூட காப்பாற்றும் எண்ணம் முஸ்லிம்களுக்கு வந்ததென்றால் அதன் தாற்பரியம் என்ன? அது நீண்ட கால உறவுகளின் வெளிப்பாடு மட்டுமல்ல; முஸ்லிம்கள் இன்னும் ஒற்றுமையாக வாழ விரும்புகின்றார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் புலிகள் சம்மாந்துறையைச் சுற்றியுள்ள வட்டைகளிலும், காடுகளிலும், நாணற்புற் புதர்களுக்குள்ளும் தலை மறைவாகினர். அவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து கொண்டிருக்கும் போது இந்தப் புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது நர மாமிசம்தான் தேடியது. நரமாமிசம் தேடிய புலி தன்னை அரவணைத்தவர்களைக் கூட கொன்று குவித்து விட்டது.

20.07.1990ல் சம்மாந்துறையில் மற்றொரு முக்கியமான சம்பவம் நடைபெற்றது. 1987ஆம் ஆண்டில் புலித்தீவிரவாதிகளின் வேண்டுகோளுக்கிணங்க அரசாங்கதினால் அறிவிக்கப் பட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்தின் இடைக்கால நிர்வாக சபையில் அங்கம் வகித்த ஒரேயொரு முஸ்லிமான ஏ.எஸ்.முகம்மது ஹாஜியாரும் அவரது சகாவான ஏ.சீ. காதர் மொஹிதீன் ஹாஜியாரும் அவரது வீட்டில் வைத்தே இரவு 09.15 மணிக்கு அவரால் அரவணைக்கப்பட்ட புலிகளினாலே சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

யார் இந்த ஏ.எஸ்.முகம்மட் ஹாஜியார்? இவர் மிக நீண்ட காலமாகப் புலிகளுடன் உறவாக இருந்தவர். புலித்தலைவர்கள் பலர் தலைமறைவாகவும், பின்னர் வெளிப்படையாகத் திரிந்த போதும் இவருடன் ஒற்றுமையாக இருந்தது மட்டுமன்றி இவரது வீட்டில் தங்கியும் சென்றுள்ளனர் - என்பது பின்னர்தான் தெரிய வந்தது. இவ்வாறாகப் பல காலம் தனது செல்வத்தின் பெரும் பகுதியை இந்த இயக்கத்திற்காகவே செலவு செய்த ஒருவர் இவர்களுக்குக் காரியாலயம் வழங்கி தனது காரையும், வீட்டையும், பணத்தையும் சொத்தையும் தானம் செய்து வளர்த்தெடுத்த ஏ.எஸ்.முகம்மது ஹாஜியார்,. 30.01.1990இல் சகோதரர் எம்.வை.எம்.மன்சூர் எம்.பி.சீ. சுடப்பட்டு கடத்திச் செல்லப்பட்ட போது ஊர் மக்கள் யாவரும் அவரிடம் உடலையாவது பெற்றுத் தருமாறு கெஞ்சிய போது அவர் கல்முனைப் புலித் தலைமையகத்துக்குச் சென்று தயவு செய்து உடலையாவது தாருங்கள்; ஊரில் எதுவும் நடைபெறாது பாதுகாக்கின்றேன் என்றார். அதற்கு அவர்கள் மறுத்தனர். கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு அவ்விடத்தில் ஹாஜியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பட்டுக் கொண்டார். அதுவும் ஊர்க்கலவரம் எதுவும் வராது தடுப்பேன் என்க் கூறியும் இவர்கள் 'நீ முஸ்லிம்களுக்குத் தான் வாதிடுகிறாய்' என்று கூறினார்களாம். அதனை ஜீரணிக்க முடியாமலே அவர் முரண்பட்டுக் கொண்டார். அதாவது, "நான் ஒரு முஸ்லிம். மொழி ரீதியாக இணைந்தவன். அதற்காக நான் முஸ்லிமாயிருக்கக் கூடாது; முஸ்லிம்களுக்காகப் பேசக் கூடாது என்று கருதும் மிகக் குறுகிய நோக்கம் கொண்ட இனவாதிகளுக்கு நான் உடந்தையாயிருக்க முடியாது" என்று அடித்துக் கூறியமைக்காக- அப்படிக் கூறியும் அவர் இயக்கத்தை விட்டு நீங்கவில்லை- அந்தப் புலிகளினாலே சுட்டுக் கொல்லப்பட்டார். நியாயம் எது? இது எத்தகைய உரிமை மீறல்? முஸ்லிம்கள் இயக்கக்காரர்களுக்கு கைப்பொம்மைகள். உலகிலே காணக்கூட முடியாத பேரினவாதம்; அராஜகம், ஆக்கிரமிப்பு. ஏதுமறியா அவரது ஏழு குழந்தைகளும், மனைவியும் துடித்தார்கள்.; துவண்டார்கள். எந்தவித நியாயமுமற்ற இந்த இனத்துவ இனக்கொடுமையைக் கண்டு வெறுப்படையாத முஸ்லிம்களே இருக்க முடியாது.

மறுநாள் *21.07.1990*இல் 'நெல்லிக்காட்டு' வட்டைக்கு நீர்ப்பாசன வேலைக்காக பின்னேரம் *4.00* மணியளவில் சென்ற அப்பகுதி நீர்ப்பாசன உத்தியோகத்தர் ஏ.எல்.சுலைமாலெவ்வை, வட்டவிதானை யூ.எல்.ஹபீப் முகம்மது, மற்றும் வயற்காரர்களான, ஏ.எல்.முகம்மது முஸ்தபா, எம்.ஏ.அப்துல் றஹீம், ஐ.எல்.சுலைமாலெவ்வை ஆகியோர் திரும்பி வரவே இல்லை. மறுநாள் அதற்கு மறுநாள் நூற்றுக்கணக்கான மக்களும், இராணுவத்தினருமாக தேடியும் காணவில்லை. பல நாட்களில் பின் சில தமிழ் மக்களினாலேயே செய்தி கிடைத்தது. அவர்கள் கொல்லப்பட்டு டயர் இடப்பட்டு எரிக்கப்பட்டு விட்டார்கள் என. இதைப்பற்றி வீரமுனையின் தலைவர்கள் அல்லது பிரதான முதன்மைக் குடிமக்களிடம் விசாரித்த போது "எமது பகுதிப் பிள்ளைகள் அல்ல; வேறு பொடியன்கள் என்றுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார்கள். நேரடியாகப் யார் என்பதும் தெரியாது. கண்டசாட்சிகளும் இல்லை. மக்கள் செய்வதறியாது திகைத்தனர். சம்மாந்துறை முஸ்லிம்களை மொத்ததில் அழிக்காது ஒன்றும், இரண்டுமாக ஒட்டிஉறவாடிக் கொண்டே அழித்து வந்தனர். இவற்றையெல்லாம் விசாரணை செய்ய எந்த மனித உரிமைக்குழு முன் வருமோ?

இந்தக் கால கட்டத்தில் இராணுவத்தினர் ஊர் முழுவதும் சுற்றி வளைத்துத் திரிந்து புலி வேட்டை நடத்தினர். சந்தேகப்பட்டவர்களைக் கைது செய்தனர். அதில் பலர் இன்னும் திரும்பி வரவில்லை. இந்தக் காலத்தில் அதாவது, *14.06.1990* முதல் இராணுவத்தினர் தீவிர தேடுதல் நடத்துவதைக் கண்ட வளத்தாப்பிட்டி, மல்வத்தை, கணபதிபுரம், மல்லிகைத்தீவு, வீரச்சோலை, சாளம் பக்கேணி போன்ற சிறிய, சிறிய கிராமங்கள் அனைத்திலும் இருந்த தமிழ் மக்கள் தமது வீடு, வாசல்களை விட்டு அண்மையிலுள்ள வீரமுனை, காரைதீவு, திருக்கோவில், பாண்டிருப்பு போன்ற பெரிய கிராமங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றனர். மேற் கூறிய கிராமங்கள் முற்றாகச் சேதமாக்கப்பட்ட நிலையிலேயே காணப்பட்டன. இங்கெல்லாம் எந்த முஸ்லிம்களும் செல்லவுமில்லை- அவர்களைத்துரத்துவுமில்லை; அவர்களது பொருட்களை எடுத்ததுமில்லை. இவைகள் வேறு யாராலோ சூறையாடப்பட்டதும் அழிக்கப்பட்டவையுமாகும். இந்த உண்மைகள் எத்தனையோ தமிழ் நெஞ்சங்களுக்கு தெரிந்த விடயம். அவர்களது மனச்சாட்சியின் மேல் கரம் வைத்துக் கேட்டால் அது அவர்களுக்குச் சாட்சி சொல்லும். இந்தக் கிராமங்களின் அழிவுக்கும், முஸ்லிம்களுக்கும் எந்த விதத் தொடர்புமில்லை- என்பதை எங்களால் தெளிவாகக் கூற முடியும். ஓர் அறிக்கை கொள்ள வேண்டிய யதார்த்த பூர்வமான தன்மைக்கேற்பவே நாம் இதனை எழுதுகின்றோம்.

தொடர்கின்றது புலிகளின் மனித வேட்டை............

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# பள்ளிவாசலில் படுகொலை

1990.07.23 ஆம் திகதி சம்மாந்துறையில் மிக நாகரீகமற்ற படுமோசமாக சம்பவம் புலித் தீவிரவாதிகளால் இழைக்கப்பட்டது. இந்தக்கால வேளையில் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தவும் கொள்ளையிடவும் தீவிரவாதிகள் முனைவர் என்ற அச்சத்தால் மக்கள் நடு நடுங்கிக் கொண்டிருந்தனர். அந்த இரவு வேளையில் அன்று இரவு 9.40 மணிக்கு புலிகளின் காரியாலயம் இருந்த வீட்டிற்கு அண்மையிலுள்ள வீட்டை உடைக்கும் சத்தமும், வெடிச் சத்தமும் கேட்க முஸ்லிம் மக்கள் பலர் வெருண்டெழுந்து பள்ளிவாசலில் அகதிகளாகி தஞ்சம் புகுந்தனர். சற்று நேரத்தில் அதே பள்ளிவாசலுக்குள் நுழைந்த ராஜு, சராச்சந்திரன், சுந்தரம், சின்னவன், குமார் போன்ற தமிழ் இனவெறி இளைஞர்கள் வெறியாட்டம் ஆடினர். இவர்கள் அனைவரும் சம்மாந்துறையின் வண்ணார் தெருவில் வாழும் எல்லோருக்கும் தெரிந்த இளைஞர்கள். இவர்கள் இந்துக்களால் புறக்கணிக்கப்பட்டபோதும் முஸ்லிமகளுடன் மிக அந்நியோன்னியமாக வாழ்ந்தார்கள். இவர்களுக்கு என்ன பிடித்ததோ? அண்மையில், கடந்த ஆறு மாதங்களாக 'இயக்கம்' என்ற பெயரில் மக்களை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த இவர்கள், பள்ளிவாயலுக்குள் நுழைந்ததும் இதன் புனிதமனைத் தையும் கால்களால் மிதித்துக்கொண்டு அங்கு சரமாரியாக துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர். பள்ளிவாயலுக்குள் பாதுகாப்புக்காக அடைக்கலம் புகுந்த பெண்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளும் கதறியழுதனர். ஆண்கள் பலர் அங்குமிங்குமாக ஒழித்துக்கொண்டனர். இந்த இடத்தில் இராணுவம் சம்மாந்துறைக்கு வந்த போது காடுகளில், வயல்களில் ஒழித்துக்கொண்ட இந்தப் புலிகள் சொன்ன வார்த்தைகள் ஞாபகத்துக்கு வருகின்றன. அதாவது, "நீங்கள் எங்களைக் காட்டிக் கொடுத்தால் சம்மாந்துறைப் பெண்கள் எல்லோரையும் விதைவைகளாக்குவோம் - இத்தாவில் இருக்க வைப்போம்' என்று வாய் புலம்பித் திரித்தனர் என்பதும் குறிப்பிட்டுக் காட்ட வேண்டியது. ஆனால், நாங்கள் மிகச் சாதுவாக நடந்து கொண்ட போதும் இந்தப் புலிகள் தங்கள் குறிக்கோளை நிறைவேற்றுவதில் மிகக் கவனமாக இருந்தனர்.இவ்வாறு பள்ளிவாயலுக்குள் சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது அந்த இடத்துக்கு மிகத்தூரத்தில் நின்ற இராணுவத்தினர் பதிலுக்குச் சுடவே மார்க்கட் வீதி வழியாகச் சென்று வழியிலிருந்த பல வீடுகளுக்கும் துப்பாக்கியால் சுட்டவண்ணம் பின் வாங்கிச் சென்று விட்டனர். இந்தச் சம்பவத்தால் பள்ளிவாயலுக்குள் சுல்தார்* என்று அழைக்கப்படும் எஸ்.முகம்மது இப்றாஹீம் ஹாஜி, எம்.பி.அலியார் ஆகிய இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஐந்து பெண்களும், ஓர் ஆணும், இரு குழந்தைகளும் காயங்களுக்குள்ளாகினர். இவர்களிற் பலர் இன்னும் கால், கை இயங்க முடியாதவர்களாகவும் காணப்படுகின்றனர். வீடுகளைச்சுட்ட போது அபுல் ஹசன் மௌலவி, ஏ.எல்.ஸாதிக் ஆகிய இருவரும் படுகாயமுற்று உயிர் தப்பி இன்னும் நடைப் பிணங்களாகவே வாழ்கின்றனர். காயப்பட்ட இவர்களுக்கு அன்றிரவு டாக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக் தனது வீட்டில் டாக்டர் ஏ.ஆர்.எம்.அஸாப்

---

* சுல்தார் தமிழ்க் குறிச்சி முஸ்லிம்களால் தாக்கப்பட்ட போது தமிழர்களுக்கு அடைக்கலம் தந்த ஒரு முஸ்லிம் பிரமுகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI



மற்றும் எமதூர்த் தாதிமார்களின் ஒத்துழைப்புடன் உடனடி வைத்திய சேவை வழங்காதிருந்தால் அவர்கள் உயிர்பிழைத்திருப்பதே கஷ்டம். இவ்வாறு, பள்ளிவாயலுக்குள் முஸ்லிம்களைத் தாக்கும் சம்பவமும் முதன் முதலில் சம்மாந்துறையிலேயே ஆரம்பமாயிற்று என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் சம்மாந்துறையின் வரலாற்றில் நீக்க முடியாத, மறக்க முடியாத கொடிய சம்பவமாகும். இது சம்மாந்துறை முஸ்லிம்களோடு மிகவும் ஒன்றித்திரிந்த தமிழ் இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்டது. ஜீரணிக்க முடியாதது. படு பாதகர்கள் முஸ்லிம்களின் புனிதத் தலமானதும், சம்மாந்துறையின் பிரதான பள்ளிவாயலான புதுப்பள்ளிவாயலில் இச்சம்பவத்தை நடத்தி தங்கள் மோசமான, கீழ்த்தரமான பண்பாடற்ற பண்பினைக் காட்டிக் கொண்டனர். மற்றது, இச் சம்பவத்தில் சுடப்பட்ட அபுல் ஹசன் மௌலவி மிகவுமே குறிப்பிடத்தக்க ஒருவர். இவர், சம்மாந்துறையின் பிரபலமான மார்க்க அறிஞரான எம்.ஆர்.முகம்மதலி மௌலவியின் மருமகன். இவர் பிரபல்யம் மிக்க உணர்வுத் துடிப்புள்ள, சிறந்த பேச்சாற்றல் கொண்டவர். அது மட்டுமல்ல, தமிழ் மக்களிடையேயும் மதிப்பும், உறவும் கொண்டவர். புலிகளின் கேந்திரஸ் தானமான வண்ணார் தெருவை அண்மித்த பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கும் இவர் அவர்களுடனும் நெருக்கமான மனிதர். அவர் மீதான தாக்குதல் முஸ்லிம்களுக்குள் மிகுந்த தாக்கத்தை உண்டு பண்ணியது குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

பொழுது விடிந்தது; காலை நேரம்; இரவு வந்தவர்களெல்லாம் எங்களோடு ஒட்டி உறவாடிக்கிடந்த மார்க்கட்டுக்கு எதிரே உள்ள வண்ணார் தெரு தமிழ் சகோதரர்கள்தான். ஆகவே, காலையிலே மக்கள் வண்ணார் தெருவைச் சென்று பார்த்தனர். அங்கே யாரும் இருக்கவில்லை. மிகத் திட்டமிட்டு இந்தச் செயல் மேற்கொள்ளப்பட்டது. 23ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வண்ணார் தெரு மக்கள் தமது உடமைகள் பலவற்றை முஸ்லிம் மக்கள் பலரது வீடுகளில் அமானிதமாக ஒப்படைத்திருந்தனர். அதில் ஒன்று; இங்கு மரணமடைந்த எம்.பீ.அலியார் வீட்டிலும் ஒரு குடும்பத்தின் பொருட்கள் வைக்கப்பட்டன. இதில் இரண்டு விடயங்கள் மிகக் கூர்மையாக நோக்கப்படத்தக்கன. ஒன்று முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலான அந்நியோன்னியமான உறவு; மற்றது தமிழர்களின் குரூர மனப்பக்குவம். ஏனெனில் இவர்கள் அவ்வீடுகளில் பொருட்களை வைக்கும் போதே அவர்களுக்குப் பின்னே நடக்கப்போகும் சம்பவங்கள் அனைத்தும் தெரியும். அப்படிப் பொருட்களை முஸ்லிம்களின் வீடுகளில் வைத்துவிட்டு இரவோடிரவாக சேவகப்பற்று, வீரமுனை, சொறிக்கல்முனை வழியாக இவர்கள் அனைவரும் சென்று விட்டனர்.

இவர்கள் இவ்வாறு தமது வீடுகளை விட்டுச் சென்றது அவர்கள் திட்டமிட்டு மேற்கொண்டதாகும். மாறாக எந்த முஸ்லிமும் அங்கு சென்று அவர்களைத் துரத்துவுமில்லை; துன்புறுத்தவுமில்லை. ஆனால் அவர்கள் செல்லாதிருந்தாலும் அவர்கள் மேற்கொண்ட ஈனத்தனமான செயலுக்கு ஏதாவது பதில் நிகழ்வு இடம் பெற்றிருக்கலாம். ஏனெனில் இது வரைக்கும் எந்தக் கொலைக்கும் ஆள் தெரியாது; அவர் இவர் என்ற பல சாக்குப் போக்குகள். ஆனால் இன்றைய நிகழ்வில் சம்பந்தபட்ட அனைத்து இளைஞர்களையும் பலர் கண்கூடாகக் கண்டனர். அத்தனை பேரும் எம்முடன் ஒட்டி உறவாடிய வண்ணார் தெருவைச் சேர்ந்தவர்களே. அப்படித் தெரிந்த மக்கள் மறுநாட் காலை, கோபாவேசத்துடன் சென்ற போது அங்கு ஒருவரும் இருக்கவில்லை. இந்த வண்ணார் தெரு சுற்றிவர முஸ்லிம்கள் வாழும் பகுதியில் உள்ள 35-40 வீடுகளைக் கொண்ட ஒரு பிரிவு. இவ்வளவு சிறுபான்மையினராக இருந்தும் அவர்களுக்கு எந்த விதத்தீங்குமே வராது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாத்துக் கொண்டிருந்த முஸ்லிம்களையே அவர்கள் சுட்டுக் கொன்றார்கள். தமது பொருட்களைப் பிற்பகல் 4.00 மணிக்கு அடைக்கலம் வைத்த வீட்டுக்காரனையே இரவு 9.40 மணிக்கு சுட்டுக் கொல்வதென்றால் இது எவ்வளவு அநாகரீகமான, மிருகத்தனமான, மிலேச்சத் தனமான செயல் என்பதை உணர்ந்து பாருங்கள். எத்தகைய ஒரு நன்றி கெட்ட நயவஞ்சகத்தனம்? இதனை 'இனவெறி' என்று சொல்வதை விட வேறு என்ன சொல்வது? 'விடுதலைப் போராட்டம்' என்று கூறுவே வெட்கமாக இருக்கின்றது. இவர்களின் பாதுகாப்புக்காக எந்நேரமும் அயராதுழைத்து, இவர்களால் அன்பாக நேசிக்கப்பட்ட, இவர்களின் அண்டை வீட்டாரான யூ.எல்.எம்.முகைதீன் சட்டத்தரணி அவர்களின் வீட்டிற்கும் பல துப்பாக்கி வேட்டுக்கள் அன்றிரவு தீர்க்கப் பட்டன. அந்தத் துப்பாக்கி ரவைகள் துளைத்த வடு இன்று வரை அவரது வீட்டில் காணப்படுகின்றது. இது எவ்வளவு அநாகரிகமான, காட்டு மிராண்டித்தனமான செயல் என்பதைத் தயவு செய்து உணர்ந்து பாருங்கள். அன்று சென்ற சலவைத் தொழிலாளர்கள்- வண்ணார் தெருவைச் சேர்ந்தவர்கள் இன்றும் சம்மாந்துறைக்கு வரவே இல்லை. சம்மாந்துறை மக்களுக்கு சலவைத் தொழிலாளர்களும் இல்லை. பள்ளிவாயலில் புகுந்து, புனிதத்தைக் கெடுத்து நாகரிகமற்ற, கீழ்த்தரமான, பழி செயலைச் செய்து விட்டுச் சென்றமை ஜீரணிக்க முடியாதது. இப்படி அவர்கள் தகாத செயலினைச் செய்து விட்டு- தாமாகத் தமது வீடுகளை விட்டுச் சென்று விட்டு தமது தவறுகளை மறைப்பதற்காகப் பழியை முஸ்லிம்கள் மேல் போட்டு விடுகின்றனர். அவர்களால் கூட இவற்றை ஜீரணிக்க முடியாமல் தான் இன்னும் பிரிந்து வாழ்கின்றனர். இவர்களது இந்தச் செயல்கள் மிக ஆழமானவை. ஏனெனில்- பள்ளிவாயலுக்குள் புகுந்து அதன் புனிதம் தெரியாது இவர்கள் செய்த ஈனச்செயல்கள் இவர்களது [illegible] என்னவோ? ஏனெனில்- இதனால் தான் [illegible] அவர்கள் இனத்தவர்களே இவர்களை நோயில்

சேவைகளிலிருந்தும் ஒதுக்கி வந்தனரோ? இவை களையெல்லாம் புரிந்து கொள்ளாது இவற்றைச் செவியுற மட்டுமே கேட்ட மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழகக் குழு மோசமான விதத்தில் சம்மாந்துறை முஸ்லிம்களை எடை போடுகின்றனர். ண்மை எங்கோ இருக்க உண்மையை மறைத்து ஒரு சமூகத்தின் சார்பைக் கொண்டு அறிக்கை எழுதியது எத்தகைய சமூக உரிமை மீறல்?. எந்த நியாயமான தமிழனது உள்ளமும் இந்த உண்மையை மறுக்காது. ஒன்றுமே இழைக்கப்படாது தாமாகவே சதி செய்து விட்டு வெளியேறி மறைந்து பிரிந்து வாழும் இவர்கள் இன்னும் இன்னும் சதிதான் செய்கின்றனரா? அல்லது முஸ்லிம்களுக்கு- தமது அண்டை அயலவருக்கு முகம் கொடுக்க முடியாத வெட்கக் கேடா? மாறாக, இவர்களை யாரும் துரத்தவுமில்லை- துயரப்படுத்தவுமில்லை. இவர்களின் வெளியேற்றம் மிகவும் வித்தியாசமானது. செய்வதையெல்லாம் செய்து விட்டு பழியையும் முஸ்லிம்கள் மீது சுமத்தப்பார்க்கிறார்கள். எத்துணை அபத்தம்; இல்லை வேறு ஏதும் நியாமான காரணமிருந்தர் யாராவது கூறட்டுமே?...

இவ்வாறு பள்ளிவாயலில் நடந்த சம்பவத்துக்கு மறு நாளுக்கு மறுநாள் அதாவது, 25.07.1990இல் வயலுக்குச் சென்ற ஏ.எல்.இஸ்மாயில் (வ.வி), எம்.ரீ.முகம்மது அலியார், எம்.எல்.மீராசாஹிப் ஆகிய மூவரும் கள்ளியம்பத்தை என்ற விவசாய வட்டைக்குச் சென்று கொண்டிருந்த போது பட்டப் பகலில் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டு மடு ஒன்றில் மறைத்துப் போடப் பட்டனர். இந்தக் காலகட்டம் மிகவும் சிக்கலானது. மக்கள் ஊரைவிட்டு அகல முடியாத மிகவும் கஷ்டமான சூழ்நிலை. மக்கள் தாம் செய்த வேளாண்மைகளை அறுவடை செய்து, சூடு மிதித்து வீட்டிற்குக் கொண்டுவர வேண்டிய காலம். தங்கள் முதல், எதிர்கால உணவு, வருமானம், மீள முதலீடு யாவுமே இந்த வயல்களில் கிடைப்பதால் அங்கு செல்லாது முடங்கியிருக்கவும் முடியாது. மக்கள் தவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்த்தலைவர்களும் இராணுவத்தினருடன் பேசி போதியளவு காவல் ஒழுங்குகளைச் செய்த போதிலும் ஒளித்திருந்து 'கெரில்லர்' யுத்தம் புரியும் இந்தப் புலிகள் தாம் பெற்ற பயிற்சிகளையும், தமது துப்பாக்கிகளையும், சயனைட் கத்திகளையும் ஏதுமறியா அப்பாவி ஏழை முஸ்லிம் விவசாயிகள் மீது திருப்பி விட்டிருந்தனர். மிகவும் இக்கட்டான இக்கால கட்டம். ஏன் செய்கிறார்கள்? எதற்கு செய்கிறார்கள்? முஸ்லிம்களுக்கு எதுவுமே விளங்கவில்லை. முஸ்லிம்களின் ஆத்திரத்தை எவ்வளவு தூரம் கிளர வேண்டுமோ அவ்வளவு தூரம் கிளறினார்கள். முஸ்லீம்கள் எவ்வளவு தூரம் பொறுக்க முடியுமோ அவ்வளவு தூரம் பொறுத்து வந்தார்கள். ஆனால் அவர்கள் வரம்பு மீறினார்கள்; எல்லை தாண்டினார்கள்; கோழைகளாகக் கருதினார்கள்; முஸ்லிம்களை சவம் தூக்கிகளாகவும், சவம் புதைப்பவர்களாகவும், சுடலை வாசிகளாகவும் மாற்றினார்கள.

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாசல் மீது தாக்குதல் கைகாட்டியபடி ஜாரியா பள்ளிவாசல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# இன்னுமொரு பள்ளிவாசலில் படுகொலை.

மீண்டும்.... சகிக்க முடியாத ஜீரணிக்க முடியாத அதே தாக்குதல்.... 29.07.1990 இல் கைகாட்டியடி 'ஜாரியா' பள்ளிவாயலில் மார்க்கக் கூடமைக்காகத் தங்கியிருந்த முஸ்லிம்கள் மீது இரவு 9.00 மணிக்கு பல திசைகளில் இருந்தும் துப்பாக்கி வேட்டுக்கள் அகோரமாகத் தீர்க்கப்பட்டன. அதில் ஏ.எல்.சலீம், ஏ.எம்.எம்.அலி, யூ.எல்.எம்.மஜீட், என்.ஆதம்பாவா, ஏ.முகம்மட்தம்பி ஆகிய ஐவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மற்றும் மூவர் பெரும் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். முஸ்லிம்களை இணைத்து போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக அவர்களை அழிப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். பேரினவாதத்தை அடக்கி, ஒடுக்குவதும், சிறுபான்மையினரை அழித்து ஒழிப்பதுமே அவர்களின் போராட்டத்தின் இலக்கு என எண்ணத் தோன்றுகின்றது. இன்னும் அந்த எண்ணத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதற்காக செயற்படுகின்றனர் என்பதனை இலங்கை வாழ் முழு முஸ்லிம்கள் மீதும் மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்கள் மிக நல்ல ஆதாரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை நடைபெற்றும் இவையனைத்தையும் தாங்கிக் கொண்டு சம்மாந்துறை முஸ்லிம்கள் எந்தவித பதில் நடவடிக்கையும் எடுக்க முடியாதிருந்தார்கள். காரணம், அவர்களுக்குச் சொல்லப்படுகின்ற நற்போதனைகள், அவர்கள் ஊரின் பல மைல் தொலைவு வரை செய்துள்ள விவசாயம், நீண்ட காலமாக நிலவி வந்த தமிழ், முஸ்லிம் உறவுகளின் மிச்ச சொச்சங்கள் என்பனவாகும். மக்கள் ஆத்திரம் அடைவார்கள்; வேதனை அடைவார்கள்; இப்படியே அவர்கள் நிலை மிகவும் தரும சங்கடமாகக் காணப்பட்டது. இந்தப் பள்ளிவாயல் சம்பவத்தில் வீரமுனையைச் சேர்ந்த பலர் சம்மந்தப் பட்டிருந்ததாகப்பலர் பேசிக் கொண்டார்கள். என்றாலும் பூரணமாக நம்ப முடியவில்லை. சம்மாந்துறை மக்கள் படுகொலைப் பிணங்களைத் தேடுவதும், அவற்றுக்கு சட்ட ரீதியான விள்கங்கள், பொலிஸ் நடவடிக்கைகள் எடுப்பதும் அடக்கம் செய்வதுமே தொழிலாகக் கொண்டவராகக் காணப்பட்டனர்-இப்படியே பிரேத ஊர்வலங்கள் தொடர்ந்து கொண்டிருக்க பல்லாயிரக் கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களுக்குச் செல்ல முடியாத அழிவு நிலையும் ஏற்படத் தொடங்கியது. இராணுவப் ாதுகாப்புடன் சில அண்மையிலுள்ள வயல்கள் அறுவடை செய்யப்பட்டன. பாதுகாப்பின்மையால் பல தொழிலாளிகள் வேலைக்குச் செல்ல மறுத்தனர். இதனால், கூலி உயர்வு இமய மலை போல் காணப்பட்டது. இக்கால கட்டத்தில் பொருளாதாரச் சுற்றோட்டத்தில் ஏற்பட்ட தாக்கம் தனியாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும். எனவே- அதனை விபரிக்காமல் விடுகின்றோம். இவ்வாறு துன்பத்துக்கு மேல் துன்பம் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது.

## ஆத்திரமுற்ற மக்கள் ஏன் அகதி முகாமுக்குள் சென்றார்கள்

*12.08.1990*இல் சாளம்பக்கேணி வட்டையில் சூடு மிதிப்பதற்காக உழவு இயந்திரத்தில் காலையிற் சென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI



எட்டுக் கூலியாட்களும், சாரதியுமாக சென்ற ஒன்பது பேரைத் துப்பாக்கி முனையில் மிகவும் மறைவான இடம் ஒன்றில் மடக்கிப் பிடித்து வெட்டிக் கோரமாகப் படுகொலை செய்தனர். அதில் நால்வர் ஸ்தலத்திலேயே மரணமாயினர். ஏனைய ஐவரும் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினர். செய்தி பரவத் தொடங்கியவுடன் இராணுவத்தினர் விரைந்து சென்றனர். இதனையறிந்த கொலைஞர்கள் ஓட்டம் பிடித்தனர். அவ்வாறு ஓடும் போது எதிரிப்பட்டவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டு சென்றதில் மேலும் நால்வர் காயப்பட்டனர். மொத்தமாக காயப்பட்டவர்கள் ஒன்பது பேர். இச்சம்பவம் முக்கிய இரண்டு வழிகளில் மிகக் கூர்மையாக அவதானிக்கப்பட்டது. ஒன்று கொலைஞர்களைக் காயப்பட்டவர்கள் இனம் கண்டு கொண்டனர். மற்றது- இது காலை வேளையில் திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்டது. மேற்சொன்னவாறு காயப் பட்டவர்கள் கொலைஞர்களை இனம் கண்டது முன்னர் நடந்த கொலைகளுக்குக் காரணமானவர்களைக் கண்டுகொள்ள வாய்ப்பளித்தது. அதாவது காலையில் சென்றவர்களில் பலர் உயிர் தப்பியதனால் அவர்கள் அனைவரும் இந்தச் செயலைச் செய்தவர்கள் யார் என்பதை நன்கு தெரிந்து கொண்டனர். இரத்தக்காயங்களுடன் குருதி சொட்டச் சொட்ட கொண்டு வரப்பட்டவர்கள் வெட்டுண்ட வேதனையும் வெளிப்படுத்தாது தமது உறவினர்களிடமும், சூழ நின்றவர்களிடமும் "எங்களை வெட்டியவர்கள் முற்றாக வீரமனையைச் சேர்ந்த இளைஞர்களே" என்று சொல்லியழுதார்கள். விஷேடமாகக் குறிப்பிடத்தக்க வீரமுனையைச் சேர்ந்த இளைஞர்களின் பெயர்களையும் அவர்கள் சொன்னார்கள். சிந்தண்ட மகன் மூத்தான், அப்பக்கார வள்ளிட மகன், அந்தோனிட மகன் மூர்த்தி, கைப்புரத்துட மகன் குமார் என்பவர்களும், இன்னம் சிலருமென்று கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ நின்ற சனக்கும்பலின் ஊடாக இந்தப் பெயர்கள் பரவியது. மக்கள் பெயர்களைக் கேட்டவுடன் நம்ப முடியாது திகைத்துக் குமுறினார்கள். "இவ்வளவு காலமும் இவனுகள் தாண்டா இப்படிச் செய்திருக்கிறானுகள். கேட்ட போதெல்லாம் வேணுமெண்டுதா அவன், இவன் என்று பொய் சொல்லி இருக்கிறானுகள்". என்று பரபரப்புப் பலரது வாயிலிருந்தும் பரவியது. சிலர் "என்னடா பார்த்துக் கொண்டிருக்கிற, எழும்புங்கடா" என்றனர். சனக்கூட்டம் வீரமுனையை நோக்கி ஆ......ஊ....எனச் சத்தமிட்டுக் கொண்டு ஓடியது. தத்தமது கைகளில் கிடைத்தவற்றை அயுதமாகத் தூக்கிக் கொண்டு ஓடினர். பிரேதங்களைப் பார்த்தவர்கள் அனைவரும் தமிழ் மக்களைப் பழி வாங்கும் விதமாகவே பேசிக் கொண்டனர். "நாம் இவ்வளவு அமைதியாக இருந்தும் இவர்கள் நம்மை வேண்டுமென்றே அழிக்கிறார்கள். நாமும் குட்டக் குட்ட குனிந்து கொண்டே செல்கின்றோம்." என்றெல்லாம் உரத்த குரலில் சீற்றம் கொண்டு கத்தினர். ஆத்திரத்தால் ஓடிய மக்கள் சென்ற வேகத்தில் அலறல் குரல்கள், வெடிச்சத்தங்கள் கேட்டன. இதைக் கேட்ட முஸ்லிம் மக்கள் சிலர் பொலிஸ் நிலையப் பக்கம் ஓடினர். "ஆத்திரமடைந்த சனம் என்ன செய்து விடுவார்களோ" என பயந்து பொலிஸாருக்கு தெரிவித்தனர். நம்பிக்கையாளர்கள் பொலிஸாருக்குத் தொலை பேசிச் செய்திகளை அனுப்பினர். சிறிது நேரத்தில் விரைந்து சென்ற விஷேட அதிரடிபடையினர் விடயத்தைத் தடுத்து நிறுத்தி விட்டனர். சிலர் இறந்ததாகவும், பலர் காயமுற்றதாகவும் கதை பரவியது. மக்கள் கூட்டம் வீதிகளில் அலைமோதியது. "நாங்கள் இனி மேல் இங்கு இருக்க முடியாது போகப் போகிறோம்" என தமிழ் மக்கள் பேசிக் கொள்வதாகவும் பலர் கூறினர். இனி இந்த விடயங்களை மிகக் கூர்மையாக அவதானிப்போம். இதற்கிடையில் இது சம்மந்தமாகப் பொலிஸலருக்கு அறியப்படுத்தி இதைத் தடுத்து நிறுத்தியவர்கள் முஸ்லிம்களே என்பதை மனம் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சம்பவத்தின் பின்னணி நியாயம் எத்தகையது? ஏன் இவை? மிக நீண்ட காலமாக இடம்பெற்ற அநியாயமும், அட்டூழியமும், அராஜகமும், கொலையும், கொள்ளையும் சூறாவளியாகத் தாண்டவமாடிய போதும் இத்தனைக்கும் பதிலாக **தமிழ் மக்கள் மீது** சம்மாந்துறை முஸ்லிம்கள் கை வைத்தது இதுவே முதல் தடவையாகும். எவ்வளவு தூரம் முஸ்லிம்கள் பொறுமையாகவும் கட்டுக் கோப்பாகவும் இருந்துள்ளனர். காத்தான்குடியில், ஏறாவூரில் ஒரே வேளையில் நூற்றுக்கும் மேற்பட்டோரை கொன்று குவித்த பயங்கர தீவிரவாதிகள் சம்மாந்துறையில் ஒன்றும், இரண்டுமாக ஐந்தும், பத்துமாக பலநூறு பேரைப் பல தடவை கொன்று குவித்தனர். ஒட்டியும், உறவாடியும் உட்புகுந்து உள்ளவர்களையெல்லாம் அழித்து ஆக்கிரமிப்புச் செய்தனர். மிகத் தந்திரமாக இந்தப் பணிகளை மேற் கொண்டனர். இவ்வளவு காலமும் இத்தகைய கொலைகளை மேற்கொண்டு விட்டு அவன், இவன் என்று இனம் தெரியாரவர்களின் மேல் பழியைக் காட்டி பாசங்கு செய்து நாடகமாடிய வீரமுனை மக்கள், - அவர்கள் தலைவர்கள் கூட-சம்மாந்துறை முஸ்லிம்களை ஆயுத முனையில் அச்சுறுத்தி அழித்தொழிக்க திட்டமிட்டே இருந்திருக்கின்றனர். அதனைப் படிப்படியாகச் செயற்படுத்தியே வந்துள்ளனர். ஏனெனில், இவர்களது நடவடிக்கைகள் முழுவதும் கோயிலில் கூடித் தீர்மானிக்கப்பட்டே செயற்படுத்தப் பட்டன என்பதைப் பல முஸ்லிம்கள் நன்கறிவர். மற்றும் முன்பு 17.05.1989ல் சம்மாந்துறை எரிக்கப்பட்ட போதும் கோயில் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கிய செய்யப்பட்ட தென்பது இங்கு நினைவுறுத்தற்பாலது. மற்றது சில கொலைச் சம்பவங்களில் வீரமுனையின் ஊர்ப் பிரமுகர்கள் அல்லது பிரதிநிதிகள் என்று கருதப்படுவர்கள் கூட சம்மந்தப் பட்டுள்ளனர் என்பதும் எண்ணற்பாலது. இன்னுமொன்று இந்தச் சம்பவம் வீரமுனை இளைஞர்களாலே மேற்கொள்ளப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது நிருபிக்கப்பட்ட உண்மையாகும். எனவே வீரமுனை மக்கள் மிகக் கரிசனையோடு சம்மாந்துறை முஸ்லிம்களை அழிப்பதில் செயற்பட்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

மேலும், வீரமுனையில் சிற்றூரில் இருந்து வந்த தமிழ் மக்களும் இருந்தனர். அவர்கள் அனைவரும் பாடசாலையில் தங்கியிருந்தனர். வீரமுனையில் கோயிலும், பாடசாலையும் ஒரே வளவில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அண்மையில் இரு பள்ளிவாயல்களில் புகுந்து சுட்டதும், வட்டைக்குச் சென்ற பலரை தொடர்ச்சியாகக் கொலை செய்ததும், அதே வேளை அன்றைய சம்பவத்தில் சம்மந்தப்பட்ட தமிழ் இளைஞர்கள் வீரமுனை நோக்கியே ஓடினார்களாம் என்ற செய்தியும் இதற்குள்ளே பரவுகிறது. கடந்த கால ஆறாத்துன்பங்களில் சிக்குண்டவர்களும் மிகவும் ஆத்திரமுற்றிருந்த வேளையில், இவையனைத்தும் எம்முடன் பழகித் திரிந்த, கூடிப்பேசிய, ஒன்றாகவே தொழில் புரிந்த ஏன்? எங்களாலே பாதுகாக்கப்பட்ட இளைஞர்களால் செய்யப்பட்டது என்றால் யார்தான் ஆத்திரமடையாமல் இருப்பார்கள்- கோபம் கொள்ளாதிருப்பர். மனித மனவோட்டங்களில் உள்ள உணர்ச்சிக் கொப்புளிப்புகளை எண்ணிப்பாருங்கள். இந்தச் செயல் நடைபெற்ற அன்று நான்கு மையத்துக்களும் ஊர் மக்களால் கொண்டு செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டன. பொலிஸாரும், இராணுவத்தினரும் ஊர் முழுதும் நடமாடினர். மேலும் ஏதாவது அசம்பாவிதம் நடைபெறாதிருக்க ஊர்ப்பிரமுகர்கள் பொலிஸ் அதிகாரிகளுடன் பேசி இந்த இராணுவ நடவடிக்கையை செய்தனர். ஆனால் அன்று மாலையே பல வாகனங்களில் தமிழ் மக்கள் அவர்கள் விருப்பத்திற்கிணங்க அரசாங்க அனுசரனையுடன் திருக்கோயிலுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சிலுவைச் சங்கம்

இதில் ஒரு முக்கியமான சம்பவம் குறிப்பிடத்தக்கது. இச்சம்பவங்கள் நடந்த உடனே செஞ்சிலுவைச் சங்க வாகனம் விரைந்து வந்து கடமையில் ஈடுபட்டது. ஆனால்- சம்மாந்துறையில் பல அகோர சம்பவங்கள் நடைபெற்ற போது இந்த செஞ்சிலுவைச் சங்கத்தினரை நாம் கண்டதே இல்லை. தமிழர்கள் தேவையான எல்லா உடை...கைகளையும் அவர்கள் தம்மோடு கொண்டு சென்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்ச்சி நடைபெறும் போது "கோரக்கர் கோயில்" பகுதியிலிருந்த ஒரு சிலர் கால் நடையாகவே காரை தீவு சென்று விட்டனர். அவர்களை முஸ்லிம் மக்கள் எதுவும் செய்யவில்லை என்பதையும் மனங்கொள்ள வேண்டும். கொலை வெறியர்களாக பழிவாங்கும் நோக்கத்துடன் முஸ்லிம்மக்கள் செயற்பட்டிருந்தால் இவர்களையும் விட்டு வைப்பார்களா? ஏன்? அநியாயப் பழிகளை சம்மாந்துறை முஸ்லிம் மக்கள் மீது சுமத்தி மேலும் பிரிவினைகளைத் தூண்ட நாசகார சக்திகள் செயற்படுகின்றதோ?

முஸ்லிம்கள் திட்டமிட்டு பழிவாங்கும் நோக்கத்துடன் ஆயுதப்பிரிவொன்றை உற்பத்தி செய்து தமிழ் மக்கள் போல் நடந்து கொள்ளவில்லை. பல சம்பவங்களின் திரட்டாக ஆயிரக்கணக்கான மக்கள் ஆத்திரமுற்று இவ்வாறான சம்பவம் நடைபெற்று விட்டது. ஆக ஓர் அற்ப நிகழ்வு, பல நூறு கொலைகளின் பின் வந்த ஒரு சம்பவம். இவ்வளவு நாட்களும் முஸ்லிம்க மீது மேற்கொள்ளப்பட்ட அத்தனை தாக்குதல்களுக்கும் பதில் இல்லை; நியாயமும் இல்லை; அவ்வேளை அல்லது அந்தச் சம்பவங்கள் யாழ். பல்கலைக்கழக மனித உரிமை ஆணைக்குழுவுக்கு புலப்படவுமில்லை. யாழ், பல்கலைக்கழக மனித உரிமை ஆணைக்குழு என்ற போர்வையில் ஓர் இனவாதக் குரலா? என்று சந்தேகிக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கிறது. அதே வேளை இச்சம்பவம் ஒரு பக்க சார்பாக பொது சனத் தொடர்புச் சாதனங்கள் மூலமாக பரப்பப்பட்டன. அந்தளவுக்கு தமிழ்ப் பேரினவாதச் சக்திகள் வேகமாக இயங்கி முஸ்லிம்கள் மீது அவதூறையும் பழியையும் சுமத்தினர். கோயிலில் முஸ்லிம்கள் புகுந்து 'அகதிகளைச் சுட்டார்கள்' என்று பகிரங்கப் படுத்தினார்கள். அது பாராளுமன்றத்திலும் பேசப்பட்டு 'உறன் சாட்டிலும்' பதியப்பட்டது. உண்மை யாதெனில், பாடசாலைக் கட்டிடங்களில் அகதியாய் இருந்தவர்களையே ஆத்திரம் கொண்ட மக்கள் தாக்கினார்கள். ஆனால் இதற்கு முன் பல தடவைகள் எந்தவிதக் காரணமுமின்றி அச்சத்தால் பள்ளிவாயலில் ஒதுங்கியிருந்தோரை பள்ளிவாயலுக்குள் புகுந்து சுட்டுத்தள்ளினார்கள்; வணக்கத்தில் இருந்த போது சுட்டார்கள். அதற்கெல்லாம் விசாரணையும் இல்லை; விளக்கமும் இல்லை; ஆனால்- காலா காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட முஸ்லிம்கள் உணர்ச்சி வசப்பட்டு செய்த செயல் ஒன்றுக்கு பல விளக்கங்களும், பழிகளும், உண்மைக்குப் புறம்பான அறிக்கைகளும் வெளிவந்தன. மற்றும் கடந்த காலங்களில் இவ்வாறு எந்தச் செயலுக்காவது முஸ்லிம்கள் ஏதாவது தவறுகளை அல்லது தமிழ் மக்கள் இந்தளவு ஆத்திரப்படக்கூடிய ஏதாவது செயல்களில் ஈடுபட்டார்களா? அவற்றுக்கு ஏதும் ஆதாரங்கள் உண்டா?

அப்படி முஸ்லிம்கள் எந்தச் செயலில் ஈடுபடாத போதும் நடு இரவில் வந்து ஊரைக் குழப்பியும், இரவுத் தொழுகைக்குப் பின்னர் பள்ளிவாயல்களில் புகுந்து சுட்டும், பகல் வேளைகளில் மறைவிடங்களில் சன நடமாற்றம் அற்ற பகுதியில் கொலைகளைச் செய்ததும் திட்டமிட்டப்பட்ட சதியில்லையா என்பதை தமிழ் சமூகமே தங்கள் மனச் சாட்சிகளைத் தொட்டுக் கேளுங்கள். வேண்டுமென்றே முஸ்லிம்களை கொன்று, கோபத்தைத் தூண்டியும். பொறுமையோடிருந்தும் தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து இவ்வாறு இயங்கி பொறுமைக்கும் பரீட்சை நடத்தினார்கள். அத்தோடு கொலைஞர்கள், வீரமுனையைச் சேர்ந்த இளைஞர்கள் என்று தெரிந்ததனால் ஆத்திரப்பட்டு, உணர்ச்சிவசப்பட்ட ஓர் அசம்பாவிதமே இது. இவை ஏன்? எப்படி? ஏற்பட்டது என்பதை தமிழ்ச் சமூகம் தனக்குள்ளே வினவினால் உண்மையும் புரியும் பதிலும் தெரியும். மற்றது அன்றைய தினம் ஏறாவூரில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்துக்காக இவ்வாறு பழி வாங்கப்பட்டது எனவும் பல கதைகள் கூறப்படுகின்றன. நிச்சயமாக இது அப்படியான ஒரு பழிவாங்கல் அல்ல. அதே வேளை இந்த ஏறாவூர் சம்பவம் இடம்பெற்றது கூட சம்மாந்துறை முஸ்லிம்களுக்கு அப்போது தெரியவில்லை. முஸ்லிம்களுக்கென்று எந்தத் தொடர்புப் பரிவர்த்தனைச் சாதனங்களும் இல்லை. இந்தச் செய்தி பத்திரிகைகளில் வந்த பின்னரே மிகத் தெளிவாகத் தெரியும். எனவே, இச்சமபவத்துக்கும்- சம்மாந்துறை முஸ்லிம்கள் தாக்கியமைக்கும் எவ்வித தொடர்புமே இல்லை- என்பது மனம் கொள்ள வேண்டியது. அப்படியென்றால் வணக்கத்தில் பள்ளிவாயலில் ஈடுபட்டிருந்த காத்தான்குடி தாக்கியிருக்க வேண்டும்; அல்லது பழி வாங்கியிருக்க வேண்டும்.- நடக்கவில்லை. அது ஒரு காரணமில்லாவிட்டால் சம்மாந்துறையில் பள்ளிவாயல் களில் புகுந்து அல்லது சம்மாந்துறை முஸ்லிம்களை அங்கும்- இங்கும், அன்றும்- இன்றும் கொன்றொழித்தற்கு பழி வாங்கியிருக்க வேண்டும். அதுவுமில்லை; எனவே, இச்சம்பவம் இடம்பெற்றது தொடர்ந்தேர்ச்சியான படு கொலையும், அன்றைய தினம் காலை வேளையில் வயலுக்குச் சென்ற முஸ்லிம்கள் கோரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டதும் அக்கொலைஞர்கள் வீரமுனை இளைஞர்கள் என இனம் காணப்பட்டதன் பின்னணியுமாகும் என்பதை எண்ணிக் கொள்ளுங்கள்.

ஆயுதத்தை மட்டுமே நம்பி இத்தகைய ஈனச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்களைத் தொடர்ந்து செய்து விட்டனர் தமிழ் சமூகத்தினர். ஆனால், இன்று ஒருவரை யொருவர் பார்க்க முடியாதளவு வேறுபட்டு நிற்கின்றனர். இதனால் பெற்ற இலாபம் என்ன? இந்த அப்பாவி முஸ்லிம்களைக் கொன்று தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பெறப்பட்டு விட்டனவா? அல்லது அவற்றை பெற்றுக் கொள்ள ஓர் இம்மியளவாவது உதவினவா? என்று சிந்தியுங்கள். இதனால் பெறப்போகின்ற பயன் என்ன? அல்லது முஸ்லிம்கள் இந்தளவு பழி வாங்கப்படுவதற்கு அவர்கள் செய்த தவறுதான் என்ன? முஸ்லிம்கள் எப்படியான சந்தர்ப்பங்களில் தமிழர்களோ முரண்பட்டுக் கொண்டார்கள்? யாரால் அந்நிலை ஏற்பட்டது என்பதும் நன்கு உணர்ந்து பார்க்கப்பட வேண்டியது. மக்கள் கூட்டம் ஆத்திரமடைந்த வேளையிலும் முஸ்லிம் பெரியார்கள் அதனைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்களே தவிர தூண்டி விடவில்லை. இதற்கு மாறாக தமிழ் மக்களின் தலைவர்கள் உட்பட என்ன செய்தார்கள்? திட்டமிட்டுத் தாக்கினார்கள்- தாக்குகின்றார்கள்.

இவ்வாறு எங்குமில்லாதவாறு தமிழ் மக்கள் சம்மாந்துறையில் வீடுகளை விட்டு, ஊரை விட்டு ஏன் ஓடினார்கள்? முஸ்லிம் மக்கள் ஒவ்வொரு நாளும் இவர்களைச் தேடித்தேடித் தீங்கிழைப்பார்கள் என்பதனாலா? இல்லை, அவர்களது மனச்சாட்சி அவர்களை விடவில்லை. நாம் நீண்ட காலமாக செய்து வந்த தவறுகள் இருட்டில் செய்தவைகள். ஆனால் அவையனைத்தும் இன்று வெளிச்சத்துக்கு வந்து விட்டன. இனி, எவ்வாறு இந்த முஸ்லிம்களின் முகத்தில் விழிப்பது. ஒன்றா?, இரண்டா? பல நூறு சம்பவங்கள்.... இந்தப் பின்னணிகளினாலேயே அவர்கள் வெளியேறினார்கள். குறிப்பிட்ட சில பகுதிகளில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் தற்போது அரச அதிபர்கள், இராணுவ அதிகாரிகள், அரச இயந்திரம் என்பன மீண்டும் குடியமர்த்த முயற்சிகள் மேற்கொள்கின்றன. ஆனால்- இவர்கள் மறுக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI



சம்மாந்துறைக்கு முன்பு பல ஊர்களில் இனக்கலவரங்கள் ஏற்பட்டு அங்கெல்லாம் தமிழ் மக்கள் உறவு சிறப்பாக மீண்டும் கட்டியெழுப்பப்பட வில்லையா? ஆனால் சம்மாந்துறையில் அவர்கள் வந்து குடியிருக்க மறுக்கிறார்கள். ஏன்? அவர்களுடைய மனச்சாட்சி விடவில்லை. எம்மைக் கட்டிக் காத்த சம்மாந்துறை மக்களின் எத்தனையோ குடும்பங்களுக்கு ஏதோ ஒரு வகையில் துரோகமிழைத்திருக்கின்றோம். எம்மைக் காப்பாற்றிய வீடுகளைக் கொள்ளை அடித்திருக்கிறோம்.; குண்டு வைத்துத் தகர்த்திருக்கிறோம். அடைக்கலப் பொருட்கள் வைத்த வீட்டாரையே கொலை செய்திருக்கிறோம். ஒன்றா?, இரண்டா? ஒன்றுக்கு மேல் ஒன்றாக அநியாயம் இழைத்திருக்கின்றோம். நாம் மீண்டும் சென்று அவர்களை எவ்வாறு பார்ப்பது என்று அந்தத் தமிழ் மக்கள் தயங்குகின்றார்கள். ரோசத்தால் வெட்கித் தலை குனிந்து மறைந்து திரிகின்றார்கள்; பார்க்க மறுக்கின்றார்கள்; ஏனென்றால், தமிழர் குலம் வள்ளுவ பரம்பரையில், பகவற்கீதை பரம்பயில் வந்த மானமுள்ள-மரியாதையுள்ள குலம். பல நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிய நமது மைந்தர்களை அழைத்துக் கொண்டு சம்மாந்துறை முஸ்லிம் ·மக்கள் முன் எவ்வாறு செல்வது? ஒன்றாக உண்டும்- கொடுத்தும்- இருந்தும் வாழ்ந்து விட்டு இரவைக்கு நடக்கப்போகும் அநியாயத்தைத் சொல்லாமலே மங்கிய மாலை வேளையிலே ஊரை விட்டுச் சென்ற நாம் எப்படி? அவர்களை சந்திப்பது என்றே வெட்கித் தயங்கி அவர்கள் இங்குவர மறுக்கின்றார்கள். இந்த உண்மைகளை விளங்கிக் கொள்ளாத அரசியல் பிரமுகர்கள், வெளிநாட்டில் வசிக்கும் வேறு தமிழர்கள் போன்ற ஏணையோர் சம்மாந்துறை மக்கள் மட்டும் ஏன்? தமிழ் மக்களை மீளக்குடியமர விடுகின்றார்கள் இல்லை என்று வீண் விதப்புரைகள் செய்கின்றனர்: சர்வதேச ரீதியாக இந்தத் தப்பபிப்பிராயத்தினைப் பரப்புகின்றனர். வீணாக சம்மாந்துறை முஸ்லிம்களுக்குள் எதிராக தமிழர்களின் உணர்வுகளை தூண்டி விட்டிருக்கின்றனர். இதன் வழியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஒரு தப்பபிப்பிராயத்துக்கும்- இனவாதத் தூண்டலுக்கும் மிகக் காத்திரமாக 'யாழ்பல்கலைக்கழக மனித உரிமக் குழு' என்ற போர்வையில் அறிக்கை விட்டு உண்மையை ஒழித்து இந்தத் துரோச் செயலைச் செய்து தமது பெயரையும் கெடுத்துக் கொண்டமை குறித்து சம்மாந்துறை முஸ்லிம்கள் மனம் வருந்துகின்றார்கள்.- உண்மையை உணர்ந்து கொள்ளும்படி கேட்கின்றார்கள். பொய்மையையும், அநியாயத்தையும், அக்கிரமத்தையும் அழித்தொழிக்குமாறும் கோருகின்றார்கள்.

தமிழ் மக்கள் வாழ்ந்த சில ப்குதிகள் இன்று யாரும் அற்ற நிலையில் அவர்களால் கைவிடப்பட்டு கிடக்கின்றன. அங்கு கள்வர்கள் புகுந்து எடுக்ககூடியவற்றை எடுத்துச் செல்கின்றனர். பொலிஸாரோ அல்லது ஊர்ப் பெரியார்களோ சென்றால் ஓடி ஒழிந்து விடுவார்கள். உண்மையில் இந்தக் களவுக்கும் சம்மாந்துறைப் பெரும்பான்மை நியாயமுள்ள முஸ்லிம்களுக்கும் சம்பந்தமில்லை. படிப்படியாக மேற்சொன்னவாறு வீடுகள் சூறையாடப்பட்டு வந்தன இப்போது அப்பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் வீடுகளும் இதே கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப் படுகின்றன. ஓரிரு கள்வர்களைக் கூட பொலிஸாரின் உதவியுடன் பிடித்து ஓரளவு இச்செயலை அமைதிப்படுத்தும் வேளையில், எங்காவது ஒழிந்து வாழும் புலிகள் முஸ்லிம்களைச் சுட்டு தமது கொலைத் தொழிலை மேற்கொள்வர். அப்போது ஆத்திரம் என்ற போர்வையில் கள்வர்கள் களவைத் தொடங்குவர். இது ஒரு பிரச்சினையான விடயமாக உள்ளது. இந்தக் கொள்ளைகள் பற்றிய யதார்த்தம் நிச்சயமாகத் தமிழர்களுக்கும் தெரியும். ஆனால், வேண்டுமென்றே சம்மாந்துறை மக்கள் மீது பழியைப் போடுகின்றனர். இது இப்படியே ஒரு புறம் நடைபெற்றுக் கொண்டிருக்க இவற்றுக்கு காரணமான கொலைத் தொழில்களை அந்தத் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து மேற்கொள்ளாமலில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் கொலைத் தொழில் தொடர்தல்

கடந்த 03.09.1990ல் விவசாயிகள் விவசாயம் செய்யும் பிரதேசத்தில் இரவு நேரம் வந்து மிதி வெடிகளை வைத்துவிட்டு பயங்கரவாதிகள் சென்று விட்டனர். விடியற் காலையில் வயலுக்குச் சென்ற எம்.ஐ.எம்.ஷஹீட், ஏ.எம்.பாயிஸ் அகிய இருவரும் அவ்வெடி வெடித்ததனால் தமது ஒவ்வொரு காலை இழந்தனர். 20.11.1990ல் மேலும் ஏ.அப்துல் றஹீம் ஹாஜியார், என்.பாறூக் என்பவர்களும் இதே போன்று மிதிவெடியில் சிக்கினர். இத்தகைய சந்தர்ப்பங்களில் மக்கள் மேலும் ஆத்திரமடைந்தனர். ஆத்திரத்தின் அகோரத்தால் இன்னும் சில வீடுகளை மக்கள் உடைத்தனர்- அதைப்பலர் தடுத்தனர். ஆனால்-இயல்பான இத்தகைய ஆத்திர உணர்ச்சியையும், அதன் தாக்கமும் மனித மனவெழுச்சி சார்ந்ததாகும். இவையாவும் சம்மாந்துறையை அண்டியுள்ள வீரமுனைப் பிரதேசத்திலேயே நடைபெற்றன. வேறு பகுதிகளுக்குப் போக இவர்களுக்குப் பயம். எனவே யாவும் இவர்கள் பயங்கரவாதிகள் மேற்கொண்ட அட்டூழியங்களில் பின்னணியாகவே இக்காலத்தில் விளங்கியது. இப்படியே நடைபெற்று சிறிது ஓய்ந்திருக்கும் போது மீண்டும் பயங்கரவாதிகளின் கொலைவெறி.....

20.05.1991ல் வயல் விதைப்பு வேலை முடிந்த பின் வயலில் இருந்து வந்து கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கியால் சுட்டுத்தள்ளினர். அப்போது எம்.ஆதம்பாவா, எம்.ரி.எம்.ஹனீபா, ஏ.எல்.எம்.சலீம், ஏ.கோஸ் முகம்மது, ஏ.எம்.சாலி, எம்.ரி.சகாப்தீன், எம்.எம்.நளீம், ஐ.முகம்மது தமீம், எம்.ஐ.முபாறக் ஆகிய ஒன்பது பேர் அவ்விடத்திலே கொல்லப்பட்டனர். இருவர் படுகாயமுற்றனர். இவர்கள் மாலை வேளையில் வேலை காரணமாகச் சற்றுப் பிந்தி மாலை 7.00 மணிக்குத் திரும்பு வரும்போது இச்சம்பவம் இடம்பெற்றது. இப்படியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிகள் நடைபெறும் போது மக்கள் உணர்ச்சியைக் கட்டுப் படுத்துவது மிகவும் சிரமமானதாகும். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிர் தப்பியவர்கள் இது 'சிவப்பிரகாசம்' என்பவரது தலைமையில் நடைபெற்றதாகவும், இச்செயலைச் செய்த சிலரைக் கண்டதாகவும் சாட்சி பகர்கின்றனர். இச்செயல்கள் வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யும் சதி என்றுதான் கூறவேண்டும்.

அதுமட்டுமல்ல- ஏலவே வீடுகளைக் கழற்றிச் சூறையாடியதும் பாடசாலை, பள்ளிவாயல் போன்றவற்றைக் கூடக் கழற்றிச் சென்றதும் 1989ம் ஆண்டு கலவரத்தின் போது தமிழ் மக்களே. இந்தளவு கொள்ளைகள் பற்றிய தூண்டல் உணர்வுக்கு இவர்களே காரணம். அந்நேரம் முஸ்லிம்கள் எவ்வளவு ஆத்திரமடைந்திருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். முஸ்லிம்களது எட்டுக் கிராமங்களை முற்றாக அழித்தொழித்தார்கள். மரங்களை வெட்டினார்கள்; வேலிகள் அடைத்திருந்த முட்கம்பிகளைக் கழற்றிச் சென்றார்கள்; தென்னை மரங்களைக் கூட வெட்டி வீழ்த்தி மரங்களை எடுத்துச் சென்றார்கள்; இவற்றையெல்லாம் மறந்து விட முடியாது- இந்த உண்மைகளை மாற்றி விட முடியாது.

இன்னுமொரு சம்பவத்தினையும் நாம் இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும். வீரமுனைக் கலவரத்தின் போது காயப்பட்ட பலர் அம்பாரை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அப்போது, 'தொப்பிகல' புலிகள் முகாம் நீண்ட நாட்களாக இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் மோதல் இடம்பெற்று, அதனால் காயப்பட்ட பல இராணுவ வீரர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டனர். அந்நிகழ்வால்- சிங்கள மக்களின் மனப்பாதிப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தமிழர்கள் மீது தாக்கத்தை செலுத்தியிருக்கலாம். ஆனால்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சம்பவத்தையும் சம்மாந்துறை முஸ்லிம்கள் மீது பழி சுமத்திப் பார்த்திருக்கின்றனர். உண்மையில் நியாய உணர்வுகளின் பக்கம் சகலரையும் கவனம் கொள்ளுமாறு கேட்கின்றோம். அநியாயமாக சம்மாந்துறை முஸ்லிம்கள் மீது பழி சுமத்தி வரலாற்றில் களங்கத்தை அல்லது இத்தகைய இன வெறுப்பினை ஏற்படுத்த எந்தச் சக்தியும் முனையக்கூடாது.

படித்த இளைஞர்களை இழந்ததாகவும், பல ஏக்கர் காணிகளின் நெல் விளைச்சலை இழந்ததாகவும், பல ரூபா பெறுமதியுள்ள பொருட்களை இழந்ததாகவும், இன்னும் சம்மாந்துறையில் குடியிருக்க முடியவில்லை என்றும் சர்வதேச ரீதியாகச் செய்திகளை பரப்பினாலும் சம்மாந்துறை முஸ்லிம்கள் மீது மேற் கொள்ளப்பட்ட அநியாயம், அராஜகம், கொலைகளுக்கு இவை ஈடாகாது. அதுமட்டுமல்ல- அந்த அட்டூழியங்களின் காரணகர்த்தாக்களான அவர்கள் சம்மாந்துறை மக்களோடு வாழ முடியாமல் ஒதுங்கி வாழ முயற்சிக்கின்றார்கள். தாமாகவே விட்டுச் சென்ற கிராமங்களை இன்று முஸ்லிம்கள் துரத்தியதாகவும், குடியிருக்க விடுகின்றார்கள் இல்லை என்றும் கூற முனைகிறார்கள்.

படிப்படியாக உயர்மட்ட உத்தியோகத்தர்கள், படித்த இளைஞர்கள், துணிச்சல் உள்ள இளைஞர்கள், சமூக முன்னோடிகள், இளம் விவசாயிகள் பெண்கள் என்று நூற்றுகணக்கான முஸ்லிம்களைக் கொன்றார்கள், பலகோடி ரூபா பொருட்களைக் கொள்ளையடித்தார்கள், பல ஆயிரம் மூடை நெல்லினை பறித்தார்கள், பல ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளைச் செய்கை பண்ண விடாமல் தடுத்தார்கள். இவையெல்லாம் அவர்கள் மேற்கொண்ட மேலோட்டமான பொருளாதாரத் தாக்கங்கள். ஆனால்- இந்நிலைகளால் ஏற்பட்ட பொருளாதார நலிவு ஈடு செய்ய முடியாததாகும். அது பற்றிய தனியொரு ஆய்வையே மேற்கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது. வாகனங்கள் பறிப்பு, துவிச்சக்கர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டிகள் களவு இவையெல்லாம் இடம்பெற்றும் பல ஆண்டு காலம் சம்மாந்துறை முஸ்லிம்கள் வீரமுனைத் தமிழர்களோடு வீரமுனைத் தமிழர்களோடு தமது இன உறவைக் கட்டிக் காத்தே வந்தனர். ஆனால்- இவை யாவற்றையும் வீரமுனை இளைஞர்களே மேற் கொள்கின்றனர் என்ற செய்தி வெளி உலகத்துக்கு வந்ததுமே இந்நிகழ்வு இடம்பெற்றது. அதனால்-யாரோ எடுத்துச் சென்ற பொருட்களுக்கும், தாம் சுயமாகவே விட்டுச் சென்ற கிராமங்களுக்கும் சம்மாந்துறை முஸ்லிம்களை பொறுப்பாக்குவது மிகத்தவறானதாகும்.- கண்டிக்கப்பட வேண்டியதும் கூட.

கிழக்கிலங்கையிலே பல்வேறு தமிழ்- முஸ்லிம் உறவு இன விரிசலின் போது சம்மாந்துறை முஸ்லிம்கள் நியாயத்தோடு நின்றவர்கள் என்பது யாவருமறிந்தது. அத்தோடு- சம்மாந்துறை முஸ்லிம்கள் தாக்கப்பட்ட போதும் இவர்கள் பல ஆண்டு காலம் இன உறவினைச் சிதையாது பாதுகாத்து வந்தவர்கள். அப்பேற்பட்ட மக்கள் அநியாயத்துக்கு என்றும் துணை போக மாட்டார்கள். மார்க்க நெறியும், மனித உரிமையும் அவர்களுக்கு நீதியைக் கற்றுக் கொடுத்து. சிறப்பான பண்பாட்டில் வந்தவர்கள். எனவே நன்றியுள்ள எந்தத் தமிழனும் இன்றும் சம்மாந்துறை முஸ்லிம்களைப் பிழை காண முடியாது.

எனவே இன உறவு வளர வேண்டும்; பிரிந்த உறவு இணைய வேண்டும் என்பதில் முஸ்லிம்கள் காத்திரமான நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆனால் முஸ்லிம்கள் தமது உரிமை. சுதந்திரம், சுயம் என்பவற்றை விட்டுக் கொடுக்க முடியாது. தமிழர்கள் தங்களது உரிமைகள், சுதந்திரம் பாதிக்கப்படும் போது அவற்றுக்காகப் போராடலாம் என்றால் அத்தகைய உரிமை முஸ்லிம்களுக்கு இல்லையா? மனித உரிமை மீறல் தமிழ் சமூகத்திற்கு மட்டும்தானா இடம்பெற்றது. வெறுமனே அத்தகைய பாதிப்பினை மட்டுமே எழுதி வரலாற்றுப் பதிவினை உண்மையற்றதாக்கக் கூடாது. மிக நீண்ட காலமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட அடக்கு முறையின் ஒரு பின்னனியே இந்தச் சம்பவம். எனவே யாழ். பல்கலைக்கழக மனித உரிமைக்குழு இந்த வரலாற்றுப் பின்னணியைக் கருத்திற் கொள்ள வேண்டும் என்பது அவசியமானதாகும். இல்லாவிட்டால் மக்களுக்கு அல்லது அடுத்த தலைமுறைக்கும் இவ்வாணைக்குழுவினர் இந்த இன விரிசலின் மிச்ச சொச்சங்களை கையளித்தவர்கள் ஆவார்கள்.

வீரமுனைத் தமிழர்களை சம்மாந்துறை முஸ்லிம்கள் துன்புறுத்துமாட்டார்கள். அத்தகைய நோக்கம் அவர்களுக்கு இருந்திருந்தால் அது எப்போதோ நடைபெற்றிருக்கலாம். ஆனால் நாங்கள் தமிழர்களது சுய நிர்ணய உரிமைகளை என்றும் மதிக்கிறோம். எனவே இனிமேல் முஸ்லிம்களது சுய நிர்ணய உரிமைகளையும் அவர்கள் மதித்து வாழ வேண்டும். அவ்வாறு மதிக்கத் தவறும் போது நாங்கள் அவற்றை பேணிப் பாதுகாக்க வேண்டும். சென்ற காலங்களில் இடம்பெற்ற தவறு இதுவே.

இந்த ஆக்கபூர்வமான இன உறவுப் பணிகளில் அனைவரும் பங்கு கொள்ள வேண்டும். அரச உத்தியோகத்தர்கள், வெளி நாட்டு நிறுவனங்கள், உள் நாட்டு அமைப்புக்கள், அரச படைகள், இளைஞர் அமைப்புக்கள் முதலியன இதற்கென கருத்தரங்கு, ஒன்று கூடல், புரிந்துணர்வு நிகழ்வுகளை ஏற்படுத்த வேண்டும். நாம் அன்று போல் கலைவிழாக்கள், பண்டிகை நிகழ்வுகள் கொண்டாடிய நாள் இன்றும் வர வேண்டும். நாம் ஒவ்வொருவரும் எமது தனிப்பட்ட சபை, கலாச்சாரம், சமயம், சமூகம் என்பவற்றை மதிப்பதோடு மற்றவர்களது அத்தகைய உரிமைகளையும் மதித்து நடப்போமானால் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாது. மேற்சொன்ன அமைப்புக்கள் போன்றவையும், இன்று தப்பபிப்பிராயங்களை வெளியிடும் சக்திகளும் இன விரிசலுக்குப் பங்களிக்காது யதார்த்தமாக இன உறவுச் செயற்பாட்டில் இறங்க வேண்டும். அப்போதுதான் ஒரு புதிய உறவினைக் கட்டி எழுப்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே எத்தகைய ஓர் அரசியல் தீர்வு ஏற்பட்டாலும் எமக்கிடையே திருப்தியான உறவு ஏற்படாத வரை எதுவுமே பலிக்காது. சம்மாந்துறை முஸ்லிம்கள் மீது நன்றியுணர்வுக்கு அப்பாற்பட்ட மிருகத்தனமான தும்-பயங்கரமானது மான தாக்குதல்களையும் மேற்கொண்டு விட்டு தவறான பழிகளையும் சுமத்தி விடுவதன் நோக்கம் என்ன? நாம் எந்த பிரசார சக்திக்கும் அடிபணியாது எம்முடைய திருப்தியான உறவில் கரிசனையாயிருக்க வேண்டும். கடந்த காலங்களில் சம்மாந்துறை முஸ்லிம்கள் அனுபவித்த சோதனைகள் மறக்க முடியாதன. அப்படியிருந்தும் மனிதாபிமானத்தின் அடிப்படையில் மற்றவர்களை மதிக்க சம்மாந்துறை தயங்கவில்லை. ஆனால் அதற்காக ஏற்றுக்கொள்ள முடியாத அல்லது நியாயப்படுத்தப்பட முடியாத பழிகளை சுமக்க முடியாது.

காடுகளில், வயல் வெளிகளில் மறைந்திருந்து கொண்டு இன்றும் இந்தப்பயங்கரவாதிகள் தமது கொலைத் தொழிலில் கவனமாயிருக்கின்றனர். இந் நிலைமை நீடித்துக் கொண்டேயிருக்கிறது. காரணமின்றி முஸ்லிம் உயிர்களைக் கொன்றொழிப்பதில் மிகத் தீவிரமாக 'விடுதலைப் போராளிகள்' என்ற 'கொலைத் தொழிலாளிகள்' சிரத்தையாயுள்ளனர். அதற்கெனச் சந்தர்ப்பங்களைத் தேடித் தவம் செய்கின்றனர். இந்த வேளையில்தான் சம்மாந்துறை முஸ்லிம்களின் யதார்த்தத்தை வெளிப்படுத்துகின்றோம். அதேவேளை தாமாகவே விட்டுச் சென்று அந்நியமாகியிருக்கும் தமிழ்ச் சகோதரர்கள் மீண்டும் தங்களோடு வாழ்வதில் சம்மாந்துறை முஸ்லிம்கள் அக்கறை கொள்கின்றனர். தமிழ்-முஸ்லிம் உறவினை ஆசிர்வதிக்கின்ற முஸ்லிம்கள் ஒரு இனத்தை மறு இனம் அடக்குவதை அல்லது இம்சைப் படுத்துவதை ஜீரணிக்க மறுக்கின்றார்கள்.

எனவே, சுவைக்குதவாத காரணகாரிய தொடர்பற்று எழுமாற்றாக யாழ். பல்கலைக்கழக மனித உரிமை ஆணைக்குழு கூறியவற்றைக் கண்டிக்கின்றோம். இனிமேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI


இத்தகைய அறிக்கைகள் மிகவுமே பூரணத்துவமானதாக, வரலாற்றுத் தொடர்புடையதாக, வரலாற்றுப் பின்னணியை விளக்குவதாக அமைந்தாலே அவை இறந்த வரலாற்றுப்பதிவாக அமையும்.

இங்கு பிரதானமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது சம்மாந்துறை தமிழ்- முஸ்லிம் மக்களின் உறவாகும். காலாகாலங்களாகப் பேணப்பட்டு வந்த உறவு இயக்க இனவெறி இளைஞர்களின் வெறியாட்டத்தால் துண்டிக்கப்பட்டிருக்கின்றது. அந்த வெறியாட்டத்திற்குப் பலியானனோர் மீண்டும் சம்மாந்துறை முஸ்லிம்களைச் சந்திக்க முடியாதவாறு அந்நியமாக்கியுள்ளார். ஆனால் அழிந்துபோன உயிர்களை மீட்டெடுக்க முடியாது. நடந்து போன கறைபடிந்த சம்பவங்களுக்கு அடிப்படைக் காரணிகள் இருக்கின்றன. எப்படி இருந்தாலும் சம்மாந்துறை முஸ்லிம்களின் வரலாற்றில் இழப்பு எக்காலத்தாலும் நிரப்பப்பட முடியாதது. அது போல் தமிழ் சகோதரர்கள் இழைத்த அநீதியும் மறக்கப்பட முடியாதது. அதேபோல் அந்த நிகழ்வின் எதிரொலியாக இடம்பெற்ற சம்பவங்களையும் மறக்க முடியாது.

ஆனால், 'உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வது போல' செய்து விட்ட- நிகழ்வுகள் காலத்தால் அழியாதன. இந்த நிகழ்வுகளை இனியாவது தமிழ் சமூகம் மனங்கொள்ள வேண்டும். செய்வதையெல்லாம் செய்து விட்டு சர்வதேச ரீதியாக சம்மாந்துறை முஸ்லிம்களைப் பற்றி தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்த முனைந்த மிகவுமே நியாயமற்ற- கோழைத்தனமான மனப்பக்குவங்களைக் கண்டிக்கின்றோம். இனி ஏலவே குறிப்பிட்டவாறு எமது உறவுகளை நிலைக்கச் செய்வதில் நாம் பூரண பங்காற்ற வேண்டும். அத்தோடு ஒவ்வொரு இனத்தவர்களையும் நாம் பாதுகாக்கவும் வேண்டும். தீய சக்திகளை அந்நியமாக்கவும் வேண்டும். ஒரு இனத்தை மறு இனம் மதிக்க வேண்டும். இன, கலாச்சார, மதத்துவ உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வழியே எமது உறவு மீண்டும் நிலைபெற வேண்டும். எந்த இனமும் பழி வாங்குதலைப் பற்றிச் சிந்தியாது நன்றியுணர்வுகளை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரே வீட்டுக்குள் இருந்து கொண்டு பொதுச் சுவரை உடைக்க யாருமே முனையக்கூடாது.

எனவே, கடந்தகால எமது உறவுப் பின்னணி இப்போது தெளிவாகியிருக்கும். எது, எதனால் நடைபெற்றது என்பது புரிந்திருக்கும். நியாயமான யதார்த்தங்களை உணர்த்தியுள்ளோம். அந்த வரலாற்று உறவை வெளிப்படுத்தியிருக்கிறோம். அதே வேளை எம்மீது சுமத்தப்பட்ட நியாயமற்ற பழிகளுக்கும் பதில் சொல்லியிருக்கின்றோம்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆ த ங் க ம்

அந்நியப்படுத்தப்பட்டு

அநியாயத்தின் பிடியில் வாழும் நாம்

குற்றச்சாட்டுடனும் வாழவேண்டுமா?

மொத்தமாக இல்லாவிடினும்

ஊர், ஊராகவேனும்

உண்மையை சுவடிப்படுத்துவது

நமது வரலாற்றுக் கடப்பாடாகும்.

இந்த

நியாயபூர்வமான ஆதங்கத்துடன்

நிறைவு செய்கின்றோம்.

LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C LIBRA
ALMUNAI



## 1987 ஜூலையில் இந்திய அமைதிகாக்கும் படைய
## முஸ்லிம்கள் மீது புரிய


| நகரம் | சம்பவம் நிகழ்ந்த காலம் | முஸ்லிம்கள் பாதிப்பு | | |
|---|---|---|---|---|
| | | கொல்லப் பட்டோர் | காயமடைந் தோர் | எ. |
| யாழ்ப்பாணம் | நவ. 1987 | 13 | 24 | |
| சாவகச்சேரி | நவ. 1987 | 03 | 05 | |
| முல்லைத்தீவு | நவ.1987 | 03 | 10 | |
| மூதூர் | ஒக்.1987 | 52 | 240 | |
| கிண்ணியா | நவ. 1987<br>ஏப். 1989 | 38 | 138 | |
| ஓட்டமாவடி | டிச. 1987 | 88 | 183 | |
| ஏறாவூர் | பெப். 1983 | 05 | 15 | |
| காத்தான்குடி | ஜன. 1988<br>பெப். 1988 | 67 | 53 | |
| கல்முனை | செப்.1987<br>டிச.1987<br>மார்ச்.1988<br>ஏப்.1989<br>மே. 1989 | 50 | 143 | |
| சாய்ந்தமருது மாளிகைக்காடு | மார்ச். 1988 | 17 | 75 | |
| சம்மாந்துறை | மே. 1989 | 21 | 120 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ...ார் வந்ததிலிருந்து அவர்கள் வெளியேறியவரை ...பட்ட கொடுமைகள்

| ...திக ...ளோர் | கொள்ளையிடப்பட்டவை + சேதமானவை | | | மொத்த நஷ்டம் மில்லியன் ரூபா |
|---|---|---|---|---|
| | வீடுகள் கடைகள் | பள்ளி வாசல்கள் | பாடசாலைகள் | |
| ...,000 | 10 | 03 | 02 | 80 |
| ...00 | 2 | 01 | — | 1 |
| 500 | 50 | 02 | 01 | 10 |
| ...,000 | 300 | 12 | 04 | 140 |
| ...,000 | 200 | 05 | 03 | 110 |
| ...,000 | 100 | 04 | 05 | 50 |
| — | — | 01 | 01 | 25 |
| ...,000 | 100 | 06 | 02 | 200 |
| ...000 | 35 | 01 | 01 அரபிக் கல்லூரி | 110 |
| ...,000 | 50 | 01 | 01 | 110 |
| ...,000 | 627 | 03 | 01 | 250 |
| | | | மொத்தம் | 1063.5 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

# சமீபகாலச் சம்பவங்கள்

இதுவரை நாம் 1991 டிசம்பர் மாதம் வரையிலான நடப்புகளையும், அவற்றிகான காரணிகளையும் பற்றிப் பார்த்தோம். இந்த நூலை 1992-ஜனவரி மாதமளவில் வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்திருந்தாலும் அதனை வெளியிடுவதில் பல சிரமங்களும் தாமதங்களும் ஏற்பட்டு விட்டன. ஆதலால் ஜனவரி 1992 க்குப் பின்பைய சம்பவங்களின் ஒரு மேலோட்டமாக இந்த அத்தியாயத்தைச் சேர்த்துள்ளோம்.

## தமிழர்கள் மீளக் குடியேறல்

சம்மாந்துறையின் வீரமுனை, வண்ணார் வட்டை, தமிழ்க் குறிச்சி ஆகிய பகுதிகளிலிருந்து தாமாகவே தமது பாதுகாப்புக் கருதி வெளியேறிய தமிழ் மக்களை மீண்டும் அவர்கள் வாழ்ந்த இடங்களில் குடியேற்றுவதற்கான ஏற்பாடுகள் அரசாங்கத்தினாலும், சில தொண்டர் ஸ்தாபனங்களாலும் எடுக்கப்பட்டன.

இம்முயற்சிக்கு சம்மாந்துறை வாழ் முஸ்லிம்களிடம் எதிர்பேதும் இருக்கவில்லை. காரணம் அவர்கள் இன ஐக்கியத்தை அவர்களாகவே எப்போதுமே சிதைத்தது கிடையாது. அவர்களின் ஏக்கம் எல்லாம் இந்த இனப் பிரச்சினையில் தாம் யாரினதும் பலிக்கடாக்களாக்கப் படக்கூடாது என்பதே.

மீளக் குடியேற்றல் சம்பந்தமாக அரசினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டப்பட்ட அனைத்து ஆலோசனைக் கூட்டங்களிலும் முஸ்லிம் தலைவர்கள் கலந்து கொண்டனர். ஆயுதக் குழுக்களினால் முஸ்லிம்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் என்று அவர்கள் அரசிடம் அப்படியான கூட்டங்களில் வைத்து கோரிக்கை விடுத்தனர்.

ஏனெனில் வீரமுனையில் மீண்டும் குடியேறும் தமிழர்கள் மத்தியில் பல இயக்க இளைஞர்களும் உள்ளனர். அவர்களால் மீண்டும் குழப்பங்கள் ஏற்படலாம் என்று அச்சம் முஸ்லிம்களிடம் இருந்தது.

இந்த நிலையில் பரீட்சார்த்தமாக சில தமிழர்கள் *10-3-92* அன்று வீரமுனையில் மீளக் குடியமர்த்தப்பட்டனர். இவர்களுக்கான நிவாரண, இருப்பிட, பாதுகாப்பு வசதிகள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டது.

## முஸ்லிம்களின் அச்சம் நிரூபணமானது

ஆம் தமிழர்கள் மீளக் குடியேறினால் அவர்களுடன் ஆயுதக் குழுவினரும் வருவர், அவர்களால் பிரச்சனை ஏற்படும் என்ற ஐயப்பாடு முஸ்லிம்களிடம் ஏற்கனவே இருந்தது. அது தமிழர்கள் குடியேறிய அடுத்த நாளே நிஜமாகி விட்டது.

*11-03-92* அன்று முஸ்லிம்களின் வயல்களில் அறுவடைக்குப் பின் வைக்கப்பட்டிருந்த சூடுகள் பலவற்றிற்கு பயங்கரவாதிகள் தீவைத்து விட்டனர்.

மொத்தமாக *2-3* நாட்களுக்குள் *19* சூடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இவையாவுமே முஸ்லிம்களின் சூடுகளாகும். இதனால் இலட்சக்கணக்கான் ரூபாய்கள் நஷ்டமாகின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதும் கூட முஸ்லிம்கள் பொறுமையாகவே இருந்தனர். அவர்கள் உணர்ச்சி வசப்பட்டு குடியேறிய தமிழர்கட்கெதிராக எதுவித நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. மீளக் குடியேற்றல் வேலைகளுக்குப் பாதகமான எந்தவொரு முயற்சியையும் அவர்கள் செய்யவில்லை.

இதனால் மீண்டும் மீளக் குடியேற்றும் பணி முடுக்கிவிடப்பட்டது. தமிழர்கள் வந்து குடியேறப் பயப்பட்டனர். என்றாலும் தொடர்ச்சியான அரசின் முயற்சிகளால் தமிழர்கள் மீள வந்து குடியேறி விட்டனர்.

தமிழர்கள் மீளக் குடியேறிய காலங்களில் முஸ்லிம்கள் எவ்வாறு நடந்து கொண்டனர் என்பதற்கு சாட்சியாக அம்பாரை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஜெ.திவ்வியநாதனின் (ரெலோ) அறிக்கை அமைந்துள்ளது. இவ் அறிக்கை 30-4-92 அன்று வீரகேசரியில் பிரசுரமானது.

அந்த அறிக்கையில் அவர் "எனது மாவட்டத்தில் மிக விரைவாக ஏற்பட்ட இன ஐக்கியத்திற்கொரு எடுத்துக்காட்டு வீரமுனை வாழ் தமிழ் மக்களை அவர்கள் மீளக் குடியமர ஆரம்பித்த போது சம்மாந்துறை வாழ் முஸ்லிம்கள் அன்போடு வரவேற்று ஒத்துழைப்புக் கொடுத்தமையாகும்" என்று சம்மாந்துறை வாழ் முஸ்லிம்களுக்கு பாராட்டு வழங்கியுள்ளார்.

* * *

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீய சக்திகளை இனம் காட்டி நாம் இணைந்து கொள்வோம்

—திவ்வியநாதன்

(நமது நிருபர்)

தமிழ்-முஸ்லிம் இனங்களின் விடிவு நமது ஒற்றுமையிலும் ஐக்கியத்திலுமே தங்கியிருக்கிறது. தீயசக்திகள் எந்த வடிவத்தில் எந்த இனத்தில் இருந்து வந்தாலும் அவர்களை இனங்காட்டி, நாம் இணைந்து கொள்வோம் என்று [illegible] கூறியுள்ளார் [illegible]மட்டுமல்ல [illegible] .ம. பி. ஜே. இ. [illegible]தன் அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியிருப்பதாவது.

அண்மைக்காலமாகத் தமிழ், முஸ்லிம் மக்களிடையே நீர்க்கதரிசனமும் பொறுப்பும் அற்ற மிலேச்சத்தனமானவர்களின் நடவடிக்கைகளினால் [illegible] [illegible] நல்லுறவில் கறை [illegible] ஏற்பட்டு வரும் இவ்வேளையில் அம்பாறை மட்டக்களப்பு பிரதேசங்களில் திரும்பவும் அபாய அறிகுறிகள் தென்படுகின்றன.

ஆட்கடத்தல், மர்மக் கொலைகள், கைக்குண்டு வீச்சுக்கள், வயல்களுக்குத் தீயிடல் போன்ற கொடூர நிகழ்வுகள் தொடர்ந்து வரும் நிலையை [illegible] மாக்கிவிடக் கூடும் என்ற அச்சத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

இங்கு விளைந்தால் அதனை முஸ்லிம்கள் தான் செய்தார்கள் என்றும் முஸ்லிம்களுக்கு ஏதும் ஒரு நடப்பின் அதனைத் தமிழர் செய்தார் [illegible] உடனடியாகத் [illegible] முடிவைக் கூறு[illegible] சந்தேகக் கண்ணோக்கு இன்னும் நமது இரு இனங்களுக்குமிடையே இருப்பது வேதனைக்குரியது.

எனது மாவட்டத்தில் மிக விரைவாக ஏற்பட்ட இன ஐக்கியத்திற்கொரு எடுத்துக்காட்டு வீரமுனை வாழ் தமிழ் மக்களை அவர்கள் மீளக்குடியமர ஆரம்பித்தபோது சம்மாந்துறை வாழ் முஸ்லிம்மக்கள் அன்போடு வரவேற்று ஒத்துழைப்புக் கொடுத்தமையாகும். ஆனால் இந்த நல்லெண்ணத்திற்கு எதிர்ச்சகுனம் போல முஸ்லிம் மக்களின் வயல் நிலங்கள் தீயிடப்பட்டமை திகைப்புக் கலந்த வேதனை.

இதனை கண்டித்தே ஆகவேண்டும். இதேவேளை மட்டக்களப்பிலும் காத்தான்குடியிலும் ஆங்காங்கே எல்லைகளிலும் நன்மைகளை நாசமாக்கும் சதிகாரர்கள் இன விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்[illegible]

திரு திவ்வியநாதனின் அறிக்கை 20.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் வீரமுனையில் முஸ்லிம்களின் ஆதரவோடு வந்து குடியேறிய பின்பும் பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. மூன்று முஸ்லிம்கள் நிலக் கண்ணி வெடியில் அகப்பட்டுள்ளனர். தீவு வட்டையில் வேளாண்மைக் காணிகளுக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலக் கண்ணிகளில் சிக்கி அவர்களில் ஒருவர் இறந்து போனார். இருவர் தம் கால்களை இழந்துள்ளனர்.

அந்தக் காலங்களில் வேறும் பல நிகழ்வுகள் நடந்துள்ளன. அவை பற்றிய பத்திரிகைச் செய்தியை இங்கே அப்படியே பிரசுரிக்கின்றோம்.

## முஸ்லிம்களை வேரறுக்க புதிய யுக்தி.

## வேளாண்மைச் சூடுகள் தீக்கிரை

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வாழும் முஸ்லிம்கள் மீது பயங்கரவாதிகள் பலவிதமான அடாவடித்தனங்களைப் புரிந்துள்ளனர். புரிந்துகொண்டு வருகின்றனர். ஒன்றை ஒன்று மிஞ்சும் விதத்தில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டுள்ளனர். தாக்கப்படுகின்றனர்.

படுகொலைகள், ஆட்கடத்தல், கண்ணிவெடி, கார்க் குண்டு, தீவைப்பு, கொள்ளை என்று தொடர்கின்ற அடாவடித்தனங்கள் இன்று ஒரு புதிய வடிவத்தை அடைந்துள்ளன எனலாம். அண்மையில் சம்மாந்துறை விவசாயிகள் மீது புதுமையான தாக்குதல் நடந்துள்ளது.

கிழக்கு வாழ் முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் விவசாயிகளாகும். இது அவர்களின் அறுவடைக் காலம். சாதாரணமாக வேளாண்மையை அறுவடை செய்து காயவைத்து பெரும் சுந்தைகளாகக் கட்டி பின்னர் அவர்கள் சூடு வைப்பது வழக்கம். இச்சூடுகள் 2 - 3 நாட்களின் பின் பிரிக்கப்பட்டு உழவு இயந்திரங்கள் மூலம் துவைக்கப்பட்டு நெல் வேறு வைக்கோல் வேறாகப் பிரிக்கப்படும். சாதாரணமாக இந்தச் செயல் முறைக்கு குறைந்தது 5 நாட்கள் தேவை.

சூடு வைக்கப்பட்டால் வைக்கோலிலிருந்து நெல்லைப் பிரிப்பது எளிதாகும். இதனாலேயே இச் செயல்முறை பன்னெடுங்காலமாகப் பழக்கத்தில் உள்ளது.

கடந்த மாதம், சம்மாந்துறைப் பிரதேச விவசாயிகளின் இப்படியான 19 சூடுகள் பயங்கரவாதிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. சம்மாந்துறைக்கும் நிந்தவூருக்கும் இடையில் உள்ள சாளம்பைக் கண்டத்தில் 11 சூடுகளும், ஓட்டையான் மடுக் கண்டத்தில் 2 சூடுகளும், சம்மாந்துறைக்கும் கொறிக்கல்முனைக்கும் இடையில் உள்ள கொடவட்டைக் கண்டத்தில் 6 சூடுகளும் இவ்வாறு தீக்கிரையாகியுள்ளன.

4 - 5 மாதகாலமாக வயல்களில் தமது மூலதனத்தையும், உழைப்பையும் கொட்டிய விவசாயிகள் இன்று நடுத்தெருவில் விடப்பட்டுள்ளனர். முஹம்மத் ஈசா என்ற விவசாயியின் 3 வயல்களின் சூடுகள் தீயினால் முற்றாக எரிந்துள்ளன.

1989 மே மாதம் சம்மாந்துறையை பயங்கரவாதிகள் தாக்கியபோது 671 வீடுகள் தீயிடப்பட்டும், சேதமாக்கப்பட்டும் அழிந்து போயின. இம்முறை அவ்வாறு வீடிழந்து அகதிகளாய் அலைந்து திரியும் ஒரு குடும்பத்தின் சூடும் தீக்கிரையாகியுள்ளது. இந்தக் கலவரத்தில் தனது உழவு இயந்திரத்தையும், வீட்டையும் தீயிடம் இழந்த இன்னுமொரு விவசாயியின் 2 சூடுகளும் தீயிடப்பட்டுள்ளன.

வடக்கில் இருந்து முஸ்லிம்களை நிரந்தரமாக வெளியேற்றியதுபோல் கிழக்கிலிருந்தும் வெளியேற்றும் தமது நோக்கத்தை நிறைவேற்றவே பயங்கரவாதிகள் இப்படியான அனர்த்தங்களில் ஈடுபடுகின்றனர். இந்நிலையில் அரசு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குவதுடன், ஏனைய வயல்களுக்கும் போதுமான பாதுகாப்பும் வழங்க வேண்டும் என இப்பகுதி வாழ் முஸ்லிம்கள் கோருகின்றனர்.

அல்லாதவிடத்து அடுத்த முறை விவசாயம் செய்ய முடியாமல் போகும். இதனால் இலட்சக் கணக்கான வேளாண்மை நிலம் தரிசாகும் நிலைமை ஏற்படும். இதனால் இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்படும் அபாயமுண்டு. இவ்விடயத்தில் அரசு கவனமெடுத்து முஸ்லிம்களைக் காக்குமா என்பதே இன்றுள்ள ஒரே வினா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI



# மீளக் குடியேறியோர் ஆயுதம் கடத்துகின்றனர்!

# சம்மாந்துறை முஸ்லிம்கள் மத்தியில் பதட்டம்

# வைக்கோல் நிலையத்தில் குண்டு!

கடந்த சில வாரங்களாக சம்மாந்துறை முஸ்லிம்கள் மத்தியில் பதட்டம் நிலவுகின்றது. அண்மைக் காலமாக சம்மாந்துறையில் நிகழும் சம்பவங்கள் காரணமாக மீண்டும் ஒரு பயங்கரத்தை ஏற்படுத்துமோ என்ற சந்தேகம் கிளம்பியுள்ளது. இதுபற்றிக் கூறப்படுவதாவது:

கடந்த வருடம் முஸ்லிம்கள் ஆறு பேரை தமிழ்க் கிராமவாசிகள் வெட்டிக் கொன்றதன் பின் வீரமுனைத் தமிழ்க் கிராம மக்கள் தமது சொந்தக் கிராமத்தை விட்டு அண்மையில் உள்ள பெரிய தமிழ்க் கிராமங்களுக்குச் சென்று குடியேறினர். இப்

14104

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது இவர்களை அரசாங்கம் தமது சொந்த இடங்களுக்கு மீளவும் குடியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளது. முதற்கட்டமாக 50 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. படிப்படியாக ஏனையோரும் குடியேறுகின்றனர்.

மீளக் குடியேறும் இம்மக்கள் மீது சம்மாந்துறை முஸ்லிம்கள் வெறுப்பைக் காட்டுவதில்லை. இதற்குச் சான்றாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. திவ்வியநாதன் அண்மையில் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையைக் கொள்ளலாம்.

குடியேறும் மக்கள் பெரும்பாலும அண்மையில் உள்ள தமிழ்க் கிராமமான காரைதீவில் இருந்தே வருகின்றனர். இவ்வாறு காரைதீவில் இருந்து வரும் மக்களும், அவர்களைப் பார்க்க வரும் ஏனையோரும் ஓலைப் பெட்டிகளில் சமைத்த உணவைக் கொண்டுவருகின்றனர்.

அண்மையில் காரைதீவில் இருந்து 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் சிலர் சமைத்த உணவை கொண்டுவந்துள்ளனர். இவர்களின் பெட்டிகளை பொலீஸார் சோதனையிட்டபோது அப்பெட்டிகளுள் கிரனைட்கள் இருந்தனவாம். இது சம்பந்தமாக பொலீஸார் விசாரணை செய்து வருவதாக அறிய வருகின்றது.

இன்னும் ஒருநாள் சம்மாந்துறையில் அமைந்துள்ள தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் வைக்கோல் கொள்வனவு நிலையத்தில் குண்டு ஒன்றினை விசேட அதிரடிப் படையினர் கண்டுபிடித்துள்ளனர். இது சம்பந்தமான விசாரணையில் ஈடுபட்ட விசேட அதிரடிப் படையினர் அண்மையில் வீரமுனையில் மீளக் குடியேறிய தமிழ் வாலிபர்கள் சிலரை விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளதாக செய்திகள் வருகின்றன. அண்மையில்தான் மீளக் குடியேறிய கடதாசிக் கூட்டுத்தாபன ஊழியர்கள் சிலர் மீண்டும் கடமைக்குத் திரும்பியுள்ளனர். இத்தனை நாள் இல்லாமல் அவர்கள் கடமைக்குச் சென்றதன் பின் இப்படியொரு குண்டு கண்டுபிடிக்கப்பட்டது இப்பகுதிவாழ் முஸ்லிம்களிடம் பெரும் பீதியை உருவாக்கியுள்ளது.

பாதுகாப்பு உயரதிகாரிகள இவ்விடயத்தில் கவனமெடுத்து உரிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் என இம்மக்கள் கோருகின்றனர்.

கேசரி 6-ஜுன்-92

14704

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI



# முடிவாக....

தமிழர்கள் எமதூரில் வாழ்ந்த போதும் எமக்கு இன்னல்கள் பலவற்றைச் செய்தார்கள். அவர்கள் வெளியேறிய பின்பும் பல அடாவடித்தனங்களைப் புரிந்தார்கள். இன்று மீளக் குடியேறிய பின்பும் அதே தொழிலைத் தொடர்கின்றார்கள்.

இப்படியான ஆயிரக்கணக்கான அநியாயங்களை முஸ்லிம்களுக்குத் தமிழர்கள் புரிந்து வருகின்ற போதிலும் அவை பற்றி எந்தவொரு பல்கலைக் கழக மனித உரிமைக் குழுவும் தன்னுடைய அறிக்கையில் தெரிவிக்கவில்லை. சர்வதேச செய்தி நிறுவனங்களோ, தொண்டர் ஸ்தாபனங்களோ கூட அக்கறை காட்டவில்லை. இன்று கூட இந்த அநியாயங்கள் தொடரக் கூடிய அபாயமே உள்ளது. இதனால் சம்மாந்துறை வாழ் முஸ்லீம்களின் 20,000 ஏக்கர் நெற்காணி செய்கை பண்ணப்படாமல் தரிசாகக் கிடக்கின்றது.

ஆக - உண்மை எங்கோ மறைந்து - அல்ல - மறைக்கப்பட்டுக் கிடக்கின்றது. ஆனால் பொய்கள் மட்டுமே உண்மைகள் என்ற மகுடத்தில் அரங்கேறுகின்றன.

இதுவரை முஸ்லிம்களின் நிலையை இந்த சர்வதேச அமைப்புகள், உள்ளூர் மனித உரிமை அமைப்புகள் எவையுமே இனங்கண்டு கொள்ளவில்லை. அல்லது இனங்காட்ட விரும்பவில்லை.

இனிமேலும் இந்த் நிலை தொடராமல் உண்மைகள் மட்டுமே அறிக்கைகளாக வரவேண்டும் என்பதே எமது கோரிக்கை.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

இன்னல்களுக்குள்ளாகி

எம்மவர் நிர்க்கதியான போது

அன்னவர்க்கு

அனைத்து வழிகளிலும்

உதவிய

அன்பு உள்ளங்கட்டு

எம் மனமார்ந்த நன்றிகள்.

1470

14704

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புகள்

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY,
KALMUNAI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE
PUBLIC LIBRARY
KALMUNAI
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Publication Bureau

JUMA MOSQUE , SAMMANTHURAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org